**3. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்—**

(அ) அரிசியையும் நெல்லையும் மாநிலத்திற்கு வெளியே லெவி செலுத்தாமல் கொண்டு செல்ல அனுமதித்தல் மற்றும் நெல்லுக்கு ஆதார விலையுடன் ஊக்கத் தொகை அளித்துக் கொள்முதல் செய்வது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை.

(ஆ) பஞ்சாலைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளைத் தொழில் தீர்ப்பாயத்திற்கு விடுதல் மற்றும் இடைக்கால நிவாரணம் வழங்குதல் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை.

**4. அறிவிப்புகள்—** .. .. ..

(அ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமனம்

(1) பேரவை விதிகள் குழு .. ..

(2) சட்ட விதிகள் ஆய்வுக் குழு .. ..

(3) அரசு உறுதிமொழிக் குழு .. ..

(4) அவைக் குழு .. .. ..

(5) மனுக்கள் குழு .. .. ..

(6) பேரவை நூலகக் குழு .. ..

(7) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(ஆ) சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி வழங்கல்





பக்கங்கள்

**5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001. — 38-39

மாண்புமிகு திரு. ப. தனபால் .. .. ..

**6. மானியக் கோரிக்கைகள் 2001-2002 விவாதமும் வாக்கெடுப்பும்**-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும் — 39-139

(ஆ) கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம்.

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன் .. | 39,43 125-135 |
| *மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் .. | 44,48, 107-113, 115-125 |
| திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா .. .. | 48-55 |
| *திரு. கே.சி. கருப்பணன் .. .. | 55-59 |
| *திரு. எஸ். தாமோதரன் .. .. | 59-65 |
| *திரு. ஆர். கிருஷ்ணன் .. .. | 65-71 |
| *திரு. வி. சோமசுந்தரம் .. .. | 71-80 |
| *திரு. டி. என். சிவசுப்பிரமணியன் .. .. | 80-82 |
| *திரு. என். நன்மாறன் .. .. | 82-87 |
| *திருமதி செல்வி முருகேசன் .. .. | 87-92 |
| திரு. அன்பில் பெரியசாமி .. .. | 93-96 |
| திரு. சோ. [illegible]ரன் .. .. | |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223952
சென்னை-600 008




| | பக்கங்கள் |
|---|---|
| 6. மானியக் கோரிக்கைகள் 2001-2002 விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி | |
| திரு. எச். ராஜா .. .. | 99-101 |
| திரு. பெ. வாசுதேவன் .. .. | 101-103 |
| திரு. இரா. இராம் பிரபு .. .. | 103-107 |
| (இ) கோரிக்கை எண் 32—வீட்டு வசதி .. | |
| (ஈ) கோரிக்கை எண் 33—நகர்ப்பகுதி வளர்ச்சி | 140-236 |
| மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ் .. | 140,144,146, 164, 165, 169-170, 210-232 |
| திரு. ஜெ. அன்பழகன் .. .. | 146-151 |
| *திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி .. .. | 153-156, 160-165 |
| திரு. சி. ஞானசேகரன் .. .. | 140, 167-175 |
| *திரு. அ. சிவபெருமாள் .. .. | 175-180 |
| திரு. மு. கார்த்தி .. .. | 143, 145, 181-185 |
| *திரு. எஸ்.கே. செல்வம் .. .. | 185-190 |
| *திருமதி எஸ். மகேஸ்வரி .. .. | 190-196 |
| *திருமதி கு. கலாவதி .. .. | 196-201 |
| *செல்வி க. பாலபாரதி .. .. | 201-203 |
| *திரு. வே. கிருஷ்ணமூர்த்தி .. .. | 203-207 |
| திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி .. .. | 207-210 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 236 |


D
V211,3' P01



## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் - டாக்டர் சி. ரங்கராஜன்

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**
பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை, இலஞ்ச ஒழிப்பு, சிறுபான்மையினர் நலன் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்

**2. நிதி மற்றும் சட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**
நிதி, திட்டமிடல், தேர்தல், சட்டமன்றம், சட்டம் நீதிமன்றங்கள், சிறைகள், சட்டமியற்றல், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்பட கடன் நிவாரணம், சிட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

**3. கல்வி அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**
கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

**4. மின் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**
மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:
இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ. செம்மலை:
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

7. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:
நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:
தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

9. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:
குடிசைத் தொழில்கள் உள்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர்கிராமத் தொழில் வாரியம்.

10. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. ப. தனபால்:
கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.



11. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:
வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம், கடவுச் சீட்டு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு.

12. பொதுப் பணித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:
பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு பாசனம் உள்பட பாசனம்.

13. செய்தி-விளம்பரம் வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, வனம், சுற்றுச் சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

14. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

15. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி இரா. சரோஜா:
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

16. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு, அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

17. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:** ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர் கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

18. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** கைத்தறி மற்றும் துணித் தொழில்.

19. மீன் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மீன் வளம் மற்றும் கால்நடை பராமரிப்பு

20. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** தொழிற்சாலைகள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.

21. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர். .. **மாண்புமிகு திரு. கி. சண்முகவேலு:** பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

22. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** வணிக வரிகள்.



23. வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** வீட்டுவசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்பு திட்டமிடல், குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

24. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

25. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்.

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—Dr. C. RANGARAJAN

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. **Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police, Prevention of Corruption, Minorities Welfare and Information Technology. |
| 2. **Minister for Finance and Law** | .. **The Hon. Thiru C. Ponnaiyyan:** Finance, Planning Elections and Legislature, Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 3. **Minister for Education** | .. **The Hon. Dr. M. Thambidurai:** Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees. |
| 4. **Minister for Electricity** | .. **The Hon. Thiru D. Jayakumar:** Electricity, Non-conventional Energy Development. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

6. **Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**
Health, Medical Education and Family Welfare.

7. **Minister for Local Administration** .. **The Hon. Thiru C. Durairaj:**
Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

8. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Anwer Rhazza:**
Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes, Census and Wakfs.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru K. Pandurangan:**
Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

10. **Minister for Co-operation, Food, Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**
Co-operation, Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics.

11. **Minister for Revenue** .. **The Hon. Thiru O. Panneerselvam:**
Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan and Gramdhan, Passport, Prohibition and Excise, Molasses.

12. **Minister for Public Works** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**
Public Works, Highways, Irrigation including Minor Irrigation.



13. **Minister for Information and Publicity and Forests and Environment** .. **The Hon. Thiru S.S. Thirunavukkarasu:**
Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Forests, Environment and Pollution Control.

14. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanandham:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development.

15. **Minister for Tourism** .. **The Hon. Tmt. R. Saroja:**
Tourism and Tourism Development Corporation.

16. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**
Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

17. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru V. Subramanian:**
Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

18. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru S.P. Shanmuganathan:**
Handlooms and Textiles.

19. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P. Rajendra Prasad:**
Fisheries and Animal Husbandry

20. **Minister for Industries** .. **The Hon. Thiru R. Vaithilingam:**
Industries, Iron and Steel Control, Mines and Minerals.

21. **Minister for Milk and Dairy Development** .. **The Hon. Thiru C. Shanmugavelu:**
Milk and Dairy Development.

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**
Commercial Taxes.

23. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru A.K. Selvaraj:**
Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and Chennai Metropolitan Development Authority.

24. **Minister for Transport** .. **The Hon. Thiru Nainar Nagendran:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

25. **Minister for Backward Classes** .. **The Hon. Tmt. Valarmathi Jebaraj:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities.



# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம்**

*மாற்றுத் தலைவர்கள்**

**திரு. பி.ஆர். சுந்தரம்**

**திரு. அ. பாப்பா சுந்தரம்**

**திரு. ப. இராஜரெத்தினம்**

**திரு. சோ. பாலகிருஷ்ணன்**

**திருமதி டி. யசோதா**

**திரு. லா. சந்தானம்**

*முதன்மைச் செயலாளர்*

**திரு. செ.சு. ஜானகிராமன்**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

---

*20-8-2001 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. மு. ஆறுமுகப் பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்.சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ.,பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ.,பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை. உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 8. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 9. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 10. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 11. | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 12. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 13. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | .. | பெரணமல்லூர் |
| 14. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 15. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 16. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 17. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 18. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 19. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 20. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 21. | ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |
| 22. | ஆறுமுகம், திரு. த. | .. | திருவொற்றியூர் |
| 23. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 24. | ஆஸ்டின், திரு. | .. | நாகர்கோவில் |
| 25. | இரவிராஜ், திரு. கோ. | .. | திருத்தணி |
| 26. | இராசேந்திரன், திரு. சி. | .. | திருவோணம் |
| 27. | இராசேந்திரன், திரு. சோ. | .. | கோவில்பட்டி |
| 28. | இராமசாமி, திரு. கே.ஆர். | .. | திருவாடனை |
| 29. | இராமசாமி, திரு. பி.சி. | .. | மொடக்குறிச்சி |

30. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
33. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
34. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
35. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
36. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
37. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
38. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
39. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
40. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
41. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
42. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆவா.)
43. இன்பத் தமிழன், திரு. இரா.தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
44. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
45. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
46. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
47. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
48. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
49. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
50. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
51. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
52. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
53. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
54. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
55. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
56. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
57. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
58. கருப்பசாமி, திரு. சொ. .. **சங்கரநயினார்கோவில் (செவ)**
59. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
60. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
61. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆவா.)



62. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
63. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
64. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
65. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
66. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2
67. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
68. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
69. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
70. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
71. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
72. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
73. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
74. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
75. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
76. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
77. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
78. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
79. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
80. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
81. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
82. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
83. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
84. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
85. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
86. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
87. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
88. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
89. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்
90. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவா.)
91. சாமி, திரு. ஆர். .. மேலூர்
92. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
93. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்

94. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
95. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
96. சிவசாமி, திரு. செ. .. திருப்பூர்
97. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
98. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
99. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
100. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
101. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
102. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
103. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
104. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
105. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
106. சுந்தரம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
107. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
108. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
109. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
110. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
111. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
112. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
113. செல்வராஜ், திரு. ஆ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
114. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
115. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
116. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
117. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
118. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
119. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
120. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
121. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
122. தமிழ்ச்செல்வன், திரு. தங்க .. ஆண்டிப்பட்டி
123. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி ஆர்... மேல்மலையனூர்
124. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
125. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்



126. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
127. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
128. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
129. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
130. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
131. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
132. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
133. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி
135. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
136. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
137. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
138. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
139. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
140. நடராஜன், திரு. வது. .. இளையான்குடி
141. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
142. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
143. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
144. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
145. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
146. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
147. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
148. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
151. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
152. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
153. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
154. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
155. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
156. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
157. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு

158. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
159. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)
160. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
161. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
162. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்
163. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
164. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
165. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
166. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
167. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
168. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
169. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
170. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திக்குளம்
171. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
172. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
173. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
174. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
175. மகாலிங்கம், திரு. எஸ். . அவினாசி (செ.வ.)
176. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
177. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
178. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
179. மணி, திரு. டி. .. விளவங்கோடு
180. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
181. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
182. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
183. மல்லிகா, திருமதி சி. .. முசிறி
184. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
185. மில்லர், திரு. அ. .. கூடலூர்
186. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
187. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
188. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
189. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்



190. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
191. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
192. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
193. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
194. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
195. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
196. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
197. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
198. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
199. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
200. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
201. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
202. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
203. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
204. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
205. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்
206. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
207. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி
208. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்
209. வளர்மதி ஜெபராஜ், திருமதி .. மதுரை மேற்கு
210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
211. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்
212. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
213. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்
214. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்காநகர்
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை
216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. .. பனமரத்துப்பட்டி
217. வீரபாண்டியன், திரு. ஜெ.க. .. மயிலாடுதுறை
218. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
219. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்-1

| | | |
|---|---|---|
| 220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 221. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 222. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 223. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 224. வைதியலிங்கம், திரு. மீஅ. | .. | தாம்பரம் |
| 225. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |
| 226. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |
| 228. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 229. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 230. ஜெயராமன், திரு. வி. | .. | பொள்ளாச்சி |
| 231. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 232. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 234. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |
| 235. (வெற்றிடம்) | .. | சைதாப்பேட்டை |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**ஆவணி 26, விசு - திருவள்ளுவர் ஆண்டு 2032**

**2001 செப்டம்பர் 11, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறையொருங்கு நேர்வது நாடு"

புதிய சுமைகள் ஒன்று திரண்டு வரும்போதும் அவற்றைத் தாங்கிக் கொண்டு, அரசுக்குரிய வரிவகைகளைச் செலுத்துமளவுக்கு வளம் படைத்ததே சிறந்த நாடாகும்.

## 1. வினாக்கள் - விடைகள்

### (அ) உடுக் குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 75, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**75—**

**நிதிக் குழு**

***1102-திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிதிக் குழு 2000-2001-ஆம் ஆண்டு தமிழகத்திற்கு அளித்த நிதி எவ்வளவு?

(ஆ) அதை அதிகரிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பதினோராவது நிதிக் குழு 2000-2001 ஆம் ஆண்டிற்கு தமிழகத்திற்குக் கீழ்வருமாறு மானியங்களைப் பரிந்துரை செய்துள்ளது:

| எண் (1) | விவரம் (2) | ரூபாய் கோடியில் (3) |
|---|---|---|
| 1. | வரிப் பகிர்வில் பங்கு | 2911.00 |
| 2. | நிர்வாக மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டங்களுக்கான மானியம் | 101.30 |
| 3. | உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியம் | 131.90 |
| 4. | இயற்கைச் சீற்ற நிவாரண நிதிக்கு மத்திய அரசின் பங்கு | 76.98 |
| | மொத்தம் .. | **3221.18** |

(ஆ) பதினோராவது நிதிக் குழுவின் பரிந்துரையினால் தமிழகத்திற்கு ஆண்டுக்கு சுமார் ரூ.500 கோடிக்கு மேல் வரி வருவாய் இழப்பு உள்ளது. ஆனால், தமிழகத்திற்கு நிதி நிலைமை சீரமைப்புக்கு ஊக்கத் தொகையாக ஆண்டுக்கு ரூ.80 கோடி அளவிற்கு மட்டுமே நிதி வழங்கப்பட உள்ளது. நிதி ஆதாரங்களைப் பெருக்குவதிலும், முன்னேற்றப் பாதையில் செல்வதற்கும் தேவையான திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் தமிழகத்திற்கு இது தண்டனை வழங்குவதாக அமைந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 8 ஆம் நாள் புதுடில்லியில் நடைபெற்ற மத்திய திட்டக் குழு கூட்டத்திலும் பதினோராவது நிதிக் குழுவின் பரிந்துரையினால் தமிழகத்திற்கு வரிப் பகிர்வில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை முழுவதுமாகக் களைய பரிந்துரை செய்ய வேண்டும் என்று தமிழக அரசின் சார்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டுள்ளது.

மைய அரசு பதினோராவது நிதிக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே, பதினோராவது நிதிக் குழுவின் பரிந்துரைகள 2000-2005 வரையிலான கால அளவிற்கு நடைமுறையில்





இருக்கும். எனினும், தமிழகத்திற்கு வரிப்பகிர்வில் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது என்ற கருத்து தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11-வது நிதிக் குழு, நம்முடைய தமிழகத்திற்கு மிகக் குறைவாக ரூ. 3221.18 கோடியைத்தான் ஒதுக்கியிருக்கிறது. ஒரு தவறான கொள்கையை வைத்துக்கொண்டு, நாம் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம் மற்றும் per-capita income-ஐ increase செய்திருக்கிறோம், வளர்ச்சி பெற்றிருக்கிறோம் என்று எல்லாம் சொல்லி, தமிழகத்திற்கு வரக்கூடிய பங்கை மத்திய அரசு கொடுக்காமல் இருப்பதை நம்முடைய தமிழக அரசு, இந்த அவையின் மூலம் ஒரு தீர்மானத்தை இயற்றியாவது, எங்களுக்குக் கொடுக்க வேண்டிய பங்கை நீங்கள் கொடுத்தாகவேண்டும், குறைந்தபட்சம் 5,000 கோடியாவது கொடுத்தால்தான் தமிழகத்திற்கு உரிய பங்கு கிடைக்கும் எனத் தமிழக அரசு வலியுறுத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகத் தெளிவாகத் தமிழக அரசினுடைய நிலையை மைய அரசிடம்—திட்டக் குழுவிடம் நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்; தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டு வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடம் நம்முடைய மக்கள் தொகை, அதுபோன்று நம்முடைய மாநிலத்தினுடைய பிற்பட்ட நிலை இதையெல்லாம் வைத்துக்கொண்டு அதிகப்படியான நிதி ஆதாரத்தை நாம் கேட்கின்றபோது, நம்முடைய மாநிலத்திலிருந்து மத்திய அரசுக்கு அந்நியச் செலாவணி எவ்வளவு கோடியை நாம் பெற்றுக் கொடுத்திருக்கிறோம் என்பதையும் சொல்ல வேண்டும். ஏற்கெனவே, அண்டை மாநிலமான கேரளாவிலே, அவர்கள் அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொடுப்பதை ஒரு கணக்காக வைத்துக்கொண்டு, மத்திய அரசிடம் பேரம் பேசியோ அல்லது அது அவர்களுடைய உரிமை என்ற அடிப்படையிலோ அவர்கள் பெற்றுக்கொள்கிற நிலை இருக்கிறது. அந்த வகையில் நம்முடைய மாநிலம், அந்நியச் செலாவணியாக எந்தெந்தத் துறையின் மூலமாக எவ்வளவு கோடிகளை மத்திய அரசுக்குக் கொடுத்திருக்கிறது என்ற வகையில் அதனுடைய விவரங்களின் அடிப்படையிலே நாம் நம்முடைய கோரிக்கைகளை இன்னும் வலுவாக வைத்துக்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி அவர்கள் எழுப்பியிருக்கிற வினா, மிகவும் நியாயமான வினா. இந்த அடிப்படையில் கேரள அரசு ஏற்கெனவே மைய அரசை வற்புறுத்தி வருகிறது. தமிழக அரசும் இது குறித்து மைய அரசைப் பெரிதும் வலியுறுத்தி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசினுடைய கணக்குப்படி, இப்போது நிதிக் குழு நமக்குக் கொடுத்திருக்கிற இந்தப் பணத்திலிருந்து நமக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கிறது? நாம் இந்த இழப்பு குறித்து வற்புறுத்தி இந்த நிதிக் குழுவைச் சந்தித்து—நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஒரு குழுவாகச் சென்றாவது சந்தித்து — நாம் மீண்டும் பெறக்கூடிய பணத்தை, வரவேண்டிய பணத்தை எந்த வகையில் பெற இருக்கிறார், ஏதாவது கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றனவா, அல்லது நிதி அமைச்சர் அப்போது போய் இந்த நிதிக் குழுவை மீண்டும் சந்தித்து அந்த நிதியைப் பெறுவதற்கு முயற்சி எடுப்பார் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு மேற்கொண்டிருக்கிற அணுகுமுறை 11-வது நிதிக் குழுவினுடைய பாரபட்சமான பரிந்துரை ஆகியவற்றின் காரணமாக, வரும் திட்டத்தில் மட்டும் 2,946 கோடி ரூபாய் தமிழக அரசுக்கு இழப்பு ஏற்படவுள்ளது. இதுகுறித்து தொடர்ந்து நாங்கள் மைய அரசை வலியுறுத்தி வருகிறோம். அதை அவர்கள் செவி சாய்க்காமல் இருந்தாலும்கூட, இது ஒரு முக்கியமான பிரச்சினை என்ற முறையிலே, அவர்கள் கடைப்பிடிக்கின்ற அணுகுமுறைகள் எல்லாம் தவறான அணுகுமுறைகள் என்று மைய அரசுக்கு நாங்கள் தெரிவித்திருக்கிறோம்.

முற்பகல் 10-05

உதாரணமாக, மக்கள் தொகை பற்றி ஏற்கெனவே நான் அவையிலே கூறியிருக்கிறேன். மக்கள் தொகை அதிகரிப்பில் மிகுந்த கட்டுப்பாட்டை நாம் நடைமுறைப்படுத்துகிறபோது அதற்குத் தண்டனை தருகிறார்கள். இதை அவர்கள் ஒரு சிறப்பு விகுதியாக எடுத்து, மக்கள் தொகையைத் தமிழகம் குறைத்து இருப்பதற்குப் பரிசு தருவதற்குப் பதிலாக, தண்டனையைத் தருகிறார்கள்; நிதியைக் குறைத்துவிடுகிறார்கள்.



per capita income அதிகம் என்ற ஒரு கணக்கைக் காட்டி, அதுவும் தமிழகத்திலே இருக்கிற *30* சதவிகிதத்திற்கும் மேலாக இருக்கிற people living below poverty line என்ற அவர்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஹூண்டாய், போர்டு போன்ற கம்பெனிகள் மைய அரசுக்குத் தருகிற Corporate Tax-உடன் அதை வகுத்து, அந்த அடிப்படையில் அதிகப்படியாக per capita income தமிழகம் தருகிறது என்று சொல்லி, அந்தக் கணக்கிலும் நமக்குத் தரவேண்டிய நிதியை அவர்கள் தர மறுத்து, குறைத்துவிடுகிறார்கள். ஏரியா; பரப்பளவு; ஒரு மாநிலத்தின் பரப்பளவு அதிகமாக இருந்தால், அதிகமான பரப்பளவு உள்ள ஒரு மாநிலத்திற்கு அதிக நிதி; குறைந்த பரப்பளவு உள்ள மாநிலத்திற்கு குறைந்த நிதி என்ற முறையிலே, தமிழகத்திற்குத் தண்டனையைத் தருகிறார்கள். உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், பீகார், இராஜஸ்தான் போன்ற மாநிலங்களுக்கு அதிகச் சலுகைகளைத் தந்துவிடுகிறார்கள். இதுபோன்று அவர்கள் வகுத்திருக்கின்ற நெறிமுறைகள் எல்லாம் உத்தர பிரசேதம், மத்திய பிரசேதம், இராஜஸ்தான், பீகார் போன்ற வடபுலத்து மாநிலங்களுக்கு எந்த நெறிமுறைகளை வகுத்தால் அதிக நிதி ஒதுக்கீடு தரலாமோ, அத்தகைய நெறிமுறைகளை வகுத்துக்கொண்டு பாரபட்சமாக மைய அரசு செயல்படுத்துகிறது. இதனால் தமிழகம் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மத்திய அரசு சமச்சீர் வரியைப் போட வேண்டும் என்று மாநிலங்களுக்குப் போடும் அந்த உத்தரவிற்கு நாம் அடிபணிய வேண்டியிருக்கிறது. ஆனால், அந்தச் சமச்சீர் வரியை நாம் அமல்படுத்துகிறபோது நமக்கு உரிய பங்கினையே மத்திய அரசு மறுத்து வருகிறது. இன்னொன்று, தமிழகத்தின் மூலமாக மத்திய அரசுக்குப் போய்ச் சேருகிற வரியிலேயிருந்து வரவேண்டிய ராயல்டி சரியாக வருகிறதா? அப்படிப் பார்த்தோம் என்று சொன்னால், இப்போது காவிரிப் படுகையிலேயிருந்து எடுக்கப்படக்கூடிய எண்ணெய், எரிவாயு மூலமாக மத்திய அரசால் வழங்கப்படக்கூடிய, ஆண்டுதோறும் வந்து சேரவேண்டிய அந்த நிதி, அந்த ராயல்டி மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வந்து சேருகிறதா? இல்லை, அதையும் மத்திய அரசு தராமல் மறுத்து வருகிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசினுடைய அணுகுமுறை பற்றி நான் ஏற்கெனவே சொன்னதைப்போல மாநில அரசைப் பல நிதி நெருக்கடிகளுக்கு உள்ளாக்குவதே தன்னுடைய கொள்கை என்று எடுத்துக்கொண்டார்களோ, என்னவோ தெரியவில்லை; நமக்கு முறைப்படி வரவேண்டிய ராயல்டியை, நெய்வேலி லிக்னைட் மூலமாக வரவேண்டிய ராயல்டியை அவர்கள் தாமதப்படுத்திக் கொண்டு வருகிறார்கள்; சாக்குப்போக்குச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். தரவேண்டிய பணத்தைத் தருவதற்குக்கூட முட்டுக்கட்டை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். சமச்சீர் வரியைப் பொறுத்தவரைக்கும் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இந்தியத் துணைக் கண்டத்தினுடைய அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சூழலை மைய அரசு சில கண்டிப்பான நடவடிக்கைகள் மூலம் எடுத்து வருகிறது. சமச்சீர் வரி விதிப்பை ஏற்றுக்கொள்ளாத மாநிலங்களுக்கு வரும் மாதத்திலேயிருந்துகூட அவர்கள், நிதி ஒதுக்கீட்டைக் குறைத்துவிடுவதாக எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். சமச்சீர் வரியை நாம் நடைமுறைப்படுத்துகிறபோது, அவர்களுடைய உள்நோக்கம் என்பது to levy more income tax. அதாவது வருமான வரியைப் பொறுத்தவரைக்கும் அதிகப்படுத்துவதற்கு ஒரு குறுக்கு வழியாக சமச்சீர் வரியைக் கொண்டு வருகிறார்கள். இறுதியிலே அதனுடைய கஷ்டம் எல்லாம் நுகர்வோருக்கு, வாங்கி உண்ணுகிற மக்களுக்குச் சென்று சேர்ந்துவிடும். அதைவிட மிக முக்கியமாக விலைவாசி உயர்வு விபரீதமாக உயர்ந்துவிடும் என்பதைக்கூட நாங்கள் எடுத்துச்சொல்லியும், மைய அரசு செவி சாய்க்காமல், மைய அரசினுடைய Income tax revenue அதிகமாக வேண்டும் என்பதற்காக, when sales tax compliance is fully implemented, income tax வருவாய் அதிகம் ஆகிவிடும் என்ற அந்த ஒரே நோக்கோடு, நுகர்வோரைப்பற்றியும் கவலைப்படாமல், மாநில அரசினுடைய மற்ற கஷ்டங்களைப்பற்றியும் கவலைப்படாமல், சமச்சீர் வரி விதிப்பை அவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். அதனால் மாநில அரசுக்கு பலன் ஒன்றும் ஏற்பட்டுவிடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த நாடாக இருந்தாலும், எந்த மாநிலமாக இருந்தாலும், உலக சுகாதார மையம் ஓர் அறிவிப்பைச் செய்திருக்கிறது; வருகிற பணத்திலே



5 சதவிகிதம் மருத்துவத்திற்காகப் பயன்படுத்த வேண்டுமென்று ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறது. கடந்த ஆட்சியிலே 1.3 சதவிகிதம் மட்டுமே மருத்துவத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த அரசு இந்த ஆண்டு எவ்வளவு நிதியை, எத்தனை சதவிகித நிதியை மருத்துவத்திற்காக ஒதுக்கியுள்ளது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், இது பொதுவான கேள்வி. இது தனிப்பட்ட கேள்வி அல்ல. இதற்குத் தனிக் கேள்வி போட்டால்தான் அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்ல முடியும்.

**திரு. கே. ஆறுமுகம்:** நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கலாம். ஆனால் இது அதிலே சம்பந்தப்பட்டதில்லை. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலிருந்து மத்திய அரசுக்கு வரியாகப் பலவகைகளில் எவ்வளவு ரூபாய் செலுத்தப்படுகின்றது? அப்படிச் செலுத்தக்கூடிய வரியில் தமிழகத்தின் பங்காக எவ்வளவு தொகை திரும்பப் பெறப்படுகிறது? அப்படித் திரும்பப் பெறுகின்ற நிதியில் பல மாநிலங்களுக்குப் பலவிதமாக மத்திய அரசு தருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த நிதியை அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே சதவிகிதமாகக் கொடுப்பதற்கு, மத்திய அரசைக் கேட்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Corporate Tax, Income Tax, Customs Duties, Central Excise and Additional Central Excise என்று பல பிரிவுகளில் கிட்டத்தட்ட,— சரியான புள்ளிவிவரம் என்னிடம் இல்லை — 4,000 கோடி ரூபாய்க்குமேல் இந்த மாநிலத்திலிருந்து மைய அரசுக்குச் செல்கிறது. இதிலே ஒரு முக்கியமான பிரச்சினை என்னவென்றால், மைய அரசுக்கு மாநிலங்களிலிருந்து வருகின்ற பணம் 100 ரூபாய் என்றால், அதிலே 29 சதவிகிதத்தை மட்டுமே அனைத்து மாநிலங்களுக்கும் தருவதற்காக ஒதுக்கிக்கொண்டு, மீதியிருக்கின்ற 71 சதவிகிதத்தை மைய அரசு

தன்னகத்தே வைத்துக்கொள்கிறது. இந்த 29 சதவிகிதத்திலே தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் 5.5 சதவிகிதம்தான்; தமிழகம் வளர்ந்துவிட்ட மாநிலம் என்ற ஓர் அடிப்படையில் மிகக் குறைவான நிதியையே மைய அரசு மாநில அரசுக்கு ஒதுக்கியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம், ஆந்திரம், கேரளம் போன்ற முன்னேறிய மாநிலங்களுக்கான நிதியொதுக்கீடு திட்டக் குழுவால் குறைக்கப்பட்டிருக்கிறது என்று இங்கே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காகக் கடந்த ஆட்சிக் காலத்திலே அந்த மாநிலங்களினுடைய முதல்வர்களோடு அணுகி அதற்கான நடவடிக்கைகளை எடுத்ததைப்போல இந்த அரசு தொடர்ந்து எடுக்குமா? மக்கள் தொகையின் மூலம் நிதியொதுக்குவதை மத்திய அரசு செய்யக்கூடாது என்ற கோரிக்கையை மத்திய அரசுக்கு மாநில அரசு வைக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கின்ற வினாவுக்கு நான் ஏற்கெனவே தெளிவாகப் பதில் கூறியிருக்கின்றேன். மிகவும் வலியுறுத்தி இருக்கிறோம்; தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும்கூட உங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த மைய அமைச்சர்களிடம் சொல்லி மைய அரசை வலியுறுத்துமாறு நானும் உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா.பூ. முனுசாமி.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11-வது நிதிக் குழுவில் இயற்கைச் சீற்றத்திற்கு 76 கோடி ரூபாய் [illegible]கியுள்ளதாக இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் [illegible]ிருக்கிறார்கள். இந்த இயற்கைச் சீற்றம் என்பது வெள்ளப் பெருக்கத்திற்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறதா? காரணம், வட மாநிலங்களிலே வெள்ளப் பெருக்கத்தை முன்னிறுத்தி பல ஆயிரம் கோடி ரூபாயை இதற்காக மத்திய அரசு ஒதுக்கியிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் மழை பெய்யவில்லை என்று சொன்னாலும்கூட வறட்சியும் ஓர் இயற்கைச் சீற்றமே. இப்போதுகூட தஞ்சை டெல்டா பகுதியில் கிட்டத்தட்ட 3 இலட்சம் ஏக்கர் நிலத்தில், 100, 150 கோடி



ரூபாய் பெறுமானமுள்ள விளைபொருட்கள் நாசமாகியிருக்கின்றன. ஒருவேளை இந்தமாதிரியான ஒரு சூழ்நிலை வருகின்றபோது தமிழகத்திற்கு இயற்கைச் சீற்றத்தின் அடிப்படையிலே வறட்சிக்காக — இப்போது குடிநீர்ப் பிரச்சினை வந்திருக்கிறது—கூடுதலான நிதியொதுக்க இந்த அரசு முயற்சி செய்யுமா? அடுத்ததாக, இந்த இயற்கைச் சீற்றத்திற்கு மாநில வாரியாக எந்த அடிப்படையில் நிதி ஒதுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றத்திற்கு மைய அரசு ஒதுக்குகின்ற நிதிக்கு வரையறையேதும் இல்லை. மாநில அரசு எந்த அளவிற்கு மத்திய அரசிடம் நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கிறதோ அந்த மாநிலங்கள் அதிகமான பலனைப் பெற்றுவிடுகின்றன. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல சில வடபுலத்து மாநிலங்கள் இயற்கையாகவே அதிகமான நிதியை அவ்வப்போது பெற்று விடுகின்றன. நமது மாநிலத்திற்கும் இயற்கைச் சீற்றத்திற்கு அதிக நிதி வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு வருகிறது. ஆனால் அவர்கள் ஒதுக்குவது குறைவாகவே இருக்கிறது. அப்படி ஒதுக்கிய பணம் போதவில்லை என்று இயற்கைச் சீற்றம் ஏற்பட்ட பிறகு மீண்டும் மைய அரசை அணுகி நிதி கேட்பது வழக்கமாக இருந்து வருகிறது. இதை உயர்த்த வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமானது. இதைத் தொடர்ந்து மைய அரசை நாங்கள் வலியுறுத்துவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நல்ல விளக்கத்தைத் தந்தார்கள். குறிப்பாக 3,221 கோடி ரூபாய் அளவிலே மட்டுமே மத்திய அரசு நமக்கு நிதி ஒதுக்கியிருக்கிறது. இதுபோல, வேறு இனங்கள் மூலமாக வர வேண்டிய பாக்கி இருக்கிறதா? இதில் 11-வது நிதிக் குழு மூலமாக வந்த விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நேற்றுக்கூட நான் குறிப்பிட்டுச் சொன்னேன். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தள்ளுபடி செய்யப்பட்டதே, அதாவது வி.பி. சிங் காலத்திலே தள்ளுபடி செய்யப்பட்டதற்காக மறு முதலீடு செய்வதற்குரிய முயற்சியாக மத்திய அரசாங்கம் குழு அமைத்து அதன்மீது கருத்துகளைச் சொல்லியிருக்கிறது, அதில் இன்னும் முடிவு பெறப்படவில்லை. இந்த மாதம் நடைபெற்ற பிர[illegible] [illegible]லைமையிலே கூடிய அந்தக் [illegible]

ஒரு துணை அமைச்சருக்குப் பொறுப்பளித்து, அதன்மீது ஒரு விரைவான முடிவு எடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன்மீது நம்முடைய மாநிலத்தின் கருத்தை வலுவாகச் சொல்லி இருக்கிறோமா? அதன் மூலம் 500 கோடி ரூபாய் அளவிற்குக் கிடைப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதற்கான முயற்சியை நமது அரசு எந்த வகையிலே மேற்கொள்ளவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து, ஏற்கெனவே மைய அரசோடு மாநில அரசு தொடர்பு கொண்டிருக்கிறது. தொடர்ந்து அது வலியுறுத்தப்படும். அதைவிட முக்கியம், இதுபோன்ற பணிகளுக்கு 'Grants' என்ற முறையிலே தரக்கூடிய நிதியைக்கூட மிகவும் குறைத்து விட்டார்கள். அந்த Grants-லேகூட பாரபட்சம் நடக்கிறது. இதை நாங்கள் திட்டக் குழுவிடம் பேசுகிறபோது பெரிதும் வலியுறுத்தியிருக்கிறோம்; ஒப்பிட்டுப் பேசுகிறோம். அவர்கள் எப்படி, எப்படிப் பிற மாநிலங்களுக்கு அதாவது நம்மைவிட பாதிப்பு மிகக் குறைவான மாநிலங்களுக்கு அதிகப்படியான Grant என்ற முறையிலும், பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கின்ற தமிழகத்தைப் போன்ற மாநிலங்களுக்கு மிகக் குறைவான Grant என்ற முறையிலும் வரையறை இல்லாத நிலையினைக் கடைப்பிடித்து வருகிறார்கள். மைய அரசிற்கு வேண்டியவர்கள் என்றால் ஒன்று; வேண்டாதவர்கள் என்றால் ஒன்று. அதைவிட மிக முக்கியம் வடபுலத்து மாநிலங்களுக்கு வெளிப்படையாகவே துணிச்சலோடு பாரபட்சமான நிதி ஒதுக்கீட்டை மைய அரசு செய்து வருகிறது. அதைத்தான் நாங்கள் கண்டித்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 76, திரு. இரா. வில்வநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**76—**

**மருத்துவமனைக் கட்டடம்**

***61—திரு. இரா. வில்வநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



வேலூர் மாவட்டம், சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் அரசு பொது மருத்துவமனைக் கட்டடம் ரூபாய் பத்து இலட்சம் செலவில் கட்டும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், காவேரிப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட, அக்கிராமத்தில் அருள்மிகு அபயவரதராஜப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான நிலம் தேர்வு செய்யப்பட்டு, நிலக் கிரயத் தொகையை ஊர்ப் பொதுமக்கள் செலுத்தி, பொதுச் சுகாதாரத் துறைக்கு நிலமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலம் பெறப்பட்டவுடன் கட்டட கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் மற்றும் காவேரிப்பாக்கம் கிராமம் அபயவரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான மேற்படி கிராமத்திலுள்ள புல எண் 1316/2-ல் 1.35 ஹெக்டேரில் 0.40 ஹெக்டேர் நிலம் அதாவது 1 ஏக்கர் நிலத்தை ரூபாய் 1,42,041-க்கு கிராமப் பொதுமக்கள் சார்பாகக் காவேரிப்பாக்கம் பேரூராட்சித் தலைவர் சுகாதாரத் துறைக்கு விலைக்கு வாங்கிக் கொடுக்க முன்வந்துள்ளதை ஏற்று, காவேரிப்பாக்கம் கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட விற்பனை செய்ய சட்டப் பிரிவு 34-ன்கீழ் அரசுத் துறைச் செயலாளர் திரு. இராமகிருஷ்ணன் அவர்களிடமிருந்து இந்து சமய அறநிலையத் துறைக்கு 22-6-2001-ல் அரசு உத்தரவு வரப்பெற்று, அதன் அடிப்படையிலே கடந்த 10-7-2001 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பு 19-7-2001-ல் வேலூர் தினத்தந்தி நாளிதழில் வெளியிடப்பட்டது. இப்பொருள் குறித்து, சென்னை-34, கதவு எண் 119, மகாத்மா காந்தி சாலையிலுள்ள, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையாளர் அலுவலகத்தில் 17-8-2001 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது எந்தவிதமான ஆட்சேபணையோ, ஆலோசனைகளோ பெறப்படவில்லை என்று அறியப்பட்டு, இந்தக் கோயில் சம்பந்தமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள். அமைச்சர் சொல்ல வேண்டிய பதிலை நீங்களே சொன்னால் எப்படி?

[ 2001 செப்டம்பர் 11

**திரு. இரா. வில்வநாதன்:** இந்தத் திருக்கோயிலுக்குச் சம்பந்தமான பணம் கட்டுவதற்குண்டான அரசு ஆணை வழங்கப்பட்டு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொண்டு கூடிய விரைவிலே காவேரிப்பாக்கத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வேண்டிய விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார்கள். இந்து சமய அறநிலையத் துறையினுடைய ஆளுகைக்குட்பட்ட அந்த நிலத்திற்கு 1,42,041 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்து அதை நிலமாற்றம் செய்வதற்கு அந்தத் துறை ஒத்துக் கொண்டிருக்கிறது. அந்தத் தொகையையும் பொதுமக்கள் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே, அந்த நிலமாற்ற நடவடிக்கை எடுப்பதற்கு வேலூர் துணை இயக்குநர் அவர்கள் பணிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அந்த நிலமாற்றப் பணி முடிக்கப்பட்டவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 77, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

77—

**குடிநீர்**

***2093-அ—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மேற்கு ஒன்றியம், தோடனேரி பஞ்சாயத்து, கல்லிக்குடி கிராமத்திற்குக் குடிநீர் வசதி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், தோடனேரி ஊராட்சியிலுள்ள கல்லிக்குடி குடியிருப்பில் தற்போதைய மக்கள் தொகை 700 ஆகும். தற்போது ஆழ்துளைக் கிணறு இரண்டும்,



2001 செப்டம்பர் 11 ]

விசைப்பம்பு ஒன்றும் இக்குடியிருப்பில் உள்ளன. இக்குடியிருப்புக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 24 லிட்டர் ஆகும். மேலும் 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, சோதனையோட்டத்தில் உள்ளது. சோதனையோட்டம் முடிந்தவுடன் இத்திட்டம் பராமரிப்பிற்காக தோடனேரி ஊராட்சி வசம் ஒப்படைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லிக்குடி கிராமம் என்பது சமயநல்லூர், பரவை ஆகிய இரண்டு ஊர்களுக்கும் பக்கத்தில் உள்ள கிராமம். கடந்த 5 ஆண்டு காலமாக ** என்று கேள்விப்பட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொன்னம்பலம் சொன்ன அந்தத் தகவல் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. பொன்னம்பலம், கல்லிக்குடிக்குத் தண்ணீர் கேளுங்கள்.

**திரு. ப. பொன்னம்பலம்:** ** கடந்த 5 ஆண்டு காலமாக அந்தக் கிராமம் ஒரு தீவுபோலக் காட்சியளித்தது. மக்கள் அனைவரும் நாங்கள் வாக்களிக்க மாட்டோம் என்று சொல்லி wall poster எல்லாம் அடித்து ஒட்டினார்கள். பிறகு நான், அங்குள்ள மற்ற கிளைச் செயலாளர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு போய், கண்டிப்பாக அங்கே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைய ஏற்பாடு செய்து தருவேன் என்று சொன்னதோடு, நான் உங்களுக்குக் குடிநீர் வசதி செய்து தருகிறேன் என்றும் கூறினேன். அடுத்தபடியாக அங்கே சாலை வசதி இல்லை. ஆகவே, சாலை வசதியும், உங்களுக்குச் செய்து தருவேன் என்று சொல்லி, பேருந்து விடுவதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்றும் சொன்னேன். அதேபோல தொகுப்பு வீடுகளும் அங்கே இடிந்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குடிதண்ணீர் மட்டும்தான் கேள்வி. அதுசம்பந்தமாக மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) கல்லிக்குடி கிராமத்திற்குக் குடிதண்ணீர் ஏற்பாடு செய்வீர்களா என்று கேளுங்கள். (குறுக்கீடு) திரு. பொன்னம்பலம், உட்காருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[ 2001 செப்டம்பர் 11

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது** சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் சொன்னது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

வினா எண் 78, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**78—**

**நியாயவிலைக் கடை**

***2476—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, தோப்புக்கொல்லையில் நியாயவிலைக் கடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குள்ளஞ்சாவடிக்கு அருகில் தோப்புக்கொல்லை என்ற கிராமம் இருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள மக்கள் தொலை தூரத்திற்குச் சென்று ரேஷன் பொருட்களை வாங்கி வருகிறார்கள். இரண்டு இரயில்வே கேட்டுகளைக் கடந்து வருகின்றார்கள். அவை ஆளில்லாத இரயில்வே கேட். பல்வேறு விபத்துகள் ஏற்படுகின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பாண்டில் அந்தப் பகுதிக்கு ஒரு பகுதி நேரக் கடை திறப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2001 செப்டம்பர் 11 ]

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற விவரக் குறிப்பின் பிரகாரம் அந்தக் கடை 2 கிலோ மீட்டர் தொலைவிற்குக் குறைவாக இருக்கிறது என்ற விவரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிற இந்தக் கோரிக்கை அடங்கிய மனுவை எனக்குக் கொடுத்தால் அதைப்பற்றி மேலும் தீர விசாரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேர நியாய விலைக் கடைகள் தொடங்குகின்ற நேரத்திலே கடந்த ஆட்சிக் காலத்திலேகூட 200 குடும்ப அட்டைகள், 2 கிலோ மீட்டர் தொலைவு என்ற ஓர் அடிப்படையை வைத்துப் பிரித்தார்கள். அப்படிப் பிரிக்கின்ற நேரத்திலேகூட மலைப் பகுதி, ஆற்று ஓடைப் பகுதி என இப்படிப் போக முடியாத பகுதிகளுக்கு பெண்கள் நடந்து செல்ல வேண்டி இருக்கிற காரணத்தினாலே, அதையெல்லாம் தளர்த்த வேண்டுமென்று கேட்டு, சிறப்பு முன்னுரிமை அடிப்படையிலே அந்தப் பகுதிகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டு, சில இடங்களுக்கு வழங்கப்பட்டது. இன்னும் வழங்கப்படாத இடங்கள் நிறைய இருக்கின்றன. ஆகவே நம்முடைய புதிய அரசு எந்த அளவுகோலை, நிபந்தனையை வைத்திருக்கிறது? இப்படி 2 கிலோ மீட்டருக்குக் குறைவாக இருந்தாலும்கூட 200 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாக இருந்தாலும்கூட, போக்குவரத்து இல்லாத பகுதி, மலைப்பகுதி, ஆற்று ஓடைப் பகுதி போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலே இதை வழங்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 27,000 கடைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிற இந்த மலைப்

பகுதி, ஆற்றைக் கடக்கிற பகுதி போன்ற இடங்களுக்கு சலுகைகள் அளித்து கடைகளைத் திறப்பதைப்பற்றி ஏற்கெனவே விதிகளிலே தளர்வு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படி எந்த இடத்திலே இருக்கிறது, எங்கே வேண்டுமென்கிற கோரிக்கையைக் கொடுத்தால் அரசு அதைப்பற்றி ஆராயும்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ரேஷன் கடைகளைக் கட்டி, பல்வேறு ஊர்களிலே ரேஷன் கடை வைக்கப்படாமலேயே இருக்கின்றன. கடந்த ஆட்சிக்காலத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்தும், எம்.பி. நிதியிலிருந்தும் ரேஷன் கடைகள் மட்டும் கட்டப்பட்டு இருக்கின்றன. ஆனால் அங்கே கடைகளைத் திறப்பதற்கு அதிகாரிகள் ஒத்துக்கொள்வதில்லை. பல ஊர்களில் ரேஷன் கடை என்று கட்டி கல்வெட்டு வைத்த நிலையில் இருக்கின்றன. அங்கே எல்லாம் ரேஷன் பொருட்களை சப்ளை செய்யவேண்டியதன் அவசியத்தைக் கவனத்தில்கொண்டு, புதிதாகக் கட்டப்பட்டிருக்கின்ற கட்டடங்களிலே ரேஷன் கடைகளைத் திறக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கடைகள் கட்டப்பட்டிருக்கின்றன என்று சொன்னால் அதற்கான கடைகள் இயங்குகின்றன என்றுதான் அர்த்தம். ஆகவே கட்டியிருக்கின்ற கடைகள் திறக்கப்படாமல், அந்த இடத்திலே பொருட்கள் வழங்கப்படாமல் இருக்கும் என்று சொன்னால், எந்தப் பகுதியிலே அப்படி இருக்கிறது என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் கொடுத்தால் உடனடியாக அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் குறிப்பிட்டதுபோல, 200 குடும்ப அட்டைகள் இருந்தால் அதற்கு ஒரு நியாயவிலைக் கடை என்ற அடிப்படையில், பகுதிநேர நியாயவிலைக் கடை என்ற அடிப்படையில் செயல்படுத்தப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால்



பல இடங்களில் அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரியவில்லை. ஏனென்றால் கிராமப் பகுதிகளிலே தற்போது 10, 15 கிராமங்களுக்குச் சேர்த்துதான் ஒரு நியாயவிலைக் கடை இயங்கி வருகின்றது. இதன் காரணமாக, பெண்கள் 4 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் நடந்து சென்றுதான் பொருட்களை வாங்கக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. எனவே, அரசு இதை கவனத்தில்கொண்டு, குறைந்தது 2, 3 கிராமங்களுக்கு ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் ஒரு பகுதி நேர நியாயவிலைக் கடை அமையக்கூடிய அளவிலே நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைகளைத் திறப்பதிலே இந்த அரசாங்கத்திற்கு ஒன்றும் சிரமம் இல்லை. ஆனால் கடைகளைத் திறக்கிறபோது ஏற்கெனவே இயங்குகின்ற கடைகள் நட்டத்தில் இயங்காமலும், அதனுடைய அளவுகள் சரியாக இருக்கின்ற வகையிலும் இருக்கவேண்டும் என்கின்ற காரணத்தாலே மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கின்ற அந்தக் கோரிக்கைகள், எந்த இடம் சம்பந்தப்பட்டவை என்று குறிப்பிட்டுச் சொன்னால், இந்த அரசு ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 79, திரு. பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

79—

## விவசாய நடைமுறைப் பயிற்சி

***2125—திரு. பி.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு விவசாய நடைமுறைப் பயிற்சி அரசு செலவில் அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு அரசு செலவில் விவசாய நடைமுறைப் பயிற்சி அளித்தல் குறித்த கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[ 2001 செப்டம்பர் 11

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் விவசாயம் ஒரு முக்கியமான தொழில். 100-க்கு 75 சதவிகிதம் பேர் விவசாயத்தை நம்பி இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தற்போதைய விஞ்ஞான யுகத்தில் விவசாயத்தில் பல புதுப்புது வகையான நெல்வகைகள், வீரிய விதைகள், ஒட்டு ரகங்கள் ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் முக்கியத்துவத்தை எல்லாம் விவசாயிகள் இன்னும் தெரிந்துகொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. மேலும், இப்போது நெல்லாக இருந்தாலும் சரி, வாழையாக இருந்தாலும் சரி, புது வகையான நோய்கள் தாக்கி அந்த நோய்களிலிருந்து எப்படி விடுபடுவது என்று விவசாயிகள் தெரிந்துகொள்ள முடியாத ஒரு சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, பாரடைஸ் மரம், ஜட்ரோஃபா போன்ற எண்ணெய் வித்துக்கள் எல்லாம் பயிரிடப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு இவற்றைப்பற்றி எல்லாம் எடுத்துக்கூறினால் வேலையில்லாப் பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினையும் தீரும்; விவசாயிகளுடைய பிரச்சினையும் தீரும் என்பதை மனதில் வைத்து அரசு இதை மறுபரிசீலனை செய்ய ஆவன செய்யுமா என்று தங்கள் மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல வளர்ந்து வரும் விஞ்ஞானத் தொழில்நுட்பத்தை அறிந்துகொள்கிற வகையில் பல்வேறுபட்ட தட்பவெப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப எந்தெந்த வகைச் செடிகளைப் பயிரிட வேண்டும் என்ற தொழில்நுட்பத்தை அறிந்து கொள்வது குறித்தும், உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும், உற்பத்தி செய்யப்படும் பொருளின் தரத்தையும் உயர்த்த வேண்டியதன் அவசியம் மற்றும் மண்வளம், மழைவளம் பாதுகாப்பது பற்றியும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்தும், தகவல் பரிமாற்றம் தொடர்பானவை குறித்தும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அப்படி அளிக்கப்பட்டு வருகின்ற அந்தப் பயிற்சியிலே வேலையில்லாப் பட்டதாரிகளும் கலந்துகொண்டு பயிற்சியைப் பெறலாம் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.



2001 செப்டம்பர் 11 ]

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின் மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் அளிக்கின்றபோது, சுமார் 20 இலட்சம் எக்டேர் நிலங்களை, அதாவது 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களைப் புதியதாக வளப்படுத்த இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே, அந்தத் தரிசு நிலங்களைப் பயன்படுத்துவதற்கு புதியதாக நியமிக்கப்படுகிற அதிகாரிகளுக்குப் பயிற்சி கொடுத்து நியமிக்க இருக்கிறீர்களா அல்லது வேளாண் துறையில் ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அதிகாரிகளை மாற்ற இருக்கிறீர்களா? செவ்வனே நடந்து வருகிற வேளாண் துறை நிர்வாகத்திலிருந்து அதிகாரிகளை நீங்கள் மாற்றுவது என்று சொன்னால், அந்தப் பணியிலே சுணக்கம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமாரதாஸ் அவர்களே, வேலையில்லாத பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா என்பதுதான் கேள்வி.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அதோடு தொடர்புடையதுதானே; ஏற்கெனவே வேளாண்மைத் துறையிலே பணியாற்றுகிறவர்களை அந்தத் தரிசு நில மேம்பாட்டிற்காகப் பயன்படுத்துகிறோம் என்று சொன்னால், வேளாண்மைத் துறை பாதிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதியதாகப் பயிற்சி கொடுத்து, அல்லது தகுதிவாய்ந்த பட்டதாரிகளை வைத்து, இந்தப் பணியை ஆற்ற, தரிசு நிலங்களை மேம்படுத்த முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில், வேளாண்மைத் துறையின் மூலமாக உழவர்களுக்குப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தப் பயிற்சி முகாம்களிலே, இன்றைய சூழ்நிலையில் என்னென்ன தேவையோ அதற்குத் தகுந்தாற்போல பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றபோது, அந்த முகாம்களிலே, இதிலே ஆர்வமுடையவர்கள் கலந்துகொண்டு அந்தப் பயிற்சியைப் பெறலாம்.

எந்தெந்தப் பகுதியில், எதுபோன்ற வேலைகள் செய்யப்படுகின்றனவோ, அந்தந்தப் பகுதிகளில், யார் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள விரும்புகிறார்களோ அவர்களுக்கு அந்தப் பயிற்சி அங்கே அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு முந்திரி விவசாயம் செய்யக்கூடிய முந்திரி விவசாயிகள் சரியான விலை இல்லை என்ற காரணத்தினால், தற்கொலைக்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள்; தற்கொலைக்கும் ஆளாகியிருக்கிறார்கள். அந்த முந்திரி விவசாய மக்களுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. உட்காருங்கள்.

### (ஆ) குறுகிய கால வினா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுகிய கால வினா எண் 4, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்கள்.

4—

### தனி நீதிமன்றம்

***12787-திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-2001 அரசின் நிர்வாகச் சீர்குலைப்பால் ஏற்பட்ட வருவாய் இழப்பு நிகழ்வுகள் குறித்த வழக்குகளை விசாரிக்கத் தனி நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து அரசு உடனடி நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





(அ) மற்றும் (ஆ) 1996-லிருந்து 2001-ஆம் ஆண்டு வரை அரசின் நிர்வாகச் சீர்குலைப்பால் ஏற்பட்ட வருவாய் இழப்பு நிகழ்வுகள் குறித்த வழக்குகளை விசாரிக்கத் தனி நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி நீதிமன்றம் இல்லையென்று சொன்னால், தற்போது சிறப்பு நீதிபதிகளைக்கொண்டு, கடந்த கால முறைகேடுகளைப் பற்றி விசாரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கின்றன. எத்தகைய சீர்கேடுகள், முறைகேடுகளாக இருந்தாலும், அந்தச் சிறப்பு நீதிமன்றங்கள் மூலமாகவே அவற்றை மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) கல்குவாரித் தொழிலாளர்கள் புதிய சட்ட திட்டங்களால் பாதிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழகத்தில் கல்குவாரிகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் புதிய சட்ட-திட்டங்களினால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து, ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. ஜி. பழனிசாமி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. கே.சி. கருணாகரன், டாக்டர் தே. குமாரதாஸ், திரு. டி. சுதர்சனம், திரு. லா. சந்தானம், திரு. டி. மணி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கிறேன். தீர்மானத்தை மட்டும் எடுத்துக்கூறுமாறு அழைக்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே, இந்தக் கல்குவாரிகள் குறித்து ஒரு புதிய rules and regulations-ஐக் கொண்டு வந்திருக்கின்ற காரணத்தினால், சுமார் 50 இலட்சம் கல்குவாரித் தொழிலாளர்கள் இப்போது தங்களுடைய வேலைகளை இழந்து, பசியும் பட்டினியுமாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. முன்பு, சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னாலே, கல்குவாரிகளை யாருக்குக் குத்தகைக்குக் கொடுக்கிறோமோ, அவர்கள் அந்த இடத்தில் ரூ.25 இலட்சம், 50 இலட்சம் அல்லது 1.00 கோடி ரூபாய் என்று பணத்தை முதலீடு செய்து, கல்குவாரிகளுக்கு ஒரு infrastructure-ஐ அவர்கள் create செய்கிறார்கள். அப்படி அவர்கள் அடிப்படை வசதிகளை அங்கே பெருக்கி, அங்கே கல்குவாரித் தொழிற்சாலைகளையெல்லாம் அமைத்தபிறகு, அந்தக் குத்தகைக் காலம் முடிந்தவுடன், மீண்டும் அதை வேறு சில நபர்களுக்கு நாம் குத்தகைக்கு விடுகிற காரணத்தினாலே, பணத்தை முதலீடு செய்து முன்பு இருந்தவர்கள் அப்படியே அந்தக் கல்குவாரிகளை நட்டாற்றில் விடவேண்டிய ஒரு நிலை வந்து இருக்கிறது. ஆகவே, பழைய குத்தகை எடுத்தவர்களுக்கே மீண்டும் கல்குவாரிகளைக் குத்தகைக்குக் கொடுப்போம என்று சொன்னால், நிச்சயமாக 50 இலட்சம் தொழிலாளர்களுக்கு. இப்போது வேலையிழந்து வாடிக்கொண்டிருக்கிறவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்புக் கிடைக்கக்கூடிய ஒரு சூழல் உருவாகும். ஆகவே, நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த கல்குவாரியில் இன்று வேலையிழந்து வாடிக்கொண்டிருக்கிற 50 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கின்ற வகையில், அவர்களுக்கு ஒரு மறுவாழ்வு கொடுக்கின்ற வகையில் மீண்டும் இந்தக் குத்தகை conditions-ஐ மாற்றியமைத்து பழைய குத்தகை யார் எடுத்தார்களோ அவர்களுக்கே மீண்டும் குத்தகை renewal செய்துகொள்வதற்கு அரசு அனுமதிக்குமா, வேலைவாய்ப்பை உருவாக்கித் தருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்குவாரியினுடைய உரிமத்தை வழங்குகின்ற ஒரு சூழ்நிலையில் கடந்த 4 ஆண்டு காலமாக நம்முடைய அதிகாரிகள் மட்டத்திலும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர்கள் மட்டத்திலும் பல்வேறு மனுக்கள் கொடுத்தும் அதற்குத் தீர்வு ஏற்படாமல், இன்றையதினம் அது ஒரு



தீர்மான வடிவத்திலே இந்த அரசினுடைய கவனத்திற்கு வருகின்றது. சுமார் ஒரு இலட்சத்திற்கு அதிகமான கல்குவாரிகளில்—அதற்கு மேலேயும் இருக்கும்; அதாவது நம்முடைய சென்னை மாநகரினுடைய பகுதிக்கு அருகிலிருந்து, களியக்காவிளை வரையிலே உள்ள கல் குவாரிகளிலே—இந்த மக்கள் பணியாற்றுகின்றார்கள். அதற்கு மேலே, லாரிகளில் ஆயிரக்கணக்கானோர் அந்தப் பணியிலே ஈடுபட்டு வருகிறார்கள். மேலும், அரசினுடைய தேவைக்கு — பெரிய கல்லையும், அதுபோல், 1½ இஞ்ச் ¾ இஞ்ச், ½ இஞ்ச் மெட்டல், என்று அரசினுடைய தேவைக்கும் நாம் இவர்களிடமிருந்துதான் பெறுகின்றோம். ஆனால், சுற்றுச்சூழல் என்ற ஒரு காரணத்தைச் சொல்லி, கடந்த காலத்திலே இது வழங்கப்படாமல், அதனுடைய பல்வேறு துறைகளில், அதாவது, 50 மீட்டர் என்று இருந்ததை 500 மீட்டர் என்று அதனுடைய இடைவெளியை உயர்த்தியது ஒரு பக்கத்திலே; சாதாரணமாக ஒரு இடத்திலே போய், அதனுடைய மண்ணை, மேல் மட்டத்திலே இருக்கிற மண்ணை, 20 அடி ஆழத்திற்கு எடுத்ததற்குப் பின்னால்தான், அந்தக் கல்லை கண்டுபிடித்து, அதைப் பயன்படுத்துகின்றார்கள். எனவே, இதிலே இருக்கக்கூடிய அந்த விதிமுறைகளை ஓரளவிற்குத் தளர்த்தி, அந்த ஒப்பந்தக்காரர்களுக்கு, 10 ஆண்டு காலத்திற்கு நாம் அதைக் கொடுப்போமேயானால், அரசாங்கத்திற்கு ஒரு பக்கத்திலே வருமானம் வருவதற்கும், இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பைத் தருவதற்கும் வாய்ப்பு ஏற்படும். அந்த வகையிலே நம்முடைய கதர் கிராம வாரியம்—மத்திய அரசினுடைய துறை—ஏற்கெனவே மானியம்கூட அவர்களுக்குக் கொடுக்கலாம் என்று ஒரு காலகட்டத்திலே சொல்லியுங்கூட, நம்முடைய முன்னாள் மாநில அரசு அதற்குச் செவிசாய்க்கவில்லை. ஆகவே, அந்த வகையில், இந்தப் பிரச்சினைக்கு அரசு ஒரு சரியான கொள்கையை வகுத்து, நமது தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில் தீர்வுகாண வேண்டும். இதிலே இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று, மேல்மட்டத்திலே இருக்கின்ற பாறைகளை உடைத்து எடுக்கின்றோம்; மற்றொன்று, மண்ணிற்குள்ளே இருக்கிறது. எனவேதான், இது ஒரு முக்கியமான பிரச்சினை, இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பயன்படுகிற அளவிலே, அந்தச் சட்ட திட்டங்களிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி, 10 ஆண்டு காலம் குத்தகைக்குக் கொடுக்கிறபோது, ஒரு வருடத்திற்கு இவ்வளவு காசு நம்முடைய அரசாங்கத்திற்கு வர வேண்டும் என்பதிலே, அதிகம் பணத்தை வசூல் பண்ணாமல், ஒரு தொழில் என்ற அடிப்படையிலே, இந்த கல்குவாரியினுடைய பிரச்சினைக்கு அரசு ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துமா என்பதை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96ஆம் ஆண்டு நமது அரசு முன்பு ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது கல்குவாரிக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், 1996-க்குப் பின்னால் ஓர் அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்து, அந்தக் கல்குவாரியை நிறுத்திவிட்டார்கள். அதற்குப் பின்னால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டி.மணி அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, பல இலட்சம் தொழிலாளர்கள். கல்குவாரியிலே பணியாற்றுகிறவர்கள் எல்லாம் வேலை இழந்ததோடு மட்டுமல்லாமல், இந்தக் கல்குவாரிக்கு அனுமதி பெற்றவர்கள், எந்தெந்த இடம் என்று அரசால் சர்வே செய்யப்பட்டதோ அந்த இடத்திலே லாரிகள் செல்வதற்கான சாலை போட்டு, குடியிருப்புகள் கட்டி, அங்கே இயந்திரங்கள் பொருத்தி இப்படிப் பல இலட்சக்கனக்கான ரூபாயை, குறைந்தபட்சம் 50 இலட்சம் ரூபாயை, முதலீடுகளைப் போட்ட பின், 10 ஆண்டுகாலமாக அவர்கள் நிர்கதியாக நிற்கக்கூடிய பரிதாபகரமான நிலைமை இன்றையதினம் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு எந்தத் தடையும் இல்லாத வகையிலே, அவர்களுக்காக அரசு நிர்ணயிக்கின்ற இடத்தில் அவர்களுக்கு அனுமதி கொடுத்தால், அவர்கள் மீண்டும் தங்களுடைய தொழிலைத் தொடங்குவதற்கும், அதை நம்பி இருக்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும் ஒரு வாய்ப்பு ஏற்படும். இதை அரசு மறுபரிசீலனை செய்யுமா. அதைச் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிரு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் [தலை]வர் அவர்களே, அரசு நிலங்களிலுள்ள கல்குவாரிகள் 1959ஆம் [ஆண்]டு தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளின்படி, விதி 8-இன்படி [ஒப்பந்]தப்புள்ளி இணைந்த பொது ஏலம் வாயிலாகக் குத்தகைக்கு [வி]டப்படுகின்றன. சுற்றுப்புறச் சூழல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் உத்தரவிற்கிணங்க அரசாணை எண் 286, தொழில் [துறை], நாள் 1-4-1999-இன்படி தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள் 36-[இல்] குடியிருப்புகளுக்கு 500 மீட்டர் சுற்றளவில் யாதொரு கல்குவாரி நடவடிக்கைகளுக்கும் அனுமதித்தல் கூடாது என்ற விதி சேர்க்கப்பட்டு





நடைமுறையில் உள்ளது. இதன்மீது அரசு ஒரு சிறப்புக் குழு அமைத்து 500 மீட்டர் என்ற விதியைத் தளர்த்துவது குறித்த கருத்தை ஆய்வு செய்ய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பரிசீலனையில் தற்போது உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அரசாணை எண் 44, திட்டமிடுதல் மற்றும் வளர்ச்சித் துறை, 2-4-1990இன்படி 43 வட்டங்களில் சுரங்கப் பணிகள் மற்றும் சிறு கனிமம் தோண்டுவதற்கான நடைமுறைகளில் ஒன்றாக, மலைப்பகுதி மேம்பாட்டுப் பாதுகாப்பு குழுமத்தின் அதாவது Hill Area Conservation Authority-யின் அனுமதி பெற வேண்டும். இவ்வகைப்பட்ட பகுதிகளில் மலைப்பகுதி கிராமங்கள் மட்டும் தனியாக இனம் காணப்பட்டு, சமதளப் பகுதிகளிலுள்ள அரசு மற்றும் தனியார் நிலங்களிலுள்ள கல்குவாரிகளைக் குத்தகை விடுகின்ற வகையில் மேற்சொன்ன அரசாணையில் சில திருத்தங்களைக் கொண்டுவர இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், உச்ச நீதிமன்றத்தின் தலையீடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய இரண்டு காரணங்களினால், கல்குவாரிகள் ஏலம் தற்போது சிறிது தாமதமாகுமே தவிர, தொழிலாளர்களுக்கு இதனால் எந்தவித வேலைவாய்ப்பு பாதிப்பும் ஏற்பட வழியில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகச் சபைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் அரசு மருத்துவமனை இரத்த வங்கி செயல்படாதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீலகிரி மாவட்டம், குன்னூர் அரசு மருத்துவமனையில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட இரத்த வங்கி செயல்படாமல் இருப்பது குறித்து கவன ஈர்ப்பாக திரு. கா. கந்தசாமி அவர்கள் அறிவிப்புக் கொடுத்து உள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்வதற்கு அனுமதி அளித்திருக்கிறேன். தீர்மானத்தைச் சுருக்கமாக எடுத்துக்கூறுமாறு அழைக்கிறேன். திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் அரசினர் மருத்துவமனையில் மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழே இரத்த வங்கி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது செயல்படாமல் [illegible] விபத்து ஏற்படும் சமயங்க[ளில்]

குன்னூர் வியாபாரிகள் இரத்தத்தைக் கொடுப்பதற்கு முன்வருகின்றார்கள். எனவே, அந்த இரத்த வங்கி செயல்படுவதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கி ஒன்றை நிறுவுவதற்கான அரசாணை 16-4-1964ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டது. ஆணை பிறப்பிக்கப்பட்டவுடன் அதற்கென்று 30 சதுர மீட்டர் பரப்பளவில் ஒரு கட்டடம் கட்டப்பட்டது. அது நிர்ணயிக்கப்பட்ட பரப்பளவிற்குக் குறைவாக இருந்த காரணத்தினாலே, மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையின் ஆய்வு செய்யும் குழு, உரிமம் வழங்க மறுத்துவிட்டது. பின்னர், 1998ஆம் ஆண்டு 84.69 சதுர மீட்டரில் மற்றொரு திருத்தியமைக்கப்பட்ட வரைபடமும் மற்றும் உத்தேச செலவினப் பட்டியல் ஒன்றும் தயாரிக்கப்பட்டது. இந்த நிலையில் மத்திய அரசின் 1999ஆம் வருடத்திய வரையறையின்படி இரத்த சேமிப்பு வங்கி ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால் குறைந்தது நூறு சதுர மீட்டர் பரப்பளவில் கட்டடமும், அதில் 7 அறைகளும் இருக்கவேண்டுமென்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனவே, இந்த வரையறையின்படி இரண்டாவதாகத் திருத்தி அமைக்கப்பட்ட வரைபடமும், செலவினப் பட்டியலும் அமையவில்லை. அதனால் புதிய இடத்தில் வரையறைக்கு உட்பட்டு இரத்த சேமிப்பு வங்கி கட்டுவதற்காக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தன்னுடைய Constituency Fund-லிருந்து ரூபாய் 9 இலட்சம் கட்டடம் கட்டுவதற்கு ஒதுக்கியதன் விளைவாக இந்தக் கட்டடம் தற்போது கட்டி முடிக்கப்பட்டு மின் இணைப்புக் கொடுக்கும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. இன்னும் ஒரு வாரகாலத்திற்குள் இந்த வேலைகள் முடிக்கப்பட்டுவிடும்.

முற்பகல் 10-45

இரத்த சேமிப்பு வங்கி ஒன்றை அரசு மருத்துவமனையில் அமைக்க வேண்டுமென்று சொன்னால் சில வரையறைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அந்த வகையில், குன்னூரிலுள்ள இரத்த வங்கிக்கு Blood Sacer, Blood Weighing Machine கருவிகள் இன்னும் வாங்கப்படவில்லை. ஏனைய கருவிகளும், மருத்துவ அதிகாரியும், மருத்துவம் சாராப் பணியாளர்களும் உள்ளனர். அந்த மருத்துவ அதிகாரி இருந்தும், அதற்கான பயிற்சி அவருக்கு இதுவரை அளிக்கப்படவில்லை. எனவே, மருத்துவ நிபுணர் அதற்குரிய பயிற்சிக்கு உடனடியாக அனுப்பப்பட இருக்கிறார். தேவையான மருத்துவக் கருவிகளை வாங்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம், தேயிலைத் தோட்ட விவசாயிகளுக்கும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் மறுவாழ்வு கிடைத்தது போல, 37 வருடங்களாகத் தீர்க்கப்படாத இந்தப் பிரச்சினைக்கும், தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு விடிவு காலம் பிறந்திருக்கிறது. இன்னும் 15 நாட்களில், எஞ்சியுள்ள வேலைகள் முடிந்தவுடன் இடத்தையும், முடிக்கப்பட்ட பணிகளையும் ஆய்வு செய்வதற்கு மருத்துவக் கட்டுப்பாட்டுத் துறையினுடைய இயக்குநர் அவர்களுக்கு விண்ணப்பம் அனுப்பப்பட இருக்கிறது. அவருடைய ஆய்வுக்குப் பின்னாலே உரிமம் கிடைத்துவிடும். உரிமம் கிடைக்கப்பெற்றவுடன் கூடிய விரைவில் இந்த இரத்த வங்கி, குன்னூரில் செயல்படத் தொடங்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.





## 3. விதி 110-இன்கீழ் அறிக்கைகள்

### (அ) அரிசியையும் நெல்லையும் மாநிலத்திற்கு வெளியே லெவி செலுத்தாமல் கொண்டு செல்ல அனுமதித்தல் மற்றும் நெல்லுக்கு ஆதார விலையுடன் ஊக்கத் தொகை அளித்து கொள்முதல் செய்வது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-இன்கீழ், இரண்டு முக்கியமான பிரச்சினைகள் குறித்து, அவைக்கு இரண்டு அறிக்கைகள் அளிக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள்; அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இருப்பிலுள்ள அரிசி மற்றும் நெல் ஆகியவற்றின் அளவு, தமிழகத்தில் பொது விநியோகத் திட்டம் மற்றும் இதர நலத் திட்டங்களின்கீழ் வழங்கத் தேவைப்படும் அரிசியின் அளவு, மாதந்தோறும் மத்திய அரசு, தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யும் அரிசியின் அளவு மற்றும் தஞ்சை வடிகால் பகுதி விவசாயிகளின் கோரிக்கைகள் ஆகியவற்றை, 10-9-2001 அன்று, தமிழக அமைச்சரவை பரிசீலித்து ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவினை மேற்கொண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கத்தக்க அளவில், அரிசி மற்றும் நெல் கையிருப்பு உபரியாக இருக்கின்ற காரணத்தினால், இன்று முதல், தமிழ்நாட்டிலிருந்து அனைத்து ரக அரிசி மற்றும் நெல்லை, மாநிலத்திற்கு வெளியே, எந்தவிதமான லெவியும் செலுத்தாமல் கொண்டு செல்ல, அனுமதி அளிக்க தமிழக அமைச்சரவை முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முடிவு இன்று, அதாவது *11-9-2001* முதல் அமலுக்கு வரும்.

*1984*ஆம் வருடத்திய தமிழ்நாடு நெல் மற்றும் அரிசி கொள்முதல் லெவி ஆணை 4(ஏ) பிரிவின்கீழ் பிறப்பிக்கப்படும் இந்த உத்தரவின்படி, தமிழ்நாட்டிலிருந்து எவ்வித லெவியும் செலுத்தாமல் மாநிலத்திற்கு வெளியே நெல் மற்றும் அரிசியை எந்தவித அளவுக் கட்டுப்பாடும் இல்லாமல் கொண்டு செல்லலாம். மாநிலத்திற்கு வெளியே நெல் மற்றும் அரிசியைக் கொண்டு செல்ல இருந்த எல்லாத் தடைகளையும் இந்த அரசு நீக்கிக்கொள்ள முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு மாநில எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ள குடிமைப் பொருள் வழங்கல் துறையின் கண்காணிப்பிலுள்ள சோதனைச் சாவடிகள் அனைத்தும் விலக்கிக்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முக்கியத்துவம் வாய்ந்த இந்த முடிவினை, *25* ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு எனது தலைமையில் அமைந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த அரசுதான் எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், குடிமைப் பொருள் வழங்கல் துறையின் கண்காணிப்பிலுள்ள சோதனைச் சாவடிகளில் பணியாற்றி வருகின்ற அரசு ஊழியர்கள் அனைவரும், தமது தாய்த் துறையான வருவாய்த் துறைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்பதையும், இதனால் அவர்கள் யாருக்கும் எந்தவித பணி இழப்பும் ஏற்படாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், காவிரி டெல்டா பகுதியில் குறுவைப் பயிர் அறுவடையை எதிர்நோக்கி, கொள்முதல் கொள்கையை அறிவிப்பது சம்பந்தமாகத் தமிழக அரசு ஒரு முடிவு எடுத்துள்ளது. தற்போது செழிப்பாக உள்ள மாநிலத்தின் உணவுக் கையிருப்பு மிகவும் திருப்திகரமாக இருக்கின்ற காரணத்தினாலும், மேலும் விவசாயிகளுக்கு உதவுகின்ற நோக்கத்துடனும்,



வருகின்ற குறுவைப் பருவத்தில் இணை கொள்முதல் கொள்கை Parallel Procurement Policy கடைப்பிடிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், நேரடிக் கொள்முதல் மூலம் விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யும். அதேபோன்று தனியார் நெல் வியாபாரிகளும், நெல்லை, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

மத்திய அரசு நெல்லுக்கு அறிவித்துள்ளபடி, சாதாரண ரக நெல்லுக்கு, ஒரு குவிண்டாலுக்கு *530* ரூபாயும், 'A' Grade நெல்லுக்கு *560* ரூபாயும் என்ற குறைந்தபட்ச ஆதார விலையுடன், இந்த இரண்டு ரகங்களுக்கும், தமிழக அரசின் ஊக்கத் தொகையாக குவிண்டாலுக்கு *40* ரூபாயும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் *10-50*

மேலும், இரண்டாம் தர நெல்லுக்கு, குவிண்டால் ஒன்றுக்கு *5* ரூபாயும், மூன்றாம் தர நெல்லுக்கு *10* ரூபாயும், தரப் பிடித்தம் Grade cut செய்து வழங்கப்படும்.

*18* சதவீதம் வரை ஈரப்பதம் உள்ள நெல், நிர்ணயிக்கப்பட்ட ஆதார விலையுடன் கூடிய ஊக்கத் தொகை அடிப்படையில் கொள்முதல் செய்யப்படும். *18* சதவீதத்திற்கு மேல் *25* சதவீதம் வரை ஈரப்பதம் உள்ள நெல், தகுந்த பணப் பிடித்தத்துடன் கொள்முதல் செய்யப்படும்.

இந்த ஆண்டு குறுவைப் பயிர்க் கொள்முதல் *15-9-2001* முதல் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### (ஆ) பஞ்சாலைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளைத் தொழில் தீர்ப்பாயத்திற்கு விடுதல் மற்றும் இடைக்கால நிவாரணம் வழங்குதல் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** இப்போது அடுத்த அறிவிப்பை வெளியிடுகிறேன். தமிழ்நாட்டில் சுமார் *1,200* பஞ்சாலைகள் உள்ளன. இவற்றில் சுமார் *3* இலட்சம் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களின் ஊதிய உயர்வு சம்பந்தமாக நீதிபதி திரு. நடராஜன் அளித்த தீர்வம் (Justice Natarajan Award) *31-12-1998* அன்று முடிவடைந்த நிலையில், கடந்த இரண்டரை ஆண்டுகாலமாக, பஞ்சாலைத்

தொழிலாளர்கள் ஊதிய உயர்வு தர வேண்டும் என்று போராடி வருகின்றனர். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன் பஞ்சாலைத் தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு, கடந்த 6-6-2001 மற்றும் 7-6-2001 ஆகிய இரண்டு தினங்களில் என்னுடைய அறிவுரைக்கிணங்க, நிர்வாகத் தரப்பு மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. நிர்வாகத் தரப்பினர் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் வேண்டுகோளுக்கிணங்க, 20-6-2001 மற்றும் 21-6-2001 ஆகிய இரு தினங்களில், முறையே, பஞ்சாலைகளின் நிர்வாகத் தரப்பினரோடும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளோடும் தனித்தனியே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. இதில் சுமுகமான தீர்வு ஏற்படவில்லை.

20-8-2001 முதல், வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாகப் பஞ்சாலைத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள், 1-8-2001-இல், வேலை நிறுத்த அறிவிப்பை வெளியிட்டன. எனவே, 8-8-2001 அன்று, தொழிலாளர் நல ஆணையர் மீண்டும் பேச்சு வார்த்தையை நடத்தினார். உத்தேசித்துள்ளவாறு வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டாம் என்று தொழிற்சங்கங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டன. இதன் பின்னர், அரசு அறிவுறுத்தியதன் பேரில், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் 18-8-2001 மற்றும் 19-8-2001 ஆகிய நாட்களில், கோவையில், தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து வேலை நிறுத்தத்தைத் தவிர்க்குமாறும், அரசு நடத்தவுள்ள பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். ஆனால், தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும், 20-8-2001 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். என்னுடைய அறிவுரையின் பேரில், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர், தொழிற்சங்கத் தலைவர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொள்ளுமாறும், 28-8-2001 அன்று நடக்க இருக்கும் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். அதற்கிணங்க, தொழிற்சங்கங்களும், தொழிலாளர்களும் 23-8-2001 முதல் வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொண்டனர்.

28-8-2001 அன்று எனது அறிவுரையின்பேரில், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடைபெற்றது. அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது,



மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர், நிர்வாகப் பிரதிநிதிகளுக்கு, இப்பிரச்சினை தீர சில ஆலோசனைகளை வழங்கினார். இந்த ஆலோசனைகள் குறித்து, அனைத்து ஆலைகளின் உரிமையாளர்களின் கூட்டத்தினைக் கூட்டிக் கலந்து ஆலோசிக்க அவகாசம் வேண்டுமென நிர்வாகப் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தை 6-9-2001-க்குத் தள்ளி வைக்கப்பட்டது. ஆனால், 6-9-2001 அன்று நடைபெற்ற இறுதிக் கட்டப் பேச்சு வார்த்தையிலும் எவ்வித சுமுக முடிவும் ஏற்படவில்லை. இந்த அரசு பதவி ஏற்றவுடன் பஞ்சாலைத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வுப் பிரச்சினை தொடர்பாக 9 முறை அதிகாரிகள் மட்டத்திலும், அமைச்சர்கள் மட்டத்திலும், இரு தரப்பினரையும் அழைத்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தியும் ஒரு சுமுகமான முடிவையோ ஒப்பந்தத்தையோ எட்ட முடியவில்லை. எனவே, அரசு இந்தப் பிரச்சினையை மிகுந்த கவனத்துடன் ஆராய்ந்து, தொழிலாளர் நலனைப் பாதுகாக்கவும், தொழில் அமைதியை நிலைநிறுத்தவும், தொழிலாளர்கள் முன்வைத்த ஊதிய உயர்வு சம்பந்தமான கோரிக்கைகளை, தொழில் தகராறுகள் சட்டப்படி, தொழில் தீர்ப்பாயத்தின்—Industrial Tribunal-ன் முடிவிற்கு விடுவதெனத் தீர்மானித்துள்ளது என்பதைச் சட்டப்பேரவைக்குத் தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-55

தீர்ப்பாயத்தின் முடிவு கிடைப்பதற்குக் காலதாமதம் ஏற்படும் என்பதால், தொழிலாளர்களுக்கு ஓர் இடைக்கால நிவாரணம் வழங்குவது நியாயமானதே என்று உணரப்பட்டு, டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 1982ஆம் ஆண்டில், 1947ஆம் வருடத்திய தொழில் தகராறுகள் சட்டத்தில் பிரிவு 10-பி என்ற புதிய சட்டப்பிரிவு ஏற்படுத்தப்பட்டது. தொழிலாளர்களின் நலனைக் காக்கும் இந்தச் சட்டப் பிரிவு முதன் முதலாக 1985ஆம் வருடத்தில் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது உபயோகிக்கப்பட்டு, பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்க உத்தரவிடப்பட்டது. பின்னர் கடந்த 1992ஆம் வருடம், எனது தலைமையில் இருந்த முந்தைய அரசு, மீண்டும் இந்தச் சட்டப் பிரிவைப் பயன்படுத்தி, பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்க உத்தரவிட்டது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [ 2001 செப்டம்பர் 11

அதேபோல, நீண்ட நாட்கள் தொழிலாளர்களுக்கு ஊதிய இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, தொழிலாளர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, தொழில் அமைதியைக் காத்திடவும், தொழிலாளர் நலனைப் பேணவும், தொழில் தகராறுகள் சட்டப் பிரிவு 10-பி-இன்கீழ், பஞ்சாலை நிர்வாகங்கள், தொழிலாளர்களுக்குக் கீழ்க்கண்டவாறு இடைக்கால நிவாரணம் வழங்கிட வேண்டுமென்று உத்தரவிட முடிவெடுத்துள்ளது என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(1) 2200 வரையில் கதிர்கள் உள்ள பஞ்சாலைகளில் பணிபுரியும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் மாதந்தோறும் 150 ரூபாய் இடைக்கால நிவாரணமாக வழங்கப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

(2) மேற்கண்ட தொழிலாளர்களுக்கு இது தவிர, ஒட்டு மொத்தத் தொகையாக Lump sum ஆக 900 ரூபாய் வழங்கப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

(3) 2201 மற்றும் அதற்கும் மேல் கதிர்கள் உடைய பஞ்சாலைகளில் பணிபுரியும் நிரந்தர மற்றும் பதிலித் தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் 225 ரூபாய் இடைக்கால நிவாரணமாக வழங்கப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

(4) மேற்கண்ட தொழிலாளர்களுக்கு, இது தவிர ஒட்டு மொத்தத் தொகையாக 1,300 ரூபாய் வழங்கப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

(5) 2201 மற்றும் அதற்கும் மேல் கதிர்கள் உடைய பஞ்சாலைகளில் பணிபுரியும் நிரந்தர மற்றும் பதிலித் தொழிலாளர்கள் தவிர மற்ற அனைத்துத் தொழிலாளர்களுக்கும் 150 ரூபாய் இடைக்கால நிவாரணமாக வழங்கப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

(6) மேற்கண்ட தொழிலாளர்களுக்கு இது தவிர, ஒட்டு மொத்தத் தொகையாக 900 ரூபாய் வழங்கப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அறிவிப்புகள், பஞ்சாலைத் தொழிலாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெறும் என்று நம்புகிறேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கை 110-ல் விவாதம் கிடையாது.





## 4. அறிவிப்புகள்

### (அ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமனம்

### (1) பேரவை விதிகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு அறிவிப்புகள் 2001-2002ஆம் ஆண்டுக்கான பேரவை விதிகள் குழுவிற்கு கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்
2. மாண்புமிகு முதலமைச்சர்
3. மாண்புமிகு பேரவை முன்னவர்
4. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
5. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
6. திரு. கா.பூ. முனுசாமி
7. திரு. வது. நடராஜன்
8. திரு. கே.எஸ். பழனிசாமி
9. திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்
10. திரு. எஸ். இராமச்சந்திரன்
11. திரு. எஸ்.கே. செல்வம்
12. திரு. கே. என். சேகரன்
13. திரு. எஸ்.ஏ.எம். உசேன்
14. திரு. சோ. பாலகிருஷ்ணன்
15. திரு. டி.கே. இராஜா
16. திரு. கு. ஜெயக்குமார்
17. திரு. ஜே. ஹேமச்சந்திரன்

பேரவை விதி 256 (1)-ன்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

[2001 செப்டம்பர் 11

### (2) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002ஆம் ஆண்டுக்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவிற்குக் கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திரு. ப. இராஜரெத்தினம்
2. திரு. ப. சிதம்பரம்
3. திரு. கா.பூ. முனுசாமி
4. திரு. செ.ம. வேலுசாமி
5. திரு. ப. இளவழகன்
6. திரு. நா. சந்திரமோகன்
7. திருமதி சி.எம். சூரியகலா
8. திரு. மு.பெ. சாமிநாதன்
9. திரு. ஆர். சக்ரபாணி
10. திரு. எம். ராம்குமார்
11. திரு. எஸ். நடராஜன்
12. திரு. ம. அப்துல் லத்தீப்

பேரவை விதி 240-ன்கீழ் திரு. ம. அப்துல் லத்தீப் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### (3) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவிற்குக் கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திரு. இரா. வில்வநாதன்
2. திரு. கே.எஸ். தென்னரசு
3. திரு. கே.கே. சிவசாமி
4. திரு. ந. இராமு
5. திரு. என்.கே. பெருமாள்



01 செப்டம்பர் 11] [பேரவைத் தலைவர்]

6. திரு. ப. பொன்னம்பலம்
7. திரு. ப. ரங்கநாதன்
8. திரு. சி. ஞானசேகரன்
9. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்
10. திரு. தி. வேல் முருகன்
11. திரு. கே. ஆறுமுகம்
12. திரு. மு. அப்பாவு

பேரவை விதி 249(1)-ன்கீழ் திரு. சி. ஞானசேகரன் அவர்களை க்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

முற்பகல் 11-00

### (4) அவைக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டுககான வைக் குழுவிற்குக் கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் சய்கிறேன்:

1. திரு. ஆகு.சீ. அன்பழகன்
2. திரு. த. ஆறுமுகம்
3. திரு. எஸ்.எம். பாலன்
4. திரு. வீ. சந்திரன்
5. திரு. செ. தாமோதரன்
6. திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்
7. திரு. க. பதினெட்டாம்படியான்
8. திரு. எஸ்.எம். சீனிவேல்
9. திரு. வி. ஜெயராமன்
10. திரு. அ. அசோகன்
11. திரு. பா. பரணிகுமார்
12. திரு. ஆ. ராஜகோபால்

[பேரவைத் தலைவர்] [2001 செப்டம்பர் 11

13. திரு. கோ. இரவிராஜ்

14. திருமதி எஸ். மகேஸ்வரி

15. திரு. என். நன்மாறன்

16. திரு. சோ. இராசேந்திரன்

17. திரு. கே.வி. முரளிதரன்

18. திரு. பி.எஸ். அருள்

பேரவை விதி 253 (1)-ன்கீழ் திரு. வி. ஜெயராமன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

**(5) மனுக்கள் குழு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவிற்கு கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திரு. பி.எம். நரசிம்மன்
2. திரு. கு. அன்பழகன்
3. திரு. பெ. பழனியப்பன்
4. திருமதி பூபதி மாரியப்பன்
5. திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி
6. திருமதி எஸ். ராஜம்மாள்
7. திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்
8. திரு. ப. அரசன்
9. திரு. ஜெ. அன்பழகன்
10. திரு. எஸ். தாமோதரன்
11. திரு. போளூர் வரதன்

பேரவை விதி 261 (2)-ன்கீழ் திரு. பி.எம். நரசிம்மன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.



2001 செப்டம்பர் 11 ]

**(6) பேரவை நூலகக் குழு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டுக்கான பேரவை நூலகக் குழுவிற்குக் கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்
2. திரு. கே.பி. அன்பழகன்
3. திரு. செ. அண்ணாதுரை
4. திரு. எம்.எஸ். சந்திரசேகரன்
5. திரு. கா.தி. இளையகண்ணு
6. திரு. தா. பச்சைமால்
7. திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா
8. திரு. எ.வ. வேலு
9. திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன்
10. திரு. மு. கார்த்தி

பேரவை விதி 264(3)-ன்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் இக்குழுவின் தலைவர் ஆவார்.

**(7) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டுக்கான பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவிற்கு கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திரு. பி.எம். நரசிம்மன்
2. திரு. ப. ஆண்டிவேல்
3. திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்
4. திரு. கே.கே. பாலசுப்பிரமணியன்
5. திரு. வி.ஏ. செல்லையா
6. திரு. சொ. கருப்பசாமி
7. திரு. டி.பி.எம். மைதீன்கான்

8. திரு. ஜெக. வீரபாண்டியன்

9. திரு. டி. சுதர்சனம்

10. திரு. சி. சண்முகம்

11. திரு. மே.ப காமராஜ்

பேரவை விதி 268(2)-ன்கீழ் திரு. பி.எம். நரசிம்மன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் எனறு கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.





மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும்**

**(ஆ) கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம்**

### (அ) கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 224,14,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1952, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேங்கிக் கிடக்கும் பட்டு, கைத்தறித் துணிகளை அரசு கொள்முதல் செய்து விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,14,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *177*, திரு. சி. ஞானசேகரன்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறி, விசைத்தறி மூலம் தயாராகித் தேங்கிக் கிடக்கும் துணிகளை அரசே கொள்முதல் செய்து வெளிநாட்டில் விற்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய *25* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *224,14,63,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2460*, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய *25* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *224,14,63,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3266*, திரு மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்."

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய *25* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *224,14,63,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3591*, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி



கொளத்துப்பாளையத்திலுள்ள விசைத்தறி கூட்டுறவுச் சங்கம் செயல்படாமல் உள்ளதைச் செயல்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய *25* ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *224,14,63,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

முற்பகல் *11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1825*, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய *25* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *224,14,63,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3299*, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய *25* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *224,14,63,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3196*, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய *25* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *224,14,63,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2617, டாக்டர் தே. குமாரதாஸ்

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறித் துணிகளின் விற்பனையில் தேக்க நிலையைப் போக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 224,14,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 874, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 224,14,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 764, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2996, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 224,14,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3090, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 224,14,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2028, திரு. கே. ஆறுமுகம்,

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கழுக்குன்றம் வட்டத்தில் நெசவாளர்களின் வேலையின்மையைப் போக்க ஒரு புதிய திட்டம் வகுத்து நெசவாளர்களுக்குப் போதிய வேலைவாய்ப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 224,14,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1975, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியும் துணித் தொழிலும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

@ 237 முதல் 280 வரையுள்ள பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**(ஆ) கோரிக்கை எண் 4- பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 4-பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 135,34,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் *187*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நுழைவு வரியை நீக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,34,67,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2263*, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 135,34,67,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3051*, திருமதி எஸ். மகேஸ்வரி.



**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொப்பரை, பருத்தி ஆகிய பொருட்கள் மீதான விற்பனை வரி 4 சதவிகிதம் உயர்த்தப்பட உள்ளதாக நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதை மறுபரிசீலனை செய்து கொப்பரை, பருத்தி ஆகியவற்றின் மீதான விற்பனை வரியை இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,34,67,000-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *602*, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெட்ரோல் பங்குகளில் விற்கப்படும் distilled water bottles-க்கு விற்பனை வரி விதிப்பதை இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,34,67,000-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3268*, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,34,67,000-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1815*, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,34,67,000-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2797, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க ,நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,34,67,000-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3179, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,34,67,000-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2633, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,34,67,000-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 862, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,34,67,000-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1999, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2950, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,34,67,000-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3073, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்- நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,34,67,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 775, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

**மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் தொடங்குகிறது. திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா.

**திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியும், துணித்தொழிலும் மற்றும் பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் குறித்த மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்குத் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் உயிருக்கும் மேலாக நேசிக்கின்ற எங்கள் கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், தமிழ்த் தென்றல் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் ஆலமரத்தின் வேர்களுக்கு ஓசைப்படாமல் நீர் வார்த்துக் கொண்டிருக்கின்ற எங்கள் தளபதி, திருமிகு மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-10*

கைத்தறியைப் பொறுத்தவரையிலே, கழக அரசு ஆண்டு முழுவதும் தள்ளுபடி என்கிற நிலையைத் தந்தது; காப்பீட்டுத் தொகையை ரூபாய் 50 ஆயிரமாக உயர்த்தித் தந்தது; முதியோர் ஓய்வூதியத்தை ரூ.200 வரையிலே உயர்த்தித் தந்தது; தறியுடன்கூடிய வீட்டு வசதித் திட்டத்தை ஏற்படுத்தித் தந்தது; இன்றைக்கு பட்டுச் சேலைகள் தேக்கத்தினாலே நெசவுத் தொழில் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பின்றி பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதற்குத் தள்ளுபடி உச்சவரம்புத் தொகை ரூ.200 என்று இருப்பதை மாற்றி அமைக்கவேண்டும். அப்போதுதான் அத்தொழிலுக்கு வாழ்வளிக்க முடியும் என்ற வேண்டுகோளை இங்கே வைக்கிறேன்.

---

@ 281 முதல் 298 வரையுள்ள பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



அதேபோல, 'டான்சில்க்' மூலம் தரமான பட்டு நூல், நெசவாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அதனுடைய திண்மையினாலே இன்றைக்கு விலை கூடுகிறது. அது தரமானதாக இருந்தால் விலை குறையும் என்கிற அந்த வேண்டுகோளையும் இந்த நேரத்திலே வைக்கிறேன்.

விவசாயிகளுக்கு என்று நாம் நிலவள வங்கிகளை வைத்திருப்பதைப் போல நெசவாளர்களுக்கு என்று ஒரு வங்கியை நாம் தொடங்கி, அவர்களுக்கு அந்த வசதியைச் செய்து தரவேண்டும் என்பது அவர்களது வேண்டுகோளாக இருக்கிறது. இன்றைக்கு நெசவாளர்கள் தங்களுடைய முதலாளிகளோடு ஊதிய உயர்வுக்காகத் தமிழ்நாடு முழுவதும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் தஞ்சையிலே மட்டும் ஏழாயிரம் தறிகள் இருக்கின்றன. அதிலே 16 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்கு அந்த ஊதியத்தை உயர்த்தித் தருவதற்கான நிலையை நாம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

2001-2002-க்கான நிதிநிலை அறிக்கையைத் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த மன்றத்திலே வைத்தபோது, வரியில்லாத நிதிநிலை அறிக்கையை வைத்தார்கள். இன்றைக்கு இந்த அரசு ரூ.135 கோடிக்கு புதிய வரிகளை அறிவித்துள்ளது. இது மக்களைப் பாதிக்கும், விலைவாசியை உயரச் செய்யும் என்பதைக் கருத்திலே கொள்ளவேண்டும். தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராகவும், மாண்புமிகு எஸ்.ஜே. சாதிக் பாட்சா அவர்கள் வணிக வரித் துறை அமைச்சராகவும் 1971 ஆம் ஆண்டிலே இருந்தபோது, தலைவர் கலைஞர் அவர்களின் உத்தரவுப்படி 69 பொருட்கள் அன்றைக்கு பலமுனை விற்பனை வரியிலிருந்து ஒருமுனை விற்பனை வரிக்கு மாற்றப்பட்டன. அதுதான் வணிகர்களுக்கு ஒரு விடியல் காலம் என்பதை எந்த நாளும் வணிகர்கள் மறக்கமாட்டார்கள். அதற்கு முன்னாலே வணிகர்களுக்கு இருந்த தொல்லை என்ன என்பதை வணிகர்களாகிய நாங்களெல்லாம் அறிவோம். விற்பனை வரி அதிகாரிகளைப் பார்த்தால் நடுங்கக்கூடிய நிலைமை எல்லாம் 1970-க்கு முன்னாலே இருந்தது. முதன்முதலாக 69 பொருட்களை அன்றைக்கு பலமுனை விற்பனை வரியிலிருந்து ஒருமுனை விற்பனை வரிக்கு மாற்றி அமைத்தபோதுதான் வியாபாரிகள் ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

அன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் பல இடங்களிலே பாராட்டுக் கூட்டங்களிலே கலந்துகொள்ள முடியாததனாலே அந்தப்

பெருமையெல்லாம் அன்றைக்கு திரு. சாதிக் பாட்சாவுக்குக் கிடைத்தது. அந்த அளவிற்கு வணிகர்கள் அந்த நிலையை ஏற்றுக்கொண்டு மகிழ்ந்தார்கள். தொடர்ந்து கழக அரசு 1989-1990 ஆம் ஆண்டும் பெரும்பான்மையான பொருட்களுக்கு ஒருமுனை விற்பனை வரியைத் தொடரச் செய்தது. 1991-1996 ஆம் ஆண்டு வரை இருந்த அரசு, மீண்டும் அந்தப் பலமுனை விற்பனை வரியைப் பல பொருட்களுக்கு அமல் செய்ததையும் மறக்க முடியாது. 1996 ஆம் ஆண்டு மீண்டும் கலைஞர் அரசு எல்லாப் பொருட்கள் மீதான பலமுனை விற்பனை வரியை நீக்கி ஒருமுனை விற்பனை வரியாக மாற்றி அமைத்தது. வணிகர்கள் எளிய முறையில் வணிகப் பதிவுச் சான்றிதழ் பெறுகின்ற வகையில்—R.C.—வியாபாரத்தலத்தைப் பார்வையிடாமலேயே, விண்ணப்பங்கள் கிடைத்த 7 தினங்களுக்குள் வணிகர்களைத் தேடி வணிகப் பதிவுச் சான்றிதழ் கிடைக்க உதவியது கழக அரசு.

முற்பகல் 11-15

ஒவ்வொரு மாதமும் தாக்கல் செய்ய வேண்டிய படிவம் 17 monthly return-ஐ ஆண்டுக்கு ஒரு படிவம் தாக்கல் செய்கின்ற வகையிலே சட்டவிதித் திருத்தம் செய்யப்பட்டதும் கழக அரசில்தான். வணிகர்களின் வேண்டுகோளையேற்று இடை மாநிலச் சோதனைச் சாவடிகள் நீங்கலாக மாநிலத்திற்குள் அமையப்பெற்ற சோதனைச் சாவடிகள் எல்லாம் நீக்கப்பெற்றன.

1989-ல் வணிகர்களின் நீண்டகாலக் கோரிக்கையை ஏற்று 1975-லேயே அமைக்க முற்பட்ட வணிகர் நல வாரியத்தை தலைவர் கலைஞர் அவர்கள் அமைத்து வணிகர்களுக்குப் பேருதவி செய்தார்கள். தமிழக வரலாற்றில் முதன்முதலாக 1999-2000 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் முன் வணிகர் சங்கப் பிரதிநிதிகளோடு கலந்து ஆய்வு செய்து வரிச் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் சிறப்புமிக்க ஒன்றாக, வணிகர்கள் தங்கள் சுதந்திர மூச்சுக் காற்றினை அனுபவிக்கின்ற வகையிலே ஒரு கோடி ரூபாய் விற்பனைத் தொகை வரை சுய வரி விதிப்பு self assessment ஏற்படுத்தி ஒரு சாதனையைச் செய்து தந்தார்கள். அதேபோல வணிகர்களாகப் பதிவு செய்ய நிர்ணயிக்கப்பட்ட மொத்த விற்பனைத் தொகைக்கான வரம்பினை 1998-99-ல் 1½ இலட்சமாகவும், 1999-2000-ல் 3 இலட்சமாகவும் கழக அரசு உயர்த்தித் தந்தது. இதை இந்த அரசு 5 இலட்சமாக உயர்த்தித் தரவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.



1983-84-ல் அன்றையதினம் முதல்வராக மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது கொண்டு வரப்பட்ட நுழைவு வரி பெரும் சர்ச்சைக்கும், அனைத்துத் தரப்பினரின் எதிர்ப்புக்கும் வித்திட்டதாக அமைந்தது. 3 நாட்கள் வியாபாரிகள் எல்லாம் கடைகளை அடைத்தார்கள். ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அப்போது சிறைக்குச் சென்றார்கள். பின்னர், பெருந்தன்மையோடு அன்றைய முதலமைச்சர் அவர்கள் அந்த நுழைவு வரியைத் திரும்பப் பெற்றார்கள். ஆனால் இன்றைக்கு மீண்டும் நீங்கள் அந்த நுழைவு வரியைக் கொண்டு வருவதாகச் சொல்வது வியாபாரிகளை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது. எனவே, அதைத் திரும்பப் பெற வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

அடுத்து, இப்போது கையினாலே தயார் செய்யப்படுகிற சோப்புகள்; இதற்கு 4 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக வரியை உயர்த்தியிருக்கிறோம். இந்திய அளவில் உள்ள பல நிறுவனங்கள், மிகப் பெரிய நிறுவனங்களோடு போட்டியிடக்கூடிய நிலைமையில், குடிசைத் தொழிலாகக்கூட இருக்கக்கூடிய இந்தச் சோப்புகளுக்கு 4 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக வரியை உயர்த்தியிருப்பது வணிகர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் பேசி முடியுங்கள். 12 பேர் பேச வேண்டும், இரண்டு அமைச்சர்கள் பதில் தர வேண்டும்.

**திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா:** எளிய மக்களுக்கு உதவுகிற வகையிலே தற்சமயம் 100 ரூபாய் வரை விற்பனைத் தொகை உள்ள காலணிகளுக்கு வரி விலக்கு அளித்திருக்கிறீர்கள், அதைப் பாராட்டுகிறேன். ஆனாலும் அதை இன்னும் உயர்த்தி 150 ரூபாய் வரை வரி விலக்கு அளிக்க கவனத்தில்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்றாடம் மக்களோடு ஒன்றிவிட்டவை பிளாஸ்டிக் பொருட்கள். இன்றைக்கு அத்தகைய தண்ணீர் குடத்தோடு பெண்கள் எல்லாம் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இந்த பிளாஸ்டிக் பொருட்களுக்கு இன்றைக்கு 12 சதவிகிதம் வரி. அதைத் தயவுசெய்து மீண்டும் 8 சதவிகிதமாகத் தொடரச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் குடியிருப்புக் கட்டுமானப் பொருட்களோடு இணைந்தது மின்சாரப் பொருட்கள். அதற்கான வரியைக் கடந்த காலத்திலே தலைவர் கலைஞர் அவர்கள் 8 சதவிகிதமாகக் குறைத்தார்கள். அந்த வரியை, நீங்கள் எதிர்பார்த்த வரி வரவில்லை என்று, 12 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறீர்கள். இதை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் கொப்பரை, கருஞ்சீரகம், மக்காச்சோளம், பருத்தி, எழுதுதாள், வணிகச் சின்னம் இல்லாத வெண்ணெய், நெய், அதுபோல கடலை மாவு, உளுந்து மாவு, பட்டாணி போன்றவற்றிற்கு எல்லாம் இன்றைக்கு நீங்கள் ஏற்படுத்தியிருக்கிற வரி உயர்வு, இலஞ்சத்தை, லஞ்ச லாவண்யத்தை ஏற்படுத்தும். அதுபோல வரி ஏய்ப்புக்கும் நிச்சயமாக அது வழி வகுக்கும் என்று வணிகர்கள் கருதுகிறார்கள். எனவே, நியாயமான முறையிலே வணிகம் செய்யக்கூடிய வகையிலே மீண்டும் பழைய நிலைக்கு அவற்றையெல்லாம் நீங்கள் கொண்டு வரவேண்டும்.

அடுத்தபடியாக பேக்கரிகள். இன்றைக்கு சிறு முதலீட்டுத் தொழில் இது. அதுபோல வேலைவாய்ப்பைத் தரக்கூடிய தொழில். இதற்கு 4 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாக வரி உயர்த்தியிருக்கிறார்கள். இதைத் தயவுசெய்து நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். இதை மீண்டும் 4 சதவிகிதத்திற்கே கொண்டு வரவேண்டும். இப்போது ஒரு நாளைக்கு 1,500 ரூபாய் வியாபாரம் என்பது ரொம்ப சர்வ சாதாரணமானது. அந்த நிலையிலே, 5 இலட்சம் ரூபாய் என்றுதான் பேக்கரிகளுக்கு நாம் வரி விலக்கு வரம்பை வைத்திருக்கிறோம். அதை 10 இலட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டும்.

*முற்பகல் 11-20*

அதேபோல, பெரிய பன்னாட்டு நிறுவனங்கள், பார்லே, பிரிட்டானியா போன்றவற்றோடு போட்டியிடக்கூடிய நிலையில் உள்ள சிறிய, சாதாரண, வணிகச் சின்னம் இல்லாத தின்பண்டங்கள், சாக்லெட்டுகள், பிஸ்கட்டுகள் ஆகியவற்றிற்கு நீங்கள் 4 சதவிகித வரியினைத் திரும்ப தொடரச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அழிவுப் பாதையை நோக்கி அந்தத் தொழில்கள் செல்லும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

செயற்கை இழை நூல், செயற்கை இழைகள், அனைத்து வகை உலோகச் சரிகை இழை, பதனிடப்பட்ட தோல் உரி மற்றும் தோல் ஆகிய பொருட்களுக்கு உயர்த்தப்பட்டிருக்கிற 4 சதவிகித வரியினை நீக்கி, தொடர்ந்து பழைய நிலையிலே அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவற்றிற்கு இப்போது 4 சதவிகிதம் வரி உயர்த்தியிருக்கிறீர்கள். சாதாரணமாக 2000 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருந்த தோல் உடனடியாக 140 ரூபாய்க்குக் கேட்கப்படக்கூடிய நிலை இருக்கிறது. அந்த நிலையை மாற்றுவதற்குத் தகுந்த நிலைகளை நீங்கள் ஏற்படுத்த வேண்டும்.



வருடாந்திரக் கணக்குகளை செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் முடிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) வியாபாரிகள் வருமான வரிக் கணக்குகளை அக்டோபர் 30 ஆம் தேதிக்குள் முடிக்க வேண்டும். எனவே, அதற்கு வசதியாக—கடந்த ஆட்சியில்கூட டிசம்பர் 30 ஆம் தேதி வரை முடிக்கலாம் என்று கழக அரசு செய்தது—வணிகர்களுடைய வேண்டுகோளை ஏற்று, அதைப் பரிசீலித்து, டிசம்பர் 30 ஆம் தேதி வரையிலே அவர்கள் Return-ஐச் சமர்ப்பிப்பதற்குக் கால அவகாசம் தரவேண்டும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உபயதுல்லா அவர்கள், நீங்கள் தாள்கள் நிறைய வைத்திருக்கிறீர்கள். பின்னாலே பேசிக்கொள்ளலாம். ஒரு மணித் துளியில் பேச்சை முடியுங்கள்.

**திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா:** சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருகிற தையல் தொழிலை ஊக்குவிக்கிற வகையிலே அதனுடைய வரியைக் குறைக்க வேண்டும். அதேபோல, Cell Phones, Two-Wheelers, three-wheelers இவற்றிற்கெல்லாம் நீங்கள் வரியைக் குறைக்க வேண்டும்.

வணிகர்களே நேரடியாகக் கணக்குகளை விற்பனை வரி அலுவலகத்தில் சமர்ப்பிக்கக்கூடிய நிலை என்பது 20 இலட்சம் ரூபாய் வரை இருப்பதால், அந்தப் படிவங்களைத் தமிழில் கொண்டு வரவேண்டும்.

அதேபோல, ஊறுகாய், விவசாயப் பொருட்களான மாங்காய், எலுமிச்சை, தக்காளி, பச்சை மிளகாய், பூண்டு இவை எல்லாம் அழுகும் பொருட்கள். இவற்றை விற்பனை செய்யக்கூடிய வகையிலே, அந்த விளைபொருட்களுக்கு விலை கிடைக்கக்கூடிய வகையிலே, 16 சதவிகிதம் வரி என்று இருப்பதைக் குறைக்க வேண்டும். வரி விலக்கே அளித்தால்கூட அது நன்மையாக அமையும்.

அதுபோல, ready-mixed ராகி மாவு, வடை மாவு, இதற்கெல்லாம் 16 சதவிகிதம் வரி இருக்கிறது. சத்து மாவுக்கு 16 சதவிகிதம் வரி இருக்கிறது. ஏற்கெனவே கழக அரசு விபூதி, பஞ்சாமிர்தம், ருத்ராட்சம் இவற்றிற்கெல்லாம் வரி விலக்கு அளித்ததுபோல, வழிபாட்டுக்கு உதவக்கூடிய சூடத்திற்கும் நீங்கள் வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

விளையாட்டிற்கு ஒரு கோடி என்று சொல்லி இருக்கிறீர்கள். ஆனால், விளையாட்டு ஒரு மன மகிழ்ச்சிக்காக உள்ளது. அதற்குப் போய் 20 சதவிகிதம் வரி என்று அறிவிக்கிறீர்கள். அதை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

வணிகவரித் துறையிலே ஒப்பந்தம் செய்யக்கூடிய ஒப்பந்ததாரர்களிடத்தில் ஆரம்பத்திலேயே வரியைப் பிடித்துவிடுகிறோம். பின்னாலே அவர்களுடைய கணக்குகள் எல்லாம் முடிந்து ஆணையெல்லாம் வெளியிடப்பட்ட பின்னாலும்கூட, அவர்களிடமிருந்து அதிகப்படியாகப் பிடித்தம் செய்யப்பட்ட தொகை, அவர்களுக்குப் போய்ச் சேர்வதில்லை. அதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். அதை உடனடியாக அந்தத் துறையினர் கவனித்து, ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Sales Tax Practitioners-ஐப் பொறுத்தவரையில் அவர்கள் இதுவரையிலே கணக்குக் காட்டிக்கொண்டு வந்தார்கள். கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் 1 கோடி ரூபாய் வரையிலே Self-assessment என்று சொன்னதற்குப் பின்னாலே இப்போது அவர்களுக்குக் கணக்கு காட்ட முடியாத நிலை இருக்கிறது. அதை பல மாநிலங்களிலே இப்போது அனுமதித்திருக்கிறார்கள். அதை நாமும் அனுமதிக்க வேண்டும். அவர்கள் 50 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு இல்லாமல் போய்விடுவார்கள். எனவே, அதை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வள்ளுவப் பெருந்தகை எதைச் சொன்னாலும், யாருக்கும் தனியாகச் சொல்லமாட்டார். அவர் தமிழருக்கு என்று சொல்லியதில்லை. இந்தியாவுக்கு என்று சொன்னதில்லை. குறிப்பிட்ட மதத்தினருக்கு என்று சொன்னதில்லை. உலகத்திற்கே பொதுவானவன் வள்ளுவப் பெருந்தகை. அவர் சொல்லுவார்,

> 'குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
> நின்றன்னார் மாய்வர் நிலத்து.'

என்று. பெருமைக்குரியவர்களைச் சிறுமைப்படுத்த நினைப்பவர்களைக் கடுமையாக எச்சரிக்கிறார். இது உங்கள் ஆளுங்கட்சிக்கு அல்ல, எதிர்க்கட்சிக்கு அல்ல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உபயதுல்லா, பேச்சை முடியுங்கள்.



**திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா:** முடித்துவிட்டேன். ஆளுங்கட்சிக்கு அல்ல, எதிர்க்கட்சிக்கு அல்ல, ஆளுங்கட்சியைச் சேர்ந்திருக்கிற கூட்டணியாக இருக்கிற முன்னணித் தலைவர்களுக்கு அல்ல, எந்த ஒரு கருத்தையும் எப்போது நாம் பேச முற்பட்டாலும், கண்ணியம் காக்கின்ற வகையிலே இந்த அவையிலே நாம் நடந்துகொள்ளவேண்டும். இந்த அவைக்கு...

**திரு. தங்க. தமிழ் செல்வன்:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எல்லோருக்கும் பொருந்தும் என்று திரு. உபயதுல்லா சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) இந்த நல்ல திருக்குறளோடு உங்களுடைய உரையை நீங்கள் நிறைவு செய்கிறீர்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர், திரு. கே.சி. கருப்பணன்.

**திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா:** நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. கருப்பணன்.

***திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை ஒரு கிளைக் கழகச் செயலாளராகவும், ஒன்றிய அவைத் தலைவராகவும், ஒன்றியச் செயலாளராகவும் பணியாற்ற வாய்ப்புத் தந்து, தற்போது இந்த மாமன்றத்திலே பேசுகிற வாய்ப்பினை அளித்த என் உயிரினும் மேலான மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். எனக்குப் பெருவாரியாக வாக்களித்து வெற்றி பெறச் செய்த பவானி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றிய நமது இயக்கத்தின் நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

> 'வரப் புயர நீர் உயரும்,
> நீர் உயர நெல் உயரும்,
> நெல் உயர குடி உயரும்,
> குடி உயர கோன் உயர்வான்'

என்பதுபோல் இந்த நாடு விவசாயிகளின் நாடு. விவசாயிகள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு. விவசாயி ஓய்வெடுத்தால் நாம் அனைவரும் பசியையும், பட்டினியையும்தான் பார்க்க முடியும். இதை

[திரு. கே.சி. கருப்பணன்] [ 2001 செப்டம்பர் 11

கடந்த கால ஆட்சியினர் உணர மறந்து, விளைந்த பொருட்களுக்குச் சரியான விலை கிடைக்க ஆர்வம் காட்டாமல், ஆட்சியாளர்களின் குடும்பத்தினரை இந்தியாவின் முதல் பத்து பணக்காரர்கள் பட்டியலில் இடம்பெறச் செய்ய மட்டும் ஆர்வம் காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல நெசவாளர்களும், தேயிலை விவசாயிகளும், தென்னை விவசாயிகளும், கரும்பு விவசாயிகளும் நசிந்து போனார்கள். முந்தைய ஆட்சியாளர்கள் இதில் கவனம் செலுத்தாமல் மக்களை ஏமாற்றினார்கள்; ஏமாந்து போனார்கள். ஆனால் பகவத்கீதையில் சொன்னதுபோல எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சர் ஆனார்கள். எது நடக்குமோ அது நன்றாகவே நடக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே அதிகமாக நெசவாளர்கள் வாழும் மாவட்டம் ஈரோடு மாவட்டம். அதிலும் குறிப்பாக என்னுடைய பவானி தொகுதியில்தான் சுமார் ஒரு இலட்சம் நெசவாளர்கள் வாழ்ந்து வருகிறார்கள். மேலும், எனது தொகுதியில் 41 விவசாய கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. ஆனால் முந்தைய தி.மு.க. ஆட்சியில் எங்கள் மாவட்டத்தில் நெசவாளர்களுக்கு அறிவித்த தள்ளுபடித் தொகை 6½ கோடி ரூபாயை இதுவரை கொடுக்காமல் ஏமாற்றியதன் காரணமாக கடந்த நான்காண்டு காலமாக நெசவாளர்கள் வாழ்க்கை பாதிக்கப்பட்டது. துணி நெய்வதற்கு எப்படிப் பாவும் ஊடையும் தேவைப்படுகிறதோ, அதேபோல அவர்களுடைய வாழ்க்கையில் பசியும் பட்டினியும் கலந்து அளவில்லாத் துயரம் அடைந்தார்கள். ஆகவே, முந்தைய ஆட்சியை ஏசி, நகையாடி மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களை முதல்வர் ஆக்கினார்கள். அதேபோல முந்தைய ஆட்சியில் சமக்காளத்துக்குத் தேவையான பத்தாம் நம்பர் மற்றும் இரண்டுக்கு பத்து ஆகிய நூல் இரகங்களை வெளிமார்க்கெட்டில் வாங்கவிடாமல் சட்டத்தைப் போட்டுத் தடுத்து, மில்களிலிருந்து வாங்கி, நூலை N.T.C.-க்குக் கொடுக்கச் சொல்லி, அதிலிருந்து கோ-ஆப்டெக்சுக்குக் கொடுத்து, பிறகு கைத்தறிச் சங்கங்களுக்குக் கொடுத்து, அதற்குப் பின்னால் நெசவாளர்களுக்குப் போய்ச் சேர்கிறபோது, ஒரு கட்டுக்கு வெளிமார்க்கெட்டில் விற்பதைவிட ரூபாய் 30 முதல் 40 வரை அதிகரிக்கிறது. ஆனால், அந்த 40 ரூபாய் பணம் யாருக்குப் போனது என்பது நெசவாளர்களுக்கு நன்றாகத் தெரியும். அதேபோல ஒரு கட்டு நூலிற்கு 5 கிலோவுக்கு 4½ கிலோதான் வரும். சமக்காள் விலை அதனால் அதிகமாகி விற்பனை செய்ய முடியாமல் வாடி வதங்கிய



2001 செப்டம்பர் 11 ] [திரு. கே.சி. கருப்பணன்]

நெசவாளர்கள் பிழைக்க வழி தெரியாமல் முந்தைய தி.மு.க. ஆட்சியில் என்னுடைய தொகுதி மற்றும் எனது தொகுதிக்கு அருகிலுள்ள மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்த நெசவாளர்களும் மற்றும் விசைத்தறித் தொழிலாளர்களும் தங்கள் Kidney-ஐ விற்றுப் பிழைத்து வந்த சோகக் கதையை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, மாண்புமிகு அம்மா அவர்கள் 1991-96 ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் 1½ கோடி அளவிற்கு இலவச வேட்டி சேலைகளைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கி வந்தார்கள். ஆனால், அதற்குப் பின்னால் வந்த ஆட்சியாளர்கள் அதை 90 இலட்சம் வேட்டி சேலைகளாகக் குறைத்தது மட்டுமல்லாமல், அதில் ஒரு பகுதியை மக்களுக்குக் கொடுக்காமல் ஈரோடு, மும்பை, டில்லி வரை திருட்டுத்தனமாக விற்பனை செய்துவிட்டு, மீதி வேட்டி சேலைகளை ஏழைத் தாய்மார்களுக்குக் கொடுக்காமல் கட்சிக்காரர்களுக்குக் கொடுத்து, ஏழைகளின் வயிற்றில் அடித்ததை நமது ஜெயா டி.வி. மூலம் இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை அறிந்துதான் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இந்த நெசவாளர்கள் மற்றும் நடுத்தரப்பட்ட, தாழ்த்தப்பட்ட விவசாய மக்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் அனைவரையும் காப்பாற்றும்படியாக மிக அருமையான நிதிநிலை அறிக்கையினைக் கொடுத்தார்கள். அந்த மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு பவானி தொகுதி மக்கள் சார்பாக மனம் நிறைவான நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு கருணையுள்ளம் கொண்ட தாயே, எனது தொகுதியைப் பற்றிச் சில குறிப்புகளை அம்மா அவர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனது தொகுதியில் அதிகமான தென்னை மரங்கள் உள்ளன. தென்னை விவசாயிகளைப் காப்பாற்ற அதில் கிடைக்கின்ற இளநீரைப் பக்குவப்படுத்தி, மற்ற குளிர்பானங்களைப் பாட்டிலில் அடைத்து விற்பனை செய்வதுபோல, பாட்டிலில் அடைத்து விற்பனை செய்யும் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே.சி. கருப்பணன்] [ 2001 செப்டம்பர் 11

பவானி டவுனில் உள்ள 4 நீதிமன்றங்களும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இந்த நீதிமன்றங்களுக்குத் தேவைப்படும் 1½ கோடி ரூபாய் பெறுமானமுள்ள நிலத்தை பவானி நகராட்சி ஒதுக்கிக் கொடுக்க தயாராக உள்ளது. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இதற்கு ஒரு நீதிமன்ற வளாகத்தினை அமைத்து, தங்கள் திருக்கரங்களால் திறந்து வைக்க வேண்டும் என்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே சமக்காள உற்பத்தியில் பெயர் பெற்ற நகரம் பவானி நகரம். ஆனால், மத்திய அரசு உதவியோடு சோலாப்பூரில் விசைத்தறியின் அனுமதி இல்லாமல் சமக்காள நெசவாளர்கள் சமக்காளம் நெய்வதினால் கைத்தறி சமக்காள உற்பத்தித் தொழில் மிகவும் பாதித்துள்ளது. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்தக் கைத்தறி சமக்காள நெசவாளர்களைக் காப்பாற்ற வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் பவானி முதல் தொப்பூர் வரையுள்ள மாநிலச் சாலை 40 கிலோ மீட்டர் தூரம், கடந்த 5 ஆண்டு காலமாக எந்த ஒரு பராமரிப்பும் இல்லாமல் மிகவும் மோசமடைந்துள்ளது. இதிலே ஒரு நாளைக்கு ஆயிரக்கணக்கான வாகனங்கள் செல்கின்றன. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தப் பாதையைப் போடுவதற்கு உண்டான நிதியை ஒதுக்கிக் கொடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் பவானி டவுனில் விவசாய விதைப் பண்ணை ஒன்று 80 ஏக்கர் நிலப்பரப்பில் காவேரி ஆற்றங்கரைக்கு அருகிலுள்ளது. இந்த விதைப் பண்ணை சரிவரச் செயல்படாமல் உள்ளது. தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் அதில் ஒரு விவசாயக் கல்லூரியை நிறுவிக் கொடுத்தால் ஈரோடு மற்றும் சேலம் மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் சக்தி சர்க்கரை ஆலை உள்ளது. அதனுடைய பிழிதிறன் வருடாவருடம் 10 முதல் 10.3 சதவிகிதமாக உள்ளது. கரும்புக்கு ஒரு டன்னுக்கு நிர்வாகம் 802 ரூபாய்தான் கொடுக்கிறது. கடந்த ஆட்சியில் கடந்த 3 ஆண்டு காலமாக அந்தப் பணத்தையும் கரும்பு வெட்டி, 5 மாதம் கழித்துத்தான் கொடுக்கிறார்கள். ஆகவே, சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் மிகவும் பாதிப்படைந்துள்ளார்கள்.



2001 செப்டம்பர் 11 ] [திரு. கே.சி. கருப்பணன்]

ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கூடியவிரைவில் பணம் கிடைக்கச் செய்ய வேண்டுமாய் பணிவுடன் கேட்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வாழும் 621 இலட்சம் மக்கள் மட்டுமின்றி, இந்தியத் துணைக் கண்டத்திலும், கடல் கடந்தும் வாழும் 40 இலட்சம் தமிழர்களின் ஏகோபித்த தலைவி அவர்களே, முதலமைச்சர் அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) பெருமைமிகு இந்த பட்ஜெட்டை சமர்ப்பித்து மக்களே பெருமைப்படும் அளவிற்கு, தமிழகப் பொருளாதாரத்தை உயர்த்த குடும்பத்திற்கு ஒரு வீடு, 20 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலங்களை மேம்பாடு செய்யும் திட்டம், எல்லாக் கிராமச் சாலைகளையும் புதுப்பித்து ஹைவேஸ் சாலைகளுடன் இணைப்பது, கிராமங்களில் குடியிருப்புகளுக்கு குடிநீர் ஏற்பாடு செய்வது போன்ற காங்கிரஸ்காரர்களே பொறாமைப்படும் திட்டங்களைக் கொண்டு வந்த இந்த அரசை விருதுநகர் மாவட்ட மக்கள் சார்பிலே நான் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1991-96-ல் growth of revenue receipts 16.2 சதவீதம் இருந்தது. அதன் பின் கடந்த அரசின் காலத்திலே 11.7 சதவிகிதமாக இருந்த அவல நிலையை 20 சதவீதம் growth of revenue receipts என மாற்றி தமிழகத்தின் தலைவிதியையே மாற்றிட அரசு முயற்சிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

கற்பகத்தரு, காமதேனு என்றெல்லாம் வர்ணிக்கப்படுவது விற்பனை வரி; தமிழக அரசின் ரூ.24,450 கோடி பட்ஜெட்டிலே ரூ.9,550 கோடி இதன்மூலம் வருகிறது. இது பட்ஜெட் வருவாயில் 40 சதவிகிதம் ஆகும். இதன் முக்கியத்துவம் கருதி, வரும் ஆண்டிலே இது குறித்து விவாதிக்க குறைந்தது 6 மணி நேரமாவது ஒதுக்க வேண்டும் என அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதிகப்படியாக வரி எதுவும் போடாவிட்டாலும்கூட எங்கள் சிவகாசி சம்பந்தப்பட்ட பொருட்களுக்கு வரிச் சலுகை இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அச்சகத் தொழிலில் Open General Licence வந்தபின்பு அச்சுத் தொழில் இந்தியா முழுவதும் பரவியுள்ளது. இந்தியாவின் தேவையில்

50 சதவிகிதம் சப்ளை செய்த சிவகாசி தற்பொழுது 20 சதவிகிதத்திற்கும் குறைவாக ஆகிவிட்டது. இதற்கு விற்பனை வரியும் ஒரு காரணம் என்றால் அது மிகையாகாது.

பார்ட்டிகள் பெயர், 'லோகோ' முதலியவைகளை காகிதம், அட்டை இதரப் பொருட்களில் அச்சிட்ட லேபிள்கள், ரப்பர்கள் Section 3B of TNGST Act-ன்படி Transfer of goods involved என Works Contract-லே கூறப்படுகிறது. இதை 73-எஸ்.டி.சி. Anandam Viswanathan *vs.* State of Tamil Nadu-லேயும் உச்ச நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்து, Works Contract-க்கு பக்கம் 14-ல் விவரம் விளக்கம் கூறியுள்ளது. இதற்கு எந்தவித Commercial Value-வும் கிடையாது. இதையே அரசின் மேல்முறையீட்டு வணிகவரி நீதிமன்றங்களாகிய Appellate Assistant Commissioner, Sales Tax Tribunal, High Court தீர்ப்புகளும் கூறுகின்றன. ஆனால், கணக்குப் பார்க்கும் அதிகாரிகள் இதை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். கணக்குப் பார்க்கும் அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு உட்பட்டவர்களா இல்லையா என்பதற்கு இந்த அரசைப் பதில் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

இதற்கிடையே G.O.No. 66, சட்டசபை கூடிய 16-9-2001 அன்று வெளியிடப்பட்டது. இதை Gazette Extraordinary 543, Part I-ல் பிரசுரம் செய்துள்ளனர். இது சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கிறேன்.

In the above notification, the Government has substituted for sub-items IV to VII of item 52 in Part C of the first schedule to the T.N.G.S.T. Act, 1959 as follows:

இதன்படி பேப்பர்—அட்டை இதர பொருட்களில் பிரிண்ட் செய்து Account Books—Registers, Order Books, receipts, memorandums, Pads, Ledgers, file cover, Book cover, Greeting card, Invitation, Trade Mark labels —பார்ட்டி பெயருடன் அவர்கள் சொற்படி Logo உடன் இருந்தால்கூட விற்பனை வரி 8% என Section 3-B—T.N.G.S.T. Act-க்கும், உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளுக்கும் முரணாக, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. It is ultra vires of the Constitution என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஆகவே, நலிந்த அச்சுத் தொழிலை மேம்படுத்த, சட்ட திட்டங்களுக்குட்பட்டு அச்சகத்தில் தயாராகும், Particular person-க்கு



அச்சாகும் அல்லது Logo-வுடன் அச்சாகும் பொருட்களை Works Contract-ல் கணக்கிட்டு Section 3-B - T.N.G.S.T. Act, 1959-ன்படி வரி விதித்திட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அன்றாடம் பொதுமக்களும், மாணவர்களும் உபயோகிக்கும் பேப்பருக்கு 8 சதவிகிதம் விற்பனை வரி உள்ளது. இதை பெரும்பான்மை மக்கள் நலன் கருதி 4 சதவிகிதம் ஆக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் VAT Cell என்ற அமைப்பை சமீபத்தில் உருவாக்கி அரசு ஆணை வெளியிட்டுள்ளது. மதிப்புக் கூட்டு வரிவிதிப்பு முறையினை அமல்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க Empowered Committee ஒன்று அமைக்க உத்தேசித்துள்ளது என்று கூறுகிறது. இந்த கமிட்டியில் வணிகப் பெருமக்களுக்கும் இடம் கொடுக்க வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், தற்போது உள்ள பொருட்களின் விலை உயர்வைக் கருத்தில்கொண்டு Additional Sales Tax limit-ஐ பழையபடி 25 கோடி ரூபாய்க்கு உயர்த்திட வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சிவகாசியிலே 75 கோடி ரூபாய்க்கு மேலே வரி கட்டுகிறோம். ஆறு Sales Tax Offices உள்ளன. ஆனால், அவைகளுக்கு என்று தனியாகக் கட்டடங்கள் இல்லை. ஏற்கெனவே, ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடத்தில் கட்டடங்களைக் கட்ட வேண்டுமென்று இந்த அரசை நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குட்டி ஜப்பான் என்று வர்ணிக்கப்படும் எங்கள் ஊரிலும், சுற்றுப்புறங்களிலும் 500-க்கு மேற்பட்ட பட்டாசுத் தொழிற்சாலைகள் உள்ளன. குழந்தைகள் மகிழும் வண்ண, வண்ண பட்டாசுகள் குறிப்பாக தீபாவளி அன்றும், இதரப் பண்டிகை தினங்களிலும் உபயோகமாகின்றன. இதற்குள்ள 12 சதவிகிதம் விற்பனை வரியை, இந்தத் தொழிலில் உள்ள இடர்ப்பாடுகளையும் கஷ்டங்களையும் கருதி, 3 இலட்சம் தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்கும் வகையில் கையால் செய்யும் பட்டாக்கு 8 சதவிகிதமாகக் குறைக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பட்டாசுத் தொழில் பாதிக்கும்படியும், விற்பனை வரி பாதிக்கும்படியும் சில நேரங்களில் மனித சக்திக்கு அப்பாற்பட்டு விபத்துகள் ஏற்படும்பொழுது தொழிற்சாலை உற்பத்தியை ஒரு மாதம், இரண்டு மாதங்கள் நிறுத்துவதும், தொழிற்சாலை உரிமையாளர்களைக்

கைது செய்வதும், அவர்களை, விபத்துக்குள்ளானவர்களைக் காப்பாற்றவிடாமல், உதவி செய்யவிடாமல் தடுப்பதும், Explosives Act, Labour Act, Revenue, Arms Act என்பவற்றின்கீழ் Fire Service அதிகாரிகள் பட்டாசுத் தொழிற்சாலைகளை உண்டு, இல்லை என்று பார்ப்பதும் நடைமுறையிலே உள்ளது. இதற்கு மாறாக, சென்ற மாதம் Katpadi Explosives தொழிற்சாலையில் விபத்து நடந்தபோது 27 பேர்கள் உயிரிழந்தனர். இவர்களுக்கு உதவி செய்யும்பொருட்டு நிர்வாக இயக்குநர், Licencee யாரும் கைது செய்யப்படவில்லை. ஐந்தாவது நாளே உற்பத்தி தொடங்கிவிட்டது. இதுபோல், தனியார் நிறுவனங்களிலும், கடவுள் செயல் என்று சொல்லப்படும் விபத்துகள் நடக்கும்பொழுது தனியார் உரிமையாளர்களைக் காவல் துறையினர் கட்டாயம் கைது செய்யக் கூடாது என்றும், தொழிற்சாலைகளைத் தடையின்றி நடத்திட அரசு உடனடியாக காவல் துறைக்கு உத்தரவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே மிகவும் பின்தங்கிய உசிலம்பட்டியில் சிறிய Registered Trade Mark இல்லாத பிஸ்கட் தயாரிப்பாளர்கள் உள்ளனர். அம்மாவிற்கு மிகவும் நன்றாகவே தெரியும். பெண் சிசுக்களை அழிக்கும் பகுதி இது. இங்கு சுமார் 2,000 ஏழைப் பெண்களுக்கு மேலே பிஸ்கட் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஏழை மக்களுக்குப் பயன்படும் மலிவான பிஸ்கட்டுகள் தயாரிக்கும் இந்தச் சிறுதொழில், குறுந்தொழில் நிறுவனங்கள் பன்னாட்டு தொழில் அதிபர்களான BRITANNIA, PARLE பிஸ்கட் தயாரிப்பாளர்களுடனும், இறக்குமதி பிஸ்கட்காரர்களுடனும் போட்டியிட்டுத் தேய்ந்துகொண்டே போகும் அவல நிலை உள்ளது. இந்தச் சிறுதொழில், குறுந்தொழில் பிஸ்கட் உற்பத்தியாளர்கள் கவர்களில் சிங்கம் மார்க், யானை மார்க் எனப் படம் போடுவார்கள். இதை வணிக வரித் துறையினர் வணிக ரிஜிஸ்டர்ட் சின்னம் எனக் கருதி 12 சதவிகிதம் வணிக வரி வசூல் செய்கின்றனர். இது T.M.M. Act-ல் பதிவு செய்யப்படாத வணிகச் சின்னம் ஆகும். இதற்கு பட்ஜெட் வரை 4 சதவிகிதம்தான் வரி இருந்தது என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*முற்பகல் 11-40*

பெண்கள் வேலைவாய்ப்புப் பெறும் இந்தச் சிறு தொழில்கள் பாதிக்காமல் இருக்க, தமிழ்நாடு தொழில் துறையில் பதிவு செய்த சிறு தொழில், குறுந்தொழில் பிஸ்கட் உற்பத்தியாளர்களுக்கு 12 சதவிகித விற்பனை வரியிலிருந்து 4 சதவிகிதம் விற்பனை வரியாகக் குறைக்க



வேண்டுமென்று அம்மா அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பிஸ்கட்களுக்கு 12 சதவிகிதம் விற்பனை வரி விதிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். வெளிநாட்டு பிஸ்கட் உற்பத்தியாளர்கள் இந்தியாவில் டிரேட் மார்க் ரிஜிஸ்டர் செய்யவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே, பன்னாட்டு நிறுவனங்களுக்கும், 12 சதவிகிதம் இருந்து வருகிறது. மேலும், பேக்கரியில் தயாராகும் பொருட்களுக்கும், மக்காச் சோளம், கொப்பரைத் தேங்காய், மஞ்சள், பருத்தி மற்றும் கட்டுமானப் பொருட்களுக்கும் ஏழை மக்களின் நலன் கருதி விற்பனை வரி விலக்கு அளிக்கவும், வணிக வரி அலுவலர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். நுழைவு வரி பெரும் பிரச்சினைகளுக்குப் பின்பு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ். தாமோதரன்:** நுழைவு வரி பெரும் பிரச்சினைகளுக்குப் பின்பு புரட்சித் தலைவர் அவர்களால் 1984 ஆம் ஆண்டு கைவிடப்பட்டது. இது மீண்டும் அமலாக்கப்படக்கூடாது எனக் கேட்டுக்கொள்கிறேன்.

வணிகர் நலன் கருதி Self assesment limit-ஐ ரூபாய் ஒரு கோடியிலிருந்து இரண்டு கோடியாக உயர்த்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே சிறு, குறுந்தொழில்களான பெயிண்ட் தயாரிக்கும் தொழிற்சாலைகள் மூலம் சிவகாசி-மதுரை-கோவை-சென்னையிலே 300-க்கும் மேலாக 20,000 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கிறது. பெயிண்ட் என்ற பொருள் வெறும் ஆடம்பரப் பொருள் அல்ல. அசையாத சொத்துகளைப் பாதுகாக்கும் ஓர் அருமருந்தாகும். தமிழ்நாட்டில் மொத்த விற்பனையான ரூ. 500 கோடியில் 10 சதவிகிதம்—ரூபாய் 50 கோடியை—சிறு, குறு தொழில்கள் செய்கின்றன. இவை மிகப்பெரிய பன்னாட்டு நிறுவனங்களுடன், Asian Paint, Dulex, Nerolac போன்ற பெரிய நிறுவனங்களுடன் போட்டியிட வேண்டியுள்ளது. யாவரும் 16 சதவிகித விற்பனை வரி செலுத்துகிறார்கள். மேலும், கேரளாவில் எட்டு சதவிகிதம், பாண்டிச்சேரியில் மூன்று சதவிகிதம் உள்ளதால் அவர்களுடனும் போட்டியிட வேண்டியுள்ளது. அதனால், அம்மா அவர்கள் இந்த பெயின்ட் தொழில் தமிழ்நாட்டில்

நலிந்துவிடாமல் இருக்கவும், இந்தத் தொழிலைப் பலமடங்கு பெருக்கவும், தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட சிறு, குறு பெயிண்ட் தொழிற்சாலைகளுக்கு விற்பனை வரியை முதல் ஒரு கோடி ரூபாய்க்காவது எட்டு சதவிகிதமாக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

*16-9-2001*இல் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டில் வறுகடலை, கோழித் தீவனம் மற்றும் எளிய மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் கடலை மாவு, பட்டாணி மாவுக்கு 4 சதவிகிதமாக வரியை உயர்த்தி, பின்பு பொதுமக்களுடைய நியாயமான கோரிக்கைகளை ஏற்று வறுகடலை, கோழித் தீவனம் வகைகளுக்கு இரண்டு சதவிகிதம் வரிவிலக்கு அளித்த அரசைப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுபோல, கடலைப்பருப்பு, பட்டாணியை சுமார் *10,000* ரூபாய் மதிப்புள்ள மெஷினில் அரைத்து மாவாக்கி வழங்கும் *300*-க்கும் மேற்பட்ட குறுந்தொழில்களின் நலன் கருதியும், இவற்றில் பணிபுரியும் *3,000* பெண்களின் நலன் கருதியும், ஏழையெளிய மக்களின் அன்றாட உணவு—தின்பண்டங்களான பஜ்ஜி, வடை, போண்டா, சேவு, மிக்சர், பக்கோடா போன்றவை தயாரிக்க உபயோகிக்கும் கடலை மாவு, பட்டாணி மாவு, இதர பயறு வகைகளில் இருந்து தயாரிக்கும் மாவு வகைகளுக்கு 4 சதவிகிதம் விற்பனை வரியிலிருந்து வரிவிலக்கு அளித்திட வேண்டுகிறேன்.

மேலும், அரசு வருவாயைப் பெருக்க, வரிவசூலைக் கூட்டிட, தொழில் பெருக, வணிகம் பெருக, வருடத்திற்குப் பல கோடி ரூபாய் வருமானம் பெறும் நபர்களாலும் எதுவும் கூற இயலவில்லை. 'world recession' என்று சொல்கிறார்கள். இதை ஒத்துக்கொள்வதற்கில்லை. தமிழகத்திலுள்ள *25* அமைச்சகங்கள் மூலமாகவும், மைய அரசின் மூலமாகவும், குறைந்தது வருடத்திற்கு *50,000* கோடி ரூபாயாவது 'capital expenditure'-ஆகச் செலவு செய்து கப்பல் கட்டுதல், பஸ், டிராக்டர், லாரி உற்பத்தி, ரோடு, பாலம் கட்டுதல், மருத்துவமனை, பள்ளிக்கூடம் கட்டுதல் ஆகியவற்றின் மூலம் பணப்புழக்கத்தைக் கூட்டி அரசு வருவாயைப் பெருக்க வேண்டும். கடல் கடந்து ஆஸ்திரேலியா, ஹாங்காங், மலேசியா, சிங்கப்பூர், வளைகுடா நாடுகளில் வசதியாக வாழும் தமிழர்களின் மூலமாக, இரண்டு இலட்சம் கோடி ரூபாயாவது நிதி திரட்டி தொழில் வளத்தைப் பெருக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)



ஒரேயொரு நிமிடம். மேலும், எனது விருதுநகர் தொகுதியில் நர்சிங் காலேஜ் ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விருதுநகர் ராமமூர்த்தி ரோட்டில் போக்குவரத்து அதிகமாக உள்ளதால் இங்கு இரயில்வே கீழ்ப்பாலம் ஒன்று கட்டப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஆனைக்குட்டம் நீர்த்தேக்கம் கட்டி நடைமுறையிலே *30* ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதால், அங்குள்ள மோட்டார்கள், உபகரணங்கள், பைப் லைன்களை மாற்றி, நகராட்சி கொடுத்த *20* கோடி திட்டத்தை அரசு உடனடியாகச் செயல்படுத்த வேண்டும்.

விருதுநகர் மாவட்டம் முழுவதும் தண்ணீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க, பாபநாசம் டவுன்ஷிப்பிலிருந்து *5* கோடி டி.எம்.சி.எப்.டி. தண்ணீரைக் கொண்டுவந்து, விருதுநகர் மாவட்டம் முழுவதும் விநியோகிக்க, TWAD Board மூலம் தயாரிக்கப்பட்ட *925* கோடி ரூபாய்த் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். தாமோதரன், மற்றவற்றை எழுதிக்கொடுங்கள். நானும் பரிந்துரை செய்கிறேன்.

**திரு. எஸ். தாமோதரன்:** ஒரேயொரு நிமிடம். விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் ஒரு இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை, தஞ்சைக்கு நிகராக நஞ்சை நிலங்களாக மாற்றிட, நிலுவையிலுள்ள, பம்பை, அச்சன்கோயில், வைப்பாறு நதிநீர் இணைப்புத் திட்டத்தையும், உடனடியாக நிறைவேற்ற வேண்டும். இது நம்முடைய தமிழக அரசால் ஏற்கெனவே பரிந்துரை செய்யப்பட்டு, கேரள அரசால் நிலுவையில் உள்ளது. அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தையும் கட்டாயம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். கிருஷ்ணன்.

*முற்பகல் 11-45*

***திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி அந்தியூர் தனித் தொகுதியாகும். அருந்ததியர் சமுதாயத்தைச் சார்ந்த என்னை இந்த மாமன்றத்தில் அமர வாய்ப்பளித்து, சமூக நீதிக் காவலராகவும், அருந்ததியர் சமுதாயத்தின் விடிவெள்ளியாகவும், தமிழகத்தின் இரும்பு மனிதராகவும் திகழ்கின்ற என் இதய தெய்வம் திருமிகு டாக்டர் அய்யா அவர்களே, இளைஞர்

சமுதாயத்தின் எழுச்சி நாயகன், பசுமைத் தாயகத்தின் புரட்சி நாயகன், பாசமிகு எங்கள் சின்ன அய்யா அவர்களே மற்றும் மாநிலத் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களே, சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஐ. கணேசன் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தின்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கட்சிப் பொதுக் குழு இன்றைக்கு என்று கருதுகிறேன். அதிலே பேச வேண்டியதை மாற்றி இங்கே பேசுகிறாரோ, என்னவோ எனக்குத் தெரியவில்லை. (சிரிப்பு) திரு. கிருஷ்ணன் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** கூட்டணிக் கட்சித் தலைவர் அவர்களுக்கும், கூட்டணிக் கட்சிப் பொறுப்பாளர் அவர்களுக்கும், என்னை இந்தச் சட்டமன்ற உறுப்பினராக, வெற்றிபெறச் செய்த எனது தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், முதற்கண் என் நன்றியினைத் தெரிவித்து எனது கன்னிப் பேச்சினைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் முதுகெலும்பு விவசாயம். இந்த விவசாயத்தை நம்பி ஏராளமான குடும்பங்கள் இருந்து வருகின்றன. விவசாயத்திற்கு அடுத்தபடியாக பெரும்பான்மையான மக்கள் வாழ நம்பிக்கொண்டிருப்பது நெசவுத் தொழிலைத்தான். காலங்காலமாக அதைச் செய்து வருகின்றனர். முந்தைய காலங்களில் எப்படி நெசவுத் தொழிலை நசுக்க முடியுமோ, அந்தந்த வகைகளில் நசுக்கி நெசவுத் தொழிலை நம்பியிருந்த அந்தக் குடும்பங்களை நடுத்தெருவில் நிறுத்திவிட்டனர். இவர்களுக்கு வாழ்வளித்துக் கொண்டிருந்த நெசவாளர்கள் சங்கங்களும் நலிவுற்று மூடப்படும் நிலையில் உள்ளன.

வளர்ந்து வருகின்ற ஆலைத் துணிகளின் போட்டிகளுக்கு இடையிலும், விசைத்தறிகளின் அதிகப்படியான உற்பத்தியாலும், பாதிப்படைந்துள்ள கைத்தறி நெசவுத் தொழிலுக்குப் புத்துணர்ச்சி அளித்து நெசவாளர்கள் சங்கங்களுக்கு நல்ல திட்டங்களைத் தீட்டி மறுவாழ்வு அளிக்க வேண்டும்.

> **"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்**
> **மனம் வாடினேன்"**

என்பது வள்ளலாரின் வாக்கு. அதுபோல், நசிந்துபோன நெசவுத் தொழிலாளரின் வாட்டத்தைப் போக்க மாண்புமிகு முதல்வர் அவர்களை இம்மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.



பெரும்பான்மையான நெசவுத் தொழிலாளர்கள் குடியிருக்க இடமின்றி இருக்கிறார்கள். அவர்களுக்குக் குடியிருக்க தொகுப்பு வீடுகளும், நெசவுத் தொழில் செய்பவர்கள் வயது முதிர்ந்த காலத்தில் வாழ்க்கையை ஓட்ட மாதாந்திர குடும்ப ஓய்வூதியத் தொகையை வழங்கவும், நெசவுத் தொழிலாளர்களின் குழந்தைகள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க கடனுதவியும், மருத்துவச் செலவு மற்றும் சுபச் செலவினங்கள் ஏற்படும்பொழுது கடனுதவியும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, அரசுக் கலைக் கல்லூரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அந்தியூர் சட்டமன்றத் தொகுதி ஏதோ ஒருவகையில் அனைவருக்கும் தெரிந்திருந்தாலும், எந்த ஒரு நலத் திட்டமும் இதுவரை செய்யப்படாத ஒரு வறட்சியான தனித் தொகுதியாகும். எனது அந்தியூர் தொகுதியில் செம்புளிச்சாம்பாளையம், குருவரெட்டியூர், சிங்கம்பேட்டை, சென்னம்பட்டி, அந்தியூர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அந்தியூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி என ஏராளமான மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. இவை ஒவ்வொன்றிலிருந்தும், வருடம் சுமார் 500 மாணவிகள், மாணவர்கள் வீதம் சுமார் 3,500 மாணவ, மாணவியர்கள் மேல்நிலைக் கல்வி, பிளஸ் 2 இரண்டாம் ஆண்டு பயின்று வெளிவருகின்றனர். அவ்வாறு வெளியேவரும் மாணவ, மாணவியர்கள் மேற்கொண்டு கல்லூரிகளில் சேர்ந்து பயில சுமார் 35 கிலோ மீட்டர் தூரமுள்ள ஈரோடு அல்லது கோபிச்செட்டிப்பாளையம் செல்ல வேண்டியுள்ளது. அவ்வாறு அதிக தூரம் செல்ல வேண்டி உள்ளதால், மாணவ, மாணவியர்களின் காலநேரம் விரயமாகிறது. எனவே, மாணவ, மாணவியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அந்தியூரில் ஓர் அரசுக் கலைக் கல்லூரி அமைக்க உத்தரவிட வேண்டுமாறு தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு நூற்பாலை. எங்களது தொகுதியில் வறட்சி அதிக அளவில் காணப்படுவதாலும், பெரும்பாலான மக்கள் விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த விவசாயக் கூலித் தொழிலும் செய்து வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். விவசாயக் கூலித் தொழில் செய்யும் பெண்கள் மூன்று மாதங்கள் மட்டுமே வேலைவாய்ப்புப் பெறுகின்றனர். மற்ற மாதங்களில் வாழ்க்கையை நடத்த அவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, படித்த வேலை வாய்ப்பில்லாத இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் வேலைவாய்ப்பளிக்க ஒரு கூட்டுறவு

நூற்பாலையினை எவ்விதத் தொழில் வளர்ச்சியும் இல்லாத எனது அந்தியூர் தொகுதியில் அமைக்க அரசு உத்தரவிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கம். எனது அந்தியூர் தொகுதியில் எண்ணமங்கலம் ஏரி, கெட்டிசமுத்திரம் ஏரி, அந்தியூர் பெரிய ஏரி, சந்திபாளையம் ஏரி, வேம்பத்தி ஏரி, ஆப்பக்கூடல் ஏரி ஆகிய ஏரிகள் உள்ளன. இவற்றிற்கான நீர்வரத்து எனது அந்தியூர் தொகுதியிலுள்ள வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கத்திலிருந்து மழைக் காலங்களில் மட்டுமே வருகிறது. வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கம் குறைந்த அளவு உயரமே உள்ளதால், மழைக் காலங்களில் அதிக அளவு பெய்யும் மழையினைத் தேக்கிவைத்து, பாசனத்திற்குத் திறந்துவிட்டாலும், குறுகிய காலம் மட்டுமே பாசன வசதி கிடைக்கிறது. இதை நம்பி விவசாயம் செய்வதால், குறிப்பிட்ட நேரத்தில் பாசனத்திற்கு நீரின்றி பயிர்கள் கருகும் சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, நாட்டின் முதுகெலும்பான விவசாயம் செழிப்படையவும், தொகுதி மேம்பாடு அடையவும் எனது தொகுதியிலுள்ள ஒரே நீர்த்தேக்கமான வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கத்தினை மேலும் 20 அடி உயரம் உயர்த்தி, உத்தரவு நல்கிட மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு மருத்துவமனை. எனது அந்தியூர் தொகுதிக்குட்பட்ட அரசு மருத்துவமனையில் தினசரி உள்நோயாளிகளும், புறநோயாளிகளும் சுமார் 1,000 பேர் சிகிச்சை பெற வருகின்றனர். போதிய மருத்துவர்கள் இல்லாததால் நல்ல முறையில் நோயாளிகளைக் கவனிக்க முடியவில்லை. எனவே, போதிய அளவு மருத்துவர்களை நியமிக்க உத்தரவிட வேண்டுமென்றும், விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த உத்தரவிட வேண்டுமென்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அடுத்து, கூட்டுக் குடிநீர்த் திட்டம். எனது தொகுதியில் கடுமையான குடிநீரப் பஞ்சம் நிலவுகிறது. தொகுதி மக்களின் அத்தியாவசியத் தேவையான குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க உத்தரவிட வேண்டுமாய்த் தமிழக அரசை இம்மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பள்ளிக் கட்டடங்கள். எனது தொகுதியில் உள்ள ஒருசில பள்ளிக்கூடங்களில் போதிய கட்டட வசதி இலலாததால்



மாணவர்களுக்கு மரத்தடியில் கல்வி கற்றுத் தரக்கூடிய சூழ்நிலை உள்ளது. எனவே, போர்க்கால அடிப்படையில், கட்டடங்கள் இல்லாத பள்ளிகளுக்கு பள்ளிக் கட்டடங்கள் கட்டித்தர தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பர்கூர் ஊராட்சியை ஊராட்சி ஒன்றியமாக்கல். எனது அந்தியூர் தொகுதியில் பர்கூர் என்ற முதல் நிலை ஊராட்சி உள்ளது. இது கடுமையான மலைப் பகுதியாகும். இங்கு சுமார் 25,000 மலைவாழ் மக்கள் வசிக்கின்றனர். இங்கு வசிப்பவர்களில் அதிகமானவர்கள் மலைவாழ் மக்களாவர். இவர்கள் தங்களது அன்றாடத் தேவைகளான அரிசி, பருப்பு, சர்க்கரை போன்றவற்றை வாங்க 35 கிலோ மீட்டர் தூரமுள்ள அந்தியூர் சந்தை வந்து வாங்கிச் செல்ல வேண்டும். அதேபோல் தங்களது பகுதிகளுக்குத் தேவையான சாலை வசதி, குடிநீர் வசதி, திருமண உதவித் திட்டம் போன்ற கோரிக்கைகளை அளிக்க 35 கிலோ மீட்டர் தூரமுள்ள அந்தியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வரவேண்டும். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பர்கூர் ஊராட்சியின்மீது தனிக்கவனம் செலுத்தி பர்கூர் மற்றும் சுற்றியுள்ள ஒருசில ஊராட்சிகளை உள்ளடக்கி பர்கூர் ஊராட்சி ஒன்றியம் என்ற அந்தஸ்திற்கு உயர்த்தித் தருமாறும், பர்கூரில் ஒரு தினசரிச் சந்தையோ அல்லது வாரச் சந்தையோ ஏற்படுத்தித் தரவேண்டுமாறும் இம்மாமன்றத்தின் மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூடுதல் பேருந்துகள். அந்தியூரில் இருந்து பர்கூர் செல்ல அதிக அளவு பேருந்துகள் இல்லாததாலும், தொடர்ந்து நீண்ட நேரத்திற்குப் பேருந்துகளில் செல்ல காத்திருப்பதாலும், முதன் முதலில் வரும் பேருந்தில் முண்டியடித்துச் சென்று ஏறி பயணம் செய்கின்றனர். அத்துடன் பேருந்தின் மேற்கூரைகளில் அமர்ந்தும் ஆபத்தான நிலையில் பயணம் செய்கின்றனர். இதனால் ஏதாவது விபத்துகள் நேர வாய்ப்பிருக்கிறது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதிக அளவு பேருந்துகளை மேற்படி வழித்தடத்தில் இயக்க உத்தரவிட வேண்டுமாறு இம்மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தார்ச் சாலை. பர்கூர் ஊராட்சி முதல்நிலை சிறப்புப் பெற்றிருந்தும், 33 குக்கிராமங்களை உள்ளடக்கி இருந்தாலும், போதிய அளவு தார்ச் சாலை இன்றி குண்டும் குழியுமாக உள்ளது. எனவே, இப்பகுதிக்கு தார்ச் சாலை அமைத்துத்தர அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். கிருஷ்ணன்] [ 2001 செப்டம்பர் 11

அடுத்து, அந்தியூரை புதிய தாலுகாவாக ஆக்கல். எனது அந்தியூர் சட்டப்பேரவைத் தொகுதி அத்தாணி, அந்தியூர், நெரிஞ்சிப்பேட்டை, அம்மாப்பேட்டை என்ற 4 பேரூராட்சிகளையும், பர்கூர், பிரம்மதேசம், வெள்ளித்திருப்பூர், இலுப்பிலிகுடி உள்பட 25 ஊராட்சிகளையும் உள்ளடக்கிய மிகப்பெரிய தொகுதியாகும். எனவே, அந்தியூரைப் புதிய தாலுகாவாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொகுப்பு வீடுகள். கிராம சிற்றூராட்சிகளில் வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களின் வாழ்க்கைத் தரத்தினைப் போலவே, பேரூராட்சிகளில் வாழும் மேற்படி மக்களின் வாழ்க்கைத்தரம் எவ்வித வேறுபாடுமின்றி உள்ளது. எனவே, மேற்படி சமுதாய மக்களுக்கு சிற்றூராட்சிகளில் கட்டப்படும் தொகுப்பு வீடுகள்போல் பேரூராட்சிகளிலும் தொகுப்பு வீடுகள் கட்டித்தர உத்தரவிட தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தனியார் நிலம் கையகப்படுத்துதல். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 31, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் பக்க எண் 5-ல் மேற்கண்ட பிரிவினருக்கு 2001-2002 ஆம் ஆண்டில் வீட்டு மனைகள் வழங்கப்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்த நிதியொதுக்கீடு செயயப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. இவ்வாறு அரசின் நிதி ஒதுக்கீடு ஒருபுறம் இருந்தாலும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்கு வீட்டுமனைகள் வழங்க அரசு தனியார் நிலங்களைக் கையகப்படுத்தும்பொழுது தனியார் நில உரிமையாளர்கள் நீதிமன்றத்தினை அணுகி இடைக்காலத் தடை பெற்று விடுகின்றனர். இதனால் அரசின் திட்டங்களைச் செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுகிறது. இவ்வாறான வழக்குகள் நீதிமன்றங்களில் சுமார் 3,000 என்ற அளவில் தேங்கிக் கிடக்கின்றன. இதனால் அரசுக்கும் அவப்பெயர் ஏற்படுகிறது. எனவே, இத்தகைய சம்பவங்களைத் தவிர்க்க அரசு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை இம்மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணன், எஞ்சியவைகளைக் கோரிக்கையாக எழுதிக் கொடுத்துவிடுங்கள்.



2001 செப்டம்பர் 11 ]

**திரு. ஆர். கிருஷ்ணன்:** சரி. அடுத்து, சத்துணவுப் பணியாளர்கள்; தமிழகப் பள்ளிகளில் பணிபுரியும் சத்துணவு ஊழியர்களின் நீண்டநாள் கோரிக்கையான பணி நிரந்தரம், முழுநேர அரசு ஊழியர் ஆக்குதல் ஆகியவற்றை நிறைவேற்ற இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு நிறுவனங்களில் இட ஒதுக்கீடு; பெரும்பான்மை யான கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு நிறுவனங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு முறை கடைப்பிடிக்கப்படுவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணன், உரையை முடித்துவிட்டீர்களா?

**திரு. ஆர். கிருஷ்ணன்:** இன்னும் ஒரு நிமிஷத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஞ்சியவைகளை அடுத்த கூட்டத் தொடரில் வைத்துக்கொள்ளலாம்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** சரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. வி. சோமசுந்தரம்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** இன்னும் ஒரு நிமிஷம் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி கூறி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. சோமசுந்தரம்.

***திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்"

என்னும் மகாகவி பாரதியின் வைர வரிகளுக்கு இலக்கணமாக வாழ்ந்துவரும் தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்

தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் வரலாற்று வானில் ஒரு விடிவெள்ளியாய், பத்தரை மாற்றுத் தங்கமாய், எத்திப் பிழைக்கும் எத்தர் கும்பலுக்குச் சாட்டையாய், தமிழகத்தில் இருக்கும் 6 கோடி தமிழக மக்களின் இதயங்களிலே நீங்காத இடம் பெற்றுள்ள அன்புத் தாயை வணங்கி, சாதாரண நெசவாளர் குடும்பத்தில். பிறந்த என்னை உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக ஆக்கிய எங்களுடைய இதய தெய்வம், கழகத்தின் காவல் தெய்வம், ஏழைகளின் விடிவெள்ளி தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) என்னைப் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்த உத்திரமேரூர் தொகுதி வாக்காளர்களுக்கும், எனது வெற்றிக்குப் பாடுபட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உடன் பிறப்புகளுக்கும் மற்றும் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணியைச் சார்ந்த அத்தனை தோழர்களுக்கும் என் முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, என்னை ஈன்றெடுத்த தாய், தந்தையரை வணங்கி என் கன்னிப் பேசை தொடங்குகின்றேன்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் புகழேந்தி அவர்களுக்குக் கொடுத்த நேரத்தைப்போல் உங்களுடைய புகழுக்குக் காரணமாக இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் வருடம் ஏப்ரல் 23 ஆம் தேதியன்று மாநிலங்கள் அவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தனது கன்னிப் பேச்சில் ஜவுளித் துறை மானியக் கோரிக்கையில் பேசும்போது 'ஏழை நெசவாளர் குடும்பங்கள் பட்டினியில் சாகின்றன, இந்த ஏழை நெசவாளர் வாழ்வு உயர வேண்டும் என்றால் அவர்களுக்கு உரிய சலுகைகள் கொடுக்க வேண்டும்' என்று பேசினார்கள்.

அதுபோல் இந்தச் சட்டமன்றத்திலே என்னுடைய கன்னிப் பேச்சில் கைத்தறி மற்றும் துணிநூல் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்புத் தந்த இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வேட்டி,



சேலைகள் வழங்கும் திட்டத்திற்காக புரட்சித் தலைவி அரசு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 129 கோடி ஒதுக்கியதை வரவேற்கின்றேன். அதுமட்டுமல்லாமல், சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச பள்ளிச் சீருடைகள் வழங்குவதற்காக அரசு ரூபாய் 55 கோடி ஒதுக்கியதை வரவேற்கின்றேன். கதர்த் துணி நெசவாளர்களின் வேலைவாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்குடன், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் வழங்கும் தள்ளுபடியுடன், கதர்த் துணியின் விற்பனை மீதான தள்ளுபடி ஆண்டு முழுமைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனால், கதர்த் துணியின் விற்பனை அதிகரிப்பதோடு, கதர்த் துணி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் கூடுதலாக வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்ற அளவிற்கு உத்தரவிட்ட எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக அரசு மூடிய ஆலைகளைத் திறப்போம் என்ற வாக்குறுதியை நாட்டு மக்களுக்குத் தந்து ஆட்சிக்கு வந்தது. ஆனால், இயங்கிய ஆலைகளை மூடிய சாதனையைப் படைத்ததே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) சுமார் 18 நூற்பாலைகளை ஏற்கெனவே மூடியிருக்கிறது என்கிற வரலாற்றினைப் புரட்டிப் பார்க்கும்போது, தி.மு.க. அரசு செய்வது ஒன்று, சொல்வது ஒன்றாக இருக்கிறது. மூடிய ஆலைகளைத் திறப்போம் என சொன்ன தி.மு.க. அரசு, 18 நூற்பாலைகளை மூடியதை இந்த நாடே அறியும் என்பதை இந்த அவையில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவில் அதிகமாக கைத்தறியை நம்பியிருப்பது தமிழகத்தில்தான். பெருமை பெறுவதும், புகழ் பெறுவதும் தமிழகத்தினுடைய கைத்தறி நெசவாளர்கள்தான் என்பதைப் பெருமிதத்துடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கைத்தறித் துறை என்பது திராவிட இயக்கத்தின் உணர்வோடு ஒட்டிய துறை என்பதை நாம் மறந்துவிட முடியாது. எப்படி காந்தியடிகளை நினைக்கும்போது கதரை நினைக்கிறோமோ, அதுபோல் கைத்தறி என்று சொன்னவுடன் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நமக்கு வரும். நெசவுத் தொழில் நலிவடைந்த நேரத்தில் கைத்தறித் துணிகளைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தனது தலையிலே சுமந்து தெருத் தெருவாக விற்றார்கள்

[திரு. வி. சோமசுந்தரம்] [2001 செப்டம்பர் 11

கைத்தறி நெசவாளர்களுடைய துயரங்களைப் போக்க வேண்டுமென்ற நோக்கத்தில் அப்படிச் செய்தார்கள்.

*நண்பகல் 12-00*

அதுபோல், எங்களுடைய இதய தெய்வம் அம்மா அவர்கள் 1991-96 ஆம் ஆண்டில் நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தார்கள். கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்ட நிதியொதுக்கீடு செய்தார்கள். ஆனால், அந்த ஏழைக் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தார்களா என்றால் கட்டிக் கொடுக்கவில்லை. அப்படி என்றால் அந்தப் பணம் என்னவாயிற்று என்பதை இந்த அவையின் மூலம் அறிய விரும்புகிறேன். ஆகவே, நமது அரசு அந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டும். குறிப்பாக, கைத்தறி நெசவாளர்கள் அதிக அளவில் வசித்து வரும் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு அதிக வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய இதய தெய்வம் அம்மா அவர்களின் கடந்த ஆட்சியில் பட்டு, கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்களுக்கு போனஸ் வழங்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களிலும் சுமார் 80 காசுகளிலிருந்து அதிகபட்சமாக ரூ.1.20 காசுவரை போனஸ் வழங்கப்பட்டது. ஆனால், கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போனஸும் கொடுக்கப்படவில்லை; அந்த உறுப்பினர்களின் பங்குப் பணத்திற்கு வட்டிகூட கொடுக்கப்படவில்லை என்ற அவல நிலையை எடுத்துக் கூறவிரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மனிதரின் மானத்தைக் காக்கும் நெசவாளர் தனது மானத்தை இழந்து வாழ்ந்ததுதான் மிச்சம். ஏனென்று சொன்னால் தமிழ்நாட்டில் உள்ள நெசவாளர்கள் தங்கள் சிறுநீரகத்தை விற்று குடும்பம் நடத்தினார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன். அதுமட்டுமல்லாமல், நெசவாளர்கள் குடும்பம் குடும்பமாகத் தற்கொலை செய்துகொண்ட காட்சியை கடந்தகால ஆட்சியிலே நாம் கண்டோம். இந்த அவல நிலைக்குக் காரணம் என்ன? கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் காரணம் என்பதை நான் இந்த நேரத்தில் ஆணித்தரமாகச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2001 செப்டம்பர் 11] [திரு. வி. சோமசுந்தரம்]

இந்தக் கைத்தறிச் சங்கங்கள் நலிவடைந்ததற்குக் காரணம் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் தொழில் தெரிந்த உண்மையான நெசவாளர்களைச் சங்கத்தின் உறுப்பினர்களாகச் சேர்க்காததுதான். அது மட்டுமல்லாது, அந்தச் சங்கங்களில் தொழில் தெரியாதவர்களை அந்தச் சங்கத்தின் தலைவராகவும், இயக்குநர்களாகவும், உறுப்பினர்களாகவும் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் நியமனம் செய்ததுதான் இந்த வீழ்ச்சிக்குக் காரணமே தவிர வேறல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்தகால அம்மா ஆட்சியில் சுமார் ஏழே ஏழு கிளை விற்பனை நிலையங்களைக் கொண்டிருந்தன பட்டு கூட்டுறவுச் சங்கங்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மேலும் சுமார் 25 முதல் 30 கிளை விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டன. இதை ஏன் நான் இங்கே கூறுகிறேன் என்றால், பட்டு, கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் நலிவடைந்ததற்கான காரணத்தைக் கோடிட்டுக் காட்டுவதற்காகத்தான். அது மட்டுமல்லாமல், அந்த 25 முதல் 30 கிளை விற்பனை நிலையங்களைத் தொடங்கும்போது, அந்த நிருவாகக் குழு ஒவ்வொரு கிளை விற்பனை நிலையத்திற்கும் சுமார் மூன்று இலட்சத்திலிருந்து ஐந்து இலட்சம் ரூபாய் வரை கையூட்டுப் பெற்றுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், அந்தக் கிளை விற்பனை நிலையங்களிலே புதிய பணியாளர்களை நியமனம் செய்வதற்கு ஒவ்வொரு கிளை விற்பனை நிலையத்திற்கும் 20 பணியாளர்கள் என்ற முறையில் நியமனம் செய்தார்கள். அந்த நியமனம் செய்ததில் ஒவ்வொரு பணியாளருக்கும் சுமார் ஒரு இலட்சம் முதல் 1½ இலட்சம் ரூபாய் வரை கையூட்டுப் பெற்றுள்ளார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தரக் குறைவான பட்டுச் சேலைகள் தயாரித்ததால் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனை அளவு குறைந்துபோனது.

பட்டு கைத்தறி நெசவாளர்கள் கட்டடட நிதியில், உறுப்பினர்களால் சங்கத்தில் கட்டட நிதிக்காகச் சேர்த்து வைக்கப்பட்ட பணத்தை பல முறைகேடுகள் செய்து, சங்க நிருவாகக் குழுவினர் முன்னேறுவதற்கு சங்கத்தின் பெயரில் வீடுகளையும், மனைகளையும் வாங்கினார்கள். இந்த வீடு, மனை வாங்கியதில் சுமார் 10 இலட்சத்திலிருந்து 15

இலட்சம் ரூபாய்வரை கையூட்டுப் பெறப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இப்படிப் பட்டு கூட்டுறவுச் சங்கங்களைக் கொள்ளை அடித்ததால் அந்தச் சங்கங்கள் சீர்கேடு அடைந்துள்ளன என்பதை இந்த மாமன்றத்தில் நான் கூற விரும்புகிறேன். ஒரு பட்டு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் சுமார் 50 இலட்சம் ரூபாயைக் கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக அரசு கொள்ளை அடித்துள்ளது. தமிழகத்தில் 102 பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன. அந்த 102 பட்டு கூட்டுறவுச் சங்கங்களும் நலிவடைந்துள்ளன. ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் 50 இலட்சம் என்றால் 102 பட்டு கூட்டுறவுச் சங்கங்களிலே சுமார் 15 கோடி ரூபாய்க்கு மேல் பட்டு கூட்டுறவுச் சங்கப் பணத்தைச் சுருட்டியிருக்கிறார்கள் என்பதை *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

*பிற்பகல் 12-05*

*(மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. பொன்முடி எழுந்து நின்றார்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோமசுந்தரம் நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். *(குறுக்கீடு)* உறுப்பினருடைய கன்னிப்பேச்சில் குறுக்கிடக்கூடாது. *(குறுக்கீடுகள்)* ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமருங்கள்.

**திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதய தெய்வம் இந்தச் சட்டசபையிலே எவ்வாறு செயல்பட வேண்டுமென்று எங்களுக்குக் கூறியுள்ளார்கள். ஆனால், நான் சொல்வதெல்லாம், நாங்கள் வம்புச் சண்டைக்குப் போகமாட்டோம், ஆனால் வந்த சண்டையை விடமாட்டோம் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சோமசுந்தரம், சண்டை எதுவுமே இல்லை, நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. வி. சோமசுந்தரம்:** கடந்தகால இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 10 சதவிதம் தள்ளுபடி, பிளஸ் 200 ரூபாய் என்று இருந்தபோது விற்பனை நன்றாக இருந்தது. அதேசமயம், கூட்டுறவுச் சங்கங்களும் இலாபத்தில் இயங்கின. ஆனால் தற்போது தரம் குறைந்த சேலைகளை உற்பத்தி



செய்து, 35 சதவிகிதம் முதல் 45 சதவிகிதம் வரை தள்ளுபடி வழங்குவதால் சங்க மூலதனம் பாழடையச் செய்யப்பட்டு நெசவாளர் நலன் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பதை இந்த அவையில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்திய முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. 60 வயதினைக் கடந்த எல்லா நெசவாளர்களுக்கும் அந்த ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். அந்தத் தொகையை ரூபாய் 200-லிருந்து இதய தெய்வம் அம்மா அவர்கள் கனிவுடன் 400 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதுமட்டுமல்ல, இந்த ஓய்வூதியம்—அரசு ஊழியர்கள் காலமானால் அவர்கள் மனைவிக்கு வழங்கப்படுவதைப்போல—அந்த நெசவாளர்கள் இறந்தால் அவர்களுடைய மனைவிக்கும் வழங்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கைத்தறி நெசவாளர் சங்கங்கள் மிகவும் நலிவடைந்துள்ளன. கைத்தறி நெசவாளர்களின் நிலைமை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அந்தச் சங்கங்களுக்கு அரசாங்கம் கொடுக்க வேண்டிய காசுக் கடன் கணக்குக்கு வட்டித் தொகை, 3 சதவிகிதம் அரசு மானியம் வரவேண்டியுள்ளதைக் கடந்த ஆட்சியாளர்கள் 2 வருடங்களாக நிறுத்தி வைத்துள்ளார்கள். அதை இந்த அரசு உடனடியாக வழங்க வேண்டும். அதேபோல ரிபேட் தொகை 20 சதவிகிதம் அரசு மானியம் வரவேண்டியதும் நிலுவையில் உள்ளது. அந்த ரிபேட் தொகையை 30 சதவிகிதமாக உயர்வு செய்து வழங்கினால் விற்பனை அதிக அளவில் நடைபெறும். சங்க நலனுக்கு அது உகந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் அனைவரும் சட்டமன்ற உறுப்பினர்கள் மேம்பாட்டு நிதியை ரூபாய் ஒரு கோடியாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துள்ளார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்கள். அவர்களுக்கு நான் கூறிக்கொள்வது என்னவென்றால் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்திய திராவிட முன்னேற்றக் கழக அரசு முதலில் அறிவித்த தொகை ரூபாய் 25 இலட்சமாகும். பின்னர் அத்தொகை படிப்படியாக உயர்ந்து ரூபாய் 77 இலட்சமாக உயர்ந்தது. ஆனால் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள் இத்திட்டத்திற்கு முதலில் ஒதுக்கியது ரூபாய் 82 இலட்சம்.

இது படிப்படியாக உயர்ந்து வரும் 5 ஆண்டுகளுக்குள் இரண்டு கோடி ரூபாயை எட்டும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் எங்கள் இதய தெய்வத்திற்குக் கொடுத்துத்தான் பழக்கமே தவிர கொடுத்ததைப் பிடுங்கும் பழக்கம் இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோமசுந்தரம், கன்னிப் பேச்சிலேயே இரண்டு கோடிக்குக் கொண்டு வந்து விட்டீர்கள். இரண்டு மணித்துளிக்குள் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வி. சோமசுந்தரம்:** பேசி முடித்துவிடுகிறேன். தமிழகத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும், தொழிற்பயிற்சி நிலையங்களிலும் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு 5 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்து கொடுத்தால் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் 6 கோடி மக்களின் தலைவியாகப் பொறுப்பேற்று இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏழைகளின் நினைவிலே நீங்கா இடம்பெற்று, ஒட்டிய வயிற்றோடு இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கைத்தறி நெசவாளர்களின் வர்க்கத்திற்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கும் செங்குந்தர், முதலியார், வேளாளர், பிள்ளைமார், செட்டியார் ஆகிய இனங்களைச் சேர்ந்த நெசவாளர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 12-10

இங்கே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இந்த அரசு இதைச் செய்யுமா, அதைச் செய்யுமா, எங்கள் ஆட்சியில்தான் இது செய்யப்பட்டது, அது செய்யப்பட்டது என்று கூறினார்கள். எனக்குக் கிராமப்புறத்திலே கூறும் பழமொழிதான் நினைவிற்கு வருகிறது. விடிய



விடிய வீடு புகுந்து கோழி திருடுபவன், விடிந்ததும் அந்தத் தெரு மக்களுடன் சேர்ந்து திருடனைப் பிடிப்பது எப்படி என்று வழி கூறுவானாம்; அதுபோல உள்ளது இவர்களது பேச்சு. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த தி.மு.க. ஆட்சியில் கைத்தறி நெசவாளர்களை நசுக்கி, அவர்களுடைய குடும்பங்களை நடுத்தெருவிற்கு விட்டவர்கள்தான் முந்தைய ஆட்சியாளர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

என்னுடைய தொகுதியிலே, காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை மிகவும் நலிவடைந்து உள்ளது. இந்த ஆலை மிகவும் சீரான நிலையில் இயங்கி இலாபகரமாக, சிறப்புடன் இயங்குவதற்குப் போதிய நல்ல வழிவகை உள்ளது. ஆலையில் நிரந்தரத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் குறைந்து உள்ளனர். ஆலையில் வங்கிக் கடன் மற்றும் பஞ்சுக் கடன் மிகவும் குறைந்த நிலையில் உள்ளது. ஆலையை முழுமையாக இயக்கி முழு உற்பத்தி எடுக்கும்பட்சத்தில் ஆலை சிறப்பாகவும், இலாபகரமாகவும் இயங்க வாய்ப்புள்ளது. ஆகவே, நம்முடைய கடந்தகால ஆட்சியின்போது, 1991 ஆம் ஆண்டில் கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைப்புச் செய்வதற்காக ரூ.25.00 கோடியை இதய தெய்வம் அம்மா அவர்கள் அன்றைக்கு ஒதுக்கினார்கள். அதுபோல, கடந்தகால ஆட்சியிலும் 145 கோடி ரூபாய், 185 கோடி ரூபாய் என நிதி வழங்குவதாக அறிவித்துவிட்டு, எந்த நிதியும் இதுவரை எந்த நூற்பாலைகளுக்கும் கொடுக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, வேலை முடக்கம், வேலைப் பளு திணிப்பு, சம்பளக் குறைப்பு எனப் பழிவாங்கி, கூட்டுறவு நூற்பாலைகளை மூடி சீரழிவுப் பாதைக்கு தள்ளிவிட்டார்கள். அவர்தம் குடும்பங்கள் பசி, பட்டினியால் வாடுவதைப் போக்கும்பொருட்டும், தொழிலாளர்களின் நலன் காக்க, இவ்வாலை சீராக இயங்க போதிய நிதி உதவி அளிக்க வேண்டுமாய் இதய தெய்வம் டாக்டர் அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியினுடைய முக்கியப் பிரச்சினை, என்னுடைய தொகுதியில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோமசுந்தரம், கன்னிப் பேச்சிலே கிளப்பிவிட்டீர்கள். (குறுக்கீடு) சீக்கிரம் கிளப்ப வேண்டிய சூட்டைக் கிளப்பிவிட்டீர்கள். (குறுக்கீடு) சீக்கிரம் பேச்சை முடியுங்கள், தொகுதி பிரச்சினைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. வி. சோமசுந்தரம்:** ஒரேயொரு நிமிடம். 'ஆடையில்லாத மனிதன், அரை மனிதன்' என்று சொல்வார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி 'கிழியாத ஆடை, ஒழுகாத வீடு, ஆறாத சோறு' என்பார்கள். இவற்றை அளிப்பதுதான் உண்மையான அண்ணாயிசம் என்று சொல்லப்பட்டது. அந்த அண்ணாயிசக் கொள்கையோடு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பீடு நடைபோடக்கூடிய ஆட்சியை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலே நடத்தப் போகிறது, நடத்திக் கொண்டிருக்கிறது, என்றைக்கும் நடத்தும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு வாய்ப்பளித்த இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கிறேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.என். சிவசுப்பிரமணியன்.

***திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பட்டினி வாடையும் பஞ்சிலுடையும்
பண்ணி மலைகளென வீதிகுவிப்போம் . . .'

என்னும் எட்டயபுரத்துக் கவிஞனின் ஏற்றமிகு கனவினை எழிலோடு நிறைவேற்றிய பெருமை நமது கைத்தறி நெசவுத் தொழிலுக்கு உண்டு. ஆனால், இத்தனைச் சீரோடும், சிறப்போடும் செயலாற்றி வந்த கைத்தறி நெசவுத் துறை, இன்றைக்குச் சீர்கெட்டுப் போய் நிற்கின்றது. நாட்டின் ஏற்றுமதியிலே 35 விழுக்காடு வருமானத்தை ஈட்டித் தந்த நெசவுத் தொழில் நசிந்து போனதற்கு யார் காரணம் என்பதனை ஆராய்வதை விட்டுவிட்டு, தொய்ந்து போன நெசவுத் தொழில் மீண்டும் தொன்மையான சிறப்போடு புத்துயிர் பெற, ஆக்கபூர்வமாகப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும், நெசவுத் தொழிலாளர்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்களையும் இந்த அரசு கொள்கை விளக்கக் குறிப்பின் வாயிலாக அறிவித்திருப்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

குறிப்பாக, 2001-2002 ஆம் ஆண்டிற்கான தள்ளுபடி மானியத்திற்கு 72.00 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது மெத்தப் பாராட்டத்தக்கதாகும். அதேபோன்று, கைத்தறி இரகங்களின்



விற்பனையை ஊக்குவிக்கும் வகையிலே, நுகர்வோரைக் கவர்ந்திழுக்கும் நோக்குடன் கைத்தறித் துணிகளின் விற்பனைக்கான தள்ளுபடியை வழங்குவதற்காக மட்டும் ரூ.4,400 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது மிகமிகப் பாராட்டத்தக்கதாகும். ஏனெனில், தள்ளுபடி என்றால்தான், எதுவும் செல்லுபடியாகுகின்ற காலம் இது. காலத்திற்கு ஏற்ற கோலத்தினைக் கொள்கையாக அறிவித்திருப்பதால், கைத்தறித் துணி விற்பனை அமோகமாக உயரும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

அதேபோன்று, இலவச வேட்டி சேலைகளைப் பயனாளிகளுக்கு வருவாய்த் துறை மூலம் வழங்குவதற்குப் பதிலாக, கிராம சபைகள் மற்றும் இதர நகர உள்ளாட்சி அமைப்புகள் மூலம் வழங்கப்படுவது என்பது புதிய நல்ல முயற்சியாகும். அனைத்திற்கும் மேலாக, தொலைநோக்குப் பார்வையோடு இவ்வரசு அறிவித்திருக்கும் எதிர்காலத் திட்டங்கள் ஒளிமயமான எதிர்காலத்தினை நெசவுத் தொழிலுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதனைத் தெள்ளத்தெளிவாகக் காட்டுகின்றன. எனினும், கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் அன்றாடம் வாழ்விலே சந்தித்து வரும் பிரச்சினைகளும், இவ்வரசால் கனிவோடு கவனிக்கப்பட்டு, களையப்பட வேண்டும் என்பது பற்றியும் எனது தாழ்மையான கருத்துகளை இந்த மாமன்றத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-15*

கைத்தறிக்கு என 11 இரகங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதைக் கண்காணிக்கும் தமிழக அரசின் அலுவலர்களும், மத்திய அரசின் டெக்ஸ்டைல்ஸ் கமிட்டியைச் சேர்ந்தவர்களும் சரிவரச் செயல்படாததால், ஒதுக்கப்பட்ட இரகங்கள் இன்று விசைத்தறியில் நெய்யப்பட்டு, கைத்தறி என போலி முத்திரை பெற்று ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால், கைத்தறி நெசவாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்களுக்கு மத்திய அரசில் முன்பெல்லாம் 20 சதவிகிதம் 'டிராபேக்' கொடுத்து வந்தார்கள். படிப்படியாக அது குறைக்கப்பட்டு, இந்த ஆண்டு 3-3/4 சதவிகிதம் முதல் 5 சதவிகிதம் வரை குறைக்கப்பட்டுள்ளது. இதனால், ஏற்றுமதியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கைத்தறித் துணி நெசவாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மீண்டும் 20 சதவிகிதம் 'டிராபேக்' கொடுக்க தமிழக அரசு மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும்.

வீடுகள் கட்டுவது என்கின்ற அறிவிப்பை நான் அன்போடு வரவேற்கின்றேன். அதேசமயம் பரவலாக வீடு கட்டும் திட்டம் என்ற ஒரு திட்டம் சென்ற காலத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த அனுமதியினால் அரசாங்கத்தினுடைய மானியம் அதிலே கிடைத்துவிட்டது. ஆனால், வங்கிக் கடன் கிடைக்காத காரணத்தினால் சுமார் 1,000 வீடுகள் முழுமை பெறாமல் இருக்கின்றன. அதில் மதுரையைச் சார்ந்த திருவள்ளுவர் காலனி, பிரசன்னா காலனி, கிருஷ்ணாபுரம் காலனி ஆகியவையும் அடங்கி இருக்கின்றன. எனவே, இதன்மீதும் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மன்றத்தில்கூட தொடக்கத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல திருக்குறளோடு தொடங்கினார்கள். வள்ளுவர் எல்லோருக்கும் பொதுவானவர் என்பதையும் சொன்னார்கள். அதே வள்ளுவர் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்.

> "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
> சொல்லிய வண்ணம் செயல்"

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, சொல்லிய வண்ணம் செய்வதற்கு எல்லோரும் முன்முயற்சி எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கடந்த கால அரசு சொல்வதைக் கூடுதலாகச் சொன்னதே தவிர, செயலில் குறைவாக இருந்தது. இன்றைய அரசு அதற்கு நேர்மாறான முறையில் செயலை அதிகப்படுத்தக்கூடிய வகையில் இதிலே கவனம் எடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) வீடுகளுக்கு அந்தத் திட்டம் என்று அறிவித்திருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அது நிறைவேறுவதற்கான வழிவகைகளைக் காண வேண்டுமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல தள்ளுபடி மானியத்திற்கு, 72 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தள்ளுபடி வழங்குவதில் தற்போது உச்சவரம்பு வைக்கப்படுகிறது. அரசு அறிவித்ததைப் போல 20 சதவிகிதம் முழுமையாக விற்பனைத் தள்ளுபடி வழங்க வேண்டுமென்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல விழாக் காலங்களில் இதனுடைய அளவு இன்னும் கூடுதலாக அமைய வேண்டுமென்பதையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இலவச வேட்டி சேலைத் திட்டம். இதற்கான சேலைகள் வேட்டிகளை கைத்தறியில் மட்டுமே உற்பத்தி செய்வது என்று அரசு முடிவு செய்திருப்பதாக இந்த அறிக்கையிலே தெளிவு படுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாக அமைந்திருக்கிறது. அதோடு



சேர்த்து விசைத்தறித் தொழிலாளர்களும், அவர்களுடைய வாழ்விற்கும் வகை செய்யக்கூடிய முறையில் வழிவகை காணவேண்டும் என்பதையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறியைப் பொறுத்தவரையில் இரகங்களுக்கான பாதுகாப்பு என்பதைப்பற்றி, விரிவாகவே அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பாதுகாப்பில் இன்னும் கூடுதல் கவனம் தேவை. 22 இரகம் என்று இருந்தது 11 இரகமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதையாவது உத்தரவாதம் செய்யக்கூடிய பணியிலே ஈடுபட வேண்டுமென்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கூட்டுறவு அமைப்புகளில் தேங்கி இருக்கக்கூடிய துணிகளை சிறப்புக் கொள்முதல் செய்ய, கைத்தறிக்கு ஒதுக்கப்படும் மானிய உதவிகளை முறையாகப் பயன்படுத்திக்கொள்வதோடு, முறைகேடுகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவும், தற்போது வழங்கப்படும் 20 சதவிகித தள்ளுபடி மானியம் உச்சவரம்பு இல்லாமல் வழங்கப்படவும் கூட்டுறவு நெசவாளர்களுக்கு, 60 வயது நிரம்பிய அனைவருக்கும், பென்ஷன் வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேசமயத்தில் கூட்டுறவு அமைப்பின் இன்ஷூரன்ஸ் திட்டத்தில் இருக்கக்கூடிய நெசவாளர் இறந்தால் தற்போது கோ-ஆப்டெக்ஸ் ரூ.10 ஆயிரமும் ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ.50 ஆயிரமும் சேர்த்து 60 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதில் அரசின் பங்காக, இன்னும் கூடுதலாக 40 ஆயிரம் ரூபாய் சேர்த்து ஒரு இலட்சமாக உயர்த்தித் தரவேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் வைத்திருக்கிறார்கள்; அதையும் நிறைவேற்றித் தருவதற்கான வழிவகைகளை அரசு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள். பென்ஷன், இறப்பு நிதி போன்ற திட்டங்களை தனியார் நெசவாளர்களுக்கும் அமல்படுத்திட வேண்டுமென்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பட்டு நெசவாளர்களுக்கு, ஆரணி, காஞ்சிபுரம், கும்பகோணம் ஆகிய பகுதிகளில் கடந்த 5 ஆண்டுகளாகக் கூலி உயர்வு என்பது தீர்வு காணப்படாத ஒரு பிரச்சினையாக இருக்கிறது. இதில் அரசு தலையிட்டுத் தீர்வு காண வேண்டும்.

மதுரை பகுதியிலும் கூலிப் பிரச்சினை என்பது தீர்வு காணத்தக்க முறையில், நெசவாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்கக்கூடிய முறையில் வழி காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நூல் ஜரிகையின்மீது விதிக்கப்பட்டுள்ள 4 சதவிகித வரி விதிப்பு திரும்பப்பெறப்பட வேண்டும். 1983 ஆம் ஆண்டு மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்ட நெசவாளர் நலச் சட்டம் இன்னும் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீடு கட்டுவதற்கு 'ஹட்கோ' கடன் நிறுத்தி வைத்துள்ளதை விரைவில் வழங்குவதற்கு வழி காண வேண்டுமென்ற கோரிக்கையையும் மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

பிற்பகல் 12-25

அதேசமயத்தில், கைத்தறித் தொழிலை நடத்தக்கூடியவர்கள், மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் மிகவும் சிரமத்திற்கு ஆளாகிறோம் என்று செல்லூர் பகுதியிலும் வேறு பல பகுதிகளிலும் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அவர்கள் துயரம் இல்லாமல், அதிகாரிகளின் தொந்தரவு இல்லாமல் தொழிலை நடத்துவதற்கு அரசு பொருத்தமான வழிவகை காண வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று வரிப் பிரச்சினை. விற்பனை வரி என்பதில், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இங்கே பல விவரங்களைக் குறிப்பிட்டார்கள். அதில், மதுரையைச் சேர்ந்த தமிழ்நாடு தொழில் வர்த்தகச் சங்கம் சார்பாக, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் ஒரு மனு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த மனுவில் மிகவும் தெளிவாக அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, நிதிநிலை அறிக்கையின்போது—விற்பனை வரியை—ஏற்கெனவே 2 சதவிகிதமாக இருந்ததை—4 சதவிகிதமாக உயர்த்தி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டதற்கு இணங்க, இந்த பட்ஜெட்டில் மீண்டும் 4 சதவிகிதம் என்பதை 2 சதவிகிதமாக மட்டுமே வரி உயர்வு என்று தமிழக அரசு அறிவித்திருப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், அவர்கள் நன்றி தெரிவித்திருக்கிறார்கள். அதோடு சேர்த்து, அந்த அமைப்பின் சார்பில், எந்தெந்தத் துறையில் வரிவிலக்கு இருக்க வேண்டும்; எந்தெந்தத் துறையில் வரிக் குறைப்பு இருக்க வேண்டும் என்பதையும் தெரிவித்து ஒரு நீண்ட மனுவை வழங்கியிருக்கிறார்கள். அதன்மீதும் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





அதேபோன்று, மதுரை மாவு வணிகர்கள் சங்கம். மரியாதைக்குரிய கடற்கரை தங்கம் என்பவர் அந்த அமைப்பின் கௌரவ ஆலோசகராக இருந்து அவர் வழி நடத்தி வருகிறார். அதன் சார்பாகவும், கடலை மாவு, பட்டாணி மாவு போன்ற மாவு வகைகளுக்கு விற்பனை வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்று அவர்கள் ஒரு மனுவை வழங்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே, இது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த வரிவிலக்கு நியாயமானது என்பதையும் நானும் என்னுடைய சார்பில் பரிந்துரை செய்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோன்று அச்சுத் தொழில். அச்சுத் தொழிலில், மதுரை நகரில் சிறப்பான முறையில், 'கிராஃபிகோ பிரிண்டர்ஸ்' என்ற பெயரில் ஒரு சிறந்த நிறுவனம் நடத்தப்பட்டு வருகிறது. அதனுடைய உரிமையாளராக இருக்கக்கூடிய நண்பர், அண்மைக் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்டு இருக்கக்கூடிய நோட்டீஸ் சம்பந்தமாக, மனு ஒன்றினை, வணிகவரித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். அதேபோன்று அச்சுத் தொழில் நடத்தக்கூடிய உரிமையாளர்கள் பலர் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அதன்மீதும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையில், அதாவது பெயர், விலாசம் ஆகியவற்றுடன் தனி நபருக்கோ அல்லது நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுக்கோ, அவர்களால் மட்டுமே பயன்படுத்தப்படுகின்ற-job printing-இல் காகிதம் மற்றும் மை, தமிழ்நாட்டில்,-registered dealer-களிடமிருந்து வாங்கி உபயோகிக்கப்படும் அச்சு வேலைகள், பணி ஒப்பந்தத்தின்கீழ்தான் வரி விதிக்கப்பட வேண்டும் என்ற உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றங்களினுடைய தீர்ப்பு கடைப்பிடிக்கப்பட்டு, டெல்லி மற்றும் மஹாராஷ்டிரா அரசுகள் தெளிவான சுற்றறிக்கைகள் விடுத்துள்ளன. தமிழகத்திலும் அது நடப்புக்கு வரவேண்டும் என்று தொழில் நடத்தக்கூடிய அன்பர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதன்மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) தக்க பரிசீலனைக்குப் பிறகு, அவர்களுக்கு விதிக்கப்பட்ட வரி, அபராதங்களை இரத்து செய்துவிட வேண்டுமென்று கேட்டு, எனது உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி முருகேசன்.

***திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில்,

2001-2002 ஆம் ஆண்டுக்கான கைத்தறி மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் 7 கோடி மக்களின் இதயக் கமலத்தில் வீற்றிருக்கும் எங்கள் இதய தெய்வமே, ஏழைகளின் இதயத் துடிப்பே, தமிழகத்தின் ஒளிவிளக்கே, அடித்தளத்து மக்களின் வாழ்வு உயரப் பாடுபடும் கருணைத் தாயே, நாடு போற்றும் அன்னையே, அன்று வீர மறவர்கள் காத்த இந்தத் திருநாட்டை ஊடுருவும் வல்லூறுகளிடமிருந்தும், ஊறு விளைவிக்கும் கொடியவர்களிடமிருந்தும் காத்து, நம்மை அழிக்க நினைத்த சதிகாரர்களை ஓட ஓட விரட்டி, கயவர்களின் கற்கால ஆட்சியை வீழ்த்தி, தமிழகத்தின் பொற்கால ஆட்சியை நிறுவிய எங்கள் காவல் தெய்வமே, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து கடைகோடித் தொண்டனாக இருந்த என்னை, பெரியார் தெற்கு மாவட்ட மகளிர் அணிச் செயலாளராக நியமித்து, பின் காங்கேயம் தொகுதியில் பல பெரியகோட்டைகளையெல்லாம்,—பழையகோட்டைகளை—தகர்த்தெறிந்து, தூள் தூளாக்கி, மீண்டும் நாம்தான் ஆட்சியைப் பிடிப்போம் என்று பகல் கனவில் மிதந்தவர்களுக்கு, பொங்கும் கடல் என ஆர்ப்பரித்து, புயல் காற்றாகச் சுழன்றடித்து, சூறாவளி சுற்றுப் பயணம் செய்து, நாட்டு மக்களுக்கு உண்மையை உணர்த்தி, என்னைச் சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி, ஆன்றோர்களும், சான்றோர்களும் அமர்ந்த இந்த மாமன்றத்தில் நான் பேசுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தர்மத் தாயே, ஏழேழு கோடி ஜென்மம் எடுத்தாலும் கிடைக்காத, அருந்தவப் பயனை பெற்றுக் கொடுத்த கருணைக் கடலே, நீவிர் இருக்கும் திசை நோக்கி இந்த ஏழையின் நன்றியைப் பொற்பாதங்களில் காணிக்கையாக்கி என்னுடைய கன்னி உரையைத் துவக்குகின்றேன்.

பிற்பகல் 12-30

அம்மா அவர்களை, ஆட்சிப் பீடத்தில் அமர வைத்த நல்லோர்களுக்கும், தாய்மார்களுக்கும், இரவு பகல் பாராது, அயராது உழைத்த கழக உடன்பிறப்புகளுக்கும், தோழமைக் கட்சியினருக்கும், காங்கேயம் தொகுதியின் வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.





நம் தமிழகத்தை உலக வங்கிகளுக்கு அடமானம் வைத்து, குளிர் காய்ந்து, சுகத்தை அனுபவித்த கடந்தகாலக் கயவர்கள் வெட்கித் தலைகுனியும் வண்ணம் தென் பொதிகை தவழ்ந்து வந்த தென்றல், தீங்கனியின் சுவை குழைத்த தேன், அகிலும் சந்தனமும் அரைத்தெடுத்த குழம்பு, இத்தனைக்கும் மேலாக அருமையான ஒரு நிதிநிலை அறிக்கையைக் கொடுத்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'மாதர்தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்ற பாரதியாரின் சத்தியக் குரல் இன்று வெற்றி பெற்றிருக்கிறது. எங்கள் அன்னையின் அருளால் பெண்கள் சமுதாயமே தலைநிமிர்ந்து நிற்கிறது. அம்மா, இன்னல்களை அழித்து இடர்களைத் துடைக்கும் நீங்கள் ஒரு நடமாடும் கொற்றவை. அம்மா, தங்களின் பார்வை பட்ட இடமெல்லாம், சரித்திரங்களாக மலர, பாதம் பட்ட இடமெல்லாம் சாதனைகள் மலர தமிழகத்தில் மீண்டும் ஒரு பொற்கால ஆட்சியை உருவாக்கி, ஆட்சிப் பொறுப்பேற்ற 100 நாட்களில் நூறாயிரம் கோடி நலத் திட்டங்களை மக்களுக்கு அறிவித்து, சரித்திரம் படைத்த கொடை வள்ளலே, ஒரு கோடி பேர் உழைக்க ஒரு குடும்பம் வாழ்வது அங்கே. ஆனால் பல கோடி பேர் வாழ ஒரு தாய் உழைப்பது இங்கே. ராஜகம்பீரம், ராஜபார்வை, ராஜகளையோடு உலகத்தில் 100 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாமனிதர்கள் தோன்றுவார்கள் என்று சொல்லுவார்கள். இவையனைத்தும் ஒருங்கே அமையப்பெற்று, வார்த்தைக்கு வார்த்தை எதிரிகள் திணறும் வகையில் அர்த்தம் கற்பித்து, மண்ணுக்கு மகிமையை உருவாக்கி பெண்ணுக்கு சம உரிமை தந்த எங்கள் மாதரசியே, தமிழகத்தின் மணிமகுடமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற எங்கள் தர்மத் தாயை எள்ளி நகையாடியவர்களுக்கும், அவதூறு பேசியவர்களுக்கும் தமிழக மக்கள் நன்றாகப் பாடம் கற்பித்துவிட்டார்கள் என்பதுதானே உண்மை! (மேசையைத் தட்டும் ஒலி)

'ஆடையில்லா மனிதன் அரை மனிதன்' இப்படி அரை மனிதனாக வந்து, பத்திரிகைகளில் பரபரப்பான செய்திகள் வரக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கி, மலிவான விளம்பரம் தேடும் சிலரும் இருக்கிறார்கள்.

சிறிது நேரத்திற்கு முன் உறுப்பினர் ஒரு திருக்குறளைக் கூறினார். அதே திருவள்ளுவர் இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்.

"*பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா*
*பிற்பகல் தாமே வரும்*"

(மேசையைத் தட்டும் ஒலி) என்று 2000 வருடங்களுக்கு முன்பே அவரே சொல்லியிருக்கிறார். தமிழினத் தலைவர், தமிழ் எங்கள் முப்பாட்டன் சொத்து என்று மூச்சுக்கு மூச்சு சொல்லிக்கொண்டிருந்தவர்களுக்கு இது தெரியாமல் போனதுதான் விந்தையிலும் விந்தை. "ஐயோ ஐயோ" என்று ஆர்ப்பரித்து, நாடகமாடி, அனுதாபம் தேட நினைத்தாலும் உங்கள் வசனம், டைரக்ஷன் எல்லாம் இனிமேல் தமிழ்நாட்டு மக்களிடையே எடுபடாது. (மேசையைத் தட்டும் ஒலி) காரணம் மக்கள் விழித்துக் கொண்டார்கள். இனி அவர்களை ஏமாற்ற முடியாது.

அம்மா, ஈரோடு மாவட்டம் காங்கேயம் சட்டமன்றத் தொகுதியில் நெசவாளர்கள் நிறைந்த பகுதி சென்னிமலை ஒன்றியம். சுமார் ஒரு இலட்சம் நெசவாளர்கள் இருக்கிறார்கள். இங்கு மொத்த கைத்தறி நெசவாளர்களில் இருபது சதவிகிதத்திற்கு மேற்பட்டோர் பெண் நெசவாளர்கள். இவர்கள் முழுநேரமும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்களுக்கு பிரசவ காலத்தில் இடைக்கால உதவித்தொகை வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். காரணம் கர்ப்பிணிப் பெண்கள் 7 மாதத்திற்குப் பிறகும், பிரசவம் ஆனபின் 3 மாதத்திற்கும் நெசவு செய்ய இயலாது. குறிப்பாக மகப்பேறு காலத்தில் சத்துணவுக்கும், பின்னர் குழந்தை வளர்ப்பிற்கும் அதிக செலவு செய்ய வேண்டியுள்ளது. அம்மா அவர்கள் தயவுகூர்ந்து உதவித்தொகையை பெண் நெசவாளர்களுக்கு வழங்கினால் பெரிதும் உதவியாக இருக்கும். மேலும் கைத்தறி நெசவுத் தொழில் மேம்பட, நெசவாளர்கள் வாழ்வு உயர, ஏழை நெசவாளர்களின் குழந்தைகள் தொழிற்கல்வி பயில, சென்னிமலை பகுதியில் டெக்ஸ்டைல் டெக்னாலஜி கல்லூரி துவங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய நாளில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் கைத்தறித் துறை சிறப்பானதொரு இடத்தில் உள்ளது. கைத்தறி நகரமாம் சென்னிமலையில் இயங்கி வரும் சுமார் 15,000 கைத்தறிகள், கரூரில் உள்ள தனியார் ஏற்றுமதியாளர்களையே நம்பி உள்ளன. எனவே, சென்னிமலை நகரை மத்திய அரசுத் திட்டத்தின்கீழ், ஏற்றுமதி நகரமாகத் தேர்ந்தெடுக்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். சென்னிமலை, ஏற்றுமதி நகரமாக மாறினால்,



பல்லாயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்களின், வாழ்க்கைத் தரம் உயரும். உலக வரைபடத்தில், சென்னிமலை உரிய இடம் பெறும் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *12-35*

கடந்த 5 ஆண்டுகால தி.மு.க. அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளால் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் நலிவடைந்துள்ளன. இச்சங்கங்கள் புத்துயிர்பெற, கைத்தறிக்குத் தள்ளுபடியை வருடம் முழுவதும் நிரந்தரமாகச் செயல்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அரசு அளிக்க வேண்டிய கூட்டுறவு நெசவாளர் சங்கங்களின் மானிய நிலுவைகளை உடனடியாக வழங்கி, அவர்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்கு வழி செய்து தருமாறு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சிட்டா நூலுக்கு விதிக்கப்பட்ட 2 சதவிகித வரியைக் குறைக்க வேண்டுமென அம்மா அவர்களின் பாதம் தொட்டுக் கேட்டுக்கொள்கிறேன்.

காங்கேயம் தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினை தீர அவினாசி-அத்திக்கடவுத் திட்டத்தை அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்ற இவ்வேளையில், சென்னிமலை இரண்டாவது காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுமாய் அம்மா அவர்களின் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் 353 கிராமங்கள் பயன்பெறும் என்பதை அம்மா அவர்களுக்குப் பாதம் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

காங்கேயத்திலிருந்து சென்னிமலை செல்லும் சாலையில் நொய்யல் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள குறுகிய பாலம், மிகவும் பழுதடைந்து, அபாயகரமான நிலையில் உள்ளது. இது பேராபத்தை விளைவிக்கும் நிலையில் உள்ளது. இது ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட மிகவும் பழைய பாலம். அகலமான புதிய பாலம் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் ஈங்கூரில் உள்ள தனியாருக்குச் சொந்தமான சுப்பாத்தாள் ஸ்பின்னிங் மில் கடந்த ஒரு வருட காலமாக மூடப்பட்டுள்ளதால், சுமார் 600 தொழிலாளர் குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்படி நூற்பாலையை உடனடியாகத் திறப்பதற்கும், அவர்களுக்கு நிலுவையில்

உள்ள போனஸ், சம்பளத்தை உடனடியாக வழங்குவதற்கும் ஆவன செய்து, பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் வீட்டில் ஒளி விளக்கேற்றிட தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

காங்கேயம் நகருக்கு வீட்டுவசதி குடியிருப்புத் திட்டத்தை அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

காங்கேயம் தொகுதியிலுள்ள ஒரத்துப்பாளையம் அணையில் திருப்பூர் நகரின் சாயப்பட்டறைக் கழிவுநீர் வந்து சேர்வதால் அந்த அணையின் தண்ணீர் எந்த உபயோகத்திற்கும் பயன்படாமல் இருக்கின்றது. மேலும் சுற்றியிருக்கின்ற கிராமங்களின் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதால் விவசாயத்திற்கும், மக்களுக்கும், கால்நடைகளுக்கும் மிகுந்த பிரச்சினையாக இருக்கிறது. இதற்குக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தருமாறு அம்மா அவர்களைப் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சூடத்திற்கு விதிக்கப்பட்டுள்ள 4 சதவிகித வரியை இரத்து செய்து தருமாறும், சேலத்தில் இயங்கிவரும் சேகோ சர்வ் கூட்டுறவுச் சங்கத்திற்கு விதிக்கப்பட்டுள்ள கூடுதல் விற்பனை வரியை இரத்து செய்தால், பல விவசாயத் தொழிலாளர்கள், இலட்சக்கணக்கான விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் மரவள்ளிக் கிழங்கிற்கு நல்ல விலை கிடைக்கும். சேகோ சர்வ் நலிவடையாமல் தடுக்க இயலும்.

தமிழகத்தில் உள்ள ஒட்டுமொத்த மக்களையும் கடமையோடு, மனித நேயத்தோடு காப்பாற்றுகின்ற இரட்சகராக, அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை முன்னேற்றுவதற்கு வந்த விடிவெள்ளியாக விளங்குகின்ற நம் காவல் தெய்வம், மக்களுக்காக அல்லும் பகலும் அயராது பாடுபடும் சமூகநீதி காத்த வீராங்கனை, எனக்கு அரசியல் வாழ்வில் ஒளியேற்றி வைத்து, எங்களை வாழ வைத்த தெய்வம், எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கு, தமிழகத்தின் அரசியல் இயந்திரத்தை பழுதுபடாமல் சுழற்றுகின்ற ஆற்றல் மிகுந்த எங்கள் தாய், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் இந்த ஏழைத் தொண்டனின் நன்றியை மீண்டும் சமர்ப்பித்து, வாய்ப்பை நல்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்



திரு. அன்பில் பெரியசாமி அவர்கள் வெளியே செல்ல வேண்டுமென்று வேண்டுகோள் வைத்ததால், அவரைப் பேச அழைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இரண்டாம் முறையாக இம்மாமன்றத்தில் பேச காரணமான, உலகில் வாழும் ஒட்டுமொத்தத் தமிழர்களின் பாதுகாவலர், எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் அமர்ந்து இருக்கும் திசை நோக்கி வணங்கி என் உரையைத் துவங்குகின்றேன். பேச வாய்ப்பு அளித்த இனமான பேராசிரியர் அவர்களுக்கும், என்னை வழிநடத்திச் செல்லும் எனது அண்ணன், சென்னை மாநகர மேயர் தளபதி அவர்களுக்கும், என்பால் பற்றும் நம்பிக்கையும் கொண்டு என்னைத் தேர்ந்தெடுத்த எனது அன்பான தொகுதி மக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

தமிழகத்தின் மிகத் தொன்மையான தொழிலானது நெசவுத் தொழில். விவசாயத்திற்கு அடுத்தபடியாக தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியமான பங்கு வகிக்கும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை மானியத்தில் பேச அழைத்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்பே நெசவாளர்களின் துயர் துடைப்பதற்காக பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் முதலானோர், தேங்கிக் கிடந்த கைத்தறி ஆடைகளை தலையிலும் தோளிலும் சுமந்து வீதி வீதியாகக் கூவி விற்று புதியதோர் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளனர். எனவே, இந்த அவைக்கு அதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன். பின்னர் வந்த கழக அரசு, ஆட்சி செய்த தலைவர் கலைஞர்தான் கைத்தறித் துறைக்கு தனி வாரியம் அமைத்தார். போதிய அளவு தரமான பஞ்சு கிடைக்காமை மற்றும் பஞ்சு விலை ஏற்றம் இவற்றால் பெரும் இடர்ப்பாடுகளைச் சந்தித்துவரும் நிலையிலும் கைத்தறி நெசவாளர்களின் நூல் தேவையை கூட்டுறவு நூற்பாலைகள் மூலம் நிறைவு செய்து, கைத்தறி நெசவாளர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், தறிக்கூடத்துடன் இணைந்த வீட்டுவசதித் திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம், நெசவாளர் காப்பீட்டுத் திட்டம், நெசவாளர் நல்வாழ்வுத் திட்டம் போன்ற பல

நலத் திட்டங்களை தலைவர் கலைஞர் கடந்த காலத்தில் திறம்பட நிறைவேற்றி வந்தார். அந்தத் திட்டங்களின் தலைப்புகளில் சிறு மாற்றங்கள் செய்து செயல் திட்டத்தின் மதிப்பீடுகள் சாதனைத் திட்ட விளக்கத்தில் கலைஞர் செய்த அதே மதிப்பீட்டில் புள்ளிவிவரங்கள் அடங்கி இருப்பது வரவேற்கத்தக்கது.

நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு, நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தில் ஓய்வூதியத்தை ரூ. 200-லிருந்து அதிகப்படுத்த இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

சத்துணவுக்கூட பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாகக் கைத்தறி ஆடைகள் வழங்கும் திட்டத்தை நான் வரவேற்கின்றேன். விழாக் காலங்களில் இலவச வேட்டி, சேலைகள் கைத்தறியில் மட்டுமே உற்பத்தி செய்வதும், அதனை நகர்ப்புறங்களில் பயனாளிகளை, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆணையர்கள் மூலம் தெரிவு செய்து வழங்கும் திட்டத்தை வரவேற்பதோடு, அதனை சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் வைத்து வழங்க வேண்டும் என்று கோரிக்கையாக நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கொள்கைத் திட்டத்தில் வகுத்துள்ள திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றி, நலிந்து போகும் இந்தக் கைத்தறி மற்றும் துணி நூல் நெசவாளர்களின் குறைகளைக் களைந்து அவர்கள் வாழ்வில் ஏற்றம் பெறச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தருணத்தில் எனது தொகுதிக்குத் தேவையானவற்றை இந்த அரசு நிறைவேற்றும் என்ற நம்பிக்கையில் சில முக்கியக் கோரிக்கைகளைத் தங்கள் மூலம் அவையில் வைக்கின்றேன்.

திருச்சி மாநகரில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழை மக்கள் அதிகம் வாழ்கின்றனர். அவர்களுடைய பெண் பிள்ளைகள் பட்ட மேல் படிப்புப் படிக்க வேண்டுமென்றால், திருச்சியில் தனியார் மகளிர் கல்லூரிகளில்தான் சேர்ந்து படிக்க வேண்டும். எனவே, ஏழைப் பிள்ளைகள் படிக்க வசதியாக அரசு மகளிர் கல்லூரி திருச்சியின் மையப் பகுதியில் அமைத்திட அரசு ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.



மேலும் திருச்சி மாநகராட்சியில் துப்புரவாளர்கள் பற்றாக்குறையால் நகரெங்கும் துர்நாற்றம் வீசக்கூடிய குப்பைகள் அகற்றப்படாமல், சாக்கடைகள் பராமரிக்கப்பட முடியாமல் உள்ளன. எனவே, வேண்டிய அளவு துப்புரவுப் பணியாளர்களை நியமனம் செய்து அக்குறைகளைக் களைய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சுமார் 250-க்கும் மேற்பட்ட மாநகராட்சிப் பணியாளர்கள் பணி நிரந்தரமாக்கப்படாமல் தற்காலிகப் பணியாளர்களாக உள்ளனர். அதை அரசு கவனத்தில் கொண்டு அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மாநகரில் குடிசைப் பகுதியில் சுமார் 20, 30 ஆண்டுகளாக வாழ்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் அற்புதத் திட்டத்தை கலைஞர் கொண்டு வந்தார். அதனடிப்படையில் அந்த இடங்களை ஆய்வு செய்து முடிவுறும் தருவாயில் அத்திட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோப்பில் முடங்கிக் கிடக்கின்றது. அதனை இந்த அரசு விரைவில் முடித்துத்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல் இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான பல இடங்களில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக குடிசை போட்டுக் குடிவாழும் ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இந்த அரசு முன்வருமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

1996-ல் கலைஞர் அரசு திருச்சி மாநகரில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கும் வகையில் 21 இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணியைச் செய்து வந்தது. அப்பணிகள் இப்போது தொய்வடைந்த நிலையில் உள்ளன. அதனை விரைவுபடுத்தி அனைத்து இடங்களிலும் குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் திருச்சி மாநகரில் வெள்ளம் பெருக்கெடுத்துவரும் காலங்களில் கலைஞர் அரசு சுமார் 50 கோடி ரூபாய் செலவில் உய்யக்கொண்டான் கரைகளை வலுப்படுத்தத் திட்டம் தீட்டி, முதற்கட்டமாக 2½ கோடி வழங்கி பணிகள் தொடங்கப்பட்டு தற்போது நிலுவையில் உள்ளன. எனவே, மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளச் சேதங்களில் இருந்து மக்களைக் காப்பாற்ற அத்திட்டப் பணிகளை விரைவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் 1998 ஆம் ஆண்டு திருச்சி மக்களுடைய போக்குவரத்து நெரிசலைப் போக்கும் வகையில் திருச்சியிலே 4 மேம்பாலங்கள் கட்டுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. திருச்சி பாலக்கரை, தென்னூர், உத்தமர்கோவில், திருவரங்கம் ஆகிய நான்கு இரயில்வே மேம்பாலங்களைக் கட்டும் பணிகளை விரைவுபடுத்தவும், நகரின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, 'Ring Road' அமைக்கும் பணிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்துகிறேன்.

பிற்பகல் 12-45

அதேபோல, திருச்சி நகரில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. ஆனால் மருத்துவர்கள்தான் இல்லை. எனவே, சம்பந்தப்பட்ட சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள பணியிடங்களில் மருத்துவர்களைப் பணிக்கு அமர்த்த இந்த அரசு முன்வர வேண்டும்.

அதேபோல, பழுதடைந்த மின் கம்பங்கள் வீடுகளுக்கு அருகிலேயே உள்ளன. தினமும் பயத்தில் இருக்கும் அந்த மக்களைக் காப்பாற்ற பழுதடைந்த மின் கம்பங்களை உடனடியாக மாற்றித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல, மாநகராட்சித் தொடக்கப்பள்ளிகள், சத்துணவுக் கூடங்கள் மிகவும் பழுதடைந்துள்ளன. அதனை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் செயல்பாட்டில் உள்ளதா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

அதேபோல, திருச்சி காஜாமலையில் அரசு குடியிருப்புகள் நிறைய உள்ளன. மிகவும் பழுதடைந்து, இடிந்துவிழக்கூடிய கட்டத்தில் உள்ள வீடுகளைப் பராமரிக்கவோ அல்லது கட்டித்தரவோ வேண்டுமென்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தத் தேவைகளையெல்லாம் அரசு கவனத்தில்கொண்டு, மக்களுக்கு கடமையை நிறைவேற்றித் தரவேண்டுமெனக் கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணித் தொழில் மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்த உங்களுக்கு முதற்கண் நன்றி தெரிவித்து, நான் இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுகிறேன். மாநிலத்திலே சுமார் 6



இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் தொழில் புரிந்து வருகிறார்கள். கைத்தறித் தொழில் நாளுக்குநாள் நலிவடைந்து வருகிறது. எனவே, அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவர்களது வாழ்வு மலர ஆவன செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கைத்தறித் தொழிலாளர்கள் நாடு முழுவதும் அவர்களது முக்கிய அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, நேற்றையதினம் பல்வேறு போராட்டங்களிலும், உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களிலும், சாலை மறியல் போராட்டங்களிலும் ஈடுபட்டு அவர்களது கோரிக்கைகளை வலியுறுத்தி வருகின்ற இந்தக் காலகட்டத்திலே விவசாயிகளுக்கு இந்த அரசு பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்ததுபோல்—காலையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்ததுபோல்—நெசவாளர்களுக்கும் பயன்தரக்கூடிய அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவுத் தொழிலிலே கொள்முதல் விலை என்பது, பல ஆண்டுகளாகச் சீரமைக்கப்படாமல் உள்ளது. கோ-ஆப்டெக்ஸ் சேலை ஒன்றுக்கு ரூ. 88.96 காசுகள் எனக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்துள்ளது. ஆனால் ஒரு சேலை, நெசவாளர் சங்கம் உற்பத்தி செய்யும்போது அதன் அடக்கவிலை ரூ. 95.27 காசுகள் ஆகிறது. ஆனால் இந்த நஷ்டம் ரூ. 6.31-ஐ கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஏற்காமல் மானியமாக 9 சதவிகிதம் நிர்ணயித்துக் கொடுத்துள்ளோம் என்பது முரண்பாடாக உள்ள ஒரு திட்டமாகும். மேலும், கைத்தறி நெசவாளர் சங்கத்திலிருந்து கொள்முதல் செய்யப்படுகின்ற துணிகளினுடைய விலையை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அந்தந்த மாதமே கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வலியுறுத்த ஆசைப்படுகிறேன். மேலும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வங்கிகளிலே காசுக் கடன் பெறுகின்றபோது, திரும்பச் செலுத்தமுடியாத சூழ்நிலை இதனால் ஏற்படுகிறது.

ஜனதா சேலை நெய்யப்படும் கூலியை ரூ. 37-லிருந்து ரூ. 50/-ஆக உயர்த்தித்தர வேண்டுமென்று இந்த அரசை விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். ஒரிசா வெள்ள நிவாரணம் போன்ற பல நிவாரணப் பணிகளுக்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படுகின்ற துணிகளுக்கு ரூ. 89/- விலைமதிப்புள்ள சேலையை ரூ. 50/-க்குத் தான் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல்

வருகிறது. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக நெசவாளர்கள் வாழ்வு தேய்ந்துகொண்டுபோய் அவர்கள் வாழ்வில் வறுமை இழையோடிக் கொண்டிருக்கிறது. கைத்தறி, விசைத்தறி இவற்றிற்கிடையே மிகப் பெரிய அளவிலே கருத்து வேறுபாடுகளும் முரண்பாடுகளும் வந்து கொண்டிருக்கின்றன. கைத்தறி நெசவாளர்கள் விசைத்தறி மற்றும் ஆலைத் துணிகளோடு போட்டியிட முடியாது. எனவே, கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற தள்ளுபடி மானியத்தை 30 சதவிகிதமாக உயர்த்தி அதை ஆண்டு முழுவதும் தங்கு தடையில்லாமல் வழங்க வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

அதேபோல, கைத்தறிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற 11 இரகங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதை அரசு சிறந்த முறையிலே கண்காணித்திட வேண்டும். இச்சட்டத்தினை முனைப்புடன் செயல்படுத்த வேண்டும்.

எந்த அளவுக்கு விவசாயத் துறையைப் பாதுகாக்க வேண்டியது அவசியமோ, அந்த அளவுக்கு நெசவுத் துறையையும் பாதுகாத்திட வேண்டும். அனைத்துத் துறைகளுக்கும் மின்சாரத்தை இலவசமாகத் தந்திட இயலாது என்றாலும், பக்கத்து ஆந்திர மாநிலத்திலே இருப்பதைப்போல, நெசவுத் துறைக்கு மின்சாரத்தை சலுகைக் கட்டணத்திலே கொடுக்க வேண்டுமென அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

1-1-2005 முதல் ஜவுளித் துறையில் உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தமானது நடைமுறைக்கு வரவுள்ளது. இதன்மூலம் ஜவுளித் துறையில் உலகளாவிய தடையற்ற வர்த்தகமும், போட்டியும் தொடங்க இருக்கிறது. எனவே, உலகளாவிய போட்டியை எதிர்கொள்ள நாம் கைத்தறித் துறையையும், ஜவுளித் துறையையும் நவீனப்படுத்திட வேண்டும். ஏற்கெனவே உள்ள ஏற்றுமதி ரக உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அதன் மூலமாக ஜவுளி ஏற்றுமதியில் நம் நாட்டிற்குள்ள பங்கினை நாம் தக்க வைத்துக் கொள்வதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பாக மத்திய அரசு அமல்படுத்தியுள்ள Deendayal Hathkargha Protsahan Yojana திட்டத்தின்மூலம் உயர்த்த, மதிப்பு மிக்க இரகங்களை நெய்யும் பொருட்டு பயிற்சி வழங்குவதற்கு, அந்தச் சமயத்தில் ஏற்படும் கூலி இழப்பினை ஈடுகட்டுகின்ற வகையிலே நெசவாளர்களுக்கு மாதம் [illegible] ரூபாய் உதவித் தொகை வழங்க திட்டம் தீட்டப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.



மேலும் சென்னிமலை பகுதியில் உள்ள பிரதம நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆண்டுக்கு ரூபாய் 125 கோடிக்கும் மேலாக ஏற்றுமதி இரகங்களைத் தயார் செய்து வருகின்றார்கள். ஆனால், இவர்கள் கரூரில் உள்ள அமைப்புகள் மூலமாக ஏற்றுமதி செய்து வருகின்ற காரணத்தால், இவர்களுடைய பொருட்களுக்குப் போதிய அளவு விலை கிடைப்பதில்லை. எனவே, சென்னிமலையில் உள்ள சங்கங்களுக்கு ஸ்டார் அந்தஸ்து வழங்கி, நேரடியான ஏற்றுமதிக்கு வழிவகை செய்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிலுவையில் உள்ள தள்ளுபடி மானியத்தை உடனடியாக வழங்க வேண்டுமென நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பெண் நெசவாளர்களுக்கு, பிரசவ கால நிதியாக 5 மாதங்களுக்கு மாதம் ரூபாய் 1,000 வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மூடப்பட்டிருக்கின்ற 4 கூட்டுறவு நூற்பாலைகளைத் தனியார்மயமாக்க சாத்தியக்கூறுகளை அரசு ஆராய்ந்து வருவதாக இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. மூடப்பட்டிருக்கின்ற தொழிற்சாலைகளைச் செயல்படச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை வரவேற்றாலும், இதன்மூலம் தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்க அரசு கவனமாக இருந்திட வேண்டும்.

1996-97 ஆம் ஆண்டுக்கான உச்சவரம்பிற்கு மேல் அளித்த தள்ளுபடி மானியம் சுமார் எட்டு கோடி ரூபாய் தமிழக நெசவாளர்களுக்கு அளிக்கப்படாமல் உள்ளது. அதையும் அளித்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, கைத்தறி மற்றும் ஜவுளித் துறை மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. வாசுதேவன், இரண்டு நிமிடங்களில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பெ. வாசுதேவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதற்கண் [illegible] கொள்கிறேன்.

223952
சென்னை-600 008

அம்மா நீங்கள் நின்றால் பொதுக் கூட்டம்; நடந்தால் பேரணி; பேசினால் மாநாடு. இந்தியத் திருநாட்டில் இந்தச் சிறப்பு உங்களுக்கு மட்டுமே. என்றென்றும் கழகத்தை வளர்ப்பதில் தந்தையாக, எங்களைக் காப்பதில் தாயாக, தமிழகத்தைக் காப்பதில் முதல்வராக உங்களைப் பார்ப்பதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடித்து, இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியை மீண்டும் தமிழகத்தில் மலரச் செய்த எங்கள் குடும்ப தெய்வம், இதய தெய்வம் அம்மா அவர்கள், ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, மதுராந்தகம் தொகுதியில் தேர்தலில் நிற்க வைத்து, கடும் வெயில் என்றும் பாராமல், எனக்காக வாக்குகள் சேகரித்து, என்னை வெற்றிபெறச் செய்தார்கள். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா உங்கள் பாதச் சுவடுகளைப் பணிந்து நீங்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். எனக்காக என் மதுராந்தகம் தொகுதியில் பாடுபட்டு என்னை வெற்றிபெறச் செய்த கழக உடன்பிறப்புகளுக்கும், கழக வீராங்கனைகளுக்கும், நமது கூட்டணிக் கட்சியைச் சார்ந்த அனைத்து நண்பர்களுக்கும் மற்றும் மதுராந்தகம் தொகுதியிலுள்ள அனைத்து பொதுமக்களுக்கும் அவர்கள் பாதம் தொட்டு வணங்கி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-00

அம்மா, விவசாயிகள் கடன் சுமை தீர்க்க ரூபாய் 310.50 கோடி தள்ளுபடி செய்ததை தமிழக விவசாயிகள் பாராட்டுகிறார்கள். தாழ்த்தப்பட்ட மாணவிகளுக்கு, பிளஸ் 1, பிளஸ் 2 படிக்கும் மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை தமிழக மக்கள் மிகவும் பாராட்டுகின்றார்கள். ரூபாய் 100 கோடி செலவில் 75,250 எக்டேர் பரப்பளவில் வனத் தோட்டங்களை அமைக்கும் திட்டம் மிகவும் பயனுள்ள திட்டமாகும். தமிழகத்தில் கிராம நிர்வாகம் சீராகச் செயல்பட எல்லா ஊராட்சிகளுக்கும் கட்டட வசதிகளை ஏற்படுத்த உத்தரவிட்ட எனது அம்மா அவர்களை என் தொகுதி மக்களும், தமிழக மக்களும் பாராட்டுகின்றார்கள். மீனவர் நிவாரணத் தொகை ரூபாய் 1,080 முந்தைய தி.மு.க. ஆட்சியில்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை.

**திரு. பெ. வாசுதேவன்:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூன்று நிமிடங்கள் பேச





**திரு. பெ. வாசுதேவன்:** என் மதுராந்தகம் தொகுதியில்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லிவிட்டு உரையை முடியுங்கள்.

**திரு. பெ. வாசுதேவன்:** மதுராந்தகம் தொகுதியில் கால்வாய்களிலிருந்து செல்லும் நீர் கடலில் வீணாகக் கலக்கும் என்பதால் உயர்மட்டக் கால்வாய்த் திட்டத்தை அறிமுகம் செய்தார்கள். அந்தத் திட்டம் தி.மு.க. அரசால் கிடப்பில் போடப்பட்டது. நமது இதய தெய்வம் அம்மா அவர்களை, மதுராந்தகம் ஏரியில் உயர்மட்டக் கால்வாய்த் திட்டத்தின்மூலம் சுமார் 50 ஏரிகள் பயனடைய உள்ளதால் அந்தக் கால்வாய்த் திட்டத்தை அமைத்துத் தரும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது தொகுதியில் தி.மு.க. அரசில் மூன்று போக்குவரத்து வழித் தடங்களில் பேருந்துகள் நின்றுவிட்டன. நமது அம்மா அவர்கள் அந்த மூன்று வழித் தடங்களுக்கும் உடனடியாகப் பேருந்து வசதி ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

எனது மதுராந்தகம் நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைத்துத்தர நமது இதய தெய்வம் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது மதுராந்தகம் நகரில் ஏரி காத்த இராமர் ஆலயம் உள்ளது. அந்த ஆலயத்தின் தேர் பழுதடைந்துள்ளது. அந்தத் தேரை சீரமைத்துத் தருமாறு எனது அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இராம் பிரபு அவர்கள், மூன்று நிமிடத்தில் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நிகராக நல்ல குணம், இரக்க சுபாவம், தாராள குணம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி தமிழகத்தின் முதலமைச்சர் அம்மா அவர்களே, உலகறியா என்னை உன்னதமாய் உருவாக்கிய பிரம்மனே, தாய் மனம் கொண்ட தலைவனே, ஞானத் தகப்பனே, செழுமையில் பிறந்த எளிமையே, தேச பக்தியை மூச்சும் பேச்சுமாய்க் கொண்ட தலைவனே, மக்கள் தலைவர் ஐயாவே, உமக்கு எனது வெற்றியைக் காணிக்கையாக்கி, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் ஐயா திரு. ஜி.கே. வாசன் அவர்களை வணங்கி, என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கிய

சட்டமன்றத் தொகுதி பொதுமக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை வெற்றி பெறச் செய்வதற்கு எனது தொகுதிக்கு இரண்டு முறை தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தைத் தன்னிகரில்லா மாநிலமாக, இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடி மாநிலமாக ஆக்குவதற்கு சீரிய திட்டங்களை அனைத்துத் துறைகளுக்கும் வடிவமைத்து, வழிகாட்டி வருகின்றார்கள் என்பதை நினைத்து அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், நன்றியினையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

தமிழகத்தில் கைத்தறித் தொழில் இன்று கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இத்தொழிலை நம்பி வாழும் சுமார் 30 இலட்சம் கைத்தறி மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. கைத்தறித் தொழிலைப் பாதுகாக்கக் கடந்த 1985 ஆம் ஆண்டு அன்றைய பாரதப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ்காந்தி அவர்களால் கைத்தறிக்கென 22 இரகங்கள் ஒதுக்கீடு செய்து சட்டம் இயற்றப்பட்டது. அதன்பின்பு வந்த அரசுகளால் 11 இரகங்களாகக் குறைக்கப்பட்டது. மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளால் கைத்தறிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. அதிலும் சென்ற தி.மு.க. ஆட்சிக் காலத்தில் குறிப்பாக கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சங்கங்கள் நலிந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. கைத்தறிக்கு என ஒதுக்கப்பட்ட இரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்வதை தி.மு.க. அரசு தடுக்கத் தவறிவிட்டது. தொழிலிழந்த நெசவாளர்கள் குடும்பம், குடும்பமாக ஊரைவிட்டு வெளியேறும் நிலையும், தற்கொலை செய்துகொள்ளும் நிலையும் ஏற்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களினுடைய பரிசீலனைக்காகக் கீழ்வரும் கோரிக்கைகளை சமர்ப்பிக்கிறேன். தாங்கள் தயவுகூர்ந்து இவற்றை நிறைவேற்றி நெசவாளர்களைக் காப்பாற்றும்படி வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளிடம் பொறுப்பு அளிக்க வேண்டும். மேலும் அனைத்து நெசவாளர்களையும் கூட்டுறவில் கொண்டுவந்து நிதி ஆதாரத்தை அதிகப்படுத்தி, கூட்டுறவுச் சங்கங்களில் தொடர்ந்து தொழில் கூலி



தமிழகத்தில் 1981 ஆம் ஆண்டு நெசவாளர் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) இச்சட்டம் கூட்டுறவுத் துறைக்கும், தனியார் துறைக்கும் பொருந்தும் வகையில் தொழிலாளர் நல ஆணையாளரிடம் பொறுப்புக் கொடுத்து அமல்படுத்தி நெசவாளர்களுக்குச் சலுகைகள் கிடைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பஞ்சப்படியுடன்கூடிய குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை விலைவாசி உயர்வுக்கு ஏற்றவாறு திருத்தி அமைத்து அமல்படுத்துவதுடன், தனியார் துறைக்கும் விஸ்தரிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் காலத்திற்கேற்ப, புதிய இரகங்களையும், உற்பத்தி ஆகும் அனைத்து இரகங்களையும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்து பணம் பட்டுவாடா செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் உள்ள 60 வயது நிரம்பிய உறுப்பினர்களுக்கு முதியோர் ஓய்வூதியமாகப் பிரதி மாதம் ரூ. 200 அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஓய்வூதியம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சேமிப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டங்களில் சேர்ந்தவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு இல்லாமல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 60 வயது நிரம்பிய அனைத்து நெசவாளர்களுக்கும் நிபந்தனையைத் தளர்த்தி, ஏற்கெனவே அரசு வழங்கி வரும் 200 ரூபாயை 500 ரூபாயாக உயர்த்தி வழங்கக் கேட்டுக்கொள்வதோடு, தனியார் மாஸ்டர் வீவர்களிடம் நெய்யும் நெசவாளர்களுக்கும் மேற்படி ஓய்வூதியம் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தொடர்ந்து ரிபேட் சலுகை வழங்குவதுடன் ரிபேட் பாக்கியை அரசு உடனுக்குடன் அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் சேர்ந்துள்ள உறுப்பினர்கள் 60 வயதிற்குமுன் இறக்க நேரிட்டால் (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே 3 நிமிடம், 4 நிமிடம், 5 நிமிடம் ஆகிவிட்டது.

**திரு. இரா. இராம் பிரபு:** அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகையான இன்சூரன்ஸ் ரூ. 50,000-ஐ உயர்த்தி ரூ. 75,000ஆக வழங்கக் கோரியும் மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வழங்கப்படும் தொகையான ரூ. 10,000-த்தினை ரூ. 20,000-ஆக உயர்த்தி வழங்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நெசவுத் தொழிலுக்காக உள்ள செயற்கைப் பட்டு நூலுக்குப் புதிதாக மாநில அரசு விதித்துள்ள 4 சதவிகித வரியினால் செயற்கைப் பட்டு நூல் உயர்ந்துள்ளது. எனவே, ஏழை நெசவாளர்களைக் காப்பாற்றும் வண்ணம் புதிதாக விதித்துள்ள 4 சதவிகிதம் வரியை இரத்து செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்வதுடன், பல ஆண்டு காலமாக சிட்டா நூலுக்குள்ள 2 சதவிகிதம்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) அமைச்சர் ஏற்கெனவே எழுந்துவிட்டார். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. இரா. இராம் பிரபு:** 2 சதவிகிதம் விற்பனை வரியினை இரத்து செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. இரா. இராம் பிரபு:** ஆந்திரா போன்ற மற்ற மாநிலங்களில் சிட்டா நூலுக்கு 2 சதவிகிதம் விற்பனை வரி கிடையாது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, தமிழகத்திலும் சிட்டா நூலுக்குள்ள 2 சதவிகிதம் விற்பனை வரியை இரத்து செய்ய வேண்டுகிறேன்.

அடுத்து, என்னுடைய கன்னிப் பேச்சு என்பதால் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒரு சில மணித் துளிகளை எனக்கு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியான பரமக்குடி சட்டமன்ற தொகுதி, கைத்தறி நெசவாளர்கள் நிறைந்த தொகுதி. ஆகவே டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கீழ்க்காணும் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி சட்டமன்றத் தொகுதியில் சுமார் 45 ஆயிரம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அக்கூட்டுறவுச் சங்கங்களை நம்பியும், கைத்தறியை நம்பியும் சுமார் 15,000 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் காட்டன் சேலைகள், செயற்கை பட்டு, பாலியஸ்டர் கலப்பு இரகச் சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. உற்பத்தி செய்யப்பட்ட ஜவுளிகளில் சுமார் ரூ. 6,06,52,000 மதிப்புள்ள ஜவுளிகள் தேக்கமடைந்துள்ளன. இதனால் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, தேங்கியுள்ள ஜவுளிகளை மாநில நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கொள்முதல் செய்வதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடி - எமனேஸ்வரம் பகுதியில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்த வகையில் ரூ. 1,33,81,000 நிலுவைத் தொகையாக உள்ளது. இத்தொகையினை உடன் வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள், (குறுக்கீடு) அமைச்சர் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அவர் பதிலுரையை சொல்லட்டும். அதில் சேர்த்துச் சொல்லி விடுவார் எல்லாம். (குறுக்கீடு) இல்லை, அமைச்சர் பேசுகிறார். நன்றி என்று அப்படியே தெரிவித்து உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** உறுப்பினருக்கு ஒரே ஒரு நிமிடம் கொடுங்கள்.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர். (குறுக்கீடு) அமைச்சர் பதிலுரை சொல்லட்டும். (குறுக்கீடு) உறுப்பினர் ஒரு நிமிடம், ஒரு நிமிடம் என்று கேட்டு, 9 நிமிடங்கள் ஆகிவிட்டன. அமைச்சர் நீங்கள் பதிலுரை சொல்லுங்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் சட்டமன்றத் தொகுதியில் என்னை வேட்பாளராக அறிவித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப்பட்ட காலத்திலிருந்து முதன் முறையாக திண்டிவனத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்

கழகத்தின் சார்பாக என்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கவும், அதைத் தொடர்ந்து இந்த அமைச்சரவையிலே பணியாற்றவும் எனக்கு வாய்ப்பளித்த எங்கள் இதய தெய்வம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பாதம் தொட்டு வணங்கி, என்னைச் சட்டமன்றப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க எனக்கு வாக்களித்த திண்டிவனம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியினை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வணிக வரித் துறைக்கு அமைச்சர் பொறுப்பை எனக்கு அளித்து, மானியக் கோரிக்கையிலே இந்த அவையிலே உங்களுடைய நல்ல கருத்துகளை கேட்கின்ற மகத்தான வாய்ப்பினை உருவாக்கித் தந்தமைக்கு எனது நன்றியை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் காணிக்கையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசின் வருவாயில் பெரும் பங்கை ஈட்டித் தருவது வணிக வரித் துறையாகும். ஏறத்தாழ 66 விழுக்காடு வருவாயினை ஈட்டித் தருவது இந்த வணிக வரித் துறையாகும். 2000-2001 ஆம் ஆண்டில் இந்த வணிக வரித் துறையின் மூலம் கிடைத்த வருவாய் ரூ. 8,664 கோடியாகும். நடப்பு ஆண்டில் இந்த ஜூலை மாதம் வரை நம்முடைய வருவாய் 2,872 கோடியாகும். இத்துறையானது தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், மத்திய விற்பனை வரிச் சட்டம், தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம் போன்ற பல்வேறு சட்டங்களை நிர்வகிக்கும் பொறுப்பு மிகுந்த துறையாக விளங்குகிறது. இதில், வரி விதிப்புப் பிரிவு, தணிக்கைப் பிரிவு, செயலாக்கப் பிரிவு, மேல்முறையீட்டுப் பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகள் உள்ளன. இத்துறையானது சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையரின் கட்டுப்பாட்டில் ஏறத்தாழ 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுடன் இயங்கி வருகிறது. மாநிலம் 10 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு கோட்டமும் ஒரு துணை ஆணையாளரின்கீழ் இயங்கி வருகிறது. வரி ஏய்ப்புகளைக் கண்டுபிடிக்கும் பொருட்டு, செயலாக்கப்பிரிவு 7 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, துணை ஆணையர்களின்கீழ் இயங்கி வருகிறது. மாநிலங்களுக்கு இடையிலான புலனாய்வுக் குழு ஒன்றும் ஒரு துணை ஆணையாளரின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு



துணை ஆணையாளரின்கீழ் ஒரு பிரிவு இயங்கி வருகிறது. ஒரு கணிப்பொறி மையமும் ஒரு துணை ஆணையாளரைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இத்துறையில் வரி விதிப்புகள் மீதான மேல்முறையீடுகளைக் கவனிக்கும்பொருட்டு, மூன்று அடுக்கு மேல்முறையீட்டு முறை உள்ளது. முதல் மேல்முறையீடு உதவி ஆணையாளரிடமும், இரண்டாவது மேல்முறையீடு தீர்ப்பாயத்திடமும், மூன்றாவது மேல்முறையீடு தமிழ்நாடு வரி விதிப்பு சிறப்புத் தீர்ப்பாயத்திடமும் செய்ய வேண்டும்.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ஏறத்தாழ 4 இலட்சத்து 782 பதிவு பெற்ற வணிகர்கள் உள்ளனர். அவர்களில் ஒரு இலட்சத்து 39 ஆயிரத்து 404 வணிகர்கள் வரி விதிப்புக் கணக்கு காட்டுபவர்களாகவும், 2 இலட்சத்து 61 ஆயிரத்து 378 வணிகர்கள் வரி விதிப்புக்குள்ளாகாதவர்களாகவும் உள்ளனர்.

வணிக வரித் துறையினை முழுமையாகக் கணினிமயமாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழகத்திலுள்ள மொத்தம் 323 வரி விதிப்பு வட்டங்களில் வணிக வரித் துறையின் மொத்த வருவாயில் சுமார் 85 விழுக்காடு வருவாயினை ஈட்டித் தரும் சென்னை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள 140 வரி விதிப்பு வட்டங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. ஆறு மாநில எல்லை சோதனைச் சாவடிகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இத்துறையைச் சேர்ந்த ஏனைய அலுவலகங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளை விரைவில் கணினிமயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 5-7-2001 அன்று டெல்லியில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மற்றும் நிதியமைச்சர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் மற்றும் சட்ட அமைச்சர் அவர்கள் இத்துறையைக் கணினிமயமாக்குவதற்கு மத்திய அரசு நிதியுதவி அளித்திட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளார். இதன்பேரில் சுமார் 25 கோடியிலான ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மானிய உதவிபெறும் பொருட்டு மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

*பிற்பகல் 1-15*

இத்துறையின் பயன்பாட்டிற்கான மென்பொருட்களை தேசிய தகவல் மையம் வடிவமைத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1999 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் தேதி புதுடில்லியில் மாநில

முதலமைச்சர்கள் மற்றும் நிதி அமைச்சர்கள் கூட்டத்தில் 1-1-2000 முதல் சமச்சீர் வரிவிதிப்பை அனைத்து மாநிலங்களும் அமல்படுத்த வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு சமச்சீர் வரிக்கு எந்தவித எதிர்ப்பையும் தெரிவிக்காமல் சமச்சீர் வரிக் கொள்கையை ஏற்றுக்கொண்டது. இந்தக் கூட்டத்தில்கூட சமச்சீர் வரியினுடைய பொருட்கள் எந்தெந்த பொருட்கள் மீது எந்த வரிகள் எந்தெந்த விதத்தில் விதிக்கப்படும் என்பதைக்கூட ஆலோசிக்காமல் தமிழக அரசினுடைய கருத்துகளை இன்றுவரையிலும் ஐந்தாண்டு காலம் அவர்கள் ஆட்சி முடிந்து போகின்றவரை நடைபெற்ற அந்த Empowered Committee-யில்—அவர்கள் தங்களுடைய கருத்துக்களைத்—தெரிவிக்காமல், மத்திய அரசாங்கம் வடிவமைத்துக் கொடுத்த அந்தச் சமச்சீர் வரியை அவர்கள் அப்படியே ஏற்றுக்கொண்டார்கள். அந்த அடிப்படையில் முநதைய திராவிட முன்னேற்றக் கழக அரசு சுமார் 40 இனங்களுக்கான வரி விதிப்பு விகிதங்களை 21-3-2000 அன்று சமச்சீர் அளவுக்கு ஈடாக உயர்த்தியுள்ளது. 5-7-2001 அன்று புது டில்லியில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மற்றும் நிதி அமைச்சர்கள் கூட்டத்தில் மத்திய நிதி அமைச்சர் அவர்கள் 31-7-2001-க்குள் (குறுக்கீடு) நான் பேசிய பிறகு பேசட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அமைச்சர் அவர்கள் உரையை முடிக்கட்டும், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** 31-7-2001-க்குள் சமச்சீர் வரியினை அமல்படுத்தாத மாநில அரசுகளுக்கு மத்திய நிதி உதவி அளிப்பது நிறுத்தி வைக்கப்படும் என அறிவித்தார். இந்தச் சமச்சீர் வரியினை எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இப்போது ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், இந்தக் கொள்கையை ஏற்று..... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** தமிழக மக்கள் நலனில் அக்கறையில்லாமல் (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன். அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். பேசி முடித்தவுடன் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அமைச்சர் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசட்டும்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** சமச்சீர் வரி விதிப்புக் கொள்கையானது, மக்களுடைய கஷ்டங்களையும், நுகர்வோர்களுடைய கஷ்டங்களையும், நம் மாநிலத்தில் தயாரிக்கப்படுகின்ற பொருட்களுடைய விலையை, தரத்தைப் பற்றி எதையும் கலந்து ஆலோசிக்காமல் மத்திய அரசாங்கத்தால் தன்னிச்சையாக எடுக்கப்பட்ட தாராளமயக் கொள்கையை இவர்களுடைய அமைச்சர்கள் மத்திய அமைச்சரவையில் இருக்கின்ற ஒரே காரணத்தால் (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன். அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** இந்த தாராளமயக் கொள்கையை அமல்படுத்துவதற்காக இந்த சமச்சீர் வரி விதிப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்தினார்கள். இவர்கள் மத்திய அமைச்சர்களாக இருக்கின்ற ஒரே காரணத்திற்காக இந்த சமச்சீர் வரி விதிப்புக் கொள்கையை எதிர்க்காமல் விட்டுவிட்டு அவர்கள் சொன்னதை அப்படியே ஏற்றுக்கொண்டு, அமல்படுத்தி, 40 பொருட்களுக்கு மேலாக அவற்றின்மீது சமச்சீர் வரி விதிப்புக் கொள்கையை அமல்படுத்தி, இன்று, இந்த நாட்டு மக்களுக்கும், இந்த வணிகர்களுக்கும் நல்லது செய்தது போன்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) ஆகவே, 31-7-2001-க்குள் நாங்கள் இந்த சமச்சீர் வரி விதிப்பை மீதமிருக்கிற 16 பொருட்கள் மீதும் நாங்கள் நடைமுறைப்படுத்தவில்லை. இல்லையென்றால், மத்திய அரசு அனைத்து நிதி உதவிகளையும் நிறுத்தி வைப்போம் என்று எங்களுக்கு ஆணையிட்டுள்ளது இந்தச் சமச்சீர் வரி விதிப்புக் கொள்கையை, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி தலைமையில் இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், நாங்கள் ஒரு கட்டாயத்தின் காரணமாக, கடந்தகால தி.மு.க. ஆட்சி ஏற்படுத்திவிட்டுச் சென்ற கட்டாயத்தின் காரணமாக அதை ஏற்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்தத் துறையை இவர்கள் எவ்வாறு நிர்வகித்து இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். (கூச்சல்-குழப்பம்) சாதனை, சாதனை என்று சொல்லிக்கொள்ளும் இவர்கள், முன்னாள் முதலமைச்சர்

அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பட வேண்டும். அதற்கான ஆணையை மாண்புமிகு பேரவைத் தலைவர் இட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அனுமதி இல்லாமல், அவர்கள் எழுந்து பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. இவை பத்திரிகைகளிலேயும் வராது. அவைக் குறிப்பிலே அவை ஏறக்கூடாது என்று நான் இப்போது கட்டளையிடுகிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா அவர்கள், சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. பி.ஆர். சுந்தரம், கொஞ்சம் இருங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றம் எப்படி நடக்க வேண்டும் என்றெல்லாம், வரைமுறை, மரபு என்றெல்லாம் இந்த மாமன்றத்திலே பேசிக் கொண்டிருக்கிறார்கள், அமைச்சர் அவர்கள் பதில் கொடுக்கின்றபோது, அந்தப் பதிலிலே ஏதேனும் தவறுகளைச் சுட்டிக்காட்டவோ, குறுக்கீடோ, செய்ய வேண்டும் என்று சொன்னால், அவர் பேசி முடித்ததற்குப் பிறகே கேள்விகளை ஒவ்வொருவராகக் கேட்டால், அமைச்சரும் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்க முடியும். ஆனால், இந்த மாமன்றம், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்காக மட்டுமே இருக்கின்றது என்கிற நிலையைத் தோற்றுவிப்பதை நிச்சயமாக மற்ற கட்சியினராலே ஏற்றுக்கொள்ள முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை உங்கள் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவை முன்னவர் சொல்லிவிட்டார் (குறுக்கீடு) திரு. சுந்தரம், அவர்கள் வெளியே போய்விட்டார்கள். அவர்கள் போனதற்குப் பிறகு எதுவும் பேச வேண்டாம். நாளைக்கு அவர்கள் வந்த பிறகு பேசிக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. சி. வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சோதனைச் சாவடி....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய சட்டமன்றத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழைய சட்டமன்றத்திலே இதைவிட மோசமான நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்தன என்பது எனக்குத் தெரியும். அவைக்குறிப்பிலே அவை எல்லாம் ஏறியிருக்கின்றன. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லுங்கள்.



**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைச் சாவடிகளை நீக்குவது என்பது ஒரு கொள்கை முடிவு. ஆனால், அவர்களின் கடந்த ஆட்சியில் இந்த வணிக வரித் துறையின் ஆணையராக இருந்த சிரியாக் என்ற ஐ.ஏ.எஸ்., அதிகாரி, ஆணையராக இருந்தபோது தமிழகத்தில் இருக்கின்ற 13 சோதனைச் சாவடிகளைத் தன்னிச்சையாக முடிவு எடுத்து, ஒரே நாளில் அந்தச் சோதனைச் சாவடிகள் அனைத்தும் நீக்கப்படுகின்றன என்று அறிவித்துவிடுகின்றார். அதற்குப் பிறகு அந்தச் சோதனைச் சாவடிகளை நீக்குவதற்காக, அன்று இந்த வணிக வரித் துறைக்குப் பொறுப்பு ஏற்றிருந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியிடம் கையெழுத்துப் பெறப்படுகிறது. ஆனால், இரண்டு சோதனைச் சாவடிகள் நீக்கப்பட்டதற்கு இன்றுவரை ratification அரசாங்கத்தால் பண்ணப்படாமல் இருக்கிறது. இந்தச் சோதனைச் சாவடிகளை நீக்குவதற்கு, அரசாங்கத்திற்கு இருக்கின்ற, அமைச்சரவைக்கு இருக்கின்ற அதிகாரம் ஒரு அதிகாரிக்கு எப்படி வழங்கப்பட்டது? அது அவருக்குத் தெரியாமலிருந்து செய்யப்பட்டதா? இல்லை, அவருக்குத் தெரிந்து செய்யப்பட்டதா? இல்லை, யாருடைய நலனுக்கு, யார் கொள்ளை அடிப்பதற்காக இந்தச் சோதனைச் சாவடிகளை ஒரே நாளில் (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் அவ்வளவு அவசரமாக நீக்க வேண்டிய அவசியம் என்ன?

பிற்பகல் 1-25

மந்திரி சபையில்கூடக் கலந்தாலோசிக்காமல் இரவோடு இரவாக அந்தச் சோதனைச் சாவடிகளை நீக்குவதற்கு என்ன அவசியம்? அப்போது அந்தச் சோதனைச் சாவடிகள் நீக்கப்பட்டதால் கடத்திச் செல்லப்பட்ட பொருட்கள் என்னென்ன? இந்தப் பொருட்கள் மூலம் கொள்ளையடிக்கப்பட்ட கோடிக்கணக்கான பணம் யாருக்குச் சென்றது? இந்தத் துறையை நிர்வகித்த முன்னாள் முதல்வருக்குத் தெரியுமா? இல்லை அவருக்குச் சென்றதா? அவர் அடித்த கொள்ளையா? இல்லை "எனக்கு நிர்வாகத் திறமையில்லை" என் அதிகாரியை என்னால் கட்டுப்படுத்தத் திறமையில்லை, என அவர் ஒப்புக் கொள்கின்றாரா என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று சமையல் எண்ணெய்க்கு வரி [illegible]குத் தருகின்றேன் என்று சொல்லி ஓர் அறிவிப்பைச் சொல்லி பல கோடி ரூபாயைக் கடந்த ஆட்சியில் ஊழலாகச் செய்திருக்கின்றார்கள். அதாவது கடந்த

சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த சொக்கர், எம்.எல்.ஏ., ஒரு representation கொடுக்கின்றார். 100 கோடி ரூபாயிலிருந்து மேலும் 300 கோடி ரூபாய்க்கு மொத்த விற்பனை வரியிலிருந்து சமையல் எண்ணெய்க்கு விற்பனை வரி விலக்கு வேண்டுமென்று கேட்கின்றார். அதற்கு முன்னால் 100 கோடிக்கு உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்கின்றார். 100 கோடிக்கு உயர்த்தித் தருகின்றார்கள். 100 கோடிக்கு உயர்த்தித் தந்த உடனேயே இன்னொரு மனு கொடுத்து 100 கோடி ரூபாயிலிருந்து 300 கோடி ரூபாய்க்கு உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்கின்றார். அரசாங்கத்தின் ஆய்வில் எடுத்து 100 கோடிக்குமேல் டீலர்கள் இருக்கின்றார்களா என்று கேட்கப்படுகிறது. அந்தக் குறிப்பில் 100 கோடி ரூபாய்க்கு மேலே இந்த மாநிலத்தில் எந்த விற்பனையாளரும் இல்லை என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் 2-6-2000-அன்று சட்டசபையில் அன்றைய முதலமைச்சராக இருந்தவர் ஓர் அறிவிப்பை வெளியிடுகின்றார். அவர்கள் கேட்கின்றார்கள் இது 300 கோடியாக உயர்த்தப்பட வேண்டுமென்று. அதற்கு 2-1-2000-அன்று 100 கோடியிலிருந்து 300 கோடியாக உயர்த்தி வரி விலக்கு அளிக்கப்படுகிறது என்று அறிவிக்கின்றார்கள். இதிலே மிக முக்கியமாக இருப்பது என்னவென்றால் முன் தேதியிட்டு 1-3-1999-லேயிருந்து இது அமலுக்கு வருகின்றது என்றார். ஓர் அரசாங்கத்திற்கு, விற்கப்பட்ட பொருள்களுக்கு ஓர் ஆண்டுக்கு முன்னாலேயே விற்கப்பட்ட பொருள்களுக்கு, அதற்கு விற்பனையாளர்களிடமிருந்து வாங்கப்படும் பொருள்களுக்கு வரி கிடையாது; அவர்களுடைய மொத்த tax turn over-லிருந்து கொடுக்கப்படுகின்ற வரிக்கு அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய வரிக்கு ஓர் ஆண்டுக்கு முன்னாலேயே விற்றுவிட்டதற்கான வரிக்கு 1-3-1999-லேயிருந்து வரி விலக்கு அளிக்கப்படுகிறது என்று அன்றைய முதல்வர் இந்தச் சட்டசபையில் அறிவிக்கின்றார். நியாயமாக என்ன செய்திருக்க வேண்டுமென்றால் அன்றைய தேதி அதாவது 2-1-2000-அன்று அன்றைய தேதியிலிருந்து அமலுக்கு வந்திருக்க வேண்டுமென்று சொல்லியிருக்க வேண்டும். இல்லையென்றால், Financial year 1-3-2000-அன்று முதல் என்று அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். யாருடைய ஆதாயத்திற்காகவோ இவர்கள் அதையும் தவறாகவே அறிவித்து விடுகிறார்கள். 1-3-1999-லேயிருந்து இது அமலுக்கு வரும் என்று சொல்லும்போது, இரண்டே இரண்டு டீலர்கள் மட்டும்தான் 200 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிறார்கள். காளீஸ்வரி ஆயில்ஸ், கார்கில் இண்டியா, என்ற இந்த இரண்டு ஆயில் கம்பெனிகளுக்குத்தான் 200 கோடி ரூபாய்க்கு மேல் turn over இருக்கின்றது. அவர்கள், இவர்கள்



அறிவித்த அந்த 1-3-1999 அன்று அவர்கள் அந்த ஒரு மாதத்திற்கான 1-3-1999லிருந்து 30-1-1999வரைக்கான வரியை—98 இலட்சம் ரூபாயை—அவர்கள் கட்டிவிட்டார்கள். அரசாங்கத்திற்கு அவர்கள் வரியைக் கட்டிவிட்டார்கள். இதுக்கூடத் தெரியாமல், இதைக்கூடப் பார்க்காமல் ஒரு சட்டத்தை அன்றைய முதலமைச்சர், இந்த வணிக வரித் துறையைப் பார்த்துக் கொண்டிருந்த முன்னாள் முதலமைச்சர் ஒரு G.O.வைப் போடுகிறார். 1-3-1999 முதல் முன் தேதியிட்டு, retrospective effect கொடுத்து, ஓர் அறிவிக்கையை அறிவிக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியென்றால் ஒரு மாதத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்றால் ஒரு வருடத்திற்கு எவ்வளவு கோடி? அந்த 30 கோடி ரூபாய் யாருக்குச் சென்றது? எப்படிப் போயிற்று என்பதை இந்த முன்னாள் முதலமைச்சரும் இந்தத் துறையைக் கவனித்தவரும் அறிவிக்க வேண்டும். அதிலே அந்த ஒரு மாதத்திற்கு 100 கோடி ரூபாய் என்று காட்டிய நபர்கள்—உடனடியாக அன்றைய தினமலரில் எழுதுகின்றார்கள். அன்றைய 'தினமலர்' பத்திரிகையில் ஒரு கட்டம் போட்டு எழுதியிருக்கிறார்கள் இந்தப் பணம் யாருக்குச் செல்கின்றது? எதற்குச் செல்கின்றது என்று.—உடனே அந்த ஒரு மாதத்தில் கட்டிய பணத்தை மாற்றிவிட்டு, அந்த 100 கோடி ரூபாய்க்கு மேல் turn over காட்டியிருந்தவர்களெல்லாம் அந்தக் கம்பெனிகளைப் பிரித்து 100 கோடிக்குக் கீழே எடுத்து வந்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தங்களுடைய தவறை மறைப்பதற்கு, 100 கோடிக்கும் கீழே எடுத்து வந்து விட்டார்கள். இன்று வரைக்கும் 100 கோடிக்கு மேல் யாருக்கும் turn over இல்லை, அப்படிக் கட்டுகிற வணிகர்கள் யாருமே இல்லை; அப்படி 100 கோடிக்கு மேல் யாருமே இல்லை என்னும்போது இந்தச் சட்டத்தை எதற்காகப் போட்டார்கள்? 100 கோடி ரூபாய்க்கு மேல் கட்டுகிற வணிகர்களே தமிழகத்திலே இல்லை என்னும்போது இவர்கள் எதற்காக 100 கோடி என்பதை 300 கோடியாக உயர்த்தினார்கள்? இதிலே நடந்த கொள்ளை என்ன? இதிலிருக்கும் சூழ்ச்சிகள் என்னென்ன? (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பணம் யாருக்குச் சென்றது என்பதை அறிய விரைவில் இந்தத் துறையின் மூலமாகவும், சிபிசிஐடி மூலமாகவும் விசாரணை செய்யப்படும் என்பதை எங்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சமச்சீர் வரியைப் பற்றிச் சொல்லிவிட்டால், தங்கள் முகம் எங்கே வெளுத்துவிடுமோ என்று அதற்குப் பதில் சொல்ல வக்கில்லாத காரணத்தினால், தைரியம் இல்லாத இந்த திராவிட முன்னேற்றக் கழக

உறுப்பினர்கள் இன்று வெளிநடப்பு செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய தாராளமயக் கொள்கையை அமல்படுத்த இங்கே வணிகர்களிடத்திலே ஒரு வேடம், அங்கே டெல்லியிலே ஒரு வேடம்....

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** இங்கே நாங்கள் வணிகர்களுக்கு நல்லது செய்கிறோம் என்று கூறிக்கொண்டு, இந்தப் பக்கம் சமச்சீர் வரி என்றும், VAT—மதிப்புக் கூட்டு—வரி என்றும் அந்தச் செயல்பாட்டுக்கு அவர்கள் ஒத்துக்கொண்டு, அதற்காக 40 பொருட்களுக்கு அவர்கள் வரியை ஏற்றிவிட்டு, இங்கு வந்து நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

5-7-2001 அன்று நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், மத்திய நிதியமைச்சர் அவர்கள் 31-7-2001 அன்று சமச்சீர் வரியினை அமல்படுத்தாத மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்கும் நிதியுதவி நிறுத்தி வைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள். அதனைப் பொறுத்து 14 பொருட்களில், 10 பொருட்கள் மீது சமச்சீர் வரி இவ்விதமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. நேற்று டெல்லியில் நடைபெற்ற Empowered Committee கூட்டத்திலும் மீதம் இருக்கின்ற அந்த 4 பொருட்களுக்கும் சமச்சீர் வரியை அமல்படுத்தவில்லை என்றால், இன்னும் ஒரு வாரத்தில் நிதியுதவி நிறுத்தப்படும் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றிற்கெல்லாம் யார் காரணம்? மத்திய அரசில் அங்கம் வகிக்கும் இவர்கள் அதைப்பற்றிப் பேசாமல், இங்கே வந்து வணிகர்களுக்கு நல்லது செய்கிறோம் என்று பொய்ப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அனைத்து மாநிலங்களும் 1-4-2002-லிருந்து மதிப்புக் கூட்டு வரியினை அமல்படுத்த வேண்டும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பான அனைத்து அம்சங்களையும் விரிவாக ஆராய மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சரைத் தலைவராகவும், என்னை இணைத் தலைவராகவும் கொண்டு, அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு குழு தற்போது அமைக்கப்பட்டுள்ளது. 1999-ல் இவர்கள் சமச்சீர் வரி விதிப்புக்கு அங்கீகாரம் அளித்த பிறகும், இந்த மாதிரி ஒரு குழுவை அமைக்காமல், வணிகர்களையும் கலந்து ஆலோசிக்காமல், இதனால் என்ன பாதிப்பு ஏற்படும் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்கும் ஒரு வாய்ப்பைத்



கொடுக்காமல், இன்றுவரை அவர்கள் எந்தவித முயற்சியையும் எடுத்துக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், இதனால் ஏற்படும் பாதிப்புகளையும், வணிகர்களுடன் கலந்து ஆலோசித்து இன்றைக்கு அவர்களுடைய கருத்துகளைக் கேட்டு, தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பளிக்க வேண்டும் என்று கூறிய அறிவுரையின்படி அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு குழு தற்போது அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு வணிகப் பெருமக்கள், துறை அலுவலர்கள், நுகர்வோர்கள், வல்லுநர்கள் ஆகியோரைக் கலந்து ஆலோசித்து, மாநில நலனுக்கு உகந்தவாறு முடிவுகளை அரசுக்குப் பரிந்துரைக்கும். வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் மதிப்புக் கூட்டு வரிக் குழு ஒன்று அரசால் நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு உதவிட துறை அலுவலர்களைக் கொண்ட 4 துணைக் குழுக்கள் ஆணையரால் நியமிக்கப்பட்டுள்ளன.

எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எங்களுடைய தேர்தல் அறிக்கையிலே அறிவித்தவாறு வணிகர் நல வாரியத்தைச் சீரமைத்து, சிறு வணிகர்களுக்கு பல்வேறு உதவிகள், பொருளீட்டும் வணிகர் இறந்த பின்பு அவர்கள் குடும்பத்திற்கு உதவி, நலிவுற்ற வணிகர்களின் குழந்தைகளுக்குக் கல்வி வசதி, ஊனமுற்ற சிறு வணிகர்களுக்கு சிறப்பு உதவி, சிறு வணிகர்களின் குழந்தைகளுக்குக் கல்வியிலும், விளையாட்டிலும் ஊக்குவிப்பு போன்ற மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியான நல்ல திட்டங்களை நடைமுறைப்படுத்த தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வணிகர் நல வாரியத்தில் 38,569 உறுப்பினர்கள் உள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்த இந்த அரசு முயற்சியை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாநில அளவில் விற்பனை வரி ஆலோசனைக் குழுவும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று என்ற அளவில் மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக் குழுக்களும் இயங்கி வருகிறன்றன. தற்போது, மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுவின் பதவிக் காலம் முடிவுற்றபடியால் இக்குழுவினை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆலோசனையின்பேரில் மாற்றியமைக்க பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள்

[திரு. சி.வி. சண்முகம்] [2001 செப்டம்பர் 11

அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின்கீழ் கூடி வருகின்றன. மாவட்டக் குழுவில் ஒரு சட்டமன்ற உறுப்பினர், வேளாண் விளை பொருள் விற்பவரின் சார்பாளர்கள் இருவர், தொழில் தயாரிப்பாளர்களின் சார்பாளர் இருவர், வணிகர்களின் சார்பாக, மொத்த விற்பனையாளர்கள் இருவர், சில்லறை விற்பனையாளர்கள் இருவர், ஒரு கூட்டுறவு நிறுவன சார்பாளர், ஒரு குடிசைத் தொழில் சார்பாளர் மற்றும் ஒரு நுகர்வோர் சார்பாளர் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பேசும்போது, தி.மு.க. ஆட்சியில்தான் நாங்கள் வரிச் சலுகையில் புரட்சிகள் செய்தோம் என்று கூறிக்கொண்டிருக்கின்றார். 1992-93 ஆம் ஆண்டில் இல்லத்தரசிகளின் விலைவாசி ஏற்றத்தைச் சமாளிக்கும் பொருட்டு வணிகப் பொருட்கள் மீதான வரி விகிதம் 8 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து ஏழையெளியோர் முக்கியமாக உபயோகிக்கும் பல முக்கிய பொருள்களுக்குக் குறிப்பாக கோதுமை, பால், நெய், குங்குமம், கண் மை, ரெடிமேடு தாலி போன்ற பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-35

1959 ஆம் ஆண்டுக்குப் பின் மிகத் துணிவாக இந்தத் துறையில் ஒரு சீரமைப்பு நடவடிக்கையை மேற்கொண்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்போதிருந்த 17 வகை வரி விகிதங்களை, 1,3,5,8,12,16,20,25,50 என 9 வரி விகிதங்களில் வரி விதிக்கத்தக்க வகையில் வரி சீரமைக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

1994-95 ஆம் ஆண்டில் திரு. விஜயராகவன், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்ட விற்பனை வரிச் சீரமைப்புக் [illegible] சாதாரண உபயோகத்தில் உள்ள நெல், அரிசி, கோதுமை, உப்பு [illegible]ற பண்டங்களுக்கும் வரி விதிக்க வேண்டுமென்று பரிந்துரைத்தது. ஆனால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏழை மக்களுக்குப் பாதிப்பை உண்டாக்கும் இப்பரிந்துரையை ஏற்றுக் கொள்ளாமல் மக்கள் உபயோகிக்கும் பல பொருட்களுக்கு வரி விலக்கைத் தொடர்ந்து நீட்டிக்கத் தீர்மானித்து, ஏறத்தாழ 50 இனங்களுக்கு வரி விலக்கு நீடிப்பதற்காக அப்பொருள்களை அட்டவணை 3-ல் சேர்த்து ஆணையிட்டார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



2001 செப்டம்பர் 11 ] [திரு. சி. வி.சண்முகம்]

தற்போது 2001-2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஏழையெளிய மக்கள் பயன்படுத்தும் கைப்பம்புகள், அடி சரக்கு பொருட்கள், மண்ணெண்ணெய் விளக்குகள் மற்றும் அடுப்புகளின் உதிரி பாகங்கள் ஆகியவற்றின் மீதான வரி தற்போது அறவே நீக்கப்பட்டுள்ளது. சைக்கிள் பூட்டுகள் மற்றும் இலவம் பஞ்சு விதைகள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. காகிதக் கோப்பைகள் மற்றும் குறிப்பிடப்படாத சாயங்கள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அட்டைப் பெட்டியில் அடைத்து விற்பனை செய்யும் பாலுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆவின் பால் நிறுவனம், பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் பயன் பெறுவார்கள். மேலும் 50 ரூபாய்க்குக் குறைவான மதிப்புள்ள காலணிக்கு இருந்த வரி விலக்கை ரூ.100 வரை சில்லரை விற்பனை விலையுள்ள காலணிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அதைப்போல இந்தச் சமச்சீர் வரி மூலமாக, நம் மாநிலத்தினுடைய பொருட்களின்மீது அக்கறை இல்லாமல் தன்னிச்சையாக, சுயேட்சையாக அவர்களாகவே எடுத்த முடிவை நாம் அமல்படுத்திக் கொண்டிருக்கிறோம். முதல் முறையாக நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு இந்த விலைப் பட்டியல்களையும், இந்தச் சமச்சீர் வரி விகிதங்களையும், இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள பொருள்களையும் பரிசீலித்து மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டு மத்திய Empowered Committee-க்கு முதல் முறையாக ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது என்பதையும் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த ஆட்சியில் நடைபெற்ற ஒரு சீர்கேடான, முறைகேடான முறையால், இந்த நிதி ஆதாரங்களைத் தேடுகிற முயற்சி எப்படி நடைபெற்றது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அரசாங்கத்திற்கு அதாவது ஓர் அமைச்சருக்கு இருக்க வேண்டிய அதிகாரத்தை எப்படித் தவறாக அந்த ஆணையர் பயன்படுத்தியிருக்கிறார் என்பதை ஒரு உதாரணத்தின் மூலம் சொல்ல விரும்புகிறேன். ஓர் ஆணையருக்கு ஒரு வரிவிலக்கு தடை கொடுப்பதற்கோ அல்லது அந்த வரியை 6 மாத காலம் கழித்துக் கட்டுவதற்குக் கால [illegible] கொடுப்பதற்கோ அவருக்கு [illegible]

அதிகாரம் 5 இலட்சம் ரூபாய் வரைதான். ஆனால் கடந்த காலத்தில் இருந்த ஆணையருக்கு பல கோடிக்கணக்கான ரூபாய்க்கு அதிகாரம் வழங்கப்பட்டு அவரே அந்த லெட்டர் மீதே, மனுதாரர் கொடுத்த அந்த மனுவின் மீதே ஆர்டர் செய்திருக்கிறார். இதன் மூலமாகக் கிட்டத்தட்ட 139 கோடி ரூபாய்க்கு, அந்த ஆணையரே, அரசாங்கத்திற்குத் தெரிவிக்காமல், அன்றைக்கு அந்தத் துறையின் அமைச்சராக இருந்த, முதலமைச்சராக இருந்த கருணாநிதிக்கே தெரியாமல், இந்த ஆணையர் தன்னிச்சையாக, பல கோடி ரூபாய்க்கு அவரே வரிச் சலுகைகளையும், வரித் தடையாணைகளையும் அளித்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல நான் விரும்புகிறேன். Empee distilleries...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, முன்னாள் முதலமைச்சருடைய பெயரை வெறுமனே குறிப்பிடாமல் 'திரு.' என்ற அடைமொழியோடு குறிப்பிடுங்கள். இல்லாவிட்டால் முன்னாள் முதல்வர் என்றே குறிப்பிடுங்கள்.

பிற்பகல் 1-40

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** Empee Distilleries அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பணம் 4 கோடியே 87 இலட்சம் ரூபாய். அரசாங்கத்திற்கு அவர்களுடைய பணத்தைக் கட்டவில்லை. அந்தப் பணத்தை அரசாங்கத்திற்குத் திருப்பிச் செலுத்த வேண்டும். திருப்பிச் செலுத்தாத அந்த வரி பாக்கி 4 கோடியே 87 இலட்சம் ரூபாய்க்கு அவர் தன்னிச்சையாகக் கால அவகாசம் கொடுத்து 12-10-2000 அன்று ஓர் உத்தரவு போட்டுக் கொடுத்திருக்கின்றார். அந்தப் பணம் இன்றுவரை கட்டப்படவில்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல Textool Company Ltd., Coimbatore என்ற நிறுவனம் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரி பாக்கி ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய்க்கு அவர் கால அவகாசம் கொடுத்து 10-2-2001-ல் ஓர் உத்தரவு போட்டுள்ளார். அந்தப் பணமும் இன்று வரை அரசாங்கத்திற்குக் கட்டப்படவில்லை. அதேபோல பல ஊழல்களை இவர் செய்திருக்கின்றார். இதற்குப் பொறுப்புடைய அமைச்சராக இருந்த முன்னாள் முதலமைச்சர் தன்னுடைய கையெழுத்து அதில் இருக்கக்கூடாது என்பதற்காக வாய்மொழி உத்தரவாகவோ அல்லது வேறுவிதமாகவோ சொல்லி, இந்த பல கோடி ரூபாய் ஊழலை, விஞ்ஞானரீதியில் செய்திருக்கின்றார்.



பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு 'விஞ்ஞான ரீதியான' என்ற வார்த்தை குறித்து முன்னாள் முதலமைச்சர் ஒரு கேள்வியைக் கேட்டிருந்தார். விஞ்ஞானரீதியான ஊழல் என்றால் என்ன என்று எனக்குத் தெரியவில்லை என்றார். விஞ்ஞானரீதியான ஊழல் என்றால், இதுதான் விஞ்ஞானரீதியான ஊழல். (மேசையைத் தட்டும் ஒலி) தான் கையெழுத்து போடாமல், தனக்குத் தெரிந்து தன்னுடைய கையெழுத்து அதில் இருக்கக்கூடாது என்பதற்காக, அதிகாரி மாட்டினால் மாட்டட்டும், உள்ளே போனால் போகட்டும் என்பதற்காக அவருடைய கையெழுத்தைப் போட்டு இப்படி வரி விலக்குச் சலுகை என்ற பெயரால், பல கோடி ரூபாயை அன்றைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கொள்ளையடித்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கூறியதுபோல, ஏழையெளிய மக்கள் போண்டா, பஜ்ஜிச் செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய கடலை மாவு, துவரம் பருப்பு மாவு, பாசிப் பருப்பு மாவு, உளுந்து மாவு, கேசரி பருப்பு மாவு, அவரை மாவு, கொள்ளு மாவு, மொச்சை மாவு, பட்டாணி மாவு, காராமணி மாவுகளுக்கான வரி ஏற்றம் இரத்துச் செய்யப்படும் என்பதை இந்த அவையின் மூலம், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆலோசனையின் பேரில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமோதரனுக்கு இதுவே போண்டா சாப்பிட்டது போல் இருக்கும் என்று கருதுகிறேன். (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** பாலின் மூலம் தயாரிக்கப்படும் வெண்ணெய்க்கு விதிக்கப்படும் 4 சதவிகித வரியையும் இரத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடிக்கட்டும். பிறகு கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் சிறுதொழில் மூலம் தயாரிக்கப்படுகின்ற பிஸ்கட்டுகளுக்கு 4 சதவிகித வரிவிகிதத்திலிருந்து தற்போது 12 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கும் வரியைக் குறைத்துத் தருமாறு கோரியிருந்த கோரிக்கையை இந்த அரசு, இதயதெய்வம் டாக்டர்

புரட்சித் தலைவி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. இராசேந்திரன், திருமதி செல்வி முருகேசன் ஆகியோர் கூறியதுபோல, சேகோசெர்வ் மூலம் விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதல் விற்பனை வரிச் சலுகை அளிக்குமாறு வைக்கப்பட்ட கோரிக்கையை இந்த அரசு, புரட்சித் தலைவி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள்—Printed materials-அச்சிடப்பட்ட பொருட்களுக்கு, பலவிதமான வரி விகிதங்களை வரி விதிப்பு அதிகாரிகள் விதிக்கின்றார்கள் என்று கூறினார்கள். அச்சிடப்பட்ட பொருட்களுக்குப் புதிதாக எந்த வரியும், இந்த அரசாங்கம் பதவி ஏற்ற பிறகு விதிக்கப்படவில்லை என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அச்சிடப்பட்ட பொருள் ஒப்பந்த முறையில் செய்யப்பட்டதா, விற்பனைக்காகச் செய்யப்பட்டதா அல்லது ஒரு வியாபார ஒப்பந்தப் பணியா என்று ஒவ்வோர் இனத்தையும் சரி பார்த்த பின்னரே வரி விதிப்பு அலுவலர்களால் நிர்ணயிக்கப்பட வேண்டியுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். உச்ச நீதிமன்றம் கூறிய தீர்ப்பின்படி ஒரு தெளிவான சுற்றறிக்கையை நாங்கள், எங்கள் துறையில் ஆய்வு செய்து, அதனை தமிழகத்திலுள்ள அனைத்து வணிக வரித் துறை அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்க இருக்கிறோம் என்பதையும் இந்த மன்றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-45*

விற்பனை வரி மூலம் கிட்டும் வருவாயின் முக்கியத்துவம் மற்றும் அத்துறையின் செயல்பாடுகள், நாட்டின் நலன் மற்றும் மக்களின் பொருளாதார முன்னேற்றத்தோடு நெருங்கிய தொடர்பு உடையவை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையின்கீழ் இயங்கும் இவ்வரசு திறமையான, நேர்மையான, வெளிப்படையான மற்றும் ஊழல் இல்லாத வரி நிர்வாகத்தை அளித்திட உறுதி பூண்டுள்ளது. இது நிறைவேற எங்களால் ஆன அனைத்து முயற்சிகளையும் நாங்கள் செய்வோம்.



இம்முயற்சிக்கு வணிகர்களின், பொதுமக்களின் ஆதரவைப் பெற மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் உதவுவார்கள் என்று நம்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித்தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சாதாரண கிளைக் கழகச் செயலாளராக இருந்த என்னை, கழகத்தில் ஒன்றியக் கழகச் செயலாளராக ஆக்கி, அதன்பின் மாவட்டக் கழகச் செயலாளராக நியமித்து, தென் தமிழ்நாட்டில் புண்ணிய ஸ்தலங்களான நவதிருப்பதிகளை உள்ளடக்கிய ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக்கி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையின்கீழ் அமைச்சராகப் பணியாற்றும் வாய்ப்பைத் தந்து, இந்தச் சட்டமன்றப் பேரவையில் உரையாற்றும் நிலைக்கு என்னை உயர்த்திய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நானும், என்னுடைய குடும்பத்தாரும் எங்களது நன்றியினை அவர்களது பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம் என்பதோடு, எங்கள் வாழ்நாள் முழுவதும் அம்மா அவர்களுக்கு விசுவாசமிக்க நன்றியோடு இருப்போம் என்பதைத் தெரிவித்து, அம்மா அவர்களின் நல்லாசியோடு எனது உரையைத் தொடங்குகின்றேன்.

மாநிலத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக கிராமப்புறங்களில் அதிக அளவில் வேலைவாய்ப்பு வழங்குவதில் கைத்தறித் துறை முக்கியப் பங்கினை ஆற்றுகிறது. இந்தத் துறை கூட்டுறவுத் துறையிலிருந்து பிரிந்து 1956ஆம் ஆண்டு முதல் தனித் துறையாகச் செயல்பட்டு வருகிறது. கைத்தறித் துறையின்கீழ் 1,414 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதில் 102 சங்கங்கள் பட்டு கூட்டுறவுச் சங்கங்களாகும். இச்சங்கங்களின் பிரதான நோக்கம் கைத்தறி நெசவாளர்கள் வாழ்வு வளம்பெற ஆவன செய்வதேயாகும். தமிழகத்தில் 149 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதில் 3.19 இலட்சம் பதிவு செய்யப்பட்ட விசைத்தறிகள் உள்ளன.

அடுத்து, 18 கூட்டுறவு நூற்பாலைகள் 1958 மற்றும் 1985 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திலே தொடங்கப்பட்டு, பல மாவட்டங்களில் கைத்தறி நெசவாளர்களுக்குத் தங்குதடையின்றி தேவையான நூல் விநியோகம் செய்யும் நோக்குடன் இந்த நூற்பாலைகள் செயல்பட்டு வருகின்றன. தற்போது 4 ஆலைகள் மட்டும் செயல்பட்டு வருகின்றன. கடந்த ஆட்சியின் நிர்வாகக் கோளாறு காரணமாக 4 கூட்டுறவு நூற்பாலைகள் மூடப்பட்டு விட்டன. அவை விழுப்புரம், வேலூர், மதுரை, மீசேரியர் ஆகிய 4 கூட்டுறவு நூற்பாலைகளாகும்.

1935 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நிறுவனம்தான் 'கோ-ஆப்டெக்ஸ்' ஆகும். இந்த நிறுவனம் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் துணிகளில், 40 விழுக்காடு முதல் 45 விழுக்காடு வரை கொள்முதல் செய்கிறது. இந்த நிறுவனத்திற்கு வெளிமாநிலங்கள் உள்பட 305 விற்பனை நிலையங்கள் உள்ளன.

அடுத்து, தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை ஈரோட்டில் இயங்கி வருகிறது. இவ்வாலை நூல், பருத்தி மற்றும் செயற்கை இழை நூல் துணிகளை வெளுத்தல், சாயமிடுதல் மற்றும் அச்சிடுதல் போன்ற பல்வேறு பதனிடும் பணிகளை மேற்கொள்கிறது.

அடுத்து, தமிழ்நாடு சரிகை ஆலை நிறுவனம் பட்டு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான சரிகைகளை தரமான முறையில் உற்பத்தி செய்து, நியாயமான விலையில் வழங்க நிறுவப்பட்ட ஓர் அரசு பொது நிறுவனம் ஆகும். இந்த ஆலையில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 700 மார்க்குகள் சரிகை உற்பத்தி செய்யப்படுகிறது.

அடுத்து, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம். இக்கழகம் கூட்டுறவு அமைப்பில் சாராத நெசவாளர்களுக்கு நடைமுறை மூலதனம் மற்றும் கடனுதவி வழங்கி, அவர்கள் தொழில் முன்னேற்றம் அடைய உதவுகிறது.

பிற்பகல் 1-50

அடுத்து, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம். பஞ்சாலைத் தொழிலின் மறுமலர்ச்சிக்கும், நலிவுற்ற ஆலைத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பிற்கும் கோவையில் தொடங்கப்பட்டது. தற்போது பள்ளிக்கூடக் குழந்தைகளுக்குச் சீருடை வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்த விசைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளைக் கொள்முதல் செய்யும் நிறுவனமாக இந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது.



அடுத்து, தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம். இது நமது தமிழக முதல்வர் அம்மா அவர்களால் 1994 ஆம் ஆண்டு, நூற்பாலைகளில் பஞ்சு கொள்முதல் நடைமுறைகளைச் சீரமைக்கும்பொருட்டு, தொடங்கப்பட்டது. கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தரமான பஞ்சு நியாயமான விலையில் கிடைக்க, புரட்சித் தலைவி அவர்கள் அந்த நிறுவனத்திற்கு 25 கோடி ரூபாய் வழங்கி அந்த நிறுவனத்தைத் தொடங்கினார்கள். மேலே குறிப்பிட்ட நிறுவனங்கள் அனைத்தும், கடந்த பொதுத் தேர்தலில் அமோக வெற்றி பெற்று, தமிழக முதல்வராக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பின்னர், அம்மா அவர்களால் கைத்தறித் துறை ஆய்வு செய்யப்பட்டபோது, இத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 9 நிறுவனங்களின் செயல்பாடுகளைத் துறையின் உயர் அலுவலர்கள் மூலம் ஆராய்ந்து, இந்நிறுவனங்கள் சரியான முறையில் செயல்பட வேண்டும் என்று ஆலோசனை வழங்கி, அதன் வளர்ச்சித் திட்டங்களுக்கும் புரட்சித் தலைவி அவர்கள் ஆலோசனை வழங்கினார்கள். அதன் அடிப்படையில் சீர்திருத்தங்கள் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முதல் நடவடிக்கையாக பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தமட்டில் மாண்புமிகு முதலமைச்சர், அம்மா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலமான 1991-96-ல் இருந்த சீரான நிலைமையையும், தற்போது பொறுப்பேற்கும் முன் இருந்த தற்போதைய மோசமான நிலைமையையும் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

1996 ஆம் ஆண்டு இலாபத்தில் இயங்கிய கூட்டுறவுச் சங்கங்கள 851. தற்போது 2001-ல் இலாபத்தில் இயங்கும் சங்கங்கள் 320. இந்த அளவிற்கு ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களிலும் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் கொள்ளையடித்திருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய ஆட்சியாளர்களின் முறைகேடான நிர்வாகங்களே இந்த நிலைமைக்குக் காரணமாகும். புதிய அரசு பொறுப்பேற்ற பின்னர் பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில், தமிழ்நாட்டில் கடந்த ஆட்சிக் காலத்தில் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்றுள்ள கையாடல், இருப்புக் குறைவு, விதிமுறை மீறல் போன்ற முறைகேடுகள், அதாவது, மாண்புமிகு உறுப்பினர் சோமசுந்தரம் அவர்கள் சொன்னதைப்போல, உரிமை மீறல் போன்ற முறைகேடுகளைக் கண்டறியும் பொருட்டு, 36 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, தமிழ்நாடு கூட்டுறவுச் சட்டம், 1983, பிரிவு 81-ன்கீழ் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளன. விசாரணையின் அடிப்படையில் மேல்

[திரு. எஸ்.பி. சண்முகநாதன்] [2001 செப்டம்பர் 11

நடவடிக்கை எடுக்கப்பட்டு காவல் துறையின் மூலம் குற்ற நடவடிக்கை எடுக்க ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது தமிழ்நாட்டில் 25,000 விசைத் தறிகள், 149 விசைத் தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 9,000 நெசவாளர் உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், அரசுத் திட்டங்களான இலவச வேட்டி, சேலை மற்றும் சீருடைத் திட்டங்களுக்குத் தேவையான துணிகளை பிரதானமாக உற்பத்தி செய்து வருகின்றன. விசைத் தறி நெசவாளர்களுக்குக் கடந்த ஆட்சிக் காலத்தில் எந்தவித நலத் திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை. இப்போது புரட்சித் தலைவி அவர்கள், அவர்களுக்கு இரண்டு திட்டங்கள் மூலம், அவர்களது வளர்ச்சிக்கு வழி செய்திருக்கிறார்கள். குழு காப்பீட்டுத் திட்டம், தொழிற்கூடத்துடன் கூடிய வீட்டுவசதித் திட்டம் போன்ற திட்டங்களை—மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வின்போது கைத்தறி நெசவாளர்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்தத் திட்டங்களை—அறிவித்துள்ளார்கள்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவத்தின் கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல் என்னும் ஏற்றுமதிப் பிரிவு கடந்த ஆண்டு 2½ கோடிக்கு ஏற்றுமதி செய்துள்ளது. இந்த ஆண்டு ஆகஸ்ட் வரையிலான காலத்தில் மட்டும் 2½ கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்துள்ளது. மேலும் 2 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி ஆணைகள் கைவசம் உள்ளன. 2002-இல் சுமார் 5 கோடி அளவிற்கு மேல் ஏற்றுமதி விற்பனை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிற்பகல் 1-55

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் பிரதம கூட்டுறவுச் சங்கங்களுக்கு 20 நூல் கிடங்குகள் மூலமாகக் கைத்தறிச் சங்கங்களுக்குத் தேவைப்படும் அனைத்து பாலியஸ்டர் நூல்களும் வழங்கப்பட்டு வருகின்றன. சங்கத்திடமிருந்து பெறப்படும் நூல் தேவையின் அடிப்படையில் கோ-ஆப்டெக்ஸ் கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து நூல்களைப் பெற்று, சங்கங்களுக்கு ரொக்கத்திற்கும் துணிகள் வாங்கிய வகையில் ஏற்படும் நிலுவைத் தொகையில் ஒரு பகுதிக்குக் கடனாகவும், வழங்கி வருகிறது.



2001 செப்டம்பர் 11 ] [திரு. எஸ்.பி. சண்முகநாதன்]

கடந்த ஆண்டு 83.33 கோடி அளவில் பிரதம கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டில் ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை 38 கோடி அளவிற்கு நூல் வழங்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 2 கோடியே 22 இலட்சம் அதிகம் ஆகும். இருப்பினும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 4 கோடியே 56 இலட்சம் நிகர நட்டமாகக் கொண்டுள்ளது. இனி வருங்காலங்களில் இந்த நிகர நட்டம் சரி செய்யப்பட்டு இந்த நிறுவனம் இலாபகரமாகச் செயல்பட முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளாக உலகளாவிய அளவில் ஜவுளித் தொழிலில் ஏற்பட்டிருக்கும் தொய்வு மற்றும் பஞ்சு விலையேற்றம், நூல்விலை இறக்கம், தாராளமயமாக்கல் கொள்கையைத் தொடர்ந்து விலைவீழ்ச்சி போன்று பல்வேறு காரணங்களினால் பஞ்சாலைகளை நடத்துவதில் மிகுந்த சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், அவர்களுடைய வெள்ளை அறிக்கையில் தெளிவாக அனைத்து கூட்டுறவு ஆலைகளைப் பற்றியும் சொல்லியிருந்தார்கள். இருந்தாலும், தமிழ்நாட்டில், நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின், 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரையான ஆட்சியில் முழுமையாக 18 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வந்தன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1996 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கடந்த ஆட்சிக் காலத்தில், நிருவாக திறமையின்மை காரணமாக, கீழ்க்கண்ட நான்கு கூட்டுறவு நூற்பாலைகள் இயங்காமல் மூடப்பட்டுவிட்டன:

வேலூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை 29-12-1997-லும்; மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை 4-1-1999-இலும்; விழுப்புரம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, 14-1-1999-இலும்; மிசேரியர் கூட்டுறவு நூற்பாலை 5-3-1999-இலும் மூடப்பட்டன. கடந்த தி.மு.க. ஆட்சியின் திறமையற்ற நிர்வாகத்தின் காரணமாக கூட்டுறவு நூற்பாலைகளில் குவிந்த நட்டம் 352 கோடியாக உயர்ந்துள்ளது.

இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம். வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களுக்குப் பயன் அளிக்கும் வகையிலும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கும் நோக்கத்துடனும் அரசு இலவச வேட்டி-சேலை வழங்கும் திட்டத்தினை 2002 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கும் தொடர்ந்து செயல்படுத்த, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களால் முடிவு எடுக்கப்பட்டு,

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த திட்டம் என்பதால், கடந்த ஆட்சியினர் அதை நிறுத்திவிட்டார்கள். அவர்களின் அந்தக் குடும்ப ஒய்வுத் தொகையானது 250 ரூபாயிலிருந்து தற்போது 350 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதையும், அது பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த தினமான 15-9-2001-இல் நடைமுறைக்கு வரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1992-93 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்டு வரும் மைய அரசின் திட்டமான நெசவாளர் நல்வாழ்வு செறிவுத் திட்டத்தின்கீழ், மருத்துவ செலவுகளைத் திரும்பப் பெறுவதற்கென மைய அரசு, ஒரு நெசவாளருக்கு ஆண்டு ஒன்றுக்கு 1,500 ரூபாய் வீதம் தற்போது வழங்கி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அதற்கு ஈடாக முதல் தடவையாக, இனி, மாநில அரசின் பங்காக ரூ.1,500-ஐயும் சேர்த்து, மொத்தம் அது ரூ.3,000-ஆக வழங்கப்படும் என்று ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நெசவாளர் நல்வாழ்வு செறிவுத் திட்டத்தின்கீழ், கண் பரிசோதனை செய்து கண்ணாடி வாங்க மைய அரசு ஒரு நெசவாளருக்கு ரூ.190 வீதம் மானியமாக வழங்குகிறது. மைய அரசு வழங்கும் மானியத்திற்கு ஈடாக, முதல் தடவையாக மாநில அரசும் ரூ.190 சேர்த்து, ரூ. 380-ஆக வழங்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நெசவாளர் நல்வாழ்வு செறிவுத் திட்டத்தின்கீழ் பெண்களுக்கு மகப்பேறு உதவித் தொகையாக மைய அரசால் ரூ. 500 வழங்கப்படுகிறது. இத்தொகைக்கு ஈடாக முதல் முறையாக மாநில அரசும் தனது பங்காக ரூ.500 சேர்த்து இனி, மொத்தம் ரூபாய் ஆயிரமாக வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நெசவாளர் நல்வாழ்வு செறிவுத் திட்டத்தின்கீழ் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கு இன்றைக்கு மைய அரசால் 100 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்தொகைக்கு ஈடாக முதன்முதலாக, மாநில அரசும் தனது பங்காக ரூ.100-ஐ சேர்த்து, இனி மொத்தம் ரூ.200ஆக வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிருக்கென கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் 47 உள்ளன. இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் சரியாக இயங்காத காரணத்தால்



மிகவும் நலிவடைந்த நிலையில் உள்ளன. இந்த மகளிர் சங்கங்களை மீண்டும் இயக்கவும், புத்துயிர் அளிக்கவும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மகளிர் அதிகார வழங்கல் ஆண்டான இவ்வாண்டு முதல் இச்சங்கங்களைத் தத்து எடுத்து, அதில் உற்பத்தி செய்யப்படும் துணிகள் அனைத்தையும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமே கொள்முதல் செய்யவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-05

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகள் மேல்நிலைக் கல்வி பயில ஊக்குவிக்கும் முகமாக டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே பத்தாம் வகுப்பிலிருந்து பட்டப் படிப்பு வரை கொடுத்து வருகிறார்கள். இப்பொழுது மேல் படிப்பிற்காக எம். டெக்; எம்.டி; எம்.எஸ்; போன்ற படிப்புகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 3,000 ரூபாய் வீதம் உதவித் தொகையும், ஹோட்டல் நிர்வாகம் மற்றும் சமையல் தொழில் நுட்ப பட்டயப் படிப்பிற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 2,000-மும் தலா ஒரு மாணவன் ஒரு மாணவிக்கு வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முந்தைய ஆட்சிக் காலத்தில் காஞ்சிபுரம், கும்பகோணம், சேலம், இராசிபுரம் மற்றும் ஆரணி பகுதிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில், தேக்கத்தில் உள்ள பட்டுச்சேலை, வேட்டிகள், கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்ய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் ஆணையின்படி பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களில் உள்ள கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆலோசனையின்பேரில் ஆவன செய்யப்படும் எனத் தெரிவித்து, எனது மேற்காணும் விளக்கத்தை ஏற்று உறுப்பினர்கள் தங்களின் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று இந்த மானியத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் உள்ள அரியூர் கூட்டுறவு நூற்பாலை 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மூடப்பட்டுவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதாவது விளக்கம் கேட்க வேண்டும் என்றால் கேளுங்கள். ஒவ்வொரு வரலாற்றையும் சொல்ல முடியாது. தல புராணங்களையெல்லாம் சொல்ல முடியாது.

**திரு. சி. ஞானசேகரன்:** அந்த ஆலை இன்னும் திறக்கப்படவே இல்லை. அரசு அந்தக் கூட்டுறவு நூற்பாலையைத் திறக்குமா? அங்கு பணியாற்றுகின்ற வாட்ச்மேன்களுக்குக்கூட 11 மாதமாக இன்னும் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அதையாவது உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்காக அறிவிக்கப்பட்டு இருக்கக்கூடிய நல்ல அறிவிப்புகள் அனைத்தையும் நாங்கள் நன்றியுடன் வரவேற்கிறோம். அதேநேரத்தில் சமூக நலத் துறையின் மூலமாக இலவச வேட்டி, சேலை மற்றும் சீருடை வழங்குகின்ற கொள்முதல் திட்டத்தின் அடிப்படையிலே கைத்தறியிலேயிருந்து வாங்குகிற அதேநேரத்திலே விசைத்தறியாளரிடமிருந்தும் அது பெறப்படுமா, கொள்முதல் செய்யப்படுமா என்பதைத் தயவுசெய்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறி நெசவாளர்கள் கோரிக்கையும் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள பெரிய மில் முதலாளிகள் தங்கள் ஜெனரேட்டர்களுக்கு வேண்டிய டீசலை கேரள



மாநிலம் பாலக்காட்டிலிருந்து வாங்குகிறார்கள். ஒரு லோடுக்கு 30,000 ரூபாய் குறைவாக இருப்பதால் அப்படி வாங்குவதாகச் சொல்கிறார்கள். இதனால் நமது அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இதனைத் தடுக்க வணிக வரித் துறை அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கூறியதை வணிக வரித் துறை கடுமையான நடவடிக்கை எடுத்துக் கண்டுபிடிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 25 - கைத்தறியும் துணித் தொழிலும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 25 - கைத்தறியும் துணித் தொழிலும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 224,14,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

*பிற்பகல் 2-10*

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி, இருக்கையில் இல்லை.

திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ். இருக்கையில் இல்லை.

திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. அப்பாவு. இருக்கையில் இல்லை.

திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன். இருக்கையில் இல்லை.

திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பு. கார்த்தி. இருக்கையில் இல்லை.

திரு. பு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ். இருக்கையில் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன். இருக்கையில் இல்லை.

திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி. இருக்கையில் இல்லை.

திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 135,34,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாலை சட்டமன்றப் பேரவையின் கூட்டம் நடைபெற இருப்பதால் 4-30 மணி அளவிலே சட்டமன்றப் பேரவை மண்டபத்தையொட்டிய பகுதியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் பிற்பகல் 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-11 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2001 செப்டம்பர் 11

*பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

## 6. மானியக் கோரிக்கைகள், 2001-2002 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (இ) கோரிக்கை எண் 32 - வீட்டு வசதி

### (ஈ) கோரிக்கை எண் 33 - நகர்ப்பகுதி வளர்ச்சி

### (இ) கோரிக்கை எண் 32 - வீட்டு வசதி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 32–வீட்டு வசதி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 58,61,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 739, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 690, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதித் துறை மூலம் கட்டப்பட்ட வீடுகள் விற்கப்படாமல் உள்ளதை உடனே விற்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 58,61,94,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2570, திரு. எச்.எம். ராஜு.



2001 செப்டம்பர் 11]

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் குடிசைப் பகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களுக்கு வீடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 58,61,94,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2373, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 58,61,94,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 584, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகள் விற்பனை ஆகாமல் உள்ளன. அவற்றை உடனடியாக விற்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,61,94,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1797, திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1480, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1612, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உயர் வருவாய்ப் பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தருவதை உடனடியாக நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டுவசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,61,94,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3422, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அரசு அலுவலர் குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டுவசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,61,94,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 652, செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1828, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3112, திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் நகரிலுள்ள வீட்டு வசதி நடுத்தர வர்க்கக் குடியிருப்புகளைப் பராமரிக்க வேண்டியது குறித்தும், தாட்கோ மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு தரமான தொகுப்பு வீடுகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,61,94,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2867, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,61,94,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2611, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 880, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1660, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2021, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3207, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டுவசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,61,94,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2970, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டுவசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,61,94,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

### (ஈ) கோரிக்கை எண் 33 - நகர்ப்பகுதி வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33—நகர்ப்பகுதி வளர்ச்சி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய *33* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. *48,66,95,000*-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *738*, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *2610*, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *2423*, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய *33* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*48,66,95,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2575*, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் நகராட்சிக்கு நிதி உதவியை அதிகரித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய *33* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*48,66,95,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1670*, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3114*, திரு. துரை. கி. சரவணன்.



**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுற்றுலாத் தலமான சிதம்பரம் நகரில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய *33* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*48,66,95,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *784*, திரு. சி. சண்முகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3210*, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய *33* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*48,66,95,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *881*, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *777*, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1976*, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *2032*, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *2969*, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய *33* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*48,66,95,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

தி.மு.க. அரசின் கடந்த ஆட்சியில் 982 கோடியே 82 இலட்சம் ரூபாயை வருவாயாக வசூலித்திருக்கிறது. ஆனால் அதற்கு முன்பாக 1991 முதல் 1995 வரையில் இருந்த உங்களுடைய அரசு ஈட்டிய வருமானம் 491 கோடியே 62 இலட்சம் ரூபாய் மட்டும்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வாரியம் 785 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மனைகள் மற்றும் குடியிருப்புகளை விற்பனை செய்து சாதனை படைத்து இருக்கிறது. அதற்கு முன்பாக இருந்த உங்களுடைய ஐந்தாண்டு கால ஆட்சியில் 517 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மனைகள், குடியிருப்புகள் மட்டும்தான் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்டத் தலைமையிடங்களான திருவள்ளூர், விழுப்புரம், தேனி, பெரம்பலூர், கரூர், திருவாரூர், தூத்துக்குடி, நாமக்கல், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் அரசு அலுவலர்களுக்கு 948 குடியிருப்புகள், 30 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், இங்கே வந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் இன்றைக்குக் குடும்பத்தோடு தங்குவதற்கு ஏதுவாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு குடியிருப்புகள் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அனைத்து நவீன வசதிகள் அடங்கிய 240 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 44 கோடியே 72 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

1995-96 ஆம் ஆண்டு வரை 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை புதிய வீடுகள் கட்ட நிதியுதவி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 70 ஆயிரம் முதல் 80 ஆயிரம் வரை கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் மூலம் நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது. முந்தைய உங்களுடைய ஆட்சியில் ஆண்டுதோறும் 150 கோடி ரூபாய் முதல் 200 கோடி ரூபாய் வரை வழங்கப்பட்டு வந்த கடனுதவி, எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஆண்டுக்கு 650 கோடி ரூபாய் அளவிற்குக் கடனுதவி வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான கடனுதவி 55 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சமாகவும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான கடனுதவி 80 ஆயிரத்திலிருந்து 2 இலட்சம் ரூபாயாகவும் மற்றும் நகர்ப்புற வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் வழங்கப்படுகிற வீட்டுவசதிக் கடன் 3 இலட்சம் ரூபாயிலிருந்து 7 இலட்சம் ரூபாய் வரையிலே உயர்த்தி



சாதனை படைத்திருப்பது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1996 ஆம் ஆண்டுக்கு முன்னர் உங்களது ஆட்சியில் ஊரகப் பகுதியில் வசிக்கும் வீடற்ற ஏழை எளியோருக்கு ஆண்டுதோறும் 30 ஆயிரம் வீடுகள் கட்ட நிதியுதவி வழங்கப்பட்டு வந்தது. 1996-லிருந்து 2001 வரை நாங்கள் ஆட்சி செய்தபோது 50 ஆயிரம் என அதை உயர்த்தியிருக்கிறோம்.

பிற்பகல் 4-40

கடந்த ஆட்சியில் 2,68,654 வீடுகளில் ஊரகப் பகுதிகளில் மட்டும் 1,84,774 புதிய வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, 1,64,808 வீடுகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை எளியவர்களுக்குக் கட்டப்பட்டிருக்கின்றன. கடந்த 4½ ஆண்டுகளில் ஊரகப் பகுதிகளில் பயனடைந்தோர் எங்கள் ஆட்சியில் 68 விழுக்காடு ஆகும். இந்தியாவில் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் நிதி மூலம் கட்டப்பட்டுள்ள 15 இலட்சம் வீடுகளில் தமிழ்நாட்டில் மட்டும் 66 விழுக்காட்டிற்கு மேல் அதாவது, 9,89,000 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

வீடுகள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஆகியவற்றை விற்கும்போது ஒதுக்கீடு செய்யப்பட்ட தேதியிலுள்ள அடிமனை விலைக்கு மட்டுமே நடைமுறையில் உள்ள முத்திரைத்தாள் கட்டணம் செலுத்தினால் போதும் என்று முடிவெடுக்கப்பட்டு செயல்பட்டிருக்கிறது.

விற்பனைப் பத்திரம் பெறுவதற்கு வீட்டுவசதி வாரியத்தில் செலுத்திய ரசீது சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது போன்ற விதிகள் சிலவற்றை இரத்து செய்ததும் எங்களுடைய ஆட்சியில்தான்.

வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள வீடுகள் / குடியிருப்புகளை, அரசு அலுவலர்கள் குடியிருப்புகளை காவலர் வீட்டுவசதி குடியிருப்புகளாக தேவைப்படும் இடங்களில் மாற்றி ஒதுக்கீடு செய்யலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது எங்கள் ஆட்சியில். மலிவு விலையில் தொழிலாளர் வீட்டுவசதித் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு குடியிருந்துவரும் சட்டபூர்வ ஒதுக்கீடுதாரர்களுக்கு ஆணையின்படியான தொகைக்கு முத்திரைக் கட்டணம் வசூலிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” என்ற எங்கள் அண்ணனின் பொன்மொழியை ஏற்று, தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய ஆட்சியில், 1972 ஆம் ஆண்டு காலத்திலே குடிசைப் பகுதி

மாற்று வாரியம் தொடங்கப்பட்டு, ஏழை, நடுத்தர மக்களின் வரப்பிரசாதமாக விளங்கும் அந்தத் திட்டத்தை தமிழ்நாட்டிற்கு அறிவித்தார்கள். குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 1991 முதல் 1996 வரை 6,666 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ. 47.82 இலட்சம் செலவில் கட்டப்பட்டன. ஆனால், எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடந்த ஆட்சியில் 13,001 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ. 138.39 இலட்சம் செலவிலே கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 1996-97 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளில் வசிப்பவர்கள், அவர்கள் விரும்பினால் அக்குடியிருப்புகள் எளிய முறையில் சொந்தமாக்கப்படும் என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டது. எங்களுடைய ஆட்சிக் காலத்தில் சுமார் 41,000 குடியிருப்புகள் ஏழைகளுக்குச் சொந்தமாக்கப்பட்டிருக்கின்றன. இத்திட்டத்தில் கடந்த ஆட்சியில் 1991-96 வரையில் 65,007 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். ரூ. 9 கோடியே 93 இலட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

சென்னை மற்றும் இதர மாநகரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் தீ விபத்துகளால் பொருள் சேதமும், உயிர்ச் சேதமும் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு, ஓர் உடனடி நடவடிக்கையாக இம்மாநகரில் குடிசைப் பகுதிகளில் வாழும் 50,075 குடும்பங்களுக்கு கல்நார் தகட்டினாலான கூரை வீடுகள் அமைக்கும் திட்டத்தை 1998-99 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்து, இதுவரை 28,018 குடும்பங்களுக்கு 37 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுச் சுவருடன் கூடிய கல்நார் தகட்டினால் ஆன கூரை வீடுகளைக் கட்டித் தந்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், சென்னை, மதுரை, ஈரோடு, கோவை, சேலம், திருச்சி, வேலூர், திருப்பூர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய நகரங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு உலக வங்கி நிதியுதவியுடன் அடிப்படை வசதிகளை அமைத்து மனை உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின்கீழ், 1996-98 ஆம் ஆண்டுகளில் 3,299 குடும்பங்களுக்கு ரூ. 4 கோடியே 22 இலட்சம் செலவில் குடிசைப் பகுதி மாற்றுப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இப்படிப் பல்வேறு சாதனைகளைக் குடிசைப் பகுதி மாற்று வாரியத்திலே செய்திருக்கிறோம்.



அதுபோல, திருமயிலை முதல் வேளச்சேரி வரையிலான பறக்கும் இரயில் திட்டம். 10.60 கிலோ மீட்டர் நீளப் பகுதிக்கான திட்டச் செலவான 733 கோடி ரூபாயில் தமிழ்நாடு அரசு மூன்றில் இரண்டு பங்கு செலவினையும், மத்திய அரசு மூன்றில் ஒரு பங்கு செலவினையும் ஏற்றுக்கொண்டு மக்களுக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 30-9-2000 முடிய மொத்தம் 281 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு பணிகள் இன்றைக்கு முழு வீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், இன்னும் ஒரு மணித்துளிதான்.

**திரு. ஜெ. அன்பழகன்:** ஆனால் உங்களுடைய கொள்கை விளக்கப் புத்தகத்திலே பார்த்தால் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ன செய்து கொண்டிருக்கிறதோ அதைக்கூடச் இன்றைக்குச் செய்யாமல் கடன் இருக்கிறது என்று ஓர் அறிவிப்பை அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இங்கே போலிஸ் மானியத்திலே பேசுகின்றபோது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தினை எடுத்துச் சொன்னார்கள். காவலர் வீட்டுவசதிக் கழகம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1989-1991-லே நடைபெறுகின்றபோது, அது கலைக்கப்பட்டுவிட்டது. அப்படிக் கலைக்கப்பட்டுவிட்ட காரணத்தால் காவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுங்கள் என்று கேட்க திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்ன தகுதி இருக்கிறது என்று இந்த அவையிலே கேட்டார்கள். நான் அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காவலர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தால் 1989-1991 வரையில் வீடுகள் கட்டப்பட்டதற்குக் காரணம் ** வீட்டுவசதி வாரியம் மூலமாகக் காவலர்களுக்கு பல்வேறு வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. ஆகவே, தகுதியைப் பற்றி எங்களைக் கேட்பதைவிட (குறுக்கீடு) இன்றைக்கு நாங்கள் தலைநிமிர்ந்து நடந்துகொண்டிருக்கிறோம்.

யாருடைய தகுதி இன்று நாட்டில் எடுபடும் என்பதை நாட்டு மக்கள் பரவலாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஆளும் கட்சியினர்.... (குறுக்கீடுகள்) (கூச்சல்)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிற்பகல் 4-45

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** Point of order. பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்கள் பேசுகிறார்கள். (குறுக்கீடு) பன்னீர்செல்வம், ஒரு நிமிடம் இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர்—அமைச்சர் எழுந்து நிற்கும்போது உட்கார வேண்டும். நீங்கள் உட்காருங்கள். நீங்கள் மந்திரியாக இருந்தவர்தானே! (குறுக்கீடு) பன்னீர்செல்வம், உட்காருங்கள். உறுப்பினர் கன்னிப் பேச்சை முடித்துவிட்டார்கள். 10 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்கள் பேசியபோது 1984-லிருந்து 1989 வரை காவல் துறையினுடைய வீட்டுவசதி வாரியத்திலே தவறுகள் நடந்ததாகக் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட செய்திக்கு ஏதேனும் ஆதாரம் இருந்தால் மட்டுமே கூறவேண்டும். இல்லையென்றால் அதை வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பழகன், உங்களுடைய பேச்சு கன்னிப் பேச்சு. கன்னிப் பேச்சிலே சிக்கல்களை எல்லாம் ஏற்படுத்தக்கூடாது. நீங்கள் ஆற்றொழுக்கு நடையிலே பேசிக் கொண்டு வந்தீர்கள். 1989-91 வரை காவலர் வீட்டுவசதிக் கழகம் இயங்கவில்லை. அது கலைக்கப்பட்டது என்று அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அன்று பேராசிரியர் முதற்கொண்டு எல்லோருமே [illegible]த்துக்கொண்டு, வீட்டுவசதிக் கழகம் இல்லையேதவிர, காவலர்களுக்கு [illegible]கட்டிக் கொடுக்கப்பட்டது என்றுதான் சொன்னார்கள். ** என்று [illegible]ல்வது முறைகேடானது. அந்தப் பேச்சு அவைக் குறிப்பிலிருந்து [illegible]க்கப்படுகிறது. உங்களுடைய பேச்சு நேரம் முடிந்துவிட்டது. அடுத்த [illegible]றுப்பினரை அழைக்கின்றேன். திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி. (குறுக்கீடுகள்) ஞானமூர்த்தி பேசுங்கள். (குறுக்கீடுகள்) அன்றைக்கு ஒத்துக்கொண்டு [illegible]ட்டார்கள். ஞானமூர்த்தி பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



***திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்த நான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 1996-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளராக நிறுத்தப்பட்டு வெற்றி வாய்ப்பை இழந்தாலும், மீண்டும் 2001-ல்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், விவரத்தைச் சொல்கிறேன்.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** அம்மா அவர்களால் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு, திருநாவலூர் சட்டமன்ற உறுப்பினராக அடையாளம் காட்டிய அம்மாவைப் பணிந்து வணங்குகிறேன். சொல்லால் சுட்டெரித்து, உண்மைக்குப் புறம்பாக வழக்கிட்டு.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானமூர்த்தி, இருங்கள். அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தைத் தெரிவித்தபோது, காவலர் வீட்டுவசதிக் கழகம் கலைக்கப்பட்டது என்ற கருத்தைத் தெரிவித்தபோது அன்றைக்கு பேராசிரியர் அவர்களும், துரைமுருகன் போன்றவர்களும், சாத்தூர் கே. இராமச்சந்திரன் போன்றவர்களும் எழுந்து, வீட்டுவசதிக் கழகம் இல்லையே தவிர வீடுகள் கட்டப்பட்டன என்று சொன்னார்கள். வீட்டுவசதிக் கழகம் கலைக்கப்பட்டது என்பதை அன்றைக்கே ஒத்துக்கொண்டார்கள். இன்றைக்குப் புதிதாக கன்னிப் பேச்சு பேசுகிற ஓர் உறுப்பினர் ** என்று சொல்வது முறைகேடானது. ஆகவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ஞானமூர்த்தி, பேசலாம். இந்த விளக்கம் உங்களுக்குப் போதும். (குறுக்கீடுகள்) இதுதான் விளக்கம், உட்காருங்கள். அவ்வளவுதான்.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** சொல்லால் சுட்டெரித்து உண்மைக்குப் புறம்பாக வழக்கிட்டு, வஞ்சக எண்ணங்களையே ஆயுதமாக்கி, மக்களுக்கு நல்லது செய்வதையே மறந்து, தன் மக்களுக்காகவே தமிழகம் என்று பேராசை கொண்டவர்களை எல்லாம் இன்றைக்கு புறமுதுகிட்டு ஓடும்படியாக, தோல்வி காண வைத்து மகத்தான மக்கள் சக்தியோடு மீண்டும் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியைக் கொண்டுவந்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, எனது கோடானு கோடி வணக்கங்களைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெ[illegible]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதிக்க முடியாது, அவர் பேசி முடிக்கட்டும். நான் அனுமதிக்கவில்லை.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** சான்றோர்களும், ஆன்றோர்களும் அமர்ந்த, அமர்ந்திருக்கிற இந்த மாமன்றத்திலே பேசுகிற நல்லதொரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்து, எனது வாழ்வில் ஒளி தந்த எங்களின் தாயாம், இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, ஆயிரமாயிரம் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உலகை விட்டுப் பிரிந்தாலும் எனது நெஞ்சில் குடி கொண்டிருக்கும் எனது தாய், தந்தையரை நினைத்து வணங்கி எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன். என்னை வெற்றி பெறச் செய்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், திருநாவலூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்காகப் பாடுபட்ட கழகத் தோழர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தி.மு.க. உறுப்பினர்கள் அமருங்கள். தி.மு.க. உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். விளக்கம் ஏதாவது கேட்பதாக இருந்தால் பிறகு கேளுங்கள். திரு. ஞானமூர்த்தி, பேசுங்கள்.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் பேச அனுமதி தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள்.

பிற்பகல் 4-50

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இப்போதுக் குடிசைமாற்று வாரியப் பகுதிகளில், அந்தக் குடியிருப்புகளில் வசிக்கும் 10 ஆயிரம் இளம் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு தையல் பயிற்சி, செவிலியர் உதவி தனிப் பயிற்சி, கணினிப் பயிற்சி (குறுக்கீடுகள்) வாகன ஓட்டுநர் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு அதிகம் உள்ள தொழில்களுக்குப் பயிற்சி வழங்கி, சமுதாய மேம்பாடு சீரமைப்புப் பயிற்சி என்ற ஒரு புதிய திட்டத்தினை ஏற்படுத்தி, அதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ. 50 இலட்சம் ஒதுக்கி,



இதன்மூலம் பல்வேறு இளைஞர்களுக்கு (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) வேலைவாய்ப்பு தந்திருக்கிறார்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்துநின்று பேசிக்கொண்டே இருந்தார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் அமருங்கள், நான் அனுமதிக்கவில்லை.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மேலும் கிராமப்புறங்களில் குடிசைகள் அதிகமாக இருப்பதைக் கண்டு, அங்கே வாழும் மக்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய மங்களூர் ஓடுகள் பொருத்தப்பட்ட...... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் அமருங்கள். உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார். (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக அமருங்கள். உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். (கூச்சல்-குழப்பம்) நான் அவர்கள் யாரையும் பேச அனுமதிக்கவில்லை. நான் அனுமதித்தால்தான் அவர்கள் பேச முடியும். நீங்கள் எல்லாம் உட்காருங்கள்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசி முடிக்கட்டும்.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மேலும் நகர்ப்புறங்களிலும் குடிசைகள் அதிகமாக இருப்பதைக் கண்டறிந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அங்கே வாழும் மக்களுக்கும் அடிப்படை வசதிகளுடன் கூடிய, மங்களூர் ஓடுகளுடன் கூடிய வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தையும் அறிவித்ததை இன்று இந்த நாடே வரவேற்கிறது. (கூச்சல்-குழப்பம்)

**திரு. கோ.சி. மணி:** ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** நகர்ப் பகுதிகளிலே வாழும் மகளிருக்கும் இன்றியமையாத தேவையான துப்புரவு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகத் தண்ணீர் வசதியுடன் கூடிய 1341 கழிப்பிடக்

கட்டடங்களை உடன் கட்டித் தருவதற்காக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ. 42 கோடி அளவிலே நிதி ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1991 முதல் 1996 வரை முதலமைச்சராக இருந்தபோது (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்) வீட்டுவசதித் துறையின் மூலமாக 5 ஆண்டு கால ஆட்சியில் பயனீட்டாளர்கள் பயன்பெறுகின்ற வகையில் குறித்த காலத்தில் குறைந்த விலையில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு அப்போது ஆயிரக்கணக்கான பயனீட்டாளர்கள் பெற்றுக் கொண்டு பயனடைந்தார்கள்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கூச்சலிட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக அமருங்கள். (கூச்சல்-குழப்பம்) நீங்கள் எல்லாம் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் அமருங்கள். திரு. கோ.சி. மணி, என்ன விவரம் என்று சொல்லுங்கள். (கூச்சல்-குழப்பம்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். மணி, என்ன விவரம், அதைச் சொல்லுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஆட்சி நடைபெற்றபோது ஆயிரக்கணக்கான ஊழல்கள் நடைபெற்றன என்று அடுக்கி, அடுக்கி சொல்லிக்கொண்டே வருகிறார்கள். ஆனால், ஒன்றுக்கும் ஆதாரம் தரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவர்களே, அமைச்சர்கள் எப்போது குற்றச்சாட்டுச் சொன்னாலும், அதற்குரிய ஆதாரத்தோடுதான் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) நேற்றையதினம் கூட்டுறவுத் துறை அமைச்சர் ஒரு குற்றச்சாட்டைச் சட்டமன்ற உறுப்பினர் மேலே குறிப்பிட்டார். அதற்கான ஆதாரத்தைக் கையில் வைத்துக்கொண்டுதான் சொன்னார்.

**திரு. கோ.சி. மணி:** காலையில் பேசும்போது அந்த உறுப்பினர் எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு பேசினார்?



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டுதான் சொன்னார். பொறுப்பில்லாமல் பேசவில்லை.

**டாக்டர் க. பொன்முடி:** காலையில் ஓர் உறுப்பினர் கன்னிப் பேச்சு பேசும்போது, எங்கள் மீது குற்றச்சாட்டுகளைச் சொன்னார். அதை எப்படி நீங்கள் அனுமதித்தீர்கள்?

**திரு. கோ.சி. மணி:** ஒரே ஒரு வார்த்தை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், மாண்புமிகு அவை முன்னர் பேசுகிறார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு நான் விளக்கம் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அதற்கு நான் விளக்கம் சொல்வதற்கு அனுமதி தர வேண்டுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களுக்கு நான் விளக்கம் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இன்று காலையில் (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில், வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது இரண்டு முக்கியக் குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள்..... (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** காலையில் உறுப்பினர் ஆதாரம் இல்லாமல் பேசி இருக்கிறார். அதெல்லாம் அவைக்குறிப்பில் இருக்கிறது. அதைத்தான் சுட்டிக்காட்டுகிறோம், வேறொன்றுமில்லை. (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காலையில் பேசுகிறபோது கூட்டுறவுச் சங்கங்களில் காஞ்சிபுரத்தில் நடந்த நிகழ்வுகளுக்குள்ள ஆதாரங்களுக்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு, ஆதாரத்தைக் கையில் வைத்துக்கொண்டுதான் பேசினார். அதுதான் காலையிலே நடந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** நாங்களும் ஆதாரத்தைக் கையில் வைத்துக்கொண்டுதான் சொல்கிறோம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-லிருந்து 1989 வரை காவல் துறையினுடைய வீட்டுவசதி வாரியத்தில் தவறு நடந்தது என்பதற்குள்ள ஆதாரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருவாரா, தருகிறாரா, கையில் வைத்திருக்கிறாரா என்பதனைக் கேட்டு, அப்படி இருந்தால், அனுமதிக்கலாம்.

*பிற்பகல் 4-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றச்சாட்டுச் சொல்வதாக இருந்தால் என்னிடத்திலே அனுமதி வாங்கிக்கொண்டு, ஆதாரத்தை என்னிடத்திலே காட்டிவிட்டுத்தான் குற்றச்சாட்டுச் சொல்லவேண்டும். வெந்ததைத் தின்று, வாயிலே வந்ததை எல்லாம் பேசுவதுபோல் பேசக்கூடாது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அன்றைக்கு ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார். சொல்வதற்கு முன்னால் என்னுடைய அறையில் வந்து, அனுமதி வாங்கிக்கொண்டு சொன்னார். போதுமான ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள்; பொறுப்பேற்றுக் கொள்வதாக இருந்தால் சொல்லுங்கள் என்று அவரிடத்திலே நான் கேட்டுக்கொண்டதற்குப் பிறகு, ஆதாரத்தை என்னிடத்திலே காட்டி அனுமதி வாங்கிக்கொண்டு சொன்னார். கன்னிப் பேச்சு பேசுகிறபோது, போகிற போக்கிலே ஒரு குற்றச்சாட்டைச் சொல்வது என்பது முறைகேடானது. (குறுக்கீடுகள்) நீங்கள் கடந்தகால ஆட்சியிலே, இதேபோல அவைக்குறிப்பிலே ஆயிரக்கணக்கான முறை குற்றச்சாட்டுகள், இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிறவர் மேலே ஆயிரக்கணக்கான வகையிலே குற்றச்சாட்டுகள், எந்த ஆதாரமும் இல்லாமல் தனிக் கோர்ட்டிலே வழக்கு இருக்கிறபோது சொல்லப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களே அன்றைக்குச் சொன்னார்கள். ஸ்டாலின் அவர்கள் பேசிய பேச்சைப் படித்துக் காட்டினார்கள். முன்னாள் முதலமைச்சர் என்று சொல்லி, இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிறவர், அவர் சிறைச்சாலைக்குப் போகப் போவது உறுதி என்று சட்டசபையில் பேசிய பேச்சையே முதலமைச்சர் படித்துக் காட்டினார். ஆகவே, அப்படி எல்லாம் பேசுவது என்பது முறைகேடானது. அன்பழகன் பேசுவதற்குப் பத்து மணித்துளிகளுக்கு மேலே நான் அனுமதித்தேன். அவருடைய பேச்சு முடிந்துவிட்டது. முடிந்ததற்குப் பிறகுதான் அடுத்த உறுப்பினரை நான் அழைத்திருக்கிறேன். அவர் பேச்சிலே ஆதாரம் இல்லாமல் பேசிய அந்தப் பகுதியை மட்டும்தான் நான் நீக்கியிருக்கிறேன். நான் முறைகேடாக நீக்கவில்லை. ஆகவே, நீங்கள் வம்பு பண்ணுவது சரியல்ல,



முறையல்ல, தகுதியும் அல்ல, தர்மமும் அல்ல. ஞானமூர்த்தி பேசுங்கள். *(கூச்சல் குழப்பம்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மீது தற்போது நடவடிக்கை இல்லை என்று சொல்கிறீர்களா? நடவடிக்கை உங்கள் ஆட்சிக்காலத்திலே எடுக்கப்பட்டது. தற்போது நடவடிக்கை தொடருகிறது. நடவடிக்கை தொடர்ந்து, குற்றம் புரிந்திருக்கிறார்கள், கையாடல் நடந்திருக்கிறது. இது நடைமுறையிலே தற்போது இருக்கிறது. அதைத்தான் உத்திரமேரூர் உறுப்பினர் சோமசுந்தரம் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். (கூச்சல் - குழப்பம்) காஞ்சிபுரத்திலேயுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பற்றித் தெளிவாக, ஆதாரங்களின் அடிப்படையிலே சொல்லியிருக்கிறார். அதைவிட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவொரு உறுப்பினர் பேசுகிறபோதும், ஆளும்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள் யார் எதைப் பற்றிப் பேசினாலும் அல்லது அமைச்சர்கள் ஏதைப்பற்றிப் பேசினாலும், எந்தவொரு குற்றச்சாட்டை எடுத்துச் சொன்னாலும்கூட அந்த உறுப்பினர் பேசி முடிப்பதற்கு தி.மு.க. உறுப்பினர்கள் இடம் தருவதேயில்லை. இடையிடையே குறுக்கிட்டு கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து அவையினுடைய நடவடிக்கையை அவர்கள் தடைப்படுத்திக் கொண்டிருப்பதை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமாக நீங்கள் அதைக் கவனிக்க வேண்டும். பேசுவதற்கு இடம் கொடுப்பதில்லை. ஆளும்கட்சி உறுப்பினர்கள் பேசுகிற உரிமையைத் தட்டிப் பறிக்கக்கூடிய அளவிற்கு அவையிலே நடக்கிற இந்த முறையை நீங்கள் மாற்றியமைக்க வேண்டும். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய எண்ணங்களைச் சொல்வதற்கு நான் போதுமான வாய்ப்பைத் தருகிறேன். நீங்கள் ஏதாவது விளக்கம் கேட்பதாக இருந்தாலும் அதற்கான வாய்ப்பை நான் எந்த நேரத்திலும் மறுத்ததே கிடையாது. இன்றைக்குப் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கிற ஓர் அமைச்சர், நம்முடைய வணிக வரித் துறை அமைச்சர், அவர் இன்றைக்குப் பதிலுரை சொல்லிக்கொண்டிருக்கிறார். துரைமுருகன் அவர்கள்—இன்னும் சொல்லப்போனால் அந்த வணிக வரித் துறை அமைச்சருடைய தந்தையாரை எதிர்த்துப் போட்டியிட்டவர் துரைமுருகன். அவருடைய மகன், புதிதாகப் பொறுப்பேற்றவர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்—பதில் சொல்லி முடிவதற்கு

முன்னாலேகூட அவசரப்பட்டு, இடையிலே குறுக்கிட்டு, நான் பேசியே தீரவேண்டுமென்று சொல்லி, இடையிலே விவகாரம் பண்ணிக்கொண்டு, வெளியிலே போய் நம்முடைய பன்னீர்செல்வம் போன்றவர்கள் பேரவைத் தலைவர் ஒழிக என்று முழக்கமிட்டுக்கொண்டு, நீங்கள் போகிறீர்கள் என்றால் இது முறையல்ல, சரியல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு) இது அவை நடவடிக்கைகளைச் சீர்குலைக்கிற முயற்சி. இந்த முயற்சிக்கு நான் இடம் அளிக்கவே மாட்டேன். ஆகவே, தயவுசெய்து நீங்கள் பேசுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குச் சொல்ல வேண்டிய விளக்கம் சொல்லப்பட்டுவிட்டது. ஞானமூர்த்தி, நீங்கள் தாராளமாகப் பேசுங்கள்.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** ஆனால், கடந்த கால தி.மு.க. ஆட்சிக்காலத்தில் வீட்டுவசதித் துறையின் மூலமாகக் கட்டப்பட்ட வீடுகள் குறித்த காலத்தில் முடிக்கப்படாததால் முதலுடன் கூடிய வட்டியையும் சேர்த்து அதிக விலையில் பயனீட்டாளர்களுக்கு விற்ற காரணத்தால், இன்றைக்கு வீட்டின் விலை அதிகம் என்ற காரணத்தால் பயனீட்டாளர்கள் யாரும் வாங்குவதற்கு முன்வரவில்லை. இதனால் நிறைய வீடுகள் விற்கப்படாமல் நிலுவையில் உள்ளன. இதனால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்துக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே நடந்த இந்தக் குளறுபடியான முறைகேட்டால் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படக்கூடிய அளவிற்கு அங்கே தவறு நடந்திருக்கிறது. இத்துறையிலுள்ள பொறியாளர்களுக்கு வேலை கொடுக்கப்படாமல் தண்டச் சம்பளம் கொடுக்க வேண்டிய நிலைமையை உருவாக்கிவிட்டார்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைச் சேர்ந்தவர்கள்.

பெண்களுக்கு முக்கியத்துவம் என்ற அடிப்படையில் இன்றைக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், கடந்த கால ஆட்சியில் (குறுக்கீடு) 1991-1996 ஆட்சியில் திருப்பூர் நகரில் ஹவுசிங் சொசைட்டி மூலமாக ஜே.ஜே. மகளிர் கல்லூரி என்று மகளிர்க்கென்று ஒரு கல்லூரியைத் தொடங்கினார்கள். இந்தக் கல்லூரியில் இப்போது 800-க்கும் மேற்பட்ட மாணவிகள்



பயில்கின்றனர். ஆனால், பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு இதேபோன்று வேறு ஏதேனும் ஒருபகுதியில் ஒரு கல்லூரியை கட்டினால் அதை வரவேற்றிருக்கலாம். ஆனால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அன்றைக்கு ஏற்படுத்திய அந்தக் கல்லூரியை, அம்மா அவர்கள் கொண்டு வந்த காரணத்தினால் அவர்கள் அதைக்கண்டு பொறுக்க முடியாமல் அந்தக் கல்லூரியினுடைய பெயரை மாற்றி வேறோர் பெயரை வைத்திருக்கிறார்கள். அவர்கள் படைத்த சாதனை, வேறு ஒரு கல்லூரியை நிறுவி இருந்தால் அதை வரவேற்கலாம். ஆனால், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த காரணத்தினால் மட்டுமே அதன் பெயரை மாற்றியது தான் திராவிட முன்னேற்றக் கழக அரசின் வீட்டுவசதித் துறையின் சாதனையாகும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே கூறிய உறுப்பினர் ஒருவர், நீங்கள் தலைகுனிந்து நிற்கிறீர்களே என்று சொன்னார். நாங்கள் சொல்வது எல்லாம் தேர்தலில் உங்களை மக்கள் தலைகுனிய வைத்து விட்டார்கள் என்பதை நீங்கள் மறந்துவிட வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

*(உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் எழுந்து நின்று கொண்டே இருந்தார்).*

*பிற்பகல் 5-00*

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், என்னுடைய திருநாவலூர் தொகுதிக்கு செய்திட்ட சில நல்ல திட்டங்களை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு) எனது தொகுதியில் 25 கிராம விவசாயிகளின் நீண்ட நாளைய கோரிக்கையான புத்தனேந்தல் அணைக்கட்டு மற்றும் வாய்க்கால் சீரமைக்கும் பணியினை நிறைவேற்றிடவும், சுமார் 20 கிராமங்களின் பல்லாண்டு காலப் பிரச்சினைகளான, ஆதனூர் பாச்சாபாளையம் சேஷ நதியில் மேம்பாலம் கட்டவும் அனுமதி தந்தமைக்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக கோடானு கோடி நன்றியைச் சமர்ப்பித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

அதேபோன்று, சரவணப்பாக்கம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி அமைத்தமைக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

[திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி] [2001 செப்டம்பர் 11

என்னைத் தேர்ந்தெடுத்த திருநாவலூர் தொகுதி மக்களுக்கு சில திட்டங்களைச் செய்து தந்திட பணிவான வேண்டுகோளை இம்மாமன்றத்தில் வைக்கின்றேன். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள்.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கிற வரைக்கும் எனக்கு இநதப் பக்கத்து காது கேட்காது. இந்தப் பக்கத்து கண் தெரியாது. (மேசையைத் தட்டும் ஒலி).

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** 1997-ஆம் ஆண்டு எனது தொகுதியிலுள்ள அருள்மிகு லட்சுமிநரசிம்ம சுவாமி திருக்கோயிலுக்கு வழிபட வருகை தந்தார்கள். அதன்மூலம் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கோயிலுக்கு பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வருகின்றனர். எனவே, அந்தக் கோயிலுக்குத் தேவையான வசதி வாய்ப்புகளைச் செய்து தருமாறு பணிவுடன வேண்டுகிறேன்.

திருநாவலூர் மற்றும் இருவேல்பட்டில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையங்களாக அமைத்துத் தர வேண்டும் என்று பணிந்து வேண்டுகிறேன். திருநாவலூரரை மையமாகக் கொண்டு, 65 கிராமங்கள் பயன்பெறும் வகையில், நீண்டநாள் கோரிக்கையான தீயணைப்பு நிலையம் ஒன்றினை அமைத்துத் தர வேண்டுகிறேன். திருநாவலூர் காவல் நிலையம் 90 கிராமங்களை உள்ளடக்கியது.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களுக்கு, இப்போது எனக்கு இந்தப் பக்கத்து காது கேட்கும். இந்தப் பக்கத்து கண் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** திருநாவலூர் காவல் நிலையம் 90 கிராமங்களை உள்ளடக்கி, 2 தொகுதிகளில் வரும் பெரிய காவல் நிலையமாக இருப்பதால், சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைச் சரிவரச் சமாளிக்க முடியவில்லை. எனவே, இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான திருநாவலூர் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து களமருதூர் என்ற கிராமத்தை மையமாகக் கொண்டு காவல் நிலையம் ஒன்று ஏற்படுத்தித் தர வேண்டும் என்று பணிவுடன் வேண்டுகிறேன்.



2001 செப்டம்பர் 11] [திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி]

உளுந்தூர்பேட்டை - விழுப்புரம் பகுதியில் என்.எச். 45 தேசிய நெடுஞ்சாலை மிக அதிகமாக விபத்துக்கள் நடைபெறுகின்ற பகுதியாகும். எனவே, அந்த தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக உள்ள இரயில்வே லெவல் கிராசிங்கில், மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான இரயில்வே மேம்பாலம் கட்டித் தருவதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்தில் மலட்டாறு - காரப்பட்டு சாலையில் ஒரு மேம்பாலமும், மலட்டாறு - அவியனூர் இணைப்புச் சாலையில் ஒரு மேம்பாலமும், மலட்டாறு- டி. குமாரமங்கலம், மேல்தணியாளம்பட்டு சாலையில் ஒரு மேம்பாலமும் கட்டித் தர வேண்டும் என்ற கிராமமக்களின் நீண்டநாள் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர அன்புடன் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ஒரு மணித்துளியில் முடியுங்கள்.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மேலும், திருக்கோவிலூர் அணைக்கட்டுப் பாசனத்தின்கீழ் வரும் மலட்டாறு வாய்க்கால் மூலம் திருவெண்ணெய்நல்லூர் கிழக்குப் பகுதியில் 30 கிராமங்கள் பயன்பெறும் வகையில், 10 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாசன வசதி பெறும் மலட்டாறு வாய்க்கால் வெட்டப்படாத காரணத்தினால் பாசன வசதியின்றி உள்ளது. எனவே, விவசாயிகளுக்குப் பல நன்மைகள் செய்திட்ட நம் அம்மாவின ஆட்சியில் திருக்கோவிலூர் - மலட்டாறு வாய்க்காலைச் சீரமைத்துத் தர பணிவுடன் வேண்டுகிறேன். திருவெண்ணெய்நல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால் நிரந்தரக் கட்டடமும், தானிய இருப்புக் கட்டடங்களும் அரசின் மூலம் கட்டித்தர பணிவுடன் வேண்டுகிறேன்.

டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கப்பட்ட செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அம்மாவின் கடந்த ஆட்சிக் காலத்தில் பல நன்மைகளைத் தொழிலாளர்கள் பெற்றார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 200 தொழிலாளிகள் பல்வேறு கோரிக்கைகளுக்காக அங்கே போராட்டம் நடத்தினார்கள். அந்தப் போராட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு என்று, வேண்டுமென்றே திராவிட முன்னேற்றக்

கழக ஆட்சியை நடத்திக் கொண்டு இருந்தவர்கள், அவர்கள்மீது வழக்குப் போட்டு ஜெயிலுக்கு அனுப்பி துன்புறுத்தினார்கள். எனவே, அந்த ஆலையில் 15 ஆண்டுகளாக மாற்றுத் தொழிலாளிகளாகவே பணிபுரியும் 200 மாற்றுத் தொழிலாளிகளைப் பணி நிரந்தரம் செய்திடவும், மேலும் அரைவைப் பருவத்தில் 6 நாட்களுக்கு வேலை அளித்திடவும் ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஆலையில் இருந்து வெளியாகும் கரும்புச் சக்கையான பக்காஸ் மூலம் தனியார் பிளைவுட் கம்பெனி தொடங்கத் திட்டமிடப்பட்டு, அது நிறுத்தப்பட்டுள்ளது. ஆலை நஷ்டத்தில் இயங்குவதைத் தடுத்திடும் வகையில், இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சி காலத்தில் அதைத் தொடங்குவதற்கு ஆணையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-05*

மேலும், திருநாவலூர் தொகுதியில் சேந்தமங்கலம், பாதூர், செங்குறிச்சி, பூமாம்பாக்கம் பகுதிகளில் மின்னழுத்தக் குறைவின் காரணமாக விவசாயத்திற்குத் தேவையான மின்சாரம் கிடைக்காமல், விவசாயம் பாதிக்கப்படுகிறது. எனவே, இந்தப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானமூர்த்தி, உரையை முடித்து விடுங்கள்.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் இடையிலே ஏதோ சொல்ல எழுந்தார்கள்.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** நன்றி சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லி முடித்தவுடன் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது ** சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள், அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** ஆனால், கடந்த 5 ஆண்டு காலம் அவர்கள் செய்த ஆட்சியிலே வீட்டுவசதி வாரியம் மற்றும் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களிலே மிகப் பெரிய அளவிலே ஊழல் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் இந்தச் சபையிலே இருந்திருந்தால் அந்த ஊழலைப் பற்றிப் பேசுவதற்கு சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம். (குறுக்கீடு) ஞானமூர்த்தி நன்றி சொல்லி முடித்துவிடுங்கள். சுந்தரம், அவர் நன்றி சொல்லி முடிக்கட்டும், உட்காருங்கள்.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மேலும், திருநாவலூர் ஒன்றியத்தில்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** தாயே, தூற்றுவோர் தூற்றட்டும், நல்ல மனமுள்ள போற்றுவோர் போற்றட்டும், தமிழக மக்களின் வாழ்வில் ஒளி வீச அம்மாவின் பணி தொடரட்டும் என பார் போற்றும் பல்வேறு நலத் திட்டங்களைச் சீரோடும், சிறப்பாகவும் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற எங்கள் அம்மாவின் பொற்கால ஆட்சி தொடரட்டும் என்று கூறி, வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என்னுடைய இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுந்தரம், என்ன சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியினர் பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தினமும் எழுந்து நின்று உங்களுடைய கட்டளைக்கு அடிபணியாமலே, கலாட்டா செய்ய வேண்டுமென்ற எண்ணத்திலே தினமும் வந்து கொண்டிருக்கிறார்கள். இதைப்போல, நீங்கள் அவைக்குறிப்பிலே எல்லாம் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்; கடந்த காலங்களில் நான் எழுந்து பேச ஆரம்பித்தாலே, உட்கார் என்று கூறிவிட்டு, இரண்டாவது முறை என்னைத் தூக்கி வெளியே எறிந்து விடுவார்கள். இந்த முறை நீங்கள் அவர்களிடம் மென்மையாக நடந்து கொண்டிருக்கின்ற காரணத்தால்தான் தினமும் இதுபோன்ற சம்பவங்கள் நடந்து, ஆளும் கட்சியினர் பேசுவதற்குத்

தடையாக இருக்கிறது. தயவுசெய்து, நீங்கள் இதை மறுபரிசீலனை செய்து, சற்றுக் கடுமையாக நடந்துகொள்ள வேண்டுமென்று என்னுடைய கருத்தைத் தெரிவிக்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 16 ஆம் தேதி இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்கியதிலிருந்து இப்போது வரைக்கும் இந்த வெளிநடப்பு, chair மேலே ஏறி நிற்பது, தர்ணா போராட்டம் நடத்துவது, கறுப்புத் துணி கட்டுவது என்று இந்தச் சட்டமன்றத்தை ஒரு போராட்டக் களமாகவும், ஒரு சப்த மன்றமாகவும் மாற்றி வருகிற நடவடிக்கைக்குத் திட்டவட்டமாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மரபுகள் என்பதன் பெயராலேயே மரபுகள் மீறப்படுவது; ஜனநாயகம் என்பதன் பெயராலேயே ஜனநாயகம் மீறப்படுவது; நாங்கள் எல்லாம் கருத்துகளைச் சொல்லிப் பேசி, விவாதித்து கிடைக்கிற நல்ல பெயரைவிட அவர்கள் வெளிநடப்புச் செய்து பெறுகிற விளம்பரமும் மற்றவையுமே அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், தமிழகச் சட்டப் பேரவையினுடைய நேரம் அநியாயமாக வீணாக்கப்படுகின்றது என்பதும், மக்கள் பிரச்சினைகளைப் பேச முடியாமல் தடுக்கப்படுகின்றது என்பதும் நடக்கிறது. ஆகவே, நாடாளுமன்றத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆளுகிற மத்திய அரசாங்கம் என்ன மாதிரியான நடவடிக்கை, இதுபோன்ற நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு எடுத்திருக்கிறதோ அதேபோல, தமிழ்நாடு சட்டப் பேரவையிலே தொடர்ந்து கலகம் புரிபவருக்கு எதிராக ஏதாவது தடுப்பு நடவடிக்கையை இந்த மாமன்றம் எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் கருணாகரன் அவர்கள் சொன்ன கருத்துகள் ஏற்புடைய கருத்துகள். ஏற்கெனவே அவர்கள் எல்லாம் ஆட்சிப் பொறுப்பிலே, அமைச்சர் பொறுப்பிலே இருந்து அனுபவம் பெற்றவர்கள். அவர்களே, சட்டமன்ற மரபுகளைப் புரிந்துகொள்ளாமல் நடக்கிறார்கள். என்ன செய்வது? ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் அவர்களைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். என்னைப்பற்றி அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். எப்படி அடக்க வேண்டுமோ அப்படி அவர்களை நான் அடக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரிய மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய தங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை நான் இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 5-10*

விவாதத்திற்குப் போவதற்கு முன்பு இரண்டு கோரிக்கைகளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையிலே பழைய மஸ்தான் தோட்ட குடிசைப் பகுதி என்ற ஒன்று C.I.T. நகரில் இருக்கிறது. 1956 ஆம் ஆண்டு பெருந் தலைவர், கர்ம வீரர் காமராஜருடைய ஆட்சிக் காலத்திலே C.I.T. நகரிலே இருக்கக்கூடிய மக்களுக்கு மஸ்தான் தோட்டம் என்ற குடிசைப் பகுதியிலே, அவர்களுக்கு நான்கு ரூபாய் வாடகையிலே வீடுகளையெல்லாம் வாடகைக்கு விட்டார்கள். பிறகு 1956 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து அந்தப் பகுதியிலே குடியிருந்து கொண்டிருக்கிற அவர்களுக்கு குடியிருக்கிற வீட்டைச் சொந்தமாக்கிக் கொடுக்கவேண்டுமென்று பலமுறை வேண்டுகோள் விடுத்தும் இன்னும் அவர்களுடைய கோரிக்கை கிடப்பிலே இருந்து கொண்டிருக்கிறது.

எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழக நண்பர் அன்பழகன் அவர்கள் பேசுகிறபோது, அவர்களுடைய ஆட்சியினுடைய சாதனைகளையெல்லாம் சொன்னார்கள். ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்பதாகக்கூடச் சொன்னார்கள். இறைவனே இல்லை என்பவர்கள் எப்படி இவர்கள் சிரிப்பைக் காணப்போகிறார்கள் என்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இங்கே 1956 ஆம் ஆண்டிலிருந்து குடிசைவாசிகள், நான்கு ரூபாய் வாடகைக்கு வீட்டைப்பெற்றிருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே குடிசை மாற்று வாரியத்திலே குடியிருந்தவர்களுக்குச் சொந்தமாக்கிவிட்டார்கள். ஆனால், எங்களுடைய கர்ம வீரர் காமராஜர் அவர்களின் காலத்திலே அவர்களுக்கு, வீடு வாடகைக்கு அளிக்கப்பட்டது என்ற ஒரே காரணத்திற்காக இன்னும் அவர்களுக்கு அளிக்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து இதைப் பரிசீலனை செய்து அவர்களுக்குச் சொந்தமாக கொடுக்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சி. ஞானசேகரன்] [2001 செப்டம்பர் 11

பேராவூரணி, வளர்ந்து வரக்கூடிய ஒரு நகரப் பகுதி, அங்கே இருக்கக்கூடிய அரசு ஊழியர்களுக்குக் குடியிருப்பு வீடுகளைக் கட்டித்தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, அடுத்து நான் விவாதத்திற்கு வருகிறேன்.

கடந்தகால ஆட்சியிலே Commercial Taxes Department மூலமாக G.O. *150* என்ற ஒன்றைப் போட்டார்கள். அந்த G.O.*150*-ஐத் தயவு செய்து நீங்கள் அமல்படுத்தவேண்டாம் என்று நான் இந்த மாமன்றத்திலே, நீண்ட நேரம் உரையாற்றி அதனால் ஏற்படக்கூடிய பாதகங்களையெல்லாம் அக்குவேறு ஆணிவேறாக எடுத்துச்சொல்லிப் பார்த்தோம். ஆனால், அன்றைய அரசு அதைக் காதில் போட்டுக்கொள்ளாத காரணத்தால், Real Estate busines எந்தளவு படுபாதாளத்திற்குச் சென்று இருக்கிறது என்பதை இந்த அரசு உணரவேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அந்த G.O. 150 -ன் காரணமாக unapproved layout-ல் இருக்கக்கூடிய மனைகளைப் பதிவு செய்ய முடியாது என்ற ஒன்றைக் கொண்டு வந்தார்கள். பிறகு, எங்களுடைய நீண்டகால விவாதத்திற்குப் பிறகு ஓர் ஆணையைப் பிறப்பித்து, C.M.D.A. ஏரியாவைத் தவிர மற்ற பகுதிகளில் இருக்கக்கூடிய இடங்களுக்கு மட்டும் Development Charge 10 சதவிகிதம் கட்டிவிட்டு, அவர்கள் வீட்டு மனைகளைப் பதிவு செய்யலாம் என்கிற ஓர் ஆணையைப் பிறப்பித்தார்கள். ஆனால், அந்த *10* சதவிகித Development charge-ஐக் கட்டி அந்த இடத்திலே அவர்கள் மனைகளைப் பதிவு செய்வது என்பதுகூட, இப்போது அதிகமாக இருக்கிறது. ஆகவே, கிராமப்பகுதியிலே கூட நீங்கள் அந்த *10* சதவிகித Development charge என்பதை, குறைந்தது *2-1/2* சதவிகிதம் *3* சதவிகிதம் கட்டிவிட்டு, அவர்கள் பதிவைச் செய்து கொள்ளலாம் என்கிற ஒரு நிலையைக் கொண்டுவந்தால்தான் இருக்கக்கூடிய மனைகளெல்லாம் அந்த இடத்தில் விற்பனையாகும். N.O.C.-யும் பிறகு அந்த Local Body-யிலிருந்து வாங்க முடிகிறது. இல்லையென்றால், அந்த Development charge கட்டவில்லை என்று சொன்னால் N.O.C. வருவதில்லை; N.O.C. வரவில்லை என்று சொன்னால், அங்கு வீட்டு மனைகளைப் பதிவு செய்ய முடியவில்லை. ஆகவே, கிராமப் பகுதியிலே இப்படியொரு சிக்கல் இருந்து கொண்டிருக்கிறது. C.M.D.A. ஏரியாவுக்கு வருவோம் என்று சொன்னால், அந்த உத்தரவு இன்றைக்குக் கொஞ்சம்கூட இந்த C.M.D.A.-க்குப் பொருந்தாது என்று கடந்தகால அரசு சொல்லிவிட்ட காரணத்தால்



2001 செப்டம்பர் 11] [திரு. சி. ஞானசேகரன்]

இந்தச் சென்னை மாநகரம், இந்தச் சென்னை மாநகரத்தைச் சுற்றியிருக்கக்கூடிய, வளர்ந்து வரக்கூடிய நகரங்களாக இருக்கக்கூடிய அம்பத்தூர், ஆவடி போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய unapproved layout மனைகளையெல்லாம் இன்னும் விற்கமுடியாமல், பத்திரப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ய முடியாமல், Real Estate business செய்து கொண்டிருப்பவர்கள் பலர் அப்படியே தங்களுடைய மனைகளை மனைகளாகவே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கட்டாந்தரைகளாக இருந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் பல இலட்சங்களை அதிலே முதலீடு செய்து, ஏற்கெனவே அவர்கள் ப்ளாட் போட்டு, பாதி ப்ளாட்களை விற்றிருக்கிறார்கள். இன்னும் பாதி ப்ளாட்டுகள் விற்கமுடியாமல் இருக்கின்றன. ஒருவேளை யாராவது ஒருவர் வாங்கியிருந்தால்கூட, பதிவு செய்ய முடியாமல் இருக்கிறது. மீண்டும் அவர்கள் அதை விற்கவேண்டுமென்றால், மகளுடைய திருமணத்திற்காக திடீரென்று பணத்தைப் புரட்டி திருமணத்தை நடத்தவேண்டுமென்று சொன்னாலும்கூட, அவர்களால் அந்தப் பத்திரப்பதிவைச் செய்ய முடியாமல் இருக்கிறது. பலர் பத்திரத்தைப் பதிந்திருக்கிறார்கள். ஆனால், அந்தப் பத்திரங்கள் ரிலீஸ் செய்யப்படாமல் இன்னும் பத்திரப்பதிவு அலுவலகத்திலே அப்படியே இருக்கின்றன. இப்படியிருக்கிற காரணத்தினால்தான் அந்த இடத்தில் பணப்புழக்கம் என்பது இல்லாமல், முழுக்க முழுக்க அந்த இடத்திலே பொருளாதாரம் முடக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கிறபோது ஒரு கோரிக்கை வைத்தேன். G.O. *150*-ஐ உடனடியாக வாபஸ் பெறவேண்டுமென்ற ஒரு கருத்தை எடுத்து வைத்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதைப் பரிசீலிப்பதாக இந்த அவையிலேகூட அறிவித்தார்கள். ஆகவே, நான் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் நீங்கள் உடனடியாக அந்த G.O.*150*-ஐ, நம்முடைய உயர் நீதிமன்றம் தீர்ப்பை அளித்திருந்தாலும்கூட, ஏற்கெனவே நாம் போட்ட ஆர்டர் மேலே அவர்கள் ஓர் உத்தரவைக் கொடுத்தார்கள். நாம் நம்முடைய பாலிசியை மாற்றிக்கொண்டோம் என்று சொன்னால், அந்த நீதிமன்ற உத்தரவிற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. ஆகவே, நீங்கள் வாபஸ் செய்ய வேண்டும்.

*பிற்பகல் 5-15*

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்கிற அந்த G.O. என்பது M.A.W.S. department-ச்

சம்பந்தப்பட்டது. உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலேதான் அதுபற்றி விளக்கம் கேட்க வேண்டும். என்னுடைய துறையைப் பொறுத்தவரையிலே, C.M.D.A. பகுதி மட்டும்தான் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர்களுக்கு எந்தெந்த Department இங்கே இருக்கிறது என்று தெரியாமல் இருக்கிறது. காரணம், இந்தத் துறை மட்டும் கொஞ்சம் சிக்கலான துறை. நம்முடைய அவை முன்னவர் அவர்களிடமிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம், உங்களுக்கும் வரும், M.A.W.S. Department-க்கும் வரும் C.M.D.A. அவர்களுடைய கன்ட்ரோலிலே இருக்கிறது. ஆனால் Commercial Taxes Department-ல் தான் G.O. போடப்பட்டிருக்கிறது. Registration Department-ல் தான் Register செய்து பத்திரத்தைக் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். இப்படி பல அமைச்சர்களினுடைய பொறுப்பிலே இருக்கக்கூடிய துறைகள் சம்பந்தப்பட்ட real estate business என்பது, பல மந்திரிகள் இங்கே பொறுப்பு ஏற்றிருக்கிற காரணத்தினால்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, G.O. 150-ஐப் பொறுத்தவரைக்கும் இது எத்தகைய சிக்கலை ரியல் எஸ்டேட் தொழிலிலே ஏற்படுத்தி இருக்கிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. இது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. விரைவில் இதுகுறித்து ஒரு முடிவை அரசு எடுக்க இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** அவை முன்னவர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. மாண்புமிகு முதல்வர் அவர்களும்கூட அன்று இதையேதான் அறிவித்தார்கள். ஏனென்றால் நம்முடைய பதிவுத் துறை, ரெவின்யூ டிபார்ட்மெண்ட் அமைச்சர் கையிலே இருக்கிறது; அந்தத் துறை உங்கள் கையிலே இருக்கிறது. ஆனால், C.M.D.A. -வோ, டவுன் பிளானிங் சம்பந்தப்பட்ட துறையோ, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் இருக்கிறது. இப்படி பல அமைச்சர்களின் பொறுப்பிலே இருக்கக்கூடிய ஒரு துறையாக இருக்கிற காரணத்தினால்தான் அதில் ஒரு குறிப்பிட்ட, ஒட்டுமொத்தமான முடிவை எடுத்து, உடனடியாக இந்த ரியல் எஸ்டேட் தொழிலில் பாதிக்கப்பட்டிருக்கிற அந்த



உரிமையாளர்களுக்கு நாம் எந்தத் தீர்வையும் காண முடியாமல் இருக்கிற காரணத்தினால்தான் நான் இந்த நேரத்தை இதற்காகப் பயன்படுத்தி, இந்த அமைச்சரவையையும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் அந்த G.O. 150-ஐ உடனடியாக நீங்கள் வாபஸ் பெறுங்கள் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். பணப்புழக்கத்திற்கும், real estate business மீண்டும் தழைத்தெழுவதற்கும் நீங்கள் ஆவன செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஏற்கெனவே நம்முடைய சென்னை போன்ற பல பகுதிகளிலே பல அடுக்குமாடிகள் எல்லாம் கட்டப்பட்டு, அவற்றை வரன்முறைப்படுத்த ஓர் உத்தரவு எல்லாம் போட்டு, நீங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட அவற்றை எல்லாம் சொல்லி இருக்கிறீர்கள். கடந்த ஆட்சியிலேகூட அப்படி இரண்டு முறை அறிவிப்புகள் செய்து, அதற்காக ஓர் ஆணையைப் பிறப்பித்து, அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்து, அதை வரன்முறைப்படுத்துவதற்காக மனுக்களை எல்லாம் பெற்றார்கள். பிறகு, இப்போது நீங்கள் அதிலே கொஞ்சம் தொகையைக் குறைத்துக் கொடுத்திருக்கிற காரணத்தினால், அதிலே 1,500 கோடி ரூபாய்க்கு வருவாய் வரும் என்று எதிர்பார்க்கப்படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. சுமார் 3 இலட்சம் பேருக்கு மேல் இப்போது அந்த விதிமுறைகளை எல்லாம் மீறி வீடுகளை, பல அடுக்கு மாடிகளாகக் கட்டியிருக்கிறார்கள். ஆனால், நமக்கு வந்திருக்கிற மனுக்களோ மிக மிகக் குறைவு. அதிலேகூட வடசென்னையை எடுத்துக்கொண்டீர்கள் என்றால் கூட, அங்கே பட்டாவே யாருக்கும் கிடையாது. அவை எல்லாம் கிராம நத்தமாக இருக்கின்றன. அந்த இடங்களிலே வீடுகள் கட்டியிருப்பவர்கள் நிறையப் பேர் இலட்சக்கணக்கிலே இருக்கிறார்கள். ஆனால், இந்த ஒரு வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் தங்களுடைய வீடுகளை எல்லாம் வரன்முறை செய்து கொள்கிறோம் என்று மனு செய்ய முடியாத நிலையிலே, அந்த வடசென்னை முழுக்க நிறைய வீடுகள் அப்படியே இருக்கின்றன. அவர்களுக்குப் பட்டாவே கிடையாது. ஆகவே, அவர்கள். regularise பண்ணிக்கொள்வதற்குகூட வாய்ப்பில்லை. இந்த வீட்டுமனைகளை எல்லாம் ரெகுலேட் செய்ய வேண்டும் என்று சொன்னால், இப்போது நீங்கள் வெறும் 10 சதவீதம்தான் குறைத்துப் போட்டிருக்கிறீர்கள். நிச்சயமாக—நான் ஏற்கெனவே இந்த மன்றத்திலே பேசியிருக்கிறேன் ஆந்திராவில் ஒரு pattern-ஐ அவர்கள் follow செய்து, அதிலே மிகக் குறைந்த கட்டணத்தை விதித்து, ஏற்கெனவே விதிமுறைகளை மீறிக் கட்டப்பட்டிருக்கக்கூடிய அந்த பல அடுக்கு மாடி வீடுகளை அவர்கள்

அங்கே regularise செய்து கொள்ளலாம், வரன்முறை செய்துகொள்ளலாம் என்று ஆந்திராவிலே பல மாடி வீடுகளை இப்போது அங்கே regularise செய்துக் கொண்டார்கள். ஆனால், நீங்கள் இப்போது 10 சதவீதம் என்று குறைத்துப் போட்டிருக்கக்கூடிய அந்தத் திட்டத்தின் வாயிலாக, அரசுக்கு, நம்முடைய நிதித் துறை அமைச்சர் அவர்கள் எதிர்பார்க்கக்கூடிய நிதி நிச்சயமாக வரவே வராது. நீங்கள் அதை 50 சதவீதமாகவாவது குறைத்து உடனடியாக அறிவிப்பீர்கள் என்று சொன்னால், நிச்சயமாக நிறைய வருமானம் நம்முடைய நிதி அமைச்சகத்திற்குக் கிடைக்கும். Deficit Budget-க்கு உடனடியாக ஒரு தீர்வும் நம்மாலே காண முடியும் என்ற காரணத்தினாலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அதேபோல சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்வது எல்லாம், நீங்கள் அந்த வீடுகளை வரன்முறைப்படுத்துவதற்கு, இன்னும் சில சலுகைகளை அறிவித்து, இன்னும் கொஞ்சம் டைம் கொடுத்து, அப்ளிகேஷன்களை மீண்டும் நீங்கள் கால்பார் செய்து, 50 சதவிகதத்தைக் குறைக்க வேண்டும். அப்போதுதான் இந்த வீடுகளெல்லாம் வரன்முறை செய்யப்படும். ஆந்திராவிற்கு நீங்கள் சில சட்டமன்ற உறுப்பினர்களைக்கூட, ஒரு குழுவாக அனுப்பி, நீங்கள் இன்னும்கூடக் கண்டுபிடித்து, அங்கே அவர்கள் என்ன திட்டங்களைச் செய்திருக்கிறார்கள், எப்படி regularise செய்திருக்கிறார்கள் என்று பார்த்துவிட்டு, தயவுசெய்து, வேண்டுமானால் செய்து காட்டுங்கள், ஏனென்று சொன்னால் நீங்கள் பெரிய பளுவைத் தூக்கி வைத்துவிடுகிறீர்கள். நீங்கள் அந்தக் கட்டடங்களை இடிக்கப் போவதில்லை. இடிக்கப்போனாலும் முடியாது. அப்படியே வைத்துவிட்டால் அரசுக்கும் இழப்புத்தான். அவர்களும் regularise செய்து கொள்ளாமல் அப்படியே நட்டாற்றிலேயே அந்தத் திட்டம் நின்றுவிடக்கூடிய ஒரு நிலை வரும் என்கிற காரணத்தினால் அதை நீங்கள் மீண்டும் பரிசீலனை செய்து, கொஞ்சம் நீங்கள்—கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருந்தாலும்கூட—50 சதவிகிதமாகக் குறையுங்கள் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 5-20*

அடுத்து, இந்த வீட்டுவசதி வாரியத்தைப் பற்றி ஏற்கெனவே நான் சொன்னேன். அந்த வாரியமே ஒரு White Elephant மாதிரிதான். இருக்கிற பணத்தையெல்லாம் சாப்பிட்டுவிட்டு நமக்குப் பெரிய நட்டத்தையே இன்று கொடுத்துக் கொண்டிருக்கிறது. இதிலே நாம் இத்தனை வீடுகள் கட்டினோம், இத்தனை வீடுகள் விற்றோம் என்று சாதனைப் பட்டியலை



வேண்டுமானால் படிக்கலாம். ஆனால், வேதனைப் பட்டியலை யார் படிக்கப்போகிறார்கள் என்றுதான் எனக்குத் தெரியவில்லை. எனக்கு முன்னாலே பேசிய நண்பர், இங்கே பல சாதனைப் பட்டியல்களையெல்லாம் சொன்னார்கள். இங்கே Comptroller & Auditor General அவர்களுடைய ஒரு ஆடிட் ரிப்போர்ட்டிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், நடுத்தர வர்க்கத்திற்கு நீங்கள் கட்டியிருக்கிற வீடுகள், வீட்டுவசதி வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்டிருக்கிற வீடுகள் 1,206 வீடுகள் இன்னும் விற்கப்படாமல் அப்படியே நிலுவையில் இருந்து கொண்டிருக்கின்றன. இதனால் அரசுக்கு முடக்கப்பட்டிருக்கிற தொகை ரூபாய் 17.01 கோடி. நீங்கள் ஆயிரக்கணக்கான வீடுகளைச் சரியாகத் திட்டமிடாமல், அதற்கு டிமான்ட் இருக்கிறதா என்று தெரியாமல், சில இடங்கள் wrong selection of the sites, அந்த site-லே கொண்டுபோய் நாம் வீட்டைக் கட்டினால் யாரும் வாங்கமாட்டார்கள் என்று தெரிந்திருந்தும்கூட.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்றுமே குறைவாகப் பேசுவீர்கள். இன்றைக்குக் கொஞ்சம் சீக்கிரமாக முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே, தயவுசெய்து இவ்வளவு குறைகள் இருக்கிற காரணத்தினாலே, 1,206 வீடுகள் விற்காமல் இருக்கின்றன. எனவே, அந்த வீட்டின் விலையைக் குறைத்தாவது, கொஞ்சம் டிமான்ட்டை நீங்கள் கிரியேட் செய்து அந்த வீடுகளை உடனடியாக விற்று, நீங்கள் வீட்டுவசதி வாரியத்திற்கு வரவேண்டிய வருவாயை உடனடியாகப் பெறவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், ஊரக வளர்ச்சி வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே நிதி 15.29 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தும்கூட பல ஆண்டுகளாகக் கடந்தகால ஆட்சியிலே அந்தப் பணத்தையே பயன்படுத்தாமல் அப்படியே விட்டு வைத்திருக்கிறார்கள். இதுவும் அந்த C.&A.G. report-லே சொல்லப்பட்டிருக்கிறது. நாம் இவ்வளவு பணத்தை வைத்துக்கொண்டு, ஏன் திட்டங்களைச் சரியாகத் தீட்டி, வீடுகளை ஊரக வளர்ச்சித் திட்டத்தின், வீட்டுவசதித் திட்டத்தை நாம் அந்த இடத்திலே உருவாக்காமல் விட்டோம் என்பதையும் இந்த அரசு ஆராய்ந்து; அந்த 15 கோடி ரூபாயை உடனடியாக disburse செய்து, இந்த ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் மூலமாக வீடுகளைக் கட்டித்தர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல—இந்த வீட்டு வசதி வாரியம் என்ன செய்கிறது என்று சொன்னால்—இப்போது சென்னைக்கு வந்திருக்கிற குடிநீர்ப் பஞ்சம், அதேபோல மற்ற பகுதிகளிலேயும் வந்திருக்கிற குடிநீர்ப் பஞ்சம் ஏன் என்பதையும் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.—எங்கேயாவது ஓர் ஏரி இருக்குமென்று சொன்னால், அந்த ஏரியை இந்த வீட்டுவசதி வாரியம் விட்டு வைப்பதேயில்லை. இங்கிருக்கிற வேளச்சேரி ஏரியாக இருந்தாலும் சரி, கொடுங்கையூர் ஏரியாக இருந்தாலும் சரி, அம்பத்தூர் ஏரியாக இருந்தாலும் சரி, எங்களுடைய ஊர் பகுதியை எடுத்துக்கொண்டால் காட்பாடிக்குப் பக்கத்திலே இருக்கிற கழிஞ்சூர் ஏரியாக இருந்தாலும் சரி, நீங்கள் அதை வீட்டு வசதி வாரிய இடமாக மாற்றி, ஏரியைப் பார்த்துப் பிடித்து பிளாட்டுகளைப் போட்டால் யார் வாங்குவார்கள்? அதனால் அந்தத் திட்டம் சரியாக successful ஆகாமல் இருக்கிறது.

இரண்டாவதாக, நீர்நிலைப் புறம்போக்குகளையும், குளம் குட்டைகளையும் நீங்கள் பட்டா போட்டு யாருக்கும் கொடுக்கக் கூடாது என்று அரசிலே விதிமுறைகள் இருந்தாலும்கூட, அதையே ஓர் அரசுத் துறை வீட்டு வசதி வாரியமே நிலத்தை எடுத்து நீங்கள் அங்கே பிளாட்டுகளைப் போட்டு விற்கிறீர்கள் என்று சொன்னால் அங்கே எப்படி மழைத் தண்ணீரைச் சேமிக்க முடியும்? நாம் தற்போது rain water harvesting என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் மழைநீரைச் சேமிக்கிற திட்டத்தை புதிதாகக் கொண்டு வந்து, புதிதாக இதுபோன்ற ஏரிகளை மீண்டும் வெட்ட வேண்டுமென்று சொன்னால் அதற்குப் பல கோடி ரூபாயை இந்த அரசு முதலீடு செய்ய வேண்டும். இருக்கிற ஏரிகளையெல்லாம் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு நீங்கள் புதிதாக இனி ஏரிகளை உற்பத்தி செய்யப் போவதில்லை. ஆகவே, நான் பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த வீட்டுவசதி வாரியமே இனித் தேவையில்லை. தயவுசெய்து அதை நாம் மூடிவிடலாம், ஊழலினால்தான் அது மூடப்பட்டது என்றும் சாக்குப் போக்கு எல்லாம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. என்னைக் கேட்டால் இவ்வளவு செலவை நமக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிற இந்த வீட்டுவசதி வாரியமே தேவையில்லை. நாம் பணத்தை ஒதுக்கீடு செய்தால் P.W.D. துறையே வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்; அரசு ஊழியர்களுக்கோ மற்ற யாருக்கோ, இல்லையென்றால் வீட்டுவசதிச் சங்கங்கள், D.R. Housing வைத்திருக்கிறோம் அவர்களே போய்க்கூட அந்த selection of the sites, private negotiations எல்லாம் செய்து நிலத்தை வாங்கி, வீடுகளை அவர்களுக்கு மனைகளாகக் கொடுத்துவிடலாம்.



இந்த வீட்டு வசதி வாரியத்திலே, 1980-82-லே எல்லாம் இவர்கள் தேவையில்லாமல் பல இடங்களுக்கு 4(1) நோட்டீஸ் கொடுத்தார்கள். அந்த 4(1) நோட்டீஸ் (மணியடிக்கப்பெற்றது) அப்போது கொடுத்தது இன்னும் அதெல்லாம் வாங்கப்படாமல் சிலபேர் stay வாங்கியிருக்கிறார்கள். ஏனென்றால் நீங்கள் அதனை அடிமாட்டு விலைக்குக் கேட்டால் யார் கொடுப்பார்கள்? 4(1) நோட்டீஸ் நீங்கள் கொடுத்தாலும்கூட, அந்த உரிமையாளர்கள் நீதிமன்றம் சென்று ஏற்கெனவே அதற்கு stay பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலங்களெல்லாம் இனி எங்களுக்குத் தேவையில்லை என்று நீங்கள் ஒரு முற்றுப்புள்ளியை—இந்த வீட்டுவசதி வாரியம் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதால்—அதற்கு நீங்கள் ஒரு முற்றுப்புள்ளியை வைத்து விடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அத்தோடு இந்த வாய்ப்பு நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி.

*பிற்பகல் 5-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. சிவபெருமாள்.

***திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சி உறுப்பினர்களும், சான்றோர்களும், வல்லுநர்களும், பாமர மக்களும், தொழிலாளர் தோழர்களும், மாணவச் சமுதாயமும், போற்றி அழைக்கக் கூடிய தமிழகத்தின் விடிவிளக்காகவும், தமிழுக்கு உயிர் எழுத்தாகவும், பெண் இனத்திற்குப் புரட்சிப் புயலாகவும், எங்கள் கழகத்திற்குக் காவல் தெய்வமாகவும், எங்களுக்குத் தாயாகவும் வீற்றிருக்கும் தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி, என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

சுதந்திர இந்தியாவின் வீர வரலாற்றில் முதல் இடமாகத் திகழ்வது என்னுடைய ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி. வெள்ளையனை எதிர்த்து முதன் முதலில் வீரமுழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்ததும் என்னுடைய ஒட்டப்பிடாரம் தொகுதியே. வெள்ளையனை எதிர்த்து சுதேசிக் கப்பலை ஓட்டி, வியாபாரம் செய்த வ.உ. சிதம்பரம் பிள்ளை பிறந்ததும் என்னுடைய ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியே. வெள்ளைக்காரத் துரையைச் சுட்டு வீழ்த்திய வீரவாஞ்சிநாதன் பிறந்ததும் என்னுடைய ஒட்டப்பிடாரம் தொகுதியே. வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்ததும் என்னுடைய சட்டமன்றத்

தொகுதியே ஆகும். வெள்ளையனை எதிர்த்துப் போரிட்ட, போர்ப் படைத் தளபதியாக விளங்கிய வீரன் சுந்தரலிங்கம் பிறந்ததும் என்னுடைய ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியே.

தமிழகத்தின் சட்டமன்றத் தொகுதியிலே இரண்டாவது பெரிய இடமாகக் கூறப்படுவது இந்த ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி. இவ்வளவு சரித்திரப் புகழ் பெற்ற ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியிலே, சென்ற ஆட்சியிலே ஒரு வன்முறைக் கும்பல் வலம் வந்தது என்பதை இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்கிறேன். அந்த வன்முறைக் கும்பலை அடியோடு அழித்து ஒழித்துவிட்டு, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, ஒன்றிய அம்மா பேரவைச் செயலாளராக ஆக்கி, பின் ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக உருவாக்கிய தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, நான் மட்டுமல்ல, (மேசையைத் தட்டும் ஒலி) என் குடும்பம் மட்டுமல்ல, வரும் என் சந்ததியர் அனைவரும் ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரை என் தெய்வமாகிய அம்மா அவர்களுக்கு ஊழியம் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்திலே கூறிக்கொள்கிறேன்.

கடந்த 18-8-2001 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணையின் பேரில், மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் அவர்களால் வாசித்து வழங்கப்பட்ட 2001-2002 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது, தமிழக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற அதிஉன்னதமான நிதிநிலை அறிக்கை அம்மா. இந்தச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பு வழங்கப்பட்டது வீட்டுவசதி வாரிய மானியக் கோரிக்கை. சென்ற ஆட்சிக் காலத்தில், எந்தவிதமான அடிப்படை வசதியும் இல்லாத இடங்களைத் தேர்வு செய்து, இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி சில முறைகேடுகள் நடந்தது தி.மு.க. ஆட்சியிலே. ஆதலால், அம்மா அவர்கள் அந்த இடங்களைக் கண்டறிந்து, குடிதண்ணீர் வசதி, மின் வசதி, சாலை வசதி அமைத்துக் கொடுப்பதற்காக. ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பது நாம் அறிந்த உண்மை. மேலும், 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு' என்ற நல்ல திட்டத்தையும் அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். மேலும் ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டப்படவில்லை என்பதை இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்கிறேன்.



சமூக நீதி காத்த வீராங்கனை எங்கள் அன்னை, தமிழக சமுதாயத்தின் பாதுகாப்பிற்காக 1991 முதல் 1996 வரை பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். அதில் ஒன்றுதான் பெண் சிசு கொலைத் தடுப்புச் சட்டம். இன்றைய சமுதாயத்தில் ஆண் குழந்தை என்றால் பெற்றுக்கொள், பெண் குழந்தை என்றால் கொன்று விடு என்ற அறியாமையை நீக்கி பல இடங்களில் பெண் குழந்தைகளுக்காக காப்பகங்கள் அமைத்துக் கொடுத்தது எங்கள் அம்மாவின் ஆட்சியிலே. ஆனால், சென்ற தி.மு.க. அரசு, அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம் என்பதால், அந்தத் திட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டது. ஆனால், இன்று அம்மா அதற்குப் புத்துயிர் அளித்து வருகிறார்கள். மொத்தத்தில் சென்ற 5 ஆண்டு காலம் ஆட்சி செய்த தி.மு.க. அரசு வேளாண்மைத் துறை பாணியில் சொல்லப் போனால், வெறும் தரிசு நிலமாகத்தான் செயல்பட்டதே தவிர, விளைநிலமாகச் செயல்படவில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்கிறேன். மேலும், இங்கு சில உறுப்பினர்கள் கூறினார்கள், தங்களுடைய சொந்தச் செல்வாக்கில் வெற்றி பெற்றதாகக் கூறினார்கள். அது முற்றிலும் தவறு. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தமிழகத்தின் முதலமைச்சராக ஆக வேண்டுமென்ற எண்ணத்தில் தமிழக வாக்காளப் பெருங்குடி மக்கள் அளித்த வாக்குகள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் கிடைத்த மகத்தான வெற்றியாகும்.

பிற்பகல் 5-30

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு சாதனையைச் செய்து, அதைச் சரித்திரமாக்கி வைத்தது சென்ற தி.மு.க. அரசு. அதுதான் மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினையில் தாமிரபரணி நதிக்கரையில் ஜாலியன் வாலாபாக் படுகொலை போன்ற ஒரு படுகொலையை நடத்தி, 17 அப்பாவி தாழ்த்தப்பட்ட மக்களைக் கொன்று குவித்து அதை சரித்திரமாக்கியது நாட்டிலுள்ள அனைவருக்கும் தெரியும். இக்கொலை திட்டமிடப்பட்ட சதி என்பதாகும். சமுதாயத் தலைவன் என்று கூறிக்கொண்டு, போலி வேஷம் போட்டுக் கொண்டிருக்கும் ஒரு தலைவனாலும், வன்முறைக் கும்பலுக்கு வரலாறு எழுதிய தி.மு.க. அரசாலும் செய்யப்பட்ட சதித் திட்டமாகும். இவ்வாறு தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவன் என்றும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடுகின்ற போராளி என்றும் குரல் கொடுத்துக்கொண்டிருக்கும் எந்தவொரு தலைவனையும் தாழ்த்தப்பட்ட மக்கள் நம்பப் போவதில்லை

என்பதைக் கூறிக்கொண்டு, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் செயல்படத் தயாராக இருக்கிறார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்கிறேன்.

மேலும் எனது தொகுதியின் சில கோரிக்கைகள். எனது தொகுதியில் தலைமையிடமாகிய ஓட்டப்பிடாரத்தில் இன்று வரை பேருந்து நிலையம் இல்லை என்பதை இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்கிறேன். ஆகையினால் அம்மா அவர்கள் கருணைகூர்ந்து எங்களுக்கு ஒரு பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டப்பிடாரம் தொகுதியில் மிக முக்கிய இடமான கயத்தாறு, சென்னை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. அங்கு கனரகத் தொழிற்சாலை ஒன்று அமைத்துத் தர அம்மா அவர்களிடம் வேண்டிக்கொள்கிறேன்.

கயத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மன் சிலை அமைக்கப்பட்ட இடத்தை, சென்ற ஆட்சியாளர்கள் கையகப்படுத்தி, அதில் பூங்கா அமைப்பதாகக் கூறி, பல இலட்சக்கணக்கான தொகையை ஊழல் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்கிறேன். இச்சிலைக்குப் பின்புறம் கட்டபொம்மன் வழிபட்ட கயத்தாறு அகிலாண்ட ஈஸ்வரி அம்மன் கோயில் உள்ளது. அந்தக் கோயிலையும் கட்டபொம்மன் சிலையையும் சுற்றியுள்ள இடத்தைக் கையகப்படுத்தி, அம்மா அவர்கள் ஆட்சியிலே ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் தங்கும் ஒரு சுற்றுலா மையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டாபிடாரம் சட்டமன்றத் தொகுதியில் எந்த ஒரு தொழிற்சாலையும் கிடையாது. ஆகையினால் ஒரு தொழிற்சாலை அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் ஓட்டப்பிடாரம் ஓட்டன் கால்வாய், கயத்தாறு-உப்பாற்றுக் கால்வாய், பொம்மையாபுரம்-வண்டானம் கால்வாய், புதியம்புத்தூர்-மலர்க்குளம் கால்வாய் போன்ற மிக முக்கியமான கால்வாய்கள் உள்ளன. இவற்றில் தூர் எடுத்தால் சுமார் 120 கிராமங்கள் பயன்பெறும் என்பதை இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்கிறேன்.



ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக உள்ளது. சீவலப்பேரி குடிநீர்த் திட்டத்தின் குழாய்கள் ஓட்டப்பிடாரம் வழியாகத்தான் விளாத்திக்குளம் செல்கின்றன. மேலும் தாமிரபரணி குடிநீர்த் திட்டத்தின் குழாய்கள் ஓட்டப்பிடாரம் தொகுதியிலுள்ள கயத்தாறின் வழியாக கோவில்பட்டி செல்கின்றன. இந்த இரண்டு திட்டங்களின் மூலம் ஓட்டப்பிடாரம் தொகுதியில் ஒரு சில கிராமங்கள் மட்டும் பயன்பெறுகின்றன. ஆகையினால் எங்களுக்கு தனியாக ஒரு பைப் லைன் அமைத்துத் தர வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

ஓட்டப்பிடாரம் தொகுதியிலுள்ள அனைத்துக் கோயில்களிலும் பல ஆண்டுகளாக எந்தவிதத் திருப்பணியும் நடைபெறவில்லை. ஆகையால் அதையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மேலும் பல வியாபார மக்கள் வசிக்கும் என் தொகுதியில் தூத்துக்குடியில் இருந்து புதியம்புத்தூர், ஓட்டப்பிடாரம் கீழ்முடிமன், பசுவந்தனை, காமநாயக்கன்பட்டி வழியாக அரசு விரைவு பேருந்து விட அம்மா அவர்களை ஆவன செய்யும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மணியாச்சி காவல் சரகத்திலுள்ள, மணியாச்சி பசுவந்தனை, கொப்பம்பட்டி, கயத்தாறு, நாலாட்[?]ன்புத்தூர், நாரைக்கிணறு போன்ற காவல் நிலையங்களுக்கு சென்ற ஆட்சியிலே ஜீப்புகள் வழங்கவில்லை. இது வன்முறை அடிக்கடி நடக்கின்ற தொகுதியாக இருந்தும், சென்ற ஆட்சியிலே காவல் நிலையத்திற்கே ஜீப்பு வழங்கப்படவில்லை என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அம்மா அவர்களின் ஆட்சியிலே தென்மாவட்டங்களிலிருந்து வரும் காவல் துறை அதிகாரிகள் தங்களுடைய துறை சம்பந்தப்பட்ட கோப்புகளை எடுத்துக்கொண்டு சென்னைக்கு வருகிறார்கள். அந்தக் கோப்புகளை அவர்கள் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு, உயர் நீதிமன்றத்திலோ அல்லது தலைமை காவல் துறை அதிகாரியிடமோ ஒப்படைப்பதற்கு அவர்கள் தங்குவதற்குச் சரியான வசதி கிடையாது. (மணியடிக்கப்பெற்றது) ஆகையினால் காவலர் தங்குவதற்கு "காவலர் தங்கும் விடுதி" ஒன்று ஏற்படுத்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றை மட்டும் கூறிக்கொள்கிறேன். எல்லாத் துறைகளிலும், செயல் திட்டங்களிலும், சமூகப் பொருளாதார வளர்ச்சியிலும் இந்தியாவில் எல்லா மாநிலங்களைக் காட்டிலும் தமிழகம்

முதலிடத்தில் திகழ வேண்டுமென்பதற்காக கண் துஞ்சாது, உடல், பொருள், ஆவி அனைத்தையும் நம் மக்களுக்காக மக்கள் தலைவி அம்மா அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த அம்மாவின் ஆட்சியைக் கலைக்க சில நாட்களாக திராவிட முன்னேற்றக் கழகத்தினர் துடிதுடித்துக் கொண்டிருக்கின்றார்கள். (மணியடிக்கப்பெற்றது)

சென்ற ஆட்சியிலே பட்டப்பகலிலே பலமாடிக் கட்டடத்திலே பத்மநாபன் கொலைச் சம்பவம் நடந்ததே? அதுபோன்று நடந்து விட்டதா? அல்லது கள்ளத் தோணியில் இலங்கை சென்று விடுதலைப் புலிகளோடு தொடர்பு கொண்டார்களே? அந்தச் சம்பவம் நடந்துவிட்டதா? (மேசையைத் தட்டும் ஒலி) அல்லது கோவை வெடிகுண்டு சம்பவம் நடந்துவிட்டதா? அல்லது தாமிரபரணி நதிக் கரையிலே 17 பேரைக் கொன்ற சம்பவம் நடந்துவிட்டதா? அல்லது சென்ற ஆட்சியிலே தென் மாவட்டங்களில் தலைவிரித்தாடிய சாதிக் கலவரம்தான் நடந்துவிட்டதா? எது நடந்து விட்டது? அல்லது ஏழை மக்கள் பயனடையும் ரேஷன் அரிசியை தூத்துக்குடியிலிருந்து இரயில் மூலமாக கடத்தல் செய்தார்களே, அந்தச் சம்பவம் நடந்துவிட்டதா? எது நடந்து விட்டது?

பிற்பகல் 5-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுகுறித்து நேற்றைய தினம் அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. அ. சிவபெருமாள்:** தி.மு.க. ஆட்சியிலே இப்படி ஆயிரக்கணக்கான சம்பவங்கள் நடந்தன. (குறுக்கீடு) தமிழகத்தில் அப்போதெல்லாம் கலைக்கப்படாத ஆட்சி இன்று அம்மாவின் புனித ஆட்சியை அவசியம் இல்லாமல் கலைக்கச் சொல்லுகிறார்கள். கடந்த அரசு வேதனையைப் படைத்து அழிந்து விட்டது. அம்மாவின் அரசு இன்று சாதனை படைத்து ஆளுகிறது. இந்த 5 ஆண்டுகளில் மட்டுமின்றி தமிழகம் இருக்கும்வரை, தமிழ்ச் சமுதாயம் வாழும்வரை, தங்கத் தலைவி தமிழகத்தின் தன்னிகரற்ற தலைவி நமது புரட்சித் தலைவியின் ஆட்சி அமையும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறிக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு மக்கள் குடியேறுவதாலும் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் அதிகரித்து வரும் வீட்டுவசதி பற்றாக்குறையைப் போக்க பல நல்ல விரிவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

தமிழக அரசு அலுவலர்கள் குடியிருப்புக்காக வாடகைக் குடியிருப்புகளைக் கட்டி வருகிறது. கட்டப்பட்ட அடுக்குமாடி வீடுகள் பல ஆண்டுகளாக பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன. குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட பல குடியிருப்புகளில் மக்கள் வாழ்வதற்கு அச்சப்படுகின்ற சூழ்நிலை இன்றைக்கு உருவாகியுள்ளது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், என்னுடைய சேலம் இரண்டாவது தொகுதியில் பழைய பஸ் நிலையம் எதிரில் இருக்கின்ற அடுக்குமாடிக் குடியிருப்புகளும், செவ்வாய்பேட்டை காளியம்மன் கோவில் எதிரில் இருக்கின்ற அடுக்குமாடி வீடுகளும், சித்தர் கோவில் ரோடில் இருக்கின்ற அடுக்குமாடி வீடுகளும், இதுபோன்ற பல அடுக்குமாடிக் குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. அரசு 2000-2001 ஆம் ஆண்டில் சீரமைப்புப் பணிக்காக ரூபாய் 13 கோடியை மட்டும் ஒதுக்கி இருக்கிறது. அரசு வருங்காலங்களில் வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் கட்டிய அடுக்குமாடி வீடுகளைப் பராமரிப்பதற்கு கணிசமான நிதியை ஒதுக்கி, இருக்கின்ற கட்டடங்களைப் பராமரிப்பு செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2000-2001 ஆம் ஆண்டில் வீட்டு மனை விரைவு ஒதுக்கீடு திட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் மூலமாக 13,972 மனைகளும், தமிழநாடு வீட்டு வசதி வாரியத்தின் பிற திட்டங்களின்கீழ் 10,151 மனைகளும், ஆக 24,123 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் இந்த நிதி ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதை மாவட்ட வாரியாக அபிவிருத்தி செய்து தர வேண்டுமாய் அரசை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. கார்த்தி] [2001 செப்டம்பர் 11

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் விற்கப்பட்ட அடுக்குமாடி வீடுகளுக்கும், நிலங்களுக்கும் பல பகுதிகளில் நீண்ட காலமாக கிரயப் பத்திரம் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இதுவரையில் பத்திரங்கள் வழங்காமல் இருக்கின்ற அந்தச் சூழ்நிலையை அரசு விரைவில் பரிசீலனை செய்து உடனடியாக அவர்களுக்கு கிரயப் பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் வீடுகளை கட்டி அவற்றை முழுமையாகப் பராமரிப்பதில்லை. அந்த இடங்களை மாநகராட்சியிடம் ஒப்படைப்பது இல்லை. இதனால் குடியிருப்பவர்களுக்கு பல ஆண்டுகளாக குடிநீர், சாலை, சாக்கடை, தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகளை மாநகராட்சியாலும் செய்து தரமுடியாத சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டுள்ளது. ஆகவே, கட்டடங்களைக் கட்டி முடித்தவுடன் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அல்லது நகராட்சியிடம் சம்பந்தப்பட்ட நிலங்களை விரைவில் ஒப்படைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில், குறிப்பாக சேலம் மிட்டாய் அய்யம்பெருமாள் பட்டி கிராமம், ஏற்காடு, சேலம் புதிய பஸ் நிலையம், நாமக்கல் போன்ற பல மாவட்டங்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் விற்கப்படாத மனைகள். வீடுகளின் எண்ணிக்கை 2001 ஆம் ஆண்டில் 32,387 ஆக உயர்ந்து இருக்கின்றது. இதனுடைய மதிப்பு இன்றைக்கு ரூபாய் 514 கோடி ஆகும். 2000-2001 ஆம் ஆண்டில் நடப்பு வட்டி விகிதத்தைக் கணக்கிடும்போது வட்டியாக மட்டும் ரூ.134.33 கோடி வாரியத்தால் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் காரணம், கடந்த ஆண்டுகளிலே தேவைக்கு அதிகமாக வீடுகளைக் கட்டி, அதை விற்பதற்கு நடவடிக்கை எடுக்காமல், தொடர்ந்து பல மாவட்டங்களில் கட்டடங்களாகக் கட்டி வாரியத்தினுடைய நிதியை முடக்கியதால் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இந்த இழப்புகளைச் சரிசெய்ய நல்ல வழிமுறைகளைக் கண்டறிந்து விலை நிர்ணயம் செய்வதில் தேவையான மாறுதல்கள் செய்து நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.



2001 செப்டம்பர் 11] [திரு. மு. கார்த்தி]

பிற்பகல் 5-40

அதேபோல, நகருக்கு அருகில் இருக்கின்ற அனைத்து குடிசைப் பகுதிகளுக்கும் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாலை வசதி மற்றும் பொதுக் கழிப்பிடங்கள், மழை நீர் வெளியேற்றும் வசதிகள் மற்றும் தெரு விளக்கு அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கு 1970 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் இன்றைக்கு மேற்கண்டுள்ள அனைத்து வசதிகளையும் பல குடிசைப் பகுதிகளுக்கு முழுமையாகச் செய்து கொடுக்கவில்லை. இன்றைக்கு பல பகுதிகளில் நகருக்கு அருகில், அடிப்படை வசதிகள் ஏதுமில்லாமல், சாக்கடை கழிவுநீர் வெளியே செல்வதற்கு வழியில்லாமல் தேங்கி நிற்பதனால் சுகாதார நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. இதைக் கவனத்தில்கொண்டு நிதியை ஒதுக்கி, குடிசைப் பகுதிகளை நல்லமுறையில் பராமரிக்க வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் திருமணிமுத்தாறு அபிவிருத்தி செய்யும்போது, அந்தப் பகுதியில் இருந்த நூற்றுக்கணக்கான குடிசைகளை அகற்றி, சேலத்தான்பட்டி ஏரிப் பகுதியில் அரசு நிலம் ஒதுக்கிக் கொடுத்து, அதில் அடுக்குமாடி வீடுகளைக் கட்டியும் பல ஆண்டுகளாக சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கிறது. ஏரிப் பகுதியாக இருக்கும் காரணத்தால், தற்போது அவர்கள் இருக்கின்ற குடிசைப் பகுதிகளில் மழைக் காலங்களில் வீடுகளுக்குள் தண்ணீர் நிரம்பிவிடுகிறது. அவர்களுக்கு குடிநீர் வசதியும், மின்சார வசதியும் முழுமையாகச் செய்து தரப்படவில்லை. ஆகவே, சேலத்தான்பட்டி ஏரிப் பகுதியிலுள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளார்கள். ஆகவே, அரசு அவர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளை, பல ஆண்டுகளாக ஒதுக்கித் தராமல் இருக்கின்ற வீடுகளை, (மணியடிக்கப்பெற்றது) உடனடியாக ஒதுக்கித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க ஆவனசெய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மக்கள் தொகை அடர்த்தியைப் பொறுத்தமட்டில், தமிழகம் நமது நாட்டின் ஐந்தாவது அதிக மக்கள் தொகை அடர்த்தியுடைய மாநிலமாக அமைந்துள்ளது. 1991-ல் எடுக்கப்பட்ட ஒட்டுமொத்தக் கணக்கின்படி நமது நாட்டில் ஒரு மனிதனுக்கு கிடைக்கக்கூடிய நிலப்புரப்பளவு 0.50 எக்டேர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், நமது மாநிலத்தில் இவ்விகிதாச்சாரம்

ஒரு மனிதனுக்கு 0.20 எக்டேர் என மிகக் குறைந்த அளவில் உள்ளது. நமது நாட்டில் நகர்ப்புற மக்கள் தொகை நாடு முழுவதும் ஒரே சீராக இல்லாமல், பெருநகரங்களிலும், மாநிலத் தலைநகரங்களிலும் மட்டுமே மிக அதிகமாக உள்ளது. இதற்கு சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் செய்யப்பட வேண்டிய முதலீடுகள் அனைத்தையும் பெருநகரங்களுக்கே ஒதுக்கீடு செய்வதுதான் காரணம்.

மாநிலத்தின் நகர்ப்புற வளர்ச்சிக்கான நெறிமுறைகள் பற்றி தயாரிக்கப்பட்டுள்ள வரைவு அறிக்கையில், 2011 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மக்கள் தொகை 7.14 கோடியாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. அதில் 2.8 கோடி மக்கள் அதாவது 40 விழுக்காடு நகர்ப்புற மக்கள் தொகையாகவே அமைந்திருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, இதுபோன்ற சூழ்நிலையில் வீட்டுவசதி, பொழுதுபோக்கு, போக்குவரத்து போன்றவற்றில் நகர்ப்புறத்தில் தொலைநோக்குப் பார்வையுடன் முறைப்படி திட்டங்களை அரசு செய்யவேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, நகர வளர்ச்சி என்பதை வீட்டுவசதித் துறை உருவாக்குகின்றது. நகரங்கள் மிக வேகமாக வளர்ந்து வருகின்ற காரணத்தினை, விவரங்களை எளிதில் புள்ளிவிவரங்களோடு சொல்கின்றனர். நகர்ப்புறங்களில் மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும், கிராமங்களைவிட இங்கே அதிகமாகக் கிடைக்கின்ற காரணத்தால் மக்கள் கிராமங்களிலேயிருந்து நகரங்களுக்கு வருகிறார்கள். பல நகரங்களில் பிளான் அப்ரூவல் பெறாமல் வீடுகளைக் கட்டி விடுகிறார்கள். பிற்காலத்தில் அதிகாரிகள் அதைப் பார்வையிட்டு, நோட்டீஸ் வழங்கி, அவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி, பிறகு அப்ரூவல் கொடுக்கக்கூடிய ஒரு முறை இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனால் பலவிதங்களில் ஊழல் நடப்பதற்கும், கையூட்டல் நடப்பதற்கும் இன்றைக்குச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே. பிளான் அப்ரூவல் செய்வதில் ஒரு நல்ல முறையை அமல்படுத்தவேண்டிய அவசியம் இன்றைக்கு இருக்கிறது. சேலம் மாநகராட்சி டவுன் பிளானிங் துறையில் கட்டடம் மற்றும் மனைகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டு வந்தது. தற்போது லோக்கல் பிளானிங் குழுமங்கள் அமைக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் இரண்டு இடங்களிலும் அனுமதி பெறவேண்டியுள்ளது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். கட்டடத் தொழில், மனைப் பிரிவு தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையை மாற்றி அக்டோபர்



2000 ஆம் ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிச் சட்டம் மற்றும் விதிகளை மீண்டும் அமல்படுத்த, நகராட்சியே அனைத்து அனுமதிகளையும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கரூர் நம்பவனி கிராமத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், 1981 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளுக்கு இதுவரை இறுதி விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. மேற்கண்ட வீடுகளுக்கு இறுதி விலை நிர்ணயிக்க (மணியடிக்கப்பெற்றது) அறிவுறுத்தினால், அபிவிருத்தி செய்ய தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு பணம் செலுத்தத் தயாராக உள்ளனர் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நாமக்கல் நகரில் உள்ள நாமக்கல் முல்லைநகர் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியக் காலனிகளில் நகராட்சி இதுவரை குடிநீர் வழங்கவில்லை. அந்தப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இந்த அளவிற்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 5-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எஸ்.கே. செல்வம்.

***திரு. எஸ்.கே. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாயுள்ளத்தோடு என்னை வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியினுடைய வேட்பாளராக அறிவித்து, கொட்டும் மழையிலே பிரச்சாரம் செய்து, கூட்டப்பஞ்சாயத்து அரசியல்வாதிகளுக்கும், அராஜக அரசியல்வாதிகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) என்னைப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்த தமிழகத்தின் தானைத் தலைவி, புரட்சித் தலைவி, எங்கள் இதய தெய்வம், அம்மா அவர்களுடைய பொற்பாதங்களிலே என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை நான் முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன். எனக்கு வாக்களித்த வீரபாண்டி வாக்காளப் பெருமக்களுக்கும்,. கழகத்தினுடைய முன்னோடிகளுக்கும், தோழர்களுக்கும் கூட்டணிக் கட்சி நண்பர்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே வீட்டுவசதித் துறை மானியக் கோரிக்கையிலே கன்னிப் பேச்சு பேசுகின்ற வாய்ப்பை எனக்களித்த பேரவைத் துணைத் தலைவர் அவாகளுக்கு

மீண்டும் மீண்டும் என் நன்றி கலந்த வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான வீட்டுவசதி என்பது, கிராமம் மற்றும் நகர்ப்புற குடிசைவாழ் மக்கள், ஏழையெளிய மக்களுக்குக் கிடைப்பது என்பது அரிதாக உள்ளது. இதை நிரந்தரமாகப் போக்குகின்ற வகையிலே. மாண்புமிகு முதல்வர் அவர்கள் "ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" என்ற குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக, கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களை உருவாக்கி, அதில் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கின்ற அனைத்துத் தர மக்களும் நன்மை பெறும் பொருட்டு, அவரவர் விரும்பத்தக்க வகையில், அவர்களின் வசதிக்கு ஏற்ப வீடுகளைக் கட்டிக்கொள்கின்ற, குறைந்த வட்டியில் கடன்கள் வழங்கப்படுகின்ற சிறப்பான முறையில் புரட்சித் தலைவி அரசானது,—அவர் தலைமை ஏற்றவுடன் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று சிறப்பாகச் செயல்பட்டு,—அனைத்து மாநிலங்களுக்குமே முன்னோடியாக விளங்கி, இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டு, பல்வேறு சிறப்புப் பரிசுகளைப் பெற்றிருக்கிறது.

இங்கே கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, ஏதோ ஊழல் செய்யாத உத்தமர்கள் போல வெளியேறி இருக்கின்றனர். அவர்களைப்பற்றி நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். நடைபெற்ற தி.மு.க. ஆட்சியிலே பல்வேறு சீர்கேடுகள், இத்துறையில் நடந்துள்ளன. அவற்றைக் குறிப்பிட்டுச் சொல்ல, கோடிட்டுக் காட்ட நான் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன், குறிப்பாக, கடந்த தி.மு.க. ஆட்சியிலே, சமத்துவபுரம் என்ற பெயரிலே கட்டப்பட்ட வீடுகள் அனைத்தும், அனைத்து இன மக்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படாமல், தங்களுடைய கட்சிக்காரர்களுக்கும், தங்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இச்சலுகையினை வசதிபடைத்தவர்களும் கடந்த ஆட்சியில் ஆளுங்கட்சியில் செல்வாக்கு பெற்றவர்களும், அனுபவித்தும், வீடுகளைப் பெற்று, அந்த வீடுகளை இன்று வாடகைக்கு விட்டு, வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், அனைத்து சமத்துவபுர வீடுகளின் ஒதுக்கீடுகளையும் விசாரணை செய்து, சட்டரீதியாக நடவடிக்கை எடுத்து, போலியானவர்களை அப்புறப்படுத்த வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.



அதேபோல, முந்தைய தி.மு.க. ஆட்சியிலே எனது தொகுதியிலுள்ள சேலத்தான்பட்டி ஊராட்சியிலே குடிசை மாற்று வாரியத்தின் மூலம் சுமார் 840 வீடுகள் கட்டப்பட்டு, சுமார் 2½ ஆண்டுகள் ஆகியும், தனது கட்சிக்காரர்களுக்கு பிரித்து, பங்கு போட்டுக் கொள்வதிலே ஏற்பட்ட உட்கட்சித் தகராறு காரணமாக பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட வீடுகளைப் பராமரிக்காமல், ஒதுக்கீடு செய்யாமல், பாழடைந்து வருகின்றன என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரியப்படுத்துவது, சட்டமன்ற உறுப்பினராகிய எனது கடமையாகும். ஆனால், நமது புரட்சித் தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்றவுடன் உடனடியாக அமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுத்து, ஒதுக்கீடு செய்தமைக்கு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினை தொகுதி மக்களின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது வீரபாண்டி தொகுதியினுடைய அத்தியாவசியத் தேவைகள் குறித்து கொஞ்சம் எடுத்துச் சொல்ல நேரம் வழங்க பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களிடம் மனமாரக் கேட்டுக்கொள்கிறேன். வீரபாண்டி தொகுதிக்கு உட்பட்ட சேலம் இரும்பாலையைப் பற்றி இங்கு பல்வேறு தலைவர்கள் பல்வேறு விதமாக அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். ஆனால், மற்றவர்கள் கேட்பதைவிட அதை நான் கேட்பது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். காரணம், வீரபாண்டி தொகுதிக்கு உட்பட்ட வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத்திலே இந்த சேலம் இரும்பாலை இருக்கின்றது. ஆனால், இந்த இரும்பாலையைப் பொறுத்தவரையில் ஏதோ தனியாருக்கு விற்கின்றார்கள்; அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். ஆனால், ஒன்றை மட்டும் நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த முயற்சியைத் தடுத்து நிறுத்தியதே புரட்சித் தலைவி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், தேர்தலுக்கு முன்பாகவே அந்தத் தொகுதியிலே பிரச்சாரம் செய்ய வரும்போது, புரட்சித் தலைவி அவர்கள் ஒரு அறைகூவல் விட்டிருக்கிறார்கள். இந்த இரும்பாலையை, இப்போது இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு விற்றால்கூட, நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அதை எடுத்துக கொள்வோம் என்று சொன்ன ஒரே காரணத்திற்காக, இந்தத் திட்டம் தற்போது கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, இந்தத் திட்டத்திற்காக சுமார் 4,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. ஆனால், அதில் 1,000 ஏக்கர் நிலம் மட்டும்தான்--500 ஏக்கர் நிலம்

ஃபேக்டரியாகவும், 500 ஏக்கர் நிலம் அங்கே பணிபுரிகின்ற ஊழியர்களுடைய வீடுகளாகவும்—இருக்கின்றன. மீதமுள்ள 3 ஆயிரம் ஏக்கர் நிலம் தரிசாக இருக்கிறது. நமது இதய தெய்வம் அம்மா அவர்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அந்த நிலத்தை நிலச் சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்து அவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-50*

அதே சமயத்திலே வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற அக்ரபாளையம் ஊராட்சியில், லட்சுமணூர் பகுதி மக்கள் நீண்டகாலமாக பல்வேறு போராட்டங்களைச் செய்து கொண்டே இருக்கிறார்கள். ஏனென்றால், அந்தப் பகுதியிலிருந்து திருமணிமுத்தாற்றினைக் கடக்க வேண்டுமென்றால், 5 கிலோ மீட்டர் சுற்றி வரவேண்டும். ஆகவே, அம்மா அவர்கள், அவர்களுக்கு ஒரு தரைப்பாலத்தை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற ஆட்டையாம்பட்டி பேரூராட்சி பஸ் நிலையத்தில் ஒரு வணிக வளாகத்தை அமைத்துக் கொடுக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற இளம்பிள்ளை பேரூராட்சியில் ஒரு பஸ் நிலையத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதைவிட மிகவும் முக்கியமான பிரச்சினை என்னவென்றால் எனது தொகுதியில்தான் சேலத்திலிருந்து கோயம்புத்தூருக்குச் செல்கின்ற இரயில் பாதை அமைந்திருக்கிறது. இந்தப் பாதையில் இரு பக்கமும் என்னுடைய தொகுதி அடங்கி இருக்கின்ற காரணத்தினால் அடுத்த பகுதியிலே இருக்கின்ற பாதையைக் கடக்க தார்ச் சாலைகளை அமைக்க, இரயில்வே துறையினுடைய அனுமதி பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அடுத்த பகுதியிலே இருக்கின்ற இடங்கள் தரிசு நிலங்களாகக் காட்சி அளிக்கின்றன. ஆகவே, நம்முடைய புரட்சித் தலைவி அரசு அந்தத் துறையிடம் அனுமதியைப் பெற்று அடுத்த பகுதியிலே தார்ச்சாலை அமைக்க முன்வரவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அப்படி



அமைக்கப்படுகின்ற பகுதியெல்லாம் வீரபாண்டி ஊராட்சியிலேயுள்ள அரியானூர், அக்ரஹாரம் பகுதிகள்; உத்தமசோழபுரம் ஊராட்சியிலே மலங்காடு, ஆணைக்கவுண்டன் என்ற பகுதிகள்; பெரிய சீரகாபடி ஊராட்சியிலே பொதியந்தெரு பகுதிகள்; சேனைப்பாளையம் ஊராட்சியிலே அய்யம்பாளையம் பகுதிகள் இரயில்வே நிர்வாகத்திடம் அனுமதி பெற வேண்டிய பகுதிகள் ஆகும்.

அதைவிட என் தொகுதியிலே வெள்ளிப்பட்டறை தொழில்கள் அதிகமாக இருக்கின்றன. அதற்கு ஒரு பாதுகாப்பு வேண்டும். ஏனென்றால் இவர்கள் எல்லாம் அருகிலே இருக்கின்ற கர்நாடகா மாநிலத்திற்கும், கேரளா மாநிலத்திற்கும் சென்று தொழில் செய்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கயிறு திரிக்கும் தொழில் நடக்கிறது. உரிய முறையிலே இவர்களுக்குக் கடன் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், இந்தத் தொகுதியைப் பொறுத்தவரையில் சிவதாபுரம் சாலையில் மேம்பாலம் ஒன்றினை இரயில்வே துறையினுடைய அனுமதியைப் பெற்று கட்ட வேண்டும்.

அதைவிட முக்கியமானது என்னவென்றால், இந்தத் தொகுதியைப் பொறுத்தவரையில் சேலம் புதிய பஸ் நிலையம், சேலம் இரயில் நிலையம், சேலம் பால் பண்ணை, சேலம் இரும்பாலை, அரசு மருத்துவக் கல்லூரி இருக்கின்றன. சேலம்-தர்மபுரி ஒருங்கிணைந்த கயிறு திரிப்போர் சங்கம் மற்றும் மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்கள், நுகர்பொருள் வாணிபக் கழகம் போன்று அரசு பொது நிறுவனங்கள் அனைத்தும் உள்ளன. ஆனால் இதிலே என்ன புண்ணியம்? ரோஜா என்று சொன்னால் மட்டும் மணம் வீசவா போகிறது? கடந்த கால ஆட்சியில் இந்தத் தொகுதியில் விளம்பரம்தான் பெரியதாக இருந்ததே தவிர உருப்படியான செயல் திட்டங்கள் ஏதும் நடைபெறவில்லை. மேலும் சரியான சாக்கடை வசதி, வீட்டுமனைப் பட்டாக்கள், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் போன்றவைகளும் எளியவர்களுக்குக் கிடைக்கவேயில்லை. ஆகவே, இனிமேலாவது இந்த வீரபாண்டி தொகுதி நம்முடைய புரட்சித் தலைவி காலத்திலே ஒரு வளமான தொகுதியாக மாறும் என்பதில் எனக்கு ஐயமில்லை. ஆகவே, இந்த இனிய நேரத்திலே, புரட்சித் தலைவியினுடைய புகழ் ஓங்கிடும் வகையில் என்றென்றும்

இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நாங்கள் நன்றியுடையவர்களாக கடமையாற்றுவோம் என்ற உறுதியினைக் கூறி, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். மகேஸ்வரி, கன்னிப்பேச்சையெல்லாம் நீங்கள் கடந்து வந்துவிட்டீர்கள். 5 நிமிடத்திலே கச்சிதமாகப் பேசி முடித்துவிடுங்கள்.

***திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எலிவளையானாலும், தனிவளை வேண்டும், ஏழையானாலும் ஏற்றதொரு இல்லம் வேண்டும் எனும் வகையிலும், கல்லாதாரும் இல்லை, பொருள் இல்லாதாரும் இல்லை, இல்லம் இல்லாதாரும் இல்லையென்று சொல்லும் வகையிலும் 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' எனும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உன்னதக் கனவினுக்கு உருக்கொடுத்து, உயிர் கொடுத்து, அதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல செயல்வடிவம் கொடுக்கும் வகையிலே உயரிய பல திட்டங்களைத் தீட்டி கொள்கை விளக்கக் குறிப்பாக்கி நம்முடைய கைகளிலே தவழவிட்டிருக்கும் எங்கள் மங்காப் புகழ்பெற்ற கொங்கு தேசத்தின் கொள்கைச் சிங்கமாக இங்கே கொலுவீற்றிருக்கும் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியினையும் நல்வாழ்த்துக்களையும் உரித்தாக்கிக்கொள்கின்றேன்.

சுதந்திரம் எனது பிறப்புரிமை என்பது போல, குடியிருப்பு எங்கள் குடியுரிமை என்று ஒவ்வொரு தமிழ் மகனும் மார்த்தட்டிச் சொல்கின்ற வகையிலே குடும்பத்திற்கு ஒரு வீடு என்னும் அற்புதமான திட்டத்தை அறிமுகம் செய்து வைத்தமைக்காக அன்புசால் முதல்வர் அவர்களுக்கு எனது அகமார்ந்த நன்றியறிதலை எனது சார்பாகவும், காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகவும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், ஆசிய ஜோதியின் அன்பு வழித் தோன்றல் அன்னை இந்திராகாந்தி அவர்களின் ஒரு அருந்தவக் கனவாக இது இருந்து வந்திருக்கிறது. ஆகவே, அந்த வகையிலே எங்கள் அன்னை அவர்களின் அன்றைய கனவு இன்றைக்கு தமிழகத்தின் அன்னையாய் இருந்து வருகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் வாயிலாக (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே ஈடேறிக் கொண்டிருப்பது எங்களுக்கெல்லாம் மெத்த மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கின்றது.



அதுமட்டுமல்ல, கோபுரங்களை எல்லாம் குடிசைக்குத் தள்ளி, சமதர்மம் பேசிக்கொண்டிருந்தவர்களுக்கு மத்தியிலே இன்றைக்கு குடிசைகளை கோபுரங்களுக்கு நிகராக உயர்த்தி, கொள்கைக் குன்றாக உயர்ந்து நிற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களை நாங்கள் மட்டுமல்ல, இன்றைக்கு தமிழக மக்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்றென்றும் நன்றி உணர்வோடு நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நேரத்திலே கடந்த ஆட்சியாளர்களும் ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பொற்காலம், பொற்காலம் என்று சொல்லி, நம்மைக் கற்காலத்திற்கு இட்டுச் சென்றவர்கள், பொற்காலம், பொற்காலம் என்று சொல்லி, நமக்குப் போதாத காலத்தைத் தந்து விட்டுச் சென்றவர்கள், பொற்காலம் என்பதன் உண்மையான பொருளைப் புரிந்துகொள்ள வேண்டும். நற்றமிழ் மக்களின் நற்காலம் எது என்பதையும் அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்; தெரிந்துகொள்ள வேண்டும் என இந்த நேரத்தில் ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 5-55

அதேபோன்று, இனி, வீட்டுவசதி வாரியத்தின் வாயிலாகவும், குடிசைமாற்று வாரியத்தின் வாயிலாகவும் குடியிருப்புகள் அமைக்கப்படும்போது, கடந்த ஆட்சியாளர்களைப்போல, பணங்களை மட்டும் பார்க்காமல், மனங்களைப் பார்க்கின்ற மனிதநேயம் உள்ள நல்ல காண்ட்ராக்டர்களிடம், மனசாட்சி உடைய, தங்களைப்போல் மனசாட்சி உடைய காண்ட்ராக்டர்களிடம் இந்தக் கட்டுமானப் பணிகளை ஒப்படைக்க வேண்டும் என்பது, இந்த நேரத்திலே எனது தாழ்மையான கருத்தாக வைத்துக்கொண்டு, அப்போதுதான் தரமான கட்டடங்கள் உருவாகும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், கடந்த ஆட்சியாளர்கள், சிமெண்ட் விலையைத்தான் மிகத் தாராளமாக உயர்த்திவிட்டார்கள்; சிமென்டையாவது சற்று தாராளமாகப் போட்டு கட்டடங்களைக் கட்டியிருக்கலாம். அவர்கள் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்ட பல்வேறு கட்டடங்கள், சில ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலே கூட, அந்த சிமெண்ட் எல்லாம் உதிர்ந்து, செங்கற்கள் மட்டும் அங்கே சிரித்துக் கொண்டு நிற்கின்றன. ஒருவேளை அவர்கள் உற்பத்தி செய்த சிமெண்டின் தரமே அவ்வளவுதானோ என்னவோ தெரியவில்லை; அதுமட்டுமல்ல; பல வீடுகளிலே கட்டடங்கள் மிகமிக பலவீனமான நிலையிலே இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், செங்கல் சிரித்துக் கொண்டிருக்கிறதா, அதையும் எடுத்துக் கொண்டு போய்விட்டார்களா? (சிரிப்பு)

**திருமதி எஸ். மகேஸ்வரி:** அதாவது மிகமிக பலவீனமான நிலையிலே இருக்கிறது. நான் சில அடுக்குமாடி வீடுகளுக்குச் சென்றிருந்தபோது, அந்த மாடிப்படிகள் முடிவடையும் இடத்திலே இருக்கின்ற அந்த சம தளங்கள் இடிந்துபோய், கிட்டத்தட்ட அங்கே இருக்கின்ற மக்கள் long jump, high jump போன்ற வித்தைகளையெல்லாம் செய்து, வீட்டுக்குள் செல்ல வேண்டிய நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தரமான ஆட்சியைத் தருகின்ற தாங்கள், நிச்சயமாக தரமான வீடுகளையே தர வேண்டுமென்று சொல்கிறேன். தரமான வீடுகளைத் தராத காரணத்தினால்தான், மாண்புமிகு திரு. ஞானசேகரன் போன்ற உறுப்பினர்கள் எல்லாம் வீட்டுவசதி வாரியமே மூடப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் குறைகளை நீங்கள் போக்கித் தரவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, 2001-2002 ஆம் ஆண்டில் அரசு அலுவலர்களுக்கு, 354 அடுக்கு மாடி வீடுகள் கட்டப்படும் எனவும், பழைய குடியிருப்புகளுக்கு 13 கோடி ரூபாய் செலவில் சிறப்பு சீரமைப்புப் பணிகள் நடைபெறும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்க ஒன்று. ஆனால், அதேசமயம், இதேபோன்று சீரமைப்புப் பணிகளை நான் ஏற்கெனவே சொன்னதுபோல, மிகமிகப் பாதிப்படைந்த வீடுகளுக்கும் நீங்கள் நீட்டித்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஆனால், Housing Board-ஐ நாங்கள் இதுபற்றி அணுகியபோது, இந்தப் பராமரிப்புச் செலவுகளுக்கு எங்களுக்குப் பணவசதி இல்லை; நிதி வசதி இல்லை என்று அவர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள். அதுமட்டுமல்ல, மிகக் குறைந்த வாடகையே நாங்கள் நிர்ணயம் செய்து இருக்கின்றபோதும்கூட, பல்வேறு மக்கள் இந்தப் பணத்தைக்கூட செலுத்துவதில்லை; வாடகை செலுத்துவதில்லை எனவும் அவர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள். இதுபோன்ற குறைகளுக்கு நீங்கள் நிரந்தரமாகத் தீர்வு காணவேண்டுமேயானால், இந்த வாடகைக் குடியிருப்புகளை நீங்கள் சொந்தக் குடியிருப்புகளாக மாற்றி, விற்பனை செய்ய உத்தரவிட வேண்டுமென்ற என்னுடைய தாழ்மையான கருத்தையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, 2001-2002-ல் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 40 இலட்சம் ரூபாய் செலவில், 80 மனைகள் உருவாக்கப்படும் என்பதையும், நடுத்தர



வருவாய்ப் பிரிவினருக்கு 446 மனைகள்/குடியிருப்புகள் கட்டப்படும் என்பதையும், உயர் வருவாய்ப் பிரிவினருக்காக 820 மனைகள்/ குடியிருப்புகள் கட்டப்படும் என்பதையும் நான் மனமார வரவேற்கிறேன். அதேபோன்று,

"அண்ணாந்து பார்க்கின்ற மாளிகை கட்டி,  
அதனருகினில் ஓலை குடிசை கட்டி,  
பொன்னான உலகென்று பெயரும் வைத்தால்  
இந்த பூமி சிரிக்கும், அந்த சாமி சிரிக்கும்"

என்ற புரட்சித் தலைவர் அவர்களின் பாடல் வரிகளை (மேசையைத் தட்டும் ஒலி) ஆரம்பகாலத்திலே அவரைக் கொண்டு அடையாளம் தேடிக் கொண்டவர்கள், முகவரி தேடிக் கொண்டவர்கள் மறந்திருந்தாலும், அவரின் அடுத்த வாரிசாக, உண்மையான வாரிசாக, அச்சுப் பிரதியாக இருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அரசு மறக்கவில்லை என்று சொல்கின்ற வகையிலே 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு' என்ற திட்டத்தின் கீழே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால், 24,123 அபிவிருத்தி செய்த மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும் எனவும், 13,972 மனைகள், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழும், 10,151 மனைகள், வீட்டுவசதி வாரியத்தின் பிற திட்டங்களின் கீழும், இந்த நிதியாண்டில் (2001-2002) விரைவு வீட்டுமனைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை வரவேற்கிறேன்.

அதேபோன்று, வீட்டுவசதி வாரியம், தேவையான நிலத்தை தனியாரிடமிருந்து நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் வாங்கும் முயற்சி என்பது ஒரு புதிய பரிணாமம்; ஏனென்றால், இதன் மூலம் இந்த கிரயப் பத்திரங்கள் வழங்குவது காலதாமதமாவது வெகுவாகக் குறைக்கப்படும் என்பது என்னுடைய கருத்து. அதேபோன்று இந்த விற்கப்படாத மனைகள், வீடுகளை விற்பதற்கு வழிமுறைகளைக் கண்டறிந்து விற்பனை அதிகரிக்க (மணியடிக்கப்பெற்றது) உயர்மட்டக் குழு அமைக்கும் முயற்சி என்பது வரவேற்கத்தக்க ஒன்று. ஏனென்றால், 2001 ஏப்ரலிலே மட்டும் விற்பனை செய்யப்படாத மனைகள் / வீடுகளின் எண்ணிக்கை 32,387 ஆக உயர்ந்து உள்ளது என்பது ஒரு வேதனைக்குரிய விஷயம். ஏனென்றால், ஒருபுறம் வீடற்று வீதியிலே வாழும் பாதைவாழ் மக்கள். மறுபுறம் வீடுகள் விற்பனையாகாமல் தேக்க நிலையிலே இருக்கிறது. ஒருபுறம் பசி ஏப்பம்; மறுபுறம் புளி ஏப்பம் என்பது முற்றிலுமே ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு சமுதாய முரண்பாடாக

இருக்கிறது. இதுபோன்று வீடுகள் விற்பனையாகாமல் இருப்பதற்கான அடிப்படைக் காரணம் என்னவென்று கேட்பீர்களேயானால், முதலிலே இந்த வீடுகளுக்கு அடக்க விலையைவிட கூடுதலான விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆகவே, நீங்கள் அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தரமற்ற பொருள்களைக் கொண்டு தரமற்ற கட்டடங்களை இங்கே கட்டித் தந்துகொண்டிருக்கிறார்கள். அதேபோன்று குறைபாடுள்ள வடிவமைப்புகளும், வசதிகளும் இதிலே உள்ளன.

அடுத்து, கூடுதல் வட்டி விகிதம், இப்போது, I.C.I.C.I. Housing Finance-லேகூட, *12* விழுக்காட்டிற்கும் குறைவான வட்டியிலே கடன் உதவி கிடைக்கிறது. ஆகவே, ஹட்கோ நிறுவனம் இதனைக் கருத்திலே எடுத்துக் கொண்டு, ஒரு குறைவான வட்டியிலே வீட்டுக் கடன் உதவி தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இடத் தேர்வு ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஹட்கோ போன்ற நிறுவனங்கள், தங்கள் விருப்பத்திற்கு இடங்களைத் தேர்வு செய்வதைக் காட்டிலும், மக்கள் விருப்பங்களை அறிந்துகொண்டு, அதற்கேற்றவகையிலே இடத் தேர்வைச் செய்து வீடுகளை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே விற்கப்படாத வீட்டுமனைகளுக்கான விற்பனைத் தொகையை நீங்கள் குறைத்தீர்களானால் நிச்சயமாக இந்த வீடுகள் விற்கப்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 6-00*

அதைப்போன்று Housing Board வீடுகளிலே மிகப் பெரிய குறை இருக்கிறது. தவணைத் தொகை துவங்கும் காலத்திலே மார்க்கெட் விலை மதிப்பீடு செய்து அதற்கேற்ப தவணையை நிர்ணயம் செய்யாமல் ஒரு தோராய விலையிலே தவணைத் தொகையை நிர்ணயம் செய்துவிட்டு, கிட்டத்தட்ட அந்தத் தவணை எல்லாம் முடிந்து கிரயம் செய்து கொடுக்கின்ற காலத்திலே மறுபடியும் மார்க்கெட் நிலவரத்தை அறிந்து அந்த நேரத்திலே அதற்கேற்றாற்போல் செலுத்திய தவணைத் தொகைபோக மீதியுள்ள வித்தியாசத் தொகையைச் செலுத்தினால்தான் கிரயம் செய்து தர முடியும் என்ற அவல நிலை இருக்கிறது. உதாரணமாக எங்கள் கோவை மேற்கு தொகுதியிலே செல்வபுரத்திலே உள்ள I.U.D.P. காலனியிலே கிட்டத்தட்ட *40,000* ரூபாய்





செலுத்தினால்தான் கிரயப் பத்திரம் செய்து தரப்படும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே இதனையும் தாங்கள் பரிவோடு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதற்கு ஒரு சலுகை மதிப்பீட்டுத் தொகையை நீங்கள் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் பேச்சிலே எல்லோரும் நேரத்தை மறந்துவிடுவார்கள். நான் மறக்க மாட்டேன்.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** ஒரு சிறிய கருத்தை மட்டும் சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன். சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய பெருநகரங்களுக்கு குடிசை மாற்று வாரியங்கள் வாயிலாக *3* அடுக்கு குடியிருப்புகள் கட்டித் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே வீட்டுவசதித் துறை அமைச்சருக்கு ஒரு தாழ்மையான வேண்டுகோள். அதிலே அதிகமான நிதி ஒதுக்கீடு எங்கள் கோவை மேற்குத் தொகுதிக்கு செய்து தரவேண்டும். ஏனென்றால் இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் ரோகிணி, செ.மா. வேலுசாமி எல்லோரும் சொல்வார்கள். உங்களுக்கு என்னம்மா தம்மாத்துண்டு தொகுதி என்று சொல்வார்கள். தொகுதி மிகச் சிறியதுதான். ஆனால் பிரச்சினைகள் மிகப் பெரியது என்பதை தாங்களும் ஒத்துக்கொள்வீர்கள் என்று நான் நினைக்கிறேன். ஆகவே எங்கள் தொகுதியிலே பாதிக்கு மேற்பட்ட மக்கள் இன்றைக்கு பஞ்சைகளாய், பராரிகளாய் குடிசைகளிலே, சேற்றுக்குள்ளும் சகதிக்குள்ளும், சாக்கடைக்குள்ளும் சங்கடத்தோடு வாழ்ந்து வருகின்றார்கள். ஆகவே இதனை நீங்கள் மனதிலே கொண்டு அதிகமான தொகையை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னதுபோல காமராஜர் அவர்கள் காலத்திலே சென்னையிலே பழைய மஸ்தான் தோட்டத்தில் உள்ள C.I.T. நகருக்கு வரிசை குடியிருப்புகள், *50* குடியிருப்புகள் அலாட்மெண்ட் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றைக்கும் அது சொந்தமாக்கப்படாமல் அவர்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதற்கான ஆவணங்களை இந்த அவையிலே நான் சமர்ப்பிக்கிறேன். அதற்கு நீங்கள் உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு உறுப்பினர் எச்.எம். ராஜு அவர்களின் சார்பாக நீலகிரி மாவட்டம், ஊட்டி நகரத்தில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர்

வழங்கும் திட்டங்களை -மார்லிமந்து, டைகர்ஹில், கோடப்பந்து, கோரிசாலை ஆகிய நீர்த்தேக்கங்கள் இதுவரையிலும் தூர் வாரப்படவில்லை; உடனடியாக போர்க்கால அடிப்படையிலே தூர் வாரி மக்களுக்கு உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஒரே ஒரு கோரிக்கை. சமத்துவபுரம் என்று சொல்லப்படுகின்ற இந்த சமுதாய சாபக்கேட்டிற்கு நீங்கள் உடனடியாக ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். சாப விமோசனத்தை இந்த ஆட்சி எங்களுக்கு நிச்சயமாக பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் மதங்களின் பெயராலே எங்களைப் பிரித்தது - மக்களைப் பிரித்தது போதாது என்று சொல்லி சாதிகளின் பெயராலே மக்களைப் பிரித்தாள சூழ்ச்சி செய்தவர்கள், ஒருபுறம் ஜாதிக் கட்சிகளுக்கு சாமரம் வீசிவிட்டு, மறுபுறம் சமத்துவபுரம் என்று சாக்குப் போக்கு சொல்லி மக்களை ஏமாற்றப் பார்ப்பது எந்தவகையிலே நியாயம் என்பதை எல்லோருமே எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏமாற்ற நினைத்தவர்கள் இன்றைக்கு ஏமாந்து நிற்கின்றார்கள். பொதுவாக இந்த சமத்துவபுரத்தில் மட்டும்தான் ஏதோ எல்லோரும் சமத்துவமாக இருப்பது போலவும் மற்ற இடத்திலே ஜாதிச் சண்டைகள் நிறைந்து இருப்பது போலவும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக சமத்துவபுரம் என்பது இன்றைக்கு சாராய சக்கரவர்த்திகளின் சாம்ராஜ்யமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே நீங்கள் இந்த சாபக்கேட்டினை நீக்கித் தரவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, பொதுவாக இன்றைக்கு ஒட்டுமொத்த தமிழகமே சமத்துவபுரமாகத்தான் இருக்கிறது என்பதைத்தான் தமிழக மக்கள் இந்த மதச் சார்பற்ற கூட்டணிக்கு அளித்த மாபெரும் வெற்றியின் மூலமாக நிரூபித்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி கு. கலாவதி, ஐந்து நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

***திருமதி கு. கலாவதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை இந்த உலகுக்கு அறிமுகம் செய்து என்னையும் என் தொகுதி மக்களையும் எனது குடும்பத்தையும் நல்வழியில் நடத்திக்கொண்டு எங்களின் இதயங்களில் என்றும் நீங்காது



குடிகொண்டிருக்கும் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களை, தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களை வணங்கி என் தமிழ் அன்னையையும் வணங்குகிறேன். தாயே, எனக்குத் தாய் இல்லை; தங்களைப் பார்த்து ஆயிரம் முறை அம்மா, அம்மா என்று கூப்பிட்டாலும் என் ஆவல் தீராது அம்மா. எங்கோ மலை அடிவாரக் கிராமத்தில் பிறந்த என்னை கழகத்தின் வேட்பாளராக நிறுத்தி, இந்த மாமன்றத்தின் சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி அமர வைத்து, அழகு பார்க்கும் எங்கள் இதய தெய்வம் அன்னையின் பாதங்களில் எனது நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன். நாங்கள் எல்லாம் மிகவும் பின்தங்கிய பகுதியில் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். சாதாரணமாக ஏழைக் குடும்பத்தில் பெண் குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தைக்கு எவ்வளவு சிரமப்பட்டாவது ஒரு குண்டுமணி தங்கத்தையாவது அதன் காதுகளில் அணிவிப்பார்கள்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. பாப்பா சுந்தரம்) தலைமை]

ஆனால், பிறப்பிலேயே செல்வக் குடும்பத்தில் பிறந்த, செல்வச் செழிப்புடன் வளர்ந்த இதய தெய்வம் அம்மா அவர்களை ஒரு குண்டுமணி தங்கத்தைக்கூட காதுகளில் அணிய விடாமல் துரோகக் கும்பல் சதி செய்துவிட்டார்கள். "அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்" என்பார்கள். ஆனால், ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் அந்தத் துரோகியின் கும்பல், அந்தக் குடும்பம் இறைவனது தண்டனையிலிருந்து தப்ப முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 6-05*

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளிகளில் பயிலும் பிளஸ் 2 மாணவிகளுக்கு இலவச சைக்கிள் திட்டத்தை அறிவித்தவர் எங்கள் அம்மா அவர்கள்தான். தமிழக வரலாற்றில் முதல் முறையாக பழங்குடி இனத்தவருக்கு அமைச்சரவையில் பதவி அளித்து கௌரவித்த இந்தத் தாய் உள்ளத்திற்கு எனது நன்றியினைச் சமர்ப்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், தமிழகத்தில் வாழும் பழங்குடி இன மக்கள் சார்பாகவும் நன்றியைத் தங்களின் பொற்பாதங்களில் காணிக்கையாக்குகிறேன், அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

1996-இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், சேந்தமங்கலம் தொகுதியில் அம்மா அவர்கள் கழகத்தின் வேட்பாளராக என்னை

[திருமதி கு. கலாவதி] [2001 செப்டம்பர் 11

அறிவித்தீர்கள். எதிரிகளின் சூழ்ச்சியால் அப்போது வெற்றி வாய்ப்பை இழந்தேன். ஆனால், அம்மாவின் ஆசியோடு, 2001-இல் மீண்டும் சேந்தமங்கலம் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு அளித்து, வெற்றியுடன் வா என்று ஆசீர்வாதம் அளித்தீர்கள். அம்மா அவர்களின் ஆசீர்வாதத்தால் இழந்த தொகுதியில் மீண்டும் வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் காணிக்கையாக அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் ஆசீர்வாதத்தால் 18 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றேன். என்னை தேர்ந்தெடுத்து இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த தொகுதி மக்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, இதய தெய்வம் இருக்கும் திசை நோக்கி வணங்கி எனது கன்னிப் பேச்சை ஆரம்பிக்கின்றேன்.

ஓலைக் குடிசைக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தை அறிவித்து ஏழைகளின் இதயங்களில் ஒளிதீபத்தை ஏற்றி வைத்தவர் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் அவர்கள்தான். அதற்கு ஒரு படி மேலாக, கேட்பாரற்றுக் கிடந்த அனைத்துக் கோவில்களிலும் ஒரு கால பூஜை நடத்தி, கோவில்களின் மகத்துவத்தை வெளிக்கொணர்ந்து, தெய்வத்திற்குச் சிறப்பு உருவாக்கியவர்கள் எங்கள் அன்னை அம்மா அவர்கள்தான்.

அதேபோன்று, எனது சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் பல வருடங்களாக ஓடாத தேரை ஓட வைத்து, எனது தொகுதி மக்களின் நெஞ்சங்களையெல்லாம் நெகிழ வைத்த எங்கள் அன்னையின் பாத மலர்களைத் தொட்டு வணங்கி, எனது சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் பணிவுடன் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

எனது சேந்தமங்கலம் தொகுதி மக்களின் நீண்ட நாள் பிரச்சினை குடிநீர்ப் பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும்பொருட்டு, சீராப்பள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டம் தீட்டப்பட்டு, திட்ட மதிப்பீடு பெறப்பட்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, சேந்தமங்கலம் தொகுதியில் புதுச்சத்திரம், சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை ஒன்றியங்கள் மற்றும் ராசிபுரம், திருச்செங்கோடு தொகுதிக்கு உட்பட்ட சீராப்பள்ளி ஆகிய ஊர்களில் உள்ள மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து எனது தொகுதி மக்களின் நீண்டகால குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து



2001 செப்டம்பர் 11] [திருமதி கு. கலாவதி]

வைக்கும்படி மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-10

பழங்குடி மக்கள் தொகை தமிழ்நாட்டில் சுமார் ஏழு இலட்சமாக தற்போது உள்ளது. ஆகவே, பழங்குடி இன மக்களுக்கு அரசுப்பணி மற்றும் கல்வியில் ஒரு சதவிகித இட ஒதுக்கீட்டை (மணியடிக்கப்பெற்றது) 5 சதவிகிதமாக உயர்த்திட அம்மா அவர்களைப் பணிவோடு வேண்டுகிறேன். மேலும், கடந்த காலங்களில் போலிச் சாதிச் சான்று பெற்று அரசுப் பணியில் உள்ளவர்களைக் கண்டறிந்து அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன். சாதிச் சான்று வேண்டி மனு செய்கிறவர்களுக்கு 15 தினங்களுக்குள் சாதிச் சான்று வழங்கிட உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட முள்ளுக்குறிச்சி மற்றும் கொல்லிமலையில் உள்ள பழங்குடியினருக்கு உண்டு, உறைவிட மேல்நிலைப் பள்ளியில் தற்போது 50 மாணவிகள் மட்டுமே விடுதியில் தங்கிப் படிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதை 200 மாணவிகளாகச் சேர்த்திட உத்தரவிட வேண்டுமென அம்மா அவர்களை வேண்டுகிறேன்.

மேலும் காளப்பநாயக்கன்பட்டியில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டட வசதி செய்து தர ஆணையிட வேண்டுகிறேன். இதற்கான போதிய இடவசதியும் உள்ளது. கொல்லிமலைக்கு மாற்று சாலை, நரியங்காட்டிலிருந்து முள்ளுக்குறிச்சி வரை அமைக்க மத்திய பழங்குடி நலத் துறை ரூபாய் 70 இலட்சம் ஒதுக்கியுள்ளது. ஆனால், அதன் மதிப்பீடோ ரூபாய் 2 கோடியே 10 இலட்சமாகும். ஆகவே, (மணியடிக்கப்பெற்றது) கூடுதல் தொகை பெற்று சாலை அமைத்திட அம்மா அவர்கள் உத்தரவிட வேண்டுகிறேன். இந்தச் சாலையை அமைத்தால் கொல்லிமலையிலிருந்து சமவெளிக்குச் செல்லும் தூரம் 150 கிலோமீட்டரிலிருந்து, 7 கிலோமீட்டராகக் குறையும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். சாலை அமைக்க சர்வே செய்யும் பணி நிறைவடைந்துள்ளது. மத்திய வனத் துறையிடம் அனுமதிபெறக் கோரிக்கையும் அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பெரப்பன்சோலை ஊராட்சியில் பெரியகோம்பையிலிருந்து புதூர்-பாலம்பட்டிக்குச் செல்ல பாலம் ஒன்று அமைத்து தார்ச்சாலை வசதியும் செய்துகொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கொல்லிமலையில் சுற்றுலாப் பயணிகள் கண்டு களிக்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தங்கும் விடுதி . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. பாப்பா சுந்தரம்):** செல்வி க. பாலபாரதி. (குறுக்கீடு) உறுப்பினர், நீங்கள் நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) சரி, ஒரு நிமிடத்தில் நன்றி சொல்லி முடியுங்கள்.

**திருமதி கு. கலாவதி:** சுற்றுலாப் பயணிகள் கண்டு களிக்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தங்கும் விடுதியும், படகு இல்லமும், தாவரவியல் பூங்காவும் அமைத்துத் தரவும் மேலும், கொல்லிமலையில் புகழ் பெற்ற அரப்பளீஸ்வரர் ஆலயத்தின் அருகில் ஆகாச கங்கை நீர்வீழ்ச்சி உள்ளது. அங்கு சுற்றுலாப் பயணிகள் சென்று வர இழுவை இரயில் அமைக்கவும் அம்மா அவர்கள் உத்தரவிட வேண்டுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மேலும், கொல்லிமலையில் கோடை விழாவும் வல்வில் ஓரி விழாவும் 7 நாட்கள் நடைபெறுகிறது. மக்கள் கொல்லிமலையைச் சுற்றிப் பார்க்க போதிய பேருந்து வசதியும், பள்ளி மாணவ மாணவிகள் பள்ளிக்குச் சென்று வர 15 கிலோமீட்டர் தூரம் நடந்து வரும் சூழ்நிலை தற்போது உள்ளதால், அவர்களுக்குப் பேருந்து வசதியும் (மணியடிக்கப்பெற்றது) செய்து கொடுக்கும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி க. பாலபாரதி, ஐந்து நிமிடத்தில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) சரி, நீங்கள் நன்றியைச் சொல்லுங்கள்.

**திருமதி கு. கலாவதி:** எனக்கு இந்த மாமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராக அமர வாய்ப்பளித்த எனது இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், எங்களது மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும் துணைப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



பிற்பகல் 6-15

***செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற நகரங்களில் நமது முன்னோர்கள், நேரான வீதிகளையும், சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகளையும், ஒவ்வொரு வீடுகளிலும் குளியல் அறைகளும், அந்தக் குளியல் அறைகளிலிருந்து வெளியேறக்கூடிய கழிவுநீர்க் குழாய்களையும் பதிந்து, கழிவுநீர் செல்லக்கூடிய மூடப்பட்ட சாக்கடை வசதியோடுகூடிய மிக நேர்த்தியான ஒரு சுகாதாரமான நகரத்தையும், வீடுகளையும் கொண்டு வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்தார்கள் என்று வரலாறு சொல்கிறது. ஆனால், ஆறாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு நமக்கு அத்தகைய ஒரு நகரமும், வீடும் ஒரு மிகப் பெரிய கனவாக மாறியிருக்கிறது என்பதை நாம் ஆழ்ந்து பரிசீலனை செய்ய வேண்டிய கட்டத்திலே நின்றுகொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் நகரங்களை வடிவமைப்பதிலே நமது அரசாங்கம் கவனம் செலுத்துவதோடு, வீட்டுவசதி வாரியத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய, நடுத்தர மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினைகளின்மீது உரிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, சென்னையில் இருக்கக்கூடிய பெசன்ட் நகர், திருவான்மியூர் மற்றும் திருவள்ளுவர் நகர் போன்ற குடியிருப்புகளில் 1987 ஆம் ஆண்டுகளில் அவர்களுக்கு வீட்டுமனை ஒதுக்கீடு செய்யப்பட்டது. அப்போது ஒரு கிரவுண்ட் விலை ரூ.33,000 என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு அவர்கள் மொத்தப் பணம் செலுத்தி வாரியத்திடம் கிரயப் பத்திரம் கேட்டு விண்ணப்பித்தபோது, ஒரு கிரவுண்ட் விலை 1,20,800 ரூபாய் என்று உயர்த்தப்பட்டு கூடுதலாக 15 சதவிகிதம் வட்டி செலுத்தவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நில உரிமையாளர்கள் உச்ச நீதிமன்றம் வரை சென்றிருக்கிறார்கள். 15 ஆண்டு காலமாக மாதாந்திர தவணை கட்டி முடித்தும், கிரயப் பத்திரம் கிடைக்கவில்லை என்று தொடர்ந்து அந்த மக்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள்; போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினை மீது உரிய ஆழ்ந்த கவனம் செலுத்தி, பேச்சுவார்த்தை மூலமாகவோ, இதர நடவடிக்கைகளின் மூலமாகவோ பாதிக்கப்பட்ட அந்த மத்தியதர மக்களுக்கு உடனடியாக நிவாரணத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல்லில் இராணி மங்கம்மாள் நகர வீட்டுவசதி வாரிய சுய நிதித் திட்டத்தின்கீழ் 1996-லே வீடுகள் கொடுக்கப்பட்டன. ஆனால் இதுவரையில் வீட்டுப் பத்திரம் என்பது வழங்கப்படவில்லை. 1995-லேயே வீடுகளுக்கு முழுத்தொகையும் செலுத்திவிட்டார்கள். 1995-லிருந்து நிலத்தின் கிரய மதிப்பீட்டின்படியே பத்திரப் பதிவு நடக்குமா என்ற கேள்வியோடு இன்றைக்கு அவர்கள் அலுவலகத்திற்கு நடந்து கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று 80 அடி சாலையுள்ள வீடுகள் நிலத்தின் விலையிலே 20 சதவிகிதம் தனிக் கட்டணம் செலுத்த வேண்டும் என உத்தரவிட்டபின் இப்போது 35 சதவிகிதமாக அந்தக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அது குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் உங்கள் முன்னால் நான் வைக்க விரும்புகிறேன்.

மதுரை வீட்டுவசதி பிரிவினரால் 1994-ல் கொடுத்த ஒதுக்கீடு உத்தரவில் எச்-1, எச்-2 வீட்டின் விலை 4 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் என இருந்தது, தற்போது 6 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் அவர்கள் செலுத்தியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தொகை மீண்டும் அவர்களுக்குக் கிடைக்குமா என்ற எதிர்பார்ப்போடும் இன்றைக்கு அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். இவற்றில் எது சாத்தியம் என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.

அடுத்து, வீட்டுவசதி வாரியம் மூலம் முன்பத்திரப் பதிவு கிரயத் தொகை 2 சதவிகிதம்தான் முன்பு இருந்தது. அது 13 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அது குறைக்கப்பட வேண்டும். மேலும், கோவை மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதியில் வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள 20 ஆண்டுகளுக்கு மேலான அடுக்குமாடிக் குடியிருப்புகள் பழுது அடைந்து பாழ்பட்டிருக்கின்றன. அவை பராமரித்துத் தரப்படுமா என்ற வினாவை அந்தப் பகுதி மக்கள் தொடர்ந்து அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று, வாரியக் குடியிருப்புப் பகுதிகளில் சாலை, சாக்கடை, தெரு விளக்கு, குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்படாமலும், பராமரிக்கப்படாமலும் இருந்துகொண்டிருக்கின்றன. உள்ளாட்சி அமைப்புகளுக்கு அந்த வாரியக் குடியிருப்புப் பகுதிகளைப் பராமரிக்கக்கூடிய அளவிலே ஒப்படைக்கப்படுமா என்ற கோரிக்கைக்கான பதிலும் அவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை. அதுபோன்று, பல ஆண்டுகளாகக் குடியிருந்துவரும் அந்தப் பகுதி மக்களுக்குப் பத்திரம் என்பது வழங்கப்படாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது; அதனையும் கவனிக்க வேண்டும்.



பிற்பகல் 6-20

பெரம்பூர் தொகுதி 39-வது டிவிஷன், பி.எஸ். மூர்த்தி நகர் அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிந்துவிழும் அபாயத்தில் இருக்கிறது. புதிய குடியிருப்புகள் கட்டித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

சென்னை, சைதை பகுதியில் உள்ள மஸ்தான் தோட்டத்தில் 1956-ல் நகர அபிவிருத்திக் கழகம் குடிசைகளில் வசித்தவர்களுக்கு வீடுகள் கட்டித் தந்து, குறைந்த வாடகை வசூலித்தது. குடிசை மாற்று வாரியம் வீடுகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. குடிசை மாற்று வாரியத்திற்கு மீதமுள்ள 50 வீடுகள் மாற்றப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல் நகரிலே இருக்கக்கூடிய பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். அந்த நகரத்தினுடைய மிகப் பெரிய சுகாதாரச் சீர்கேடு நகரத்தினுடைய வடிவமைப்பையே மாற்றிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த நகரப் பகுதியை விரிவுபடுத்துவதற்கும், நவீனப்படுத்துவதற்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக் கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. கிருஷ்ணமூர்த்தி. அதே மாதிரி சுச்சிதமாக 5 நிமிடங்களில் பேசி உரையை முடித்துவிடுங்கள்.

***திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுகிற வாய்ப்பைக் கொடுத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மக்களின் அடிப்படைத் தேவைகளான இந்தப் பிரச்சினைகள்மீது இந்த அரசு உரிய கவனத்தைச் செலுத்தியிருப்பது பாராட்டுக்குரிய அம்சமாகும்.

குடும்பத்திற்கு ஒரு வீடு என்பதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு, வீட்டு மனை ஒதுக்கீட்டுத் திட்டம் என்ற திட்டம் அறிவிக்கப்பட்டிருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

இலட்சக்கணக்கான கட்டுமானத் தொழிலாளர்களுக்கு புத்துயிர் அளிப்பதற்காக வீடுகள், மனைகள் வாங்குதல், விற்றல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது வரவேற்க வேண்டிய அம்சமாகும்.

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கியும், வீடுகள் கட்டாத நிலை இருப்பதை அரசு போக்குவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் திட்டப் பணிகள் பயனளிப்பதாக அமைய அமைக்கப்படவுள்ள உயர்மட்டக் குழுவை உடனடியாக அமைத்து, மேற்கண்ட நடவடிக்கையை விரைவுபடுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நகரப் பகுதிகளில் வாழும் மகளிருக்குத் தண்ணீர் வசதிகளுடன் கூடிய 1341 கழிப்பிடக் கட்டடங்கள் கட்டித் தரப்படுவதோடு கிராமப் பகுதிகளில் அதைவிடவும் முக்கிய கவனம் செலுத்தி இப்பணியை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மக்களின் மிகவும் இன்றியமையாத அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடமான வீடு இவற்றோடு அடிப்படையாக வேலையும் முக்கியம்தான். இப்படிப்பட்ட அடிப்படை வசதிகளுக்குக் காரணமான வீடு சமுதாயத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. பொருளாதாரத்தில் நலிவுற்றோர், குறைந்த வருவாய் பெறுவோர், நடுத்தர வருவாய் வகுப்பினர் மற்றும் உயர் வருவாய் வகுப்பினர் ஆகியோருக்கு வீட்டுவசதிகளை நிறைவேற்றுவது தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலையாய கடமையாகும்.

கடந்த 40 ஆண்டுகளாக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மேம்பட்டுள்ளது. மனைகளை உருவாக்குவதிலும், வீடுகள் கட்டுவதிலும் ஈடுபடுகின்றது. தனது பல்வேறு திட்டங்களின் மூலம் இதுவரை 3,91,848 குடியிருப்புகளை வாரியம் உருவாக்கியுள்ளது. இது வரவேற்க வேண்டிய அம்சமாகும். இவற்றுள் 2,03,745 மனைகளாகும். அவற்றில் நலிவுற்றோருக்கு உருவாக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை 1,25,085 ஆகும். இது மிகமிகக் குறைவானது என நான் கருதுகிறேன்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைக்கப்படுவதற்கு முன்புவரை குடிசை மாற்று குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டுவசதி



வாரியத்தின் மூலம் மாநிலம் முழுவதும் கட்டப்பட்டன. அவ்வகையில் மாவட்டத் தலைநகரங்களான மதுரை, சேலம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள 9,637 குடிசை மாற்றுக் குடியிருப்புகளைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமே தற்சமயம் பராமரித்து வருகிறது. வீட்டுவசதி வாழ்க்கையின் அடிப்படைத் தேவை என்ற முறையில் மாவட்டங்கள் தோறும் வீட்டுவசதி வாரிய பராமரிப்பு அலுவலகங்கள் தொடங்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-25

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக மேம்படுத்தப்பட்ட மனைகள் சுமார் 8,600 உள்ளன. இவற்றில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 6,860 மனைகளும், வாரிய நில வங்கித் திட்டத்தின்கீழ் 1,740 மனைகளும் உள்ளன. மேற்படி மனைகளின் அளவு 350 சதுர அடியிலிருந்து 750 சதுர அடி ஆகும். இவைகளின் விலை தோராயமாக 4,300 ரூபாயிலிருந்து 23,000 ரூபாய் வரை உள்ளது. இதை மேலும் குறைக்கின்ற வகையில் நடவடிக்கை அமைய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கட்டித்தரப்பட வேண்டிய வீடுகளின் கட்டுமான நடைமுறைகளில் முறைகேடுகள் நடைபெறாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். சிமெண்ட், மணல், செங்கல் இவை முறையான அளவில் கையாளப்பட வேண்டும் என்பதும் கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன். வீடுகள் கட்ட வாங்கும் இடங்களுக்குப் பதிவுக் கட்டணங்கள் குறைக்கப்பட வேண்டும். கிரயம் செய்யப்பட்ட பிறகு சிட்டா போன்றவற்றைக் கணக்கில் வைப்பதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. அதையும் ஒழுங்குபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு அலுவலர்கள் வாடகை வீட்டுவசதித் திட்டங்களுக்கு நிதி நிறுவனங்கள் மூலமும், வீட்டுவசதி அபிவிருத்தித் திட்ட நிதி உதவிக் கழகம், தேசிய வீட்டுவசதி வங்கி, ஆயுள் காப்பீட்டுக் கழகம், வணிக வங்கிகள், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் வைப்பு நிதி ஆகியவற்றின் மூலம் பெறப்படும் நிதியின் மூலமும் கட்டப்படும் வீடுகளை முறையாக, சாதாரண, ஏழைத் தொழிலாளர்களும் வாங்குகின்ற முறையில், குறைந்த விலையில், நீண்டகாலத் தவணையில் வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கமே குறைந்த விலையில் நல்ல வீடுகளைக் கட்டி, சாதாரண மக்கள் வாங்கும் அளவில்

விற்பதோடு, போதிய அளவு குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, சாலை வசதி மற்றும் தெரு விளக்குகள் போன்ற வசதிகளுடன் கட்டித்தரப்பட வேண்டுமெனவும், அப்படிக் கட்டித் தரப்படும் வீடுகள், மாடிக் கட்டடங்கள்கூட சாதாரண மக்கள் பயன்படுத்தும் முறையில் அமைய வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கிராமங்களில் வீடு கட்ட வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கொடுக்கப்படும் கடன்களைப் பெற கிராம மக்கள் வீடு கட்ட விண்ணப்பித்தபின் பல ஆண்டுகள் சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு நடக்க வேண்டியுள்ளது. அதோடு, இப்படி நடப்பது உட்பட அங்கே கொடுப்பதைக் கணக்கிட்டால் மூன்றில் ஒரு பங்கு செலவழிக்க வேண்டியுள்ளது. எனவே, இதிலே உள்ள முட்டுக்கட்டைகள் நீக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும், உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** என்னுடைய தொகுதி பற்றிய இரண்டு கோரிக்கைகள்.

ஊத்தங்கரை அரசு மருத்துவமனை மற்றும் அரூர் அரசு மருத்துவமனையில் தலா 20 படுக்கை வசதிகளுடன் இரண்டு கட்டடங்கள், போதுமான மருத்துவர்கள், உயிர் காக்கும் மருந்துகள், மருந்தாளுநர்கள், எக்ஸ்ரே ஆப்ரேட்டர்கள், பணியாளர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள் தேவையென்பதால் இக்கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அரூர் தொகுதி, சிங்காரப்பேட்டை, ஊத்தங்கரை, உப்பாரப்பட்டி, பெரிய தள்ளப்பாடி, காரப்பட்டு, அரூர், வேப்பம்பட்டி மற்றும் உள்ள பல்வேறு அரசுப் பள்ளிகளில், சிறுநீர் கழிக்க கழிப்பிடங்கள், படிப்பதற்காகப் போதிய கட்டடங்கள் கட்டித்தரப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அரூர் தொகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களுக்கு இதுவரை போக்குவரத்து வசதி இல்லை. எனவே, இக்குறையைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்....



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும், உட்காருங்கள். நீங்கள் இதுவரை 3 தடவை பேசிவிட்டீர்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துகளைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நேரத்தின் அருமையைக் கருதி சில கோரிக்கைகளை மட்டுமே இந்த நேரத்தில் நான் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியினுடைய மையமாக பக்கிங்காம் கால்வாய் ஓடிக்கொண்டிருக்கிறது. ஓடிக் கொண்டிருக்கிறது என்று சொல்வதைக் காட்டிலும், தேங்கி நின்று கொண்டிருக்கிறது என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். பூங்கா நகர் தொகுதி அது. இந்த பக்கிங்காம் கால்வாயைச் சுத்தப்படுத்தி, ஆரோக்கியமானதாக ஆக்காமல் சென்னை நகரத்தினுடைய எந்த வளர்ச்சிப் பணியும் முழுமை அடையாது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நாட்டில் வியாபாரிகளாக வந்து நாடாண்ட வெள்ளையர்கள் நீர்வழிப் போக்குவரத்திற்காக இந்த பக்கிங்காம் கால்வாய் அன்றைக்கு வெட்டினார்கள். ஆனால், இந்த 50 வருடங்களுக்கு அப்பால், மிகப் பெரிய சாக்கடையாக அதை ஆக்கியிருக்கின்ற பெருமைதான் நமக்கு இன்றைக்கு இருக்கிறது. அங்கே, அந்தக் கால்வாய்க்குப் பக்கத்திலே அரசினுடைய பொது மருத்துவமனை இருக்கிறது; சென்ட்ரல் இரயில் நிலையம் இருக்கிறது. மத்திய சிறைச்சாலை இருக்கிறது. ஒரு நிமிடம் கூட அங்கே நிற்க முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கிறது. பொதுப் பணித் துறை ஒரு நீர்வழித் தடமாக அதை நினைக்கிறது. இந்த நிலையைப் போக்குவதற்கு, மக்கள் நல்வாழ்வுத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகர்ப்புற வளர்ச்சித் துறை, குடிசை மாற்று வாரியம் இவையெல்லாம் அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பக்கிங்காம் கால்வாயிலே ஏறக்குறைய 357 சாக்கடை நீர்க் கால்வாய்கள் கலப்பதாகப் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. 'Nearly 357 Waste water outfalls and 47 storm water drain outfalls are received by the inner Chennai water-ways. 84% of the out-falls are sewerage outfalls....' அதாவது 84 சதவிகிதம் அங்கே சாக்கடை நீர் கலப்பதாகச் சொல்லப்படுகிறது. அதன் காரணமாக அவை கொசு உற்பத்திப் பண்ணையாகவும், நோய் உற்பத்திப் பண்ணையாகவும் இருந்து கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 6-30

'Buckingham Canal is the worst polluted water way followed by Otteri Nalla, Cooum and Adyar. River Cooum is highly sedimented, presence of disease causing bacteria and virus high in all waterways'. இப்படிக் குறிப்புச் சொல்கின்றது. ஆகவே, இந்தக் கால்வாயைச் சுத்தப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே எடுத்துச்சொல்ல விரும்புகின்றேன்.

அடுத்ததாக, வெளியூர் பேருந்து நிலையம் சென்னை மத்தியிலே இருக்கிறது. அதை கோயம்பேட்டுக்கு எடுத்துச் செல்வதற்கான முயற்சிகள் இப்போது நடந்துகொண்டிருப்பதாக அறிகின்றேன். அது மந்தமாக நடந்து கொண்டிருக்கின்றது. அந்தப் பணியைத் துரிதப்படுத்த வேண்டும். அதோடு, அந்த இடத்தில் சைனா பஜார் பகுதியில் வாகனங்கள் நிறுத்துவதற்கு சரியான இடம் இல்லாமல் ஒரு தத்தளிப்பு நிலை இருந்துகொண்டிருக்கிறது. அங்கே மத்தியிலே பூக்கடை காவல் நிலையம் இருக்கின்றது. அதை வேறோர் இடத்துக்கு மாற்றிவிட வேண்டும். அங்கே defence land இருக்கிறது. அதை எல்லாம் கணக்கெடுத்து, அங்கேயொரு மாடி, கார், வாகனங்கள் நிறுத்துகின்ற இடம் multi-storeyed car park ஏற்படுத்துவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, என்னுடைய பகுதியிலே குடிசைப் பகுதி மாற்று வாரிய அடுக்குமாடி வீடுகள் நிறைய இருக்கின்றன. குறைந்த வாடகையிலே இருக்கின்ற அந்த மக்கள் நிறைய எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறைந்த வாடகையிலிருக்கிற அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதற்கு வசதியில்லாமல், நிதி காணாமல்





தத்தளித்துக் கொண்டிருக்கிற நிலை நம்மிடம் காணப்படுகிறது. ஆகவே, அவர்களைத் திருப்திபடுத்துகின்ற வகையிலும், நம்முடைய சுமையை குறைத்துக்கொள்கின்ற வகையிலும் இந்த அடுக்குமாடி வீடுகளைக் குடியிருப்போருக்கு இலவசமாக, சொந்தமாகக் கொடுத்துவிட்டால் ஆண்டுதோறும் பராமரிப்புக்காகச் செலவிடவேண்டிய தொகை நமக்கு மிச்சமாகும் என்று நான் கருதுகிறேன். அந்தக் கண்ணோட்டத்திலே இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்வேன்.

கடைசியாக ஒன்று. வீட்டுவசதி வாரியத்தைப் பற்றி எனக்கு முன்னாலே பலர் பேசினார்கள். அந்த வாரியத்தை எடுத்துவிடலாம் என்றுகூட எங்கள் கட்சியினுடைய கொறடா கூறினார். அதிலே ஒரு உண்மை இருப்பதாக நான் நினைக்கின்றேன். ஒரு நல்ல துடிப்புள்ள இளைஞர் இந்த இலாகாவினுடைய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார். இந்த இலாகாவைச் சுத்தப்படுத்துகின்ற முயற்சியை அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்வேன்.

1996 ஆம் ஆண்டு 11,331 ஆக இருந்த விற்கப்படாத மனைகள்/வீடுகளுடைய எண்ணிக்கை 2001-ல் 32,387 ஆக உயர்ந்துள்ளது என்று இங்கே கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கடந்த கால ஆட்சி இந்த அவல நிலைக்குக் காரணம் என்பதை நான் எண்ணிப் பார்க்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே சொல்லப்பட்டிருக்கின்ற இன்னொரு முக்கியமான விஷயம், இதையெல்லாம் கட்டுவதற்கு வாங்கியிருக்கிற கடன் தொகைக்கு அரசு செலுத்தியிருக்கிற வட்டி விகிதம் மிகவும் யோசனை செய்ய வேண்டிய நிலையிலே இருக்கிறது. சாதாரண தனிப்பட்ட நபர்கூட வீடு கட்டுவதற்கு கடன் வாங்குவதாக இருந்தால் 12 சதவிகிதம் அல்லது 15 சதவிகிதத்துக்கு மேலாக வாங்குவதற்குத் தயங்குவார்கள். ஆனால், கடந்த கால அரசில் 16 முதல் 20 சதவிகிதம் வரை பெறப்பட்டுள்ளது என்று இங்கே குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றது. 20 சதவிகிதத்துக்கு வாங்கி வீட்டு மனைகளை உருவாக்க வேண்டுமென்று சொன்னால் அந்த நிலையிலே ஊழல் நிச்சயமாக இருந்திருக்க முடியும் என்பதை நான் எண்ணிப் பார்க்கின்றேன். இதற்குத் தகுந்த விசாரணையை அமைச்சர் அவர்கள் கொண்டுவர வேண்டுமென்று நான் இங்கே சொல்லிக்கொள்வேன். ஆகவே, இந்த நிலைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து, உடனடியாக சென்னை மாநகரத்தை-சிங்காரச் சென்னை என்று சொன்னார்கள், அது இலட்சியமாக இருக்கட்டும்—சிங்காரச்

[திரு. ஏ.கே. செல்வராஜ்] [2001 செப்டம்பர் 11

திட்டங்களை எல்லாம் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீட்டியிருக்கிறார்கள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதி எல்லாம் நீக்கப்பட்டு விட்டன. எனவே, அவைகளுக்கு விளக்கம் தேவையில்லை.

*பிற்பகல் 6-40*

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** கடந்த 5 ஆண்டு காலத்திலே வீட்டுவசதித் துறையைப் பொறுத்தவரையிலே எந்தவிதமான முன்னேற்றப் பணியையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை. 1991-லேயிருந்து 1996 வரையும் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்த காலத்தில் 868.20 கோடி ரூபாய் செலவிலே 1,05,047 வீடுகள் அன்றைக்குக் கட்டப்பட்டன. 1996-லேயிருந்து 2000 வரைக்கும் ஆட்சி செய்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே 977.28 கோடி ரூபாய் செலவு செய்து 68,388 வீடுகளை மட்டும்தான் கட்டியிருக்கிறார்கள். ஆக, ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே வீட்டுவசதித் துறை மிக உயர்ந்த அளவிலே முன்னேறி இருப்பதாக இன்றைக்குப் பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் இங்கே கூறிவிட்டுச் சென்றிருக்கிறார். கிட்டத்தட்ட 36,649 வீடுகள் நம்முடைய ஆட்சி காலத்தைக் காட்டிலும் குறைவாகக் கட்டிவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அந்த வீட்டுவசதித் துறை வளர்ந்திருக்கிறது என்ற உண்மைக்கு மாறான குற்றச்சாட்டை இந்த அவையிலே முன்வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

உண்மைக்கு மாறான ஒரு தகவலை இந்த அவைக்குத் தெரிவித்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இன்றைக்கு நான் எண்ணிப் பார்க்கிறேன். இந்த வீடுகள் குறைவாகக் கட்டப்பட்டதற்குக் காரணம் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் எடுத்து வைத்தார்களே அந்த சிமெண்ட் விலை உயர்வு; இந்த வீடுகளுடைய அளவைக் குறைத்து, சிமெண்டினுடைய விலையை உயர்த்திய காரணத்தினாலேதான் இன்றைக்கு இந்த வீடுகள் எல்லாம் அளவு குறைவதற்குக் காரணமாக இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே அவைக்குக் குறிப்பிடுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2001 செப்டம்பர் 11] [திரு. ஏ.கே. செல்வராஜ்]

இப்படி எண்ணற்ற குற்றச்சாட்டுகளைக் கூறுகிறவர்கள் பெசன்ட் நகரில் வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்திலே—பெசன்ட் நகரிலே 17 இடங்கள் வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமாக இருக்கின்றன. அந்த வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்திலே--கடந்த கால ஆட்சியிலே ஒதுக்கீடு செய்கிறபோது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் விதிகளுக்கு மாறாக அங்கே ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். 17 வீடுகள் ஒதுக்கீடு செய்ததிலே பல்வேறு முறைகேடுகளை எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் செய்திருக்கிறார்கள். அதிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களுக்கு, முக்கியமாக முன்னணியிலே இருக்கிறவர்கள் அந்த வீட்டுவசதிச் சங்கத்திலே தேவையான இடங்களையெல்லாம் அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். குறிப்பாக, இந்த மாமன்றத்திலே உறுப்பினராக இருக்கிற பரிதி இளம்வழுதியினுடைய அம்மாவுக்கு அங்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது. எஸ்.வி.எஸ். ராகவன் என்பவருக்கு அந்த இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நான் பின்னாலே குறிப்பிடுகிறேன். எடுத்துவருகிறபோது, அந்த விவரத்தை எடுத்துவராமல் வந்துவிட்டேன்.

*பிற்பகல் 6-45*

கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தைப் பொறுத்தவரையிலே கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே பல்வேறு முறைகேடுகளை எல்லாம் செய்திருக்கிறார்கள். 1996ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டுறவுச் சங்க, வீட்டுவசதிச் சங்கத் தேர்தலிலே அன்றைய தினம் நானும் மேட்டுப்பாளையம் வட்ட கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத் தேர்தலிலே போட்டியிட்டேன். போட்டியிட்டு, நானும் என்னைச் சார்ந்தவர்கள் எல்லாம் அந்தச் சங்கத் தேர்தலிலே வெற்றியடைந்தோம். வெற்றியடைந்த எங்களை அன்றைக்கு ஆட்சியிலேயிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய எங்களுடைய தொகுதியிலே இருந்த சட்டமன்ற உறுப்பினர், கோவை மாவட்டத்திலேயிருந்த அமைச்சர் அவர்களுடைய தலையீட்டின்பேரிலே, அந்தச் சங்கத்திலே ஓர் ஆண்டுகாலமாக--என்னையும் என்னுடன் வெற்றி பெற்றவர்களையெல்லாம்--பதவி ஏற்கமுடியாமல் செய்துவிட்டு, ஓர் ஆண்டுக்குப் பின்னாலே, அந்தத் துணைப் பதிவாளர் நீதி மன்றத்திலே வழக்கைத் தொடுத்து, துணைப் பதிவாளர் எங்களுக்குச் சாதகமாக ஒரு தீர்ப்பை வழங்கிவிட்டு, மீண்டும் ஆளும் கட்சிக்குப் பயந்து, அந்தத் தேர்தல் செல்லாது என்ற உத்தரவையும் பிறப்பித்துவிட்டார்கள். வீட்டுவசதி வட்டச் சங்கத்தினுடைய தலைவராக அன்றைக்கு

பொறுப்பேற்க வேண்டியிருந்த என்னை, இன்றைக்கு எங்களுடைய தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வீட்டுவசதி இலாகாவினுடைய அமைச்சராகவே நியமித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தினுடைய தேர்தல் நடைபெறுகிறபோது, பல்வேறு போலி உறுப்பினர்களையெல்லாம் அந்தச் சங்கத்திலே உறுப்பினராக நியமித்து, தேர்தல் சமயத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் மற்றும் இருக்கிற கட்சிக்காரர்களும், பொது மக்களும் தேர்தலிலே வேட்பு மனு தாக்கல் செய்ய முற்பட்டபோது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், ஆட்சியையும், அதிகாரத்தையும் வைத்துக்கொண்டு, அன்றைக்குத் தேர்தல் களத்திலே மற்ற கட்சிக்காரர்களையெல்லாம் சந்திக்க முடியாத ஒரு சூழ்நிலையை உருவாக்கினார்கள். நாம் போராடியதற்குப் பின்னாலே, அந்த வெற்றி வாய்ப்பை அறிவித்தும்கூட, பதவி ஏற்க முடியாமல் செய்தார்கள். தமிழகத்தில் 1,033 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அந்த 1,033 கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தல் நடைபெற்ற அனைத்திலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், தங்களுடைய ஆட்சியையும், அதிகாரத்தையும் வைத்து, தங்களுக்கு வேண்டிய தங்களுடைய கட்சிக்காரர்களை சங்கத்தினுடைய நிர்வாகிகளாக ஆக்கி பொறுப்பேற்கச் செய்திருக்கிறார்கள். பொறுப்பேற்கச் செய்தவுடனேயே, என்ன செய்தார்கள் என்றால், அந்த வீட்டுவசதிச் சங்கத்தின் மூலமாக மனையிடங்களைத் தேர்வு செய்வதற்காகத் திட்டத்தைப்போட்டு, வீட்டுமனைகளுக்காக நிலத்தை வாங்கியபோது guideline விலையையும் பார்க்கவில்லை; மார்க்கெட் விலையையும் பார்க்கவில்லை. தங்களுக்கு வேண்டியவர்களுக்கு எவ்வளவு விலை கொடுக்க முடியுமோ அந்த அளவு கொடுத்து விலையை உயர்த்தி வாங்கி, அதிலே மிகப்பெரிய அளவிலே கொள்ளையடித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே இருக்கிற அனைத்து கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களிலும் மிகப்பெரிய அளவிலே ஊழல் நடந்திருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கோவை மாவட்டத்திலே இருக்கிற கோவை மாநகர் வளர்ச்சி கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்திலே மிகப்பெரிய அளவிலே ஊழல் செய்திருக்கிறார்கள். அதேபோல, சேலத்திலே இருக்கிற பேலஸ் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம், அறிஞர் அண்ணா கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம், மதுரையிலே இருக்கிற திருநகர் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம், இதுபோன்று எண்ணற்ற கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களிலே பல கோடிக்கணக்கான ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. சேலத்திலே இருக்கிற கூட்டுறவு



வீட்டுவசதி சங்கத்திலே தனி அலுவலர் ஒருவர் இருந்தார். அடைக்கண் என்ற தனி அலுவலர், அந்த சேலம் மாவட்டத்தையே ஆட்டிப்படைத்து, ஐந்து ஆண்டுகாலம் அன்றைக்கு அமைச்சராக இருந்த ** துணையாக நின்று அந்த சேலம் பேலஸ் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கத்திலே பல கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொள்ளை அடித்திருக்கிறார்கள். உதாரணமாகச் சொல்லப்போனால், அந்தக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய விதிப்படி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலேயிருந்து டெபாசிட்டுகளை வாங்கக்கூடாது. ஆனால், அந்த சேலம் பேலஸ் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கத்திலே டெபாசிட்டாக மற்ற கூட்டுறவுச் சங்கங்களிலேயிருந்து பணத்தை வாங்கி, அங்கே டெபாசிட் செய்யச் சொல்லி, சங்கத்தைத் தொடங்கிய நாளிலே, சங்கத்தினுடைய செயல்பாட்டிற்காக ஒரு அம்பாசிடர் காரை வாங்குகிறார்கள் . . .

*பிற்பகல் 6-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்னாள் அமைச்சர் என்று மட்டும் இருக்கட்டும். ** என்று பெயர் வேண்டாம். அது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** முன்னாள் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் உதவியோடு அம்பாசிடர் கார் ஒன்றை வாங்கி அந்தச் சங்கத்தினுடைய வளர்ச்சிக்காக, புதியதாக ஆரம்பிக்கப்படுகிற சங்கத்திற்கு, வெளியிலே இருக்கிற கூட்டுறவுச் சங்கத்திலேயிருந்து, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திலேயிருந்து பணத்தை டெபாசிட்டாக வாங்கி, அந்த கார் வாங்கப்பட்டு, அவர்கள் பவனி வந்து, பக்கத்திலே இருக்கிற இடங்களையெல்லாம் வாங்கி, பல கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொள்ளை அடித்திருக்கிறார்கள். அந்த சேலம் பேலஸ் கூட்டுறவுச் சங்கத்திலே குடியிருப்புகளுக்காக 68 ஆயிரம் சதுர அடி இடம் வாங்கப்பட்டிருக்கிறது. ஒரு சதுர அடி விலை 801 ரூபாய் என்ற விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறது. இதற்கு எந்தவிதமான அனுமதியையும் பதிவாளரிடமிருந்து வாங்கவில்லை. மற்ற நிலைகளிலே இருப்பவர்களுடைய அனுமதியும் வாங்காமல் கடனை வழங்கி பல கோடிக்கணக்கான ரூபாய்களை அங்கே கொள்ளை அடித்திருக்கிறார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதேபோல, நான் ஏற்கெனவே சொன்னேன். கோவையிலே இருக்கிற அந்தக் கோவை நகர கூட்டுறவு வளர்ச்சிச் சங்கத்திலே, கோவை நகராட்சி ஊழியர்களுக்காக ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அந்தச் சங்கம் கலைக்கப்பட்டு, கலைத்த சங்கத்திற்கு துணைப் பதிவாளராக இருந்த பொன் முத்துராமலிங்கம், என்ற அதிகாரியை வைத்து, மீண்டும் புத்துயிர் கொடுத்து, கலைத்த சங்கத்திற்கு மீண்டும் புத்துயிர் கொடுத்து, அந்தச் சங்கத்திலே தலைவராகவும், செயலாளராகவும் ஒரு போர்டு நியமனம் செய்து, அந்த போர்டிலே, நியமனம் செய்கிற அந்த நிர்வாகக் குழுவிலே யார் வருகிறார்கள் என்றால்--நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினராக இங்கே இருக்கிற அண்ணன் கருணாகரன் அவர்கள் நேற்றையதினம் கூறினார்கள், கூட்டுறவுத் துறையை ஆய்வு செய்வதற்காக, மாற்றியமைப்பதற்காக ஒரு குழுவை நியமித்திருப்பதாகச் சொல்லியிருந்தார்கள். அந்தக் குழுவிலே ** எந்தவிதமான அறிவும், திறமையும் இல்லாத ஒருவரை அந்தச் சங்கத்திற்குத் தலைவராக ஆக்கி, அங்கே நிலங்களைக் கையகப்படுத்தி அடுக்கு மாடிகளைக் கட்டியதில் பல கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொள்ளை அடித்திருக்கிறார்கள். அந்த அடுக்கு மாடிக் குடியிருப்புக்களுக்கு டெண்டர் விடாமல், ரெஜிஸ்டிராரிடத்தில் ஒரு பர்மிஷனை வாங்காமல், கூட்டுறவுச் சட்டப்பிரகாரம் ஒரு பணியை நாம் மேற்கொள்ள வே மானால் முறையாக பொதுப் பணித் துறையிடத்திலே அந்த அனுட யை வாங்கி, மதிப்பீடுகளை வாங்கி, அந்த மதிப்பீட்டின்படிதான் பணிகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால்--இவர்கள் அந்த மதிப்பீடுகளை P.W.D.-யிடத்திலே வாங்காமல், அவர்களாகவே தன்னிச்சையாக ஒரு சதுர அடிக்கு 495 ரூபாய் என்ற விதத்திலே நிர்ணயம் செய்து, கிட்டதட்ட 3 கோடி ரூபாய்க்கு மேலே, இப்போது அந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே ஊழல் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிச் சொல்லிக்கொண்டிருந்தால் பல்வேறு சங்கங்களைட பற்றிச் சொல்லிக்கொண்டே இருக்கலாம்.

அதேபோல், சேலம் அறிஞர் அண்ணா கூட்டுறவுச் சங்கம்; அதேபோல் வீரகாரனூர் என்ற ஒரு வட்டச் சங்கத்திலே அந்தச் சங்கத்தினுடைய செயலாளராக இருப்பவர், அந்தச் சங்கத்தினுடைய தலைவராக இருப்பவர், என்ன செய்திருக்கிறார் என்று சொன்னால் நீங்கள் எல்லாம் ஆச்சரியப்படுவீர்கள். உறுப்பினருக்கு மனுவை முறையாக அனுப்பி, தமக்கு வேண்டியவர்களுக்கு மனுவை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஃபோர்ஜரியாக விண்ணப்பித்து, அப்படி விண்ணப்பம் செய்திருப்பவர்கள் இறந்ததாக ஒரு death certificate-ஐ வாங்குகிறார் பேரூராட்சி அலுவலகத்திலே. ஒரு வாரிசு சர்டிபிகேட்டை தாலுகா ஆபீசிலே வாங்கியிருக்கிறார் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, அவையிலே இல்லாதவர்களைப்பற்றிக் குற்றச்சாட்டு என்கிற வகையிலே வரக்கூடாது. **இருக்கக்கூடிய அந்தப் பகுதிகள் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன.

*பிற்பகல் 6-55*

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், அவர்களுடைய தவப் புதல்வர்கள் இருவர். மூவரும் சேர்ந்து கோவை மாவட்டத்தையே கொள்ளையடித்திருக்கிறார்கள் அந்தச் சங்கத்திலே. இதற்கு விசாரணைக் கமிஷன் நாம் அமைக்கப் போகிறோம். அதைப் பின்னாலே பார்த்துக் கொள்ளலாம். இன்றைக்கு அந்த வீரகாரனூர் என்ற சங்கத்திலே இப்படிப்பட்ட முறைகேடுகளெல்லாம் செய்து, Death certificate-ஐ வீட்டுவசதி இணையத்திற்கு அனுப்பி வைத்து, இன்சூரன்ஸ் எல்லாம் claim செய்து வாங்கிய கடனையெல்லாம் இரத்து செய்திருக்கிறார்கள். யாருடைய பெயரிலே கடன் வாங்கியிருக்கிறாரோ, அந்தக் கடன் வாங்கியவர்கள் இன்னும் உயிரோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தவறுகளையெல்லாம் கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே செய்திருக்கிறார்கள். இன்னும் அதோடு நிற்காமல், கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதனுடைய நோக்கமே இந்தச் சமுதாயத்திலே இருக்கிற நலிந்தவர்கள், வீடு கட்ட முடியாதவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணம்தான். ஆனால், கடந்தகால ஆட்சியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்ன செய்தார்கள் என்றால் மதுபானக் கடைகளை எல்லாம் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்கு வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அந்த மதுபானக் கடைகளை வழங்குகிறபோது அந்த நிர்வாகத்திலே இருக்கிறவர்கள் இந்த மதுபானக் கடைகளிலே பல இலட்சக்கணக்கான ரூபாயைக் கொள்ளையடித்திருக்கிறார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெ

[திரு. ஏ.கே. செல்வராஜ்] [2001 செப்டம்பர் 11

இருக்கிற தொழிலிலேயே அதிகமான அளவிலே இலாபம் வருகிற தொழில் மதுபானக் கடை நடத்துவதுதான். ஆனால், அந்த மதுபானக் கடையிலே அதை நடத்திய சங்கங்கள் அதிகமான அளவிலே இலாபத்தை ஈட்டியிருக்கிறார்களா என்றால் இலாபத்தை ஈட்டவில்லை. இலாபம் ஈட்டாமல் நட்டத்திலே அந்தக் கடைகளை நடத்தியதாக ஒரு குறிப்பையும் இன்றைக்குத் தந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே எத்தனையோ மதுபானக் கடைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. அதில் எந்த அளவுக்கு ஊழலெல்லாம் செய்திருக்கிறார்கள் என்ற பட்டியலை எல்லாம் நான் முறையாக நம்முடைய துறையினுடைய அதிகாரிகளிடத்திலே சொல்லி, அதையெல்லாம் வாங்கி இன்றைக்கு வைத்திருக்கிறோம். ஆக, எதிலெல்லாம் ஊழல் செய்ய முடியுமோ, அவை அனைத்திலுமே ஊழல் செய்து கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தையுமே இன்றைக்கு பாழ்படுத்திவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திலே மட்டும் செய்யவில்லை. காலையிலே நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய தொகுதிகளிலே நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே தேர்தல் நடைபெற்றது சம்பந்தமாக இங்கே பேசியிருக்கலாம். அங்கே அந்தத் தொழிலுக்குச் சம்பந்தம் இல்லாதவர்களையெல்லாம், கூலித் தொழில் செய்கிறவர்கள், சலவைத் தொழில் செய்கிறவர்கள், செருப்பு தைக்கிறவர்களையெல்லாம் அந்தச் சங்கத்திலே உறுப்பினர்களாக்கி, அந்தத் 'தொழிலுக்குச் சம்பந்தம் இல்லாதவர்களையெல்லாம் உறுப்பினர்களாக்கி, அந்தச் சங்கத்திலே அந்தத் தொழில் செய்யாதவர்களையெல்லாம் நிர்வாகத்திற்குக் கொண்டு வந்து, தமிழ்நாட்டிலேயிருக்கிற அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலேயும் அனைத்துப் பணங்களையும் கொள்ளையடித்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் ஏதோ மறுப்புத் தெரிவித்து, எதிர்ப்புத் தெரிவித்து, சபையை விட்டு வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காலையிலே பேசுகிறபோது உண்மையைத்தான் பேசியிருக்கிறார்கள். அதிலே எந்தவிதமான தவறும் கிடையாது. அனைத்துச் சங்கங்களையும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களையும் எடுத்துக்கொள்கிறபோது இன்றைக்கு அந்தச் சங்கங்களையெல்லாம் மூடிவிட்டு, புதிதாகச் சங்கத்தை ஆரம்பித்தால்தான் அங்கே நெசவுத் தொழிலையே செய்ய முடியும் என்ற நிலைக்கு இன்றைக்கு நெசவாளர்களெல்லாம் உந்தப்பட்டிருக்கிறார்கள்.



2001 செப்டம்பர் 11] [திரு. ஏ.கே. செல்வராஜ்]

ஏதோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே மட்டும் ஊழல் நடந்துவிட்டது என்று எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது பொய்யான வழக்குகளையெல்லாம் தொடுத்திருக்கிறார்களே, இவர்கள் செய்திருக்கிற ஊழலுக்கு,--என்னுடைய துறையிலே இவர்கள் செய்திருக்கிற ஊழலுக்கு,--நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் D.V.& A.C.-யின் மூலமாக நடவடிக்கை எடுப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தவறு செய்திருக்கிற எந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவரும் தப்பிக்க முடியாது என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊழலைப் பற்றிப் பேசுகிறார்கள். எங்கே ஊழல் நடைபெறாமல் இருந்தது? C.M.D.A.-விலே போக்குவரத்துக் கமிட்டி என்ற ஒரு கமிட்டியை அமைத்தார்களே, அந்த வழக்கு இப்போது நீதிமன்றத்திலே இருக்கிறது. அதைப்பற்றிக்கூட நான் விவரமாகச் சொல்லலாம் என்று எண்ணியிருந்தேன். அதிலே மிகப் பெரிய அளவிலே ஊழல் நடக்கவில்லையா?

இங்கே பாலம் கட்டுவதிலே ஊழலுக்கு வித்திட்டவர் யார், பொன்முடி தானே? அதை யாராவது மறுக்க முடியுமா? நம்முடைய பெருநகர வளர்ச்சிக் குழுமத்திலேயிருந்து அந்தக் கமிட்டிக்கு நம்முடைய மெம்பர் செக்ரெட்டரியை அந்தக் கமிட்டியினுடைய தலைவராக நியமித்து, அந்தக் கோப்பு அன்றைக்கு C.M.D.A.-வினுடைய துறையினுடைய அமைச்சராக இருந்த பொன்முடிக்குச் செல்கிறது. பொன்முடி என்ன செய்கிறார்? மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி என்ன செய்கிறார்? உடனடியாக மாநகராட்சியினுடைய மேயராக இருக்கிற ஸ்டாலினை அந்தக் கமிட்டிக்கு தலைவராக நியமிக்கிறார்.

பிற்பகல் 7-00

இப்படி நியமித்த காரணத்தினாலே சென்னை மாநகரத்திலே கட்டப்பட்டிருக்கிற அந்த மேம்பாலத்திலே ஊழல் நடந்ததற்கு காரணமாக இருந்தவர் யார், பொன்முடியல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி) அந்த பொன்முடி கையெழுத்திட்ட இந்தக் கோப்பிலே முதலமைச்சர் கையொப்பமிடவில்லையா? ஆக, அதற்கு பொன்முடிதான் முதற் காரணம். பொன்முடி கையெழுத்திட்ட காரணத்தினாலே, முதலமைச்சர் அதிலே கையெழுத்திடுகிறார். முதலமைச்சர்

கையெழுத்திட்ட காரணத்தினாலே, அந்தக் கமிட்டியினுடைய தலைவரான மு.க. ஸ்டாலின், மாண்புமிகு உறுப்பினர் மு.க. ஸ்டாலின், அந்தக் கமிட்டினுடைய தலைவர் என்ற காரணத்தினாலே, அவர்கள் பாலம் கட்டுவதிலே, வேண்டிய இடத்திலே பாலத்தைக் கட்டி, இன்றைக்கு பல கோடிக்கணக்கான ரூபாயைக் கொள்ளையடித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருக்கிறவர்களைப் பார்த்து ஊழல் செய்ததாக, ஊழல் குற்றச்சாட்டைப்பற்றி கூறுகிறார்கள். என்ன யோக்கியதை இருக்கிறது? விஞ்ஞான ரீதியிலே ஊழல் செய்திருக்கிறார்கள் என்றால், இவர்கள்தான் விஞ்ஞான ரீதியிலே ஊழல் செய்திருக்கிறார்கள். ஆக, ஊழலைப் பற்றிப் பேசுகிற அருகதை திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருப்பவர்களுக்கு இல்லை. நான் இன்னும் நிறைய கருத்துகளையெல்லாம் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்திலே இருந்தேன்.

பெசன்ட் நகரிலே, 17 இடங்கள் விதிமுறைக்கு மாறாக, அனைத்துமே அரசு விருப்புரிமை கோட்டாவிலே ஒதுக்கப்பட்டிருக்கினறன. வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக ஒதுக்கீடு செய்யப்படுகிறபோது, 15 சதவிகிதம் அரசு விருப்புரிமையின் பேரிலே ஒதுக்கப்படுவது வழக்கம். ஆனால், 17 இடங்களிலே, இருக்கிற இடங்கள் அனைத்துமே திராவிட முன்னேற்றக் கழகத்தார்களுக்கு, வேண்டியவர்களுக்கு, அன்றைக்கு அமைச்சராக இருந்த வீட்டுவசதித் துறையினுடைய அமைச்சர் ஆணை பிறப்பித்து, அந்த இடங்களையெல்லாம் ஒதுக்கியிருக்கிறார்கள். இதிலே, சொல்லப்போனால், பரிதி இளம்வழுதி இருக்கிறாரே, அவருடைய அம்மாவினுடைய பெயரிலே ஓர் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொன்மணி வைரமுத்துவிற்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிர்மலா பெரியசாமிக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இதிலே மார்க்கெட்டினுடைய விலை கிட்டத்தட்ட ரூபாய் 25 இலட்சத்திலே இருந்து 30 இலட்சம் இருக்கிறது. ஆனால், இவர்கள் நிர்ணயித்திருக்கிற விலை என்ன தெரியுமா? ரூ. 5.8 இலட்சத்தை மட்டும்தான் (மேசையைத் தட்டும் ஒலி) நிர்ணயம் செய்து விட்டு--அந்த இடத்திலே கிட்டத்தட்ட மார்க்கெட் மதிப்பீட்டை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது--கிட்டத்தட்ட அந்த இடத்திலே மட்டும் 10 கோடி ரூபாய் அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் இதிலே ஊழல் செய்திருக்கிறார்கள். இது சாதாரண ஊழல் அல்ல. இன்றைக்கு அந்தத் துறையினுடைய அமைச்சர் இங்கே இருந்திருந்தால், திராவிட



முன்னேற்றக் கழகத்தார்கள் இங்கே இருந்திருந்தால், இதைப்பற்றி இன்னும் சிறப்பான முறையிலே அவர்களோடு விவாதம் செய்திருக்கலாம். அவர்கள் இதற்கு என்ன பதில் தந்திருப்பார்கள் என்பது இந்த அவைக்குத் தெரிந்திருக்கும்; நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்தியிருக்கலாம். ஆனால், இவற்றையெல்லாம் பேசிவிடுவார்களோ என்ற அச்சத்திலே, (மேசையைத் தட்டும் ஒலி) பயந்ததால், இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் இந்த அவையைவிட்டு வெளிநடப்புச் செய்துவிட்டார்கள்.

இன்றைக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக, இங்கே பல்வேறு கோரிக்கைகளையெல்லாம் வைத்திருக்கிறார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பல்வேறு நலத் திட்டங்கள் எல்லாம் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் இருக்கிற மக்களுக்குச் செய்யப்பட்டிருக்கின்றன. 10-வது நிதிக் குழு மானியத்தின் மூலமாக 54 கோடி ரூபாயிலே 6,500 குடியிருப்புகள் கட்டப்பட இருந்தன. அதிலே, தற்சமயம் 4,876 குடியிருப்புகள் கட்டப்பட்டு இருக்கினறன. மீதமிருக்கிற 1,624 குடியிருப்புகளை இந்த ஆண்டு கட்டவிருக்கிறோம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

அதேபோல, வெள்ளக் குறைப்புப் பணிகளுக்காக, சென்னை, ஒக்கியம் துரைப்பாக்கத்திலே, அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் திட்டம் இருக்கிறது. அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 37.50 கோடி இதுகாறும் 987 குடியிருப்புகள் ரூ. 9.91 கோடிக்கு கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. மீதமிருக்கிற 1,312 குடியிருப்புகள் இந்த ஆண்டு 13.5 கோடி ரூபாயிலே கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மீதமிருக்கிற 704 குடியிருப்புகள் 30-9-2002-க்குள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

11-வது நிதிக் குழு சிறப்பு மானியமாக ரூபாய் 49 கோடி வழங்கியுள்ளது. இந்த 49 கோடியிலே இந்த ஆண்டு 4 கோடி ரூபாயிலே 1,620 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படவிருக்கின்றன. மீதமிருக்கிற 45 கோடி செலவிலே—சென்னையில் 2,820 குடியிருப்புகளும், மதுரையிலே 6.875 கோடி செலவில் 550 குடியிருப்புகளும், கோவையிலே 6.875 கோடியிலே 550 குடியிருப்புகளும் வருகிற 31-3-2005-க்குள் கட்டி முடிக்கப்படும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 7-05

நகர குடிசைப் பகுதிகளிலே சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக 6 கோடி செலவிலே 30,000 குடும்பங்கள் பயனடைகிற வகையிலே இந்த ஆண்டு பணிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளிலே இருக்கிற குடிசைவாழ் மக்களுக்கு சாலைகள், தெரு விளக்கு, பொதுக் குடிநீர், கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகளையெல்லாம் செய்வதற்காக இந்த 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இங்கே பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்டிருக்கிற குடியிருப்புகள் அனைத்துமே பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன என்ற கோரிக்கையெல்லாம் இங்கே வைத்திருக்கிறார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு 25 இலட்சம் ரூபாயிலே கடற்கரைப் பகுதியிலே இருக்கிற குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்டிருக்கிற குடியிருப்புகளைப் பழுதுபார்ப்பதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். மீதமிருக்கிற அனைத்துக் குடியிருப்புகளையுமே பழுதுபார்ப்பதற்காக ஹட்கோ நிதி நிறுவனத்திடம் கடனைப் பெற்று, படிப்படியாக பழுதடைந்திருக்கிற அனைத்து குடியிருப்புகளையும் பழுதுபார்க்கிற பணியை மேற்கொள்வதாக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகப் பேரூராட்சிப் பகுதியிலே இப்போது ஒரு புதிய திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. குடிசைமாற்று வாரியத்தின் மூலமாகப் பேரூராட்சிப் பகுதியிலே, நகராட்சிப் பகுதியிலே, குடிசைகளிலே வசிக்கிற அந்த அடித்தளத்து மக்களுக்கு உதவுகிற வகையிலே மங்களூர் ஓட்டுக்கூரை வீடுகள் கட்டுகிற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல பெருநகரப் பகுதிகளிலே சென்னை மற்றும் இருக்கிற அனைத்து மாநகராட்சிப் பகுதிகளிலே குடிசையிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்களுக்கு, தேவைப்படுபவர்களுக்கு கல்நார் ஓட்டு கூரைவீடுகள்—ஏ.சி. ஷீட். ஏ.சி. ஷீட்டை விரும்பாமல் ஓட்டு வீடுகளை நாங்கள் போட்டுக்கொள்கிறோம் என்று விரும்புபவர்களுக்கு ஓட்டு வீடும் அமைத்துத் தருகிற ஒரு புதிய திட்டத்தை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) குடிசை மாற்றுப் பகுதி திட்டத்திலே அறிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு இதற்காக கிட்டத்தட்ட 7 கோடி ரூபாய்க்கு மேலே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.



அடுத்தது குடிசை மாற்றுப் பகுதியிலே வாழ்கிறவர்களுக்கு. அதாவது Community Development Programme. நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த முறை ஆட்சியிலே இருந்தபோது குடிசைப் பகுதியிலே இருக்கிற மக்கள் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்பதற்காக, பள்ளிப் படிப்பை முடித்து, பள்ளிக்குச் செல்லாமல் குழந்தைகள் எல்லாம் தொழிலிலே ஈடுபட்டு, வேலைக்குச் செல்லுகின்றவர்களையெல்லாம், அந்தக் குழந்தைத் தொழிலாளர்களின் வாழ்வை முன்னேற்ற வேண்டும் என்பதற்காக ஒரு கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, அந்த ஒரு கோடி ரூபாயிலே, அந்தந்தப் பகுதியிலே குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் இருக்கின்ற பகுதிகளிலே இருக்கின்ற அந்தக் குழந்தைகள் எல்லாம், முறையாக ஒரு பள்ளியை அமைத்து, என்.ஜி.ஓ.-க்கள் மூலமாக அந்தப் பள்ளியை நடத்தி, கிட்டத்தட்ட இன்று வரைக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த அந்த ஒரு கோடி ரூபாயில் 76 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. மீதம் இருக்கிற அந்த 24 இலட்சத்தில் இந்த ஆண்டு அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மக்கள், குடிசை மாற்றுப் பகுதியிலே இருக்கிற அந்த ஏழைக் குழந்தைகள், ஏழைத் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறும் வகையில் அந்தத் திட்டம் இந்த ஆண்டு நிறைவேற்றப்படும். அதற்காக நிதி ஒதுக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 7-10

அதேபோல, மகளிர் தொழில் முனைவோர், தமிழகத்திலே 5 ஆண்டுகளிலே 5 இலட்சம் மகளிரை தொழில் முனைவோராக ஆக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு அந்த மகளிர் தொழில் முனைவோருக்காக 50 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, சமுதாயத்திலே இருக்கிற, அடித்தளத்திலே இருக்கிற மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பதற்காக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை எல்லாம் தீட்டிச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தற்போது சென்னை மாநகராட்சியிலே மிகப் பெரிய தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டது. அந்தத் தண்ணீர்ப் பஞ்சத்திலே குடிசை மாற்று வாரியப் பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டும் என்பதற்காக, 100 இடங்களிலே, 76 இலட்சம் ரூபாய் செலவில்

ஆழ்குழாய்க் கிணறுகளையும் அமைத்து, மின் மோட்டார்களையும் பொருத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பகுதிகளிலே சின்டெக்ஸ் டேங்குகளை எல்லாம் வைத்து, குடிசைகளிலே இருக்கின்ற மக்களின் தண்ணீர்ப் பஞ்சத்தை எல்லாம் நீக்கியிருக்கிறார்கள். இப்படிக் குடிசை மாற்று வாரியத்திலே பல்வேறு திட்டங்களை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் மூலமாக, நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 1978 ஆம் ஆண்டு கிராமத்திலே இருக்கின்ற மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதற்காக வட்ட அளவில், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களை—ஒவ்வொரு தாலுகாவிலும் உருவாக்கி, அதன் மூலம் கடன்களைக் கொடுத்து, கிராமத்திலே இருக்கிற மக்கள் வீடுகள் கட்டுவதற்கான ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது. 1978-லே ரூபாய் 3,000-லே ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கடன் வழங்கு திட்டம், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்திலே கடன் தொகை ரூபாய் 10,000 என்பதோடு அதற்கு மானியமாக ரூபாய் 2,000-மும் சேர்த்து 12 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகின்ற ஒரு திட்டம் இருந்தது. சமவெளிப் பகுதிகளுக்கு வழங்குகிறபோது அந்தக் கடன் தொகை ரூபாய் 12 ஆயிரம் என்றும், அதே மலைப் பிரதேசங்களுக்கு கடன் வழங்குகிறபோது 2 ஆயிரம் சேர்த்து, 14 ஆயிரம் ரூபாய் என்றும் கடன் வழங்கி கிராமத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் பயனடைகின்ற வகையிலே ஒரு மிகப் பெரிய திட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துச் செயல்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் கடந்த திராவிட முன்னேற்றக்கழக ஆட்சிக் காலத்திலே இருந்தவர்கள், அந்தத் திட்டத்தை, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்களுக்கு கடன் வழங்குகின்ற அந்தத் திட்டத்தை நிறுத்திவிட்டார்கள். 1998-லிருந்து 2000 வரைக்கும் அந்தக் கடன் வழங்குவதை நிறுத்திவிட்டார்கள். அதற்கு என்ன காரணம் என்றால் சமத்துவபுரம் என்ற ஒரு புதிய திட்டத்தை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். அந்த சமத்துவபுரம் திட்டத்திற்கு எங்கே இருந்து நிதி வந்தது? நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தாட்கோ மூலமாக, சமுதாயத்திலே இருக்கின்ற, ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் ஆட்சிக்கு வந்த உடனே அந்தத் திட்டத்தை நிறுத்தி, தாட்கோ மூலம்



கட்டப்படும் அந்த வீடுகளுக்காக ஒதுக்கப்படுகின்ற நிதியையும், அதோடு சேர்த்து நம்முடைய கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் மூலமாக, கூட்டுறவு இணையத்தின் மூலமாக 10 கோடி ரூபாய் கடன் பெற்று சமத்துவபுரம் திட்டத்தைத் தீட்டி சமத்துவபுரத்திற்கு நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு சமத்துவபுரங்களிலே குடியிருக்கும் நிறைய பேருக்கு இது தெரியாது. கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் மூலமாக கடனைப் பெற்றிருக்கிறார்கள் என்ற விவரம் இதுவரையிலும் அவர்களுக்குத் தெரியாமல் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை ஏமாற்றி, அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற பட்டாக்களைப் பதிவு செய்து, அதாவது அடமானம் செய்து, கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்கு அடமானம் செய்து, 10 கோடி ரூபாய் அந்த இணையத்திலே இருக்கிற சொந்த நிதியிலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வேறு எந்தவிதமான புதுமையான திட்டத்தையும் செயல்படுத்தவில்லை. அந்த சமத்துவபுரத்திலே நடந்த பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் உங்கள் அனைவருக்குமே தெரியும். ஆக, ஏதோ தமக்கு வேண்டியவர்கள் பயன்படுகின்ற வகையிலேதான், இந்த நலிந்தவர்களுக்கு உதவுகிற திட்டத்தைக்கூட திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 7-15

நம்முடைய புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, அனைத்துத் துறைகளின் அதிகாரிகளையெல்லாம் அழைத்து, துறைகளை ஆய்வு செய்தபோது, நானும், நம்முடைய துறையிலே இருக்கிற அதிகாரிகளும், அம்மா அவர்களிடத்திலே சொல்கிறபோது, வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களுக்கு வழங்கப்படுகிற இந்தக் கடன், கடந்த ஆட்சிக்காலத்திலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது அம்மா; ஆகையினால், அந்தக் கடனை நீங்கள் கண்டிப்பாக, அடித்தளத்திலே இருக்கிற மக்கள் பயன்படுகிற வகையிலே அந்தத் திட்டத்தை நம்முடைய ஆட்சிக் காலத்திலே மீண்டும் அறிவிக்கவேண்டும் அம்மா என்று சொன்னோம். கடந்த ஆட்சியிலே 14,000 ரூபாய்தான் கடன் வழங்கப்பட்டு வந்தது. இங்கே மானியக் கோரிக்கையின்மீது பேசிய பல்வேறு உறுப்பினர்கள் எல்லாம், வீட்டுவசதிச் சங்கத்தின் மூலமாக வழங்கப்படுகிற அந்தக் கடன் தொகையை உயர்த்தித் தரவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். வெட்டுத் தீர்மானங்களிலே பல்வேறு உறுப்பினர்கள், அந்த வட்ட

வீட்டுவசதிச் சங்கத்தின் மூலமாக வழங்கப்படுகிற கடன் தொகையை எல்லாம் நீங்கள் உயர்த்தித் தரவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஆய்வுக் கூட்டத்திலேயே, வட்ட வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வழங்கப்படுகிற அந்த E.W.S. திட்டத்திற்கு 25,000 ரூபாய ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த 25,000 ரூபாயிலே, 5,000 ரூபாய் மானியமாக வழங்குகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 2,000 ரூபாயாக இருந்த மானியம், இன்றைக்கு 5,000 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. கடன் தொகையாக 15,000 ரூபாய், அந்த வீட்டுதாரருடைய பங்காக 5,000 ரூபாய் வழங்குகிற திட்டத்தில் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 25.00 கோடி ரூபாய் இந்த நிதியாண்டில் செலவு செய்வதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மானியமாக 2,50,000 வீடுகளுக்கு ரூ.12.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். மேலும் ரூ.37.00 கோடி ஹட்கோ நிறுவனத்திடமிருந்து கடனாகப் பெறப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிலும் வீடு கட்டுவதற்காக 300 கோடி ரூபாய் இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, நம்முடைய தேர்தல் அறிக்கையிலும், ஆளுநர் உரையிலும் சொன்னதைப்போல, இன்றைக்கு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற திட்டத்திலே அனைத்து சமுதாயத்திலேயும் இருக்கிற, அடித்தளத்திலே இருக்கிற மக்களுக்குப் பயன்படுகிற வகையிலே இவ்வளவு நிதியை நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

இதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்டிருக்கிற வீடுகளில் கிட்டத்தட்ட 8,000-க்கும் மேலாக வீடுகள் விற்பனை செய்யப்படாமல் இருக்கின்றன. அதேபோன்று, 23,826 காலி மனைகள் இன்றைக்கு விற்பனை செய்யப்படாமல் இருக்கின்றன. இதையெல்லாம் விற்பனை செய்யவேண்டுமென்ற எண்ணத்திலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்தந்தப் பகுதிகளிலே இருக்கிற உள்ளாட்சி மன்றங்களுக்கு, உள்ளாட்சிகளுக்கு அந்த வீடுகளை விற்பனை செய்கின்ற அதிகாரத்தைத் தந்திருக்கிறார்கள். அந்த உள்ளாட்சியிலே இருக்கிற நிர்வாகத்திற்கு ஒரு சதவிகிதம், அவர்களுக்கு செலவுத் தொகையாக, அதாவது சர்வீஸ் சார்ஜ்-ஆக வழங்க இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இந்த வீட்டுவசதி வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்டிருக்கிற வீடுகள் நிறைய இடங்களிலே விற்பனை ஆகாமல் இருக்கின்றன. குறிப்பாக, கோவை மாவட்டம், மதுரை மாவட்டம், சேலம் மாவட்டம் ஆகிய இந்த 3 மாவட்டங்களிலே இன்றைக்குக் கிட்டத்தட்ட 120 கோடி ரூபாய்க்கு மேலே மதிப்புள்ள வீடுகள் விற்பனை ஆகாமல் இருந்துகொண்டிருக்கின்றன. இந்த வீடுகள் விற்பனை ஆகாமல் இருப்பதற்குக் காரணம்; கடந்த கால ஆட்சியிலே, தரமில்லாமல் கட்டப்பட்ட வீடுகள், கடந்த ஆட்சியிலே வீடுகள் கட்டப்படுவதற்குத் தேர்வு செய்யப்பட்டிருக்கின்ற இடங்கள், மக்கள் அதிகமாக நடமாட்டம் இல்லாமல், மக்கள் குடியிருப்பதற்கு ஏற்றதாக இல்லாமல், ஊரிலிருந்து மிகத் தொலைதூரத்திலே தள்ளிக் கட்டிய காரணத்தினாலே, அந்த வீடுகளை இன்றைக்கு விற்க முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆய்வுக் கூட்டத்திலே அறிந்து, உடனடியாக ஓர் உயர்மட்டக் குழுவை நியமித்து, அந்த வீடுகளுடைய விலையை நிர்ணயம் செய்வதற்கும், அந்த வீடுகளை விற்பதற்கும் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். இன்றைக்கு நான் இந்தத் துறையினுடைய அமைச்சராகப் பொறுப்பேற்றவுடனேயே அனைத்து அதிகாரிகளையும் அழைத்துப் பேசி, அந்தந்த மாவட்டங்களின் தலைநகரங்களை விற்பனையாகாத வீடுகளை அறிவித்து, மக்களுக்கு விளம்பரப்படுத்தி, இன்றைக்கு ஓரளவிற்கு வேகமான முறையிலே அந்த வீடுகளையெல்லாம் விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்திருக்கிறோம்.

பிற்பகல் 7-20

இங்கே மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசுகிறபோது, வீட்டுவசதி வாரியத்தை மூடிவிடலாம் என்ற கோரிக்கையை முன்வைத்தார்கள். அவர்களுக்கு நான் ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் ஒரு வருட காலத்திற்குள், இன்றைக்கு விற்பனையாகாமல் இருக்கிற கிட்டத்தட்ட 351 கோடி ரூபாய் மதிப்பிற்கு மேலே இருக்கிற அனைத்து வீடுகளையும் விற்பனை செய்துவிடுவேன் என்ற உத்தரவாதத்தை இந்த மாமன்றத்திலே நான் உறுதியாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இன்றைக்கு மக்கள் வாங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியிலே அந்த வீடுகளை ஒதுக்குவதிலே அக்கறை இல்லாமல் தேக்கமான நிலை நீடித்த காரணத்தினாலே,

G.D.Q. போன்ற ஒதுக்கீடுகளிலே அந்த மக்கள், அந்த அமைச்சரிடத்திலே வந்து ஒதுக்கீடு பெறுவதிலே மிகப்பெரிய சிரமம் இருந்திருக்கிறது. அதற்கு மிகப்பெரிய எதிர்பார்ப்போடு அவர்கள் இருந்த காரணத்தினாலே, மக்கள் அவரை அணுகுகிற சூழ்நிலை இல்லாமல் போய் இருந்திருக்கிறது. ஆனால், இப்போது அந்தமாதிரியான சூழ்நிலை இல்லை. G.D.Q.-விலே ஒதுக்கீடு விரும்புகிறவர்கள் நேரடியாக அமைச்சரை நீங்கள் வந்து பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கு வேண்டுமென்றால், தபாலிலே நீங்கள் உங்களுடைய விண்ணப்பத்தை அனுப்புங்கள்; நான் போட்டுத் தருகிறேன் என்று சொல்லி, நான் பொறுப்பேற்ற உடனே, இன்றைக்குவரை கிட்டத்தட்ட 500-க்கும் மேற்பட்ட வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட துரிதமான நடவடிக்கையெல்லாம் நாங்கள் மேற்கொண்டு இருக்கிறோம்.

அதேபோல, வீட்டுவசதி வாரியத்திலே கட்டப்பட்டிருக்கிற குடியிருப்புகள் மிக அதிகமான அளவிலே பழுதடைந்திருப்பதாக இங்கே மாமன்றத்திலே இருக்கிற நிலையை உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். இதையெல்லாம் பழுதுபார்ப்பதற்காக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு 13 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து (மேசையைத் தட்டும் ஒலி) எங்கெங்கே அதிகமான அளவிலே பழுதடைந்திருக்கின்றனவோ அந்த அனைத்து வீடுகளையுமே பழுதுபார்க்கச் சொல்லி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். ஆகவே இந்த அரசு பொறுப்பேற்ற 110 நாட்களுக்குள்ளே, இப்படிப்பட்ட துரிதமான நடவடிக்கைகளையெல்லாம் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த ஆட்சி வேகமான முறையிலே மக்களுக்குப் பணியாற்றுகின்ற வகையிலே நாம் அனைவருமே உழைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ஞானசேகரன் அவர்கள் இங்கே உரையாற்றுகிறபோது, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திலே கட்டப்பட்டிருக்கிற வீடுகளை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 9-8-2001 அன்று வரன்முறைப்படுத்துவதற்காக ஓர் உத்தரவு, அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதிலே நாம் 10 சதவிகிதம் மட்டும் குறைத்து இருக்கிறோம். ஆந்திர மாநிலத்தைப்போல ஒரு முறையை நீங்கள் இங்கே பின்பற்றிடவேண்டும் என்ற கோரிக்கையை



வைத்திருக்கிறார்கள். அவருக்கு என்னுடைய பதில், ஆந்திர மாநிலத்திலே 1998-ஆம் ஆண்டு வரன்முறைப்படுத்தும் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. ஆந்திர முறைக்கும், சென்னை முறைக்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. ஆந்திரா திட்டம் அம்மாநிலத்திலுள்ள அனைத்து நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் நகர வளர்ச்சிக் குழுமத்திற்கும் பொருந்தும். ஆனால், நம்முடைய திட்டம் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு மட்டும் பொருந்தும். ஆந்திர முறையிலே ஒரு குறிப்பிட்ட பரப்பளவு வரை விதி மீறிக் கட்டிய கட்டடங்களுக்கு ஒரே மாதிரியான கட்டணம் அதாவது flate rate வசூலிக்கப்படுகிறது. உதாரணமாக ஒப்புதலுக்குப் புறம்பாகக் கட்டப்பட்டுள்ள 60 சதுர மீட்டர் வரையிலான பரப்பளவுள்ள குடியிருப்புகளுக்கு ரூ.4,000 எனவும்; 60 சதுர மீட்டருக்கு மேலேயுள்ள குடியிருப்புகளுக்கு ரூ.5000 எனவும், நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 60 சதுர மீட்டருக்குக் கீழேயுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு ரூ.8,000 என்றும் 60 சதுர மீட்டருக்கு மேலேயுள்ள அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கு ரூ.10,000 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது ஆந்திர மாநிலத்திலே. ஆனால், நம்முடைய சென்னையிலே அறிவியல் பூர்வமாக ஒவ்வொரு வகையான விதிமீறல்களுக்கும் ஒவ்வொரு வகையான கட்டணம் வசூலிக்கப்படுவதால், விதிமுறைகளைக் கடுமையாக அனுசரித்து, குறைவாகவோ, கூடுதலாகவோ கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

பிற்பகல் 7-25

மேலும், பெருநகரத் திட்டப் பகுதி பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அப்பகுதி மக்களுடைய பொருளாதாரச் சக்தியையும் நிலத்தினுடைய விலையையும் கணக்கிலேகொண்டு அதற்கேற்றவாறு வெவ்வேறு வகையான கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. ஆந்திர முறையிலே கட்டட அபிவிருத்தியாளர்கள்தான் அதிக இலாபம் அடைகிறார்கள். ஆந்திர வரன்முறைத் திட்டத்திலே, மாநிலம் முழுவதிலுமிருந்து அதிக மனுக்கள் பெற்றும் அவ்வரசுக்கு அதிக வருமானம் கிடைக்கவில்லை. ஆனால், நமது முறையிலே, பொதுமக்கள் அதிக பயன்பெறும் வகையிலே அமைந்துள்ளது.

2001-இலே திருத்தப்பட்டுள்ள இந்தத் திட்டத்தினுடைய சிறப்பு அம்சங்கள் கீழ்க்கண்டவாறு இருக்கின்றன:

*31-7-2001* வரை கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டடங்கள் இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெறலாம். கட்டட பரப்பு, சாலை அகலம், பக்க இடைவெளி, மற்றும் வாகனங்களை நிறுத்துமிடம் ஆகியவற்றிலுள்ள விதி மீறல்களுக்கு சென்ற ஆண்டு கட்டணத்திலேயிருந்து 10 சதவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

விதி மீறப்பட்டுள்ள அடுக்குமாடிகளிலுள்ள தனிக்குடித்தனப் பகுதிச் சொந்தக்காரர்களுக்குத் தனியாக மனு செய்து, வரன்முறைப்படுத்தி பலன் அடையலாம். நமது வரன்முறைப்படுத்தும் திட்டத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, அவ்வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டு, இந்தத் திட்டம் சரியான சமூக நோக்கத்தோடு, செயல்படுவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதிகப்படியான விதி மீறிய கட்டடங்களுக்கு அதிகக் கட்டணம், குறைவாக விதி மீறிய கட்டடங்களுக்கு குறைவான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரன்முறைக் கட்டணம் குறைவாக நிர்ணயிக்கப்பட்டால் விதி மீறிக் கட்டுபவர்களுக்கு மேலும் ஊக்கம் அளித்ததாக அமைந்துவிடும். நமது வரன்முறைக் கட்டணம் நிலத்தினுடைய மதிப்பு, கட்டடம் கட்டுவதற்கான செலவு மற்றும் கட்டி விற்கப்படும் விலையினுடைய அடிப்படையிலே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இன்னும் ஓர் உதாரணத்தை மட்டும் நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். 2400 சதுர அடி கொண்ட மனையினுடைய விலை தோராயமாக ரூ.12 இலட்சம். இதற்கு கட்ட அனுமதிக்கப்படுகிற பரப்பு 3,500 சதுர அடி. சுமார், ஒரு சதுர அடி மனையினுடைய விலை 350 ரூபாய் வரும். கட்டடச் செலவு 650 ரூபாய். மொத்தச் செலவு ஆயிரம் ரூபாய். கட்டி விற்கப்படும் குடியிருப்புகளினுடைய தளத்தினுடைய மதிப்பு சதுர அடிக்கு ரூபாய் 1300. கட்டட அபிவிருத்தியாளர்களுக்குக் கிடைக்கும் இலாபம் ரூபாய் 300. அதிகப்படியாக கட்டப்பட்டுள்ள தளப் பரப்பிற்கு சதுர அடிக்கு ரூபாய் 350, தேவைப்படுவதினுடைய நிலத்தினுடைய மதிப்பு—கூடுதல் நிலம் வாங்காமல் விதிகளை மீறி 650 சதுர அடி கட்டுவதால் மொத்த இலாபம் 650 ரூபாய். இதில் சுமார் 105 மட்டும் ஒரு சதுர அடிக்கு வரன்முறைக் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. வரன்முறைக் கட்டணம் செலுத்திய பின்புகூட கட்டடதாரர்களுக்கு அதிக இலாபம் இருக்கிறது என்பதை மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.





*பிறபகல் 7-30*

நகர ஊரமைபபுத் துறையின் மூலமாக, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பாரம்பரியமிக்க நகரங்களிலே சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கவும், சுற்றுலாப் பயணிகளுக்கு வசதி ஏற்படுத்தவும் தோராயமாக 12 இலட்சம் ரூபாய் முதல் 25 இலட்சம் ரூபாய் செலவிலே திட்டமிடப்பட்டு, அத்தொகை மானியமாக நகர்ப்புற வளர்ச்சி நிதியிலே இருந்து வழங்கப்படும். இத்திட்டம் முதற்கட்டமாக 11 பாரம்பரியமிக்க நகரங்களில் செயல்படுத்தப்படும். சிதம்பரம், பூம்புகார், பழனி, காரைக்குடி, செஞ்சி, இராமேஸ்வரம், பேரூர், குளச்சல், நாகூர், வேளாங்கண்ணி, கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய நகரங்களிலே இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், நம்முடைய நகர ஊரமைப்புத் துறையிலே ஒப்புதல் அளிக்கிறபோது காலதாமதம் ஆகிறது என்ற குற்றச்சாட்டினையெல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பணிகளையெல்லாம் துரிதப்படுத்துவதற்காக, கணினிமயமாக்குவதற்காக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதியை ஒதுக்கி இருக்கிறார்கள்.

வீட்டுவசதித் துறை, வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள், நகர ஊரமைப்புத் துறை போன்ற அனைத்துத் துறைகளையும் கணினிமயமாக்கி, வேலை தாமதம் இல்லாமல் அவ்வப்போது மக்களுக்குப் பயன்படுகிற வகையிலே அறிவித்து இருக்கிறார்கள்.

அதேபோல், நம்முடைய சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலமாகக் கட்டப்பட்டு வருகிற கோயம்பேடு பஸ் நிலையம், வருகிற 2002 ஜனவரி மாதத்தில் திறக்கப்பட இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் வெளிவட்டச் சாலைகள், 2002-லே திறக்கப்பட இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

லாரிகள் நிறுத்துவதற்காக மாதவரத்திலே மிகப் பெரிய லாரிகள் நிறுத்துமிடம் C.M.D.A மூலமாக, 1994-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. கோயம்பேட்டில் புறநகர் பேருந்து நிலையம் மற்றும் கோயம்பேடு மொத்த வணிக வளாகம் அருகிலே ஒரு லாரி நிறுத்தும் மையம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும். தென் மாவட்டங்களில்

இருந்து வரும் லாரிகளை நிறுத்த தாம்பரம் அருகே ஒரு லாரி நிறுத்தும் மையம் அமைக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக முழுத் தொகையையும் செலுத்துகிறவர்களுக்கு உடனடியாக Sale deed விற்பனைப் பத்திரம் வழங்கப்படும் என்ற அறிவிப்பினையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இப்போது இந்தச் சமுதாயத்திலே இருக்கிற ஏழையெளிய மக்கள் பயன்படுகிற வகையிலே பல்வேறு நலத் திட்டங்களை எல்லாம் அறிவித்து திட்டங்கள் தீட்டியிருக்கிறார்கள். இங்கே மன்றத்தினுடைய உறுப்பினர்கள் பல்வேறு வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் தந்திருக்கிறீர்கள். நீங்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்குக் கோரப்பட்டு இருக்கிற நிதியை அரசுக்குத் தருமாறு உங்களை அன்போடு வேண்டி, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 7-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) வீட்டுவசதித் துறை மானியக் கோரிக்கைக்கு இவ்வளவு வரவேற்பு இருப்பது பெரிய வியப்பாக இருக்கிறது. இப்போது வாக்கெடுப்பு.

### (இ) கோரிக்கை எண் 32-வீட்டு வசதி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 32-வீட்டு வசதி, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு:



**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி இருக்கையில் இல்லை.

திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கா. சுந்தசாமி, இருக்கையில் இல்லை.

திரு. கா. சுந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வீட்டுவசதி பற்றிய *32* ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் *ரூ.58,61,94,000*-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஈ) கோரிக்கை எண் 33 - நகர்ப்பகுதி வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் *33*-நகர்ப்பகுதி வளர்ச்சி. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி.



**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய *33* ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் *ரூ.48,66,95,000*-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(12-9-2001)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *7-36* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ). சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

96. மானியக் கோரிக்கை எண்.25—கைத்தறி மற்றும் துணிநூல் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 2001-2002 (தமிழ், ஆங்கிலம்).

97. கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய சாதனைத் திட்டம், 2000-2001 (தமிழ், ஆங்கிலம்).

98. கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் மக்கள் சாசனம் என்ற புத்தகம், 2001 (தமிழ், ஆங்கிலம்).

99. மானியக் கோரிக்கை எண். 4—தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள்—நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002 (தமிழ், ஆங்கிலம்).

100. மானியக் கோரிக்கை எண். 32—வீட்டுவசதி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002 (தமிழ், ஆங்கிலம்).

101. மானியக் கோரிக்கை எண். 33—நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002 (தமிழ், ஆங்கிலம்).



# இணைப்பு - I

(43-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 25 கைத்தறியும் துணித் தொழிலும் கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002

### 1. முன்னுரை

1.01. மாநிலத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக, கிராமப்புறப் பகுதிகளில் அதிக அளவில் வேலைவாய்ப்பு வழங்குவதில் கைத்தறி, விசைத்தறி மற்றும் துணி நூல் தொழில்கள் முக்கிய பங்கினை ஆற்றுகின்றன. இவை மாநிலத்தின் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகிக்கின்றன. இம்மூன்று பிரிவுகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒன்றின் தேவையினைப் பிரிதொன்று பூர்த்தி செய்யும் வகையில் செயல்படுத்துவதற்கும், தேவையற்ற போட்டியைத் தவிர்ப்பதற்கும் இம் மூன்று பிரிவுகளின் நடவடிக்கைகளை வகைப்படுத்தும் பணியினை அரசு மேற்கொண்டு வருகிறது.

1.02. கைத்தறி தயாரிப்புப் பொருள்களுக்கு இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்கள் உள்ளனர். உண்மையைக் கூறின், நம் நாட்டில் மட்டுமல்லாது வெளிநாட்டிலும்கூட கையினால் தயாரிக்கப்பட்ட பருத்தி, நூலிழை, பட்டு ஆகியவற்றாலான கைத்தறித் தயாரிப்புப் பொருட்களின் தேவை அதிகரித்துள்ளது.

1.03. ஏழை கைத்தறி நெசவாளர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதுடன், விசைத்தறி மற்றும் துணி நூல் பிரிவுகளுடன் போட்டியிடுகின்ற அளவுக்கு அவர்களுக்கு ஊக்கமளிப்பதுடன், மாநிலத்தில் கைத்தறி, விசைத்தறி மற்றும் ஆலைப் பிரிவுகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதும் கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் முக்கிய நோக்கமாகும்.

1.04. இத்துறைக்கு கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் துறைத் தலைவராக உள்ளார். கைத்தறி, விசைத்தறி மற்றும் துணி நூல் ஆகிய பிரிவுகளுக்கான துறையின் கொள்கைகள் மற்றும் திட்டங்களை

[2001 செப்டம்பர் 11

திட்டமிட்டு வகுத்தல் ஆகிய பணிகளை கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் கவனித்து வருகிறார். தலைமை அலுவலகத்தில் இயக்குநருக்கு உதவியாக மூன்று இணை இயக்குநர்களும், அதாவது, ஓர் இணை இயக்குநர் கைத்தறி பொறுப்பிலும், மற்றொருவர் துணி நூல் பொறுப்பிலும், மூன்றாவது இணை இயக்குநர் சீருடை பொறுப்பிலும் உள்ளனர். துறையின் திட்டங்கள் முழுவதையும் திட்டமிட்டு வகுத்தல் மற்றும் நிர்வகிக்கும் பொறுப்புகளை கைத்தறி இயக்குநர் கவனித்து வருகிறார். சரக அளவில் அரசின் கொள்கைகள் மற்றும் இயக்குநரின் உத்தரவுகளைச் செயல்படுத்துவதுடன் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளையும் 18 சரக துணை இயக்குநர்கள்/ உதவி இயக்குநர்கள் கண்காணித்து வருகின்றனர். மாநிலத்திலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இத்தொழிலுக்கு தொடர்புடைய கூட்டுறவு நிறுவனங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிமுறைகளின்படி கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் பதிவாளராகவும் உள்ளார். மாநிலத்தின் துணி நூல் அதிகார ஆணைக் குழுவாக செயல்படுவதன் வாயிலாக துணி நூல் ஆலைகள் நன்முறையில் செயல்படத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பும் இத்துறைக்கு உள்ளது.

1.05. "கைத்தறி மற்றும் துணி நூல்" மானியக் கோரிக்கை எண் 25-ன்கீழ் 2001-2002 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் பின்வரும் விவரப்படி ரூ. 224.08 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| திட்டம் சாராதவை | 167.17 |
| மாநிலத் திட்டம் | 0.01 |
| மைய அரசுத் திட்டம் | 4.90 |
| மைய அரசும் மாநில அரசும் பங்கு பெறும் திட்டம் | 52.00 |
| மொத்தம் | **224.08** |

1.06. இந்தியாவின் மிகத் தொன்மையான தொழிலான துணி நெசவுத் தொழில் நாட்டின் அன்னியச் செலாவணி ஈட்டுவதில் பெரும் பங்கு வகிக்கிறது. நமது நாட்டின் மொத்த ஏற்றுமதியில் துணி நெசவுத் தொழிலின் பங்கு 35 சதவிகிதத்திற்கும் மேற்பட்டதாகும். இந்திய பொருளாதார வளர்ச்சியில் முக்கியமான பங்கை வகிக்கும்



2001 செப்டம்பர் 11]

துணித் தொழில், தொழில் உற்பத்தியில் பெரும் தொழிலாக விளங்குகிறது. பஞ்சை அடிப்படையாகக் கொண்ட துணித் தொழில், போதிய அளவு தரமான பஞ்சு கிடைக்காமை மற்றும் பஞ்சு விலை ஏற்றம் இவற்றால் பெரும் இடர்ப்பாடுகளை சந்தித்து வருகிறது. இந்த இடர்ப்பாடுகளுக்கிடையிலும் கூட்டுறவு நூற்பாலைகள் கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களின் தேவையை தமது முழுமையான உற்பத்தி மூலம் பூர்த்தி செய்து வருகின்றன. கூட்டுறவு நூற்பாலைகள் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தபோதிலும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூல் தட்டுப்பாடு இன்றி நியாயமான விலையில் கிடைக்கச் செய்ய அவை தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

1.07. மக்களின் துணித் தேவையை நிறைவு செய்வதில் விசைத்தறித் தொழிலும் தமிழ்நாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது. தாராளமயமாக்கப்பட்ட உரிம முறைகளினால் விசைத்தறித் தொழில் தொடர்ந்து நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது. மகாராஷ்டிர மாநிலத்திற்கு அடுத்தபடியாக மிக அதிக அளவிலான விசைத்தறிகளைக் கொண்டுள்ள மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாட்டில் சுமார் 4.00 இலட்சம் விசைத்தறிகள் உள்ளன.

1.08. ஏழை கைத்தறி நெசவாளர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், தறிக்கூடத்துடன் இணைந்த வீட்டுவசதித் திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், குடும்ப ஓய்வூதியத் திட்டம், முதியோர் ஓய்வூதியத் திட்டம், நல்வாழ்வு செறிவுத் திட்டம் போன்ற பல்வேறு நல்வாழ்வு மற்றும் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசு முன்னோடியாக விளங்குகிறது.

1.09. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறி மற்றும் விசைத்தறித் துணிகளை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் வாயிலாகவும், சங்கங்களின் சொந்தக் கிளைகள் மற்றும் விற்பனை முகவர்கள் வாயிலாகவும், "லூம் வேர்ல்டு" விற்பனை நிலையங்கள் வாயிலாகவும், விற்பனை செய்வதற்குப் பயனுள்ள நடவடிக்கைகளை கைத்தறி மற்றும் துணி நூல் துறை மேற்கொண்டு வருகிறது. மேலும், கைத்தறித் துணி விற்பனையினை அதிகரிக்கும் நோக்குடன் முக்கிய இடங்களில் கண்காட்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மாதிரியான நடவடிக்கைகள் தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதற்கு முக்கிய காரணியாக விளங்குகிறது.

[2001 செப்டம்பர் 11

**கைத்தறிகள்**

**2. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்**

தமிழ்நாட்டில் 31-3-2001 அன்றைய நிலவரப்படி, மொத்தம் 1414 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 2.92 இலட்சம் கைத்தறிகளுடன் இயங்கி வருகின்றன. தமிழகத்தில் கைத்தறி நெசவாளர்கள் பெருமளவில் வசித்து வரும் கிராமம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் ஆண்டொன்றுக்கு சராசரியாக 950.00 இலட்சம் மீட்டர் அளவுக்கு பல்வேறு வகைப்பட்ட கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. அவ்வாறே ஆண்டொன்றுக்கு சராசரியாக ரூ. 450.00 கோடி அளவிற்கு இச்சங்கங்கள் விற்பனையை மேற்கொண்டு வருகின்றன. தமிழக அரசினால் தீட்டப்படும் கைத்தறி நெசவாளர் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நெசவாளர் நல்வாழ்வுத் திட்டங்களின் பயன்கள் யாவும், பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக மட்டுமே கைத்தறி நெசவாளர்களைச் சென்றடைகின்றன.

**3. பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்**

3.01. பட்டு கைத்தறி நெசவாளர்களின் நுண்திறத்தினால் காஞ்சிபுரம், ஆரணி, திருபுவனம் மற்றும் சேலம் பகுதியிலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புகழ் பெற்று விளங்குகின்றன. இருபக்கக் கரை, நுண்கலை வடிவங்கள், சேலை தலைப்புகளின் கோர்வை நெசவு மற்றும் வனப்புமிகு ஜரிகை வேலைப்பாடு முதலியவை தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பட்டுச் சேலைகளின் சிறப்பு அம்சங்களாகும். தமிழகத்தில் தற்போது 102 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 57,000 பட்டு கைத்தறிகளுடன் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் மட்டும் ஆண்டொன்றுக்கு சராசரியாக ரூ. 157.00 கோடி மதிப்புள்ள 24.00 இலட்சம் மீட்டர் பட்டு ரகத் துணி வகைகள் உற்பத்தி செய்யப்பட்டு சுமார் ரூ. 180.00 கோடி மதிப்பிற்கு விற்பனை மேற்கொள்ளப்படுகிறது. அரசு செயல்படுத்தும் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நல்வாழ்வுத் திட்டங்கள் இச்சங்கங்கள் வாயிலாக அவற்றில் உள்ள பட்டு கைத்தறி நெசவாளர்களைச் சென்றடைகின்றன.



2001 செப்டம்பர் 11]

3.02. பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பட்டு இரக ஜவுளி உற்பத்திக்குத் தேவையான கச்சாப் பட்டினை காஞ்சிபுரத்தில் உள்ள "டான்சில்க்" எனப்படும் தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் மற்றும் காஞ்சிபுரத்திலுள்ள அண்ணா பட்டு பரிமாற்றகத்தின் மூலமாகக் கொள்முதல் செய்து வருகின்றன. இப்பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆண்டொன்றுக்கு 3.00 இலட்சம் கிலோ பட்டு நூலை உபயோகப்படுத்துகின்றன.

3.03. பட்டுப் புடவைகள் மற்றும் வேட்டிகள் உற்பத்தியில் சரிகை ஒரு முக்கியமான மூலப்பொருளாகும். பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 56,000 கி.கி. சரிகை தேவைப்படுகிறது. காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை ஆலை ஆண்டொன்றுக்கு 17,000 கி.கி. சரிகையினை உற்பத்தி செய்து, சங்கங்களின் மொத்தத் தேவையில் 30 விழுக்காட்டினைப் பூர்த்தி செய்கின்றது. எஞ்சிய சரிகை தேவைகளுக்கு, கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரின் தலைமையில் அரசால் அமைக்கப்பட்ட மத்திய சரிகைக் கொள்முதல் குழு மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. இக்குழு பிரதி மாதமும் அந்தந்த மாதத்தில் நிலவும் தங்கம் மற்றும் வெள்ளி விலைகளின் அடிப்படையில் சரிகையின் விலையினை நிர்ணயம் செய்கிறது. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தக் கூட்டம் 2000 அமல்படுத்தப்பட்டதன் அடிப்படையில், சரிகை உற்பத்தியாளர்கள்/ சரிகை வியாபாரிகளிடமிருந்து விலைப்புள்ளிகள் மூடிய முத்திரை பதித்த கவரில் பெறப்பட்டு குறைந்த விலைப்புள்ளி கோரப்பட்ட வியாபாரிகளுக்கு சரிகை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பட்டு நெசவாளர் குழுவினால் செய்யப்படும் ஒதுக்கீட்டின்படி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சரிகை உற்பத்தியாளர்கள்/ வியாபாரிகளால் சரிகை வழங்கப்படுகிறது. இம்முறையினால் குறைந்த விலையில் தரமான சரிகைகள் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**4. தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்**

4.01. மாநிலத்தில் தறியில்லாத ஏழை நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிப்பதற்கென தொழிற்கூட அமைப்பிலான தொழிலியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை அரசு உருவாக்கியது. இத்தகைய தொழிற்கூடங்களில், நெசவாளர்களுக்குத் தறிகள் நிறுவப்பட்டு, நூலும் விநியோகிக்கப்படுகிறது. இவ்வாறு மாநிலத்தில் அமைக்கப்பட்ட 190 சங்கங்களில், 137 தொழிலியல்

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் 2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 36.00 கோடி மதிப்பிற்கு 76.11 இலட்சம் மீட்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட 137 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில், 29 சங்கங்கள் ஆதிதிராவிடர் மட்டும் பயன்பெறும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன. அதில் 10 சங்கங்கள் மகளிர்களுக்காக மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன.

4.02. மேற்படி தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தொழிற்கூட அமைப்பிலான கட்டடங்களில் இயங்கி வருவதால், தொழிற்சாலைகளுக்கான சட்டம் மற்றும் விதிமுறைகளின்கீழ் உள்ள அனைத்து விதிகளும் இச்சங்கங்களுக்குப் பொருந்துவதால், கூடுதல் செலவினங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதன் காரணமாக, சட்டபூர்வமான தொகைகளைக்கூட செலுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, சங்கங்கள் இலாபகரமாகச் செயல்பட வாய்ப்பிருப்பின் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றுவதென முடிவு செய்யப்பட்டது. இதுவரை 33 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

## வளர்ச்சித் திட்டங்கள்

### 5. தள்ளுபடி மானியத் திட்டம்

5.01. கைத்தறித் துணி வகைகளை விசைத்தறி மற்றும் ஆலைத் துணிகளுடன் போட்டியிட்டு சந்தையில் விற்பனை செய்ய உதவும் வண்ணம் துணிகளின் விலையினை குறைத்து விற்பனை செய்யும் நோக்கோடு கைத்தறித் துணி விற்பனைக்கு தள்ளுபடி மானியம் அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முக்கிய திட்டமானது கடும் போட்டியிலிருந்து கைத்தறித் தொழிலை பாதுகாப்பது மட்டுமல்லாமல், கைத்தறித் துணி வகைகளுக்கு சந்தையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியிலிருந்து மீட்டு கைத்தறி நெசவாளர்களையும் பாதுகாக்கிறது.

5.02. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் விற்பனை செய்யப்பட்டு வரும் கைத்தறித் துணிகளின் சில்லறை மற்றும் மொத்த விற்பனைகளுக்கு 12-5-1998 முதல் 20 விழுக்காடு தள்ளுபடி வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது.



5.03. தள்ளுபடி மானியத் திட்டம் 1989-90ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் விற்பனை மேம்பாட்டுத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது. விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டம் 1-4-2000 முதல் மத்திய அரசால் கைவிடப்பட்டதைத் தொடர்ந்து 1-4-2000 முதல் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மத்திய அரசுத் திட்டமான "தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா" திட்டத்தின்கீழ் "விற்பனை ஊக்குவிப்பு" என்ற இனத்தில் தள்ளுபடி மானியத்தின் மத்திய அரசின் பங்கு வழங்கப்படுகிறது. மத்திய அரசின் விதிமுறைகளின்படி, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் கடந்த 3 ஆண்டுகளின் விற்பனையில், 10 விழுக்காடு தொகை பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், 8 விழுக்காடு தொகை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும் முதல் 2 ஆண்டுகளுக்கு (அதாவது) 2000-2001 மற்றும் 2001-2002-ல் வழங்கப்படுவதோடு, இத்தொகைக்கான செலவினம் மத்திய மற்றும் மாநில அரசுகளால் சமமாகப் பகிர்ந்துகொள்ளப்படும். விதிமுறைகளின்படி, "விற்பனை ஊக்குவிப்பின்கீழ்" 2000-2001ஆம் ஆண்டுக்கு ரூ.2343.31 இலட்சம் விடுவிக்க மத்திய அரசிடம் கோரப்பட்டதில், மத்திய அரசு இதுவரை 2 கட்டங்களில் மொத்தம் ரூ. 1835.77 இலட்சம் விடுவித்துள்ளது.

5.04. மாநில அரசின் கொள்கையின்படி, மத்திய அரசினால் வழங்கப்படும் தொகையினைவிட ..டுதலாக ஆகும் தள்ளுபடி மானிய செலவினத்தை மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது. 2001-2002ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் தள்ளுபடி மானியத்திற்கென ரூ. 72.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6. தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா திட்டம்

6.01. மத்திய அரசு நெசவாளர்களின் வளர்ச்சியையும் நலனையும் கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த விரிவான ஒரு திட்டத்தை "தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா திட்டம்" என்ற பெயரில் புதிய திட்டத்தினை 1-4-2000 முதல் அமல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வரும் பல்வேறு இனங்கள் பின்வருமாறு:

1. அடிப்படை வசதிகள்
2. உள்கட்டமைப்பு வசதிகள்
3. வடிவமைப்பு உள்ளீடு
4. விளம்பரம்
5. விற்பனை ஊக்கத் தொகை/தள்ளுபடி
6. கைத்தறி நிறுவனங்களை வலுப்படுத்துதல்

[2001 செப்டம்பர் 11

6.02. இத்திட்டத்தில் வழங்கப்படும் நிதியுதவியினை மத்திய மற்றும் மாநில அரசுகள் 50:50 என்ற விகிதாச்சார அடிப்படையில் வழங்குகின்றன. இத்திட்டத்தின்கீழ் பல்வேறு இனங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியின் விவரங்கள் பின்வருமாறு:

**(அ) அடிப்படை வசதிகள்:**

(1) விளிம்புத் தொகையாக ஒரு நெசவாளருக்கு ரூ.4,000 வீதம் நிதியுதவி வழங்கப்படும். இதில் மத்திய அரசு ரூ.2,000/-மும் மாநில அரசு ரூ.1,000/-மும் வழங்குகின்றன. எஞ்சிய தொகை ரூ.1,000-ஐ சம்பந்தப்பட்ட நெசவாளர் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

(2) புதிய தறிகள் கொள்முதல் செய்தல், டாபி, ஜக்கார்டு மற்றும் தறி உபகரணங்கள் வாங்குவதற்கு அவற்றின் கொள்முதல் விலையில் 50 விழுக்காடு மானியமாக நிதியுதவி வழங்கப்படும். எனினும், இந்நிதியுதவி புதிய தறிகள் கொள்முதலுக்கு ரூ.2,000/-மும், டாபிக்கு ரூ.1,500/-ம், ஜக்கார்டுக்கு ரூ.2,000/-மும் மற்ற தறி உபகரணங்களுக்கு ரூ.1,000/-மும் வழங்க வரையறுக்கப்பட்டுள்ளது. புதிய தறிகள் போன்றவைகளுக்கான எஞ்சிய தொகையினை சம்பந்தப்பட்ட நெசவாளரோ அல்லது நிறுவனமோ, வங்கி அல்லது நிதி நிறுவனங்கள் மூலம் கடனாக ஏற்றுக் கொள்ளவேண்டும்.

(3) நெசவாளர்கள் குறைந்த மதிப்புள்ள இரகங்களை நெய்வதைக் காட்டிலும் உயர்ந்த மதிப்புமிக்க இரகங்களை நெய்யும்பொருட்டு பயிற்சி வழங்கும்போது கூலி இழப்பினை ஈடுசெய்யும் வகையில் நெசவாளர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ.750/- வீதமும், பயிற்சியாளருக்கு மாதமொன்றுக்கு ரூ.2,500/- வீதமும், பயிற்சி உதவித் தொகையாக வழங்கப்படும்.

2001-2002 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கென ரூ.200.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) உள்கட்டமைப்பு வசதிகள்:**

(1) ரூ.25.00 இலட்சத்திற்கு அதிகமாக விற்பனை செய்யும் பிரதம கைத்தறி நெசவாளர் சங்கங்கள் மற்றும் ரூ.5.00 கோடி அல்லது அதற்கு மேல் விற்பனை செய்யும் மாநில கைத்தறி நிறுவனங்கள்/தலைமை நிறுவனங்கள்/இணையங்கள் போன்றவைகளுக்குக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும், வசதிகளுடன் பதனிடும் ஆலைகள் அமைக்கவும்



2001 செப்டம்பர் 11]

நிதியுதவி வழங்கப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் நிதியுதவி முதலீட்டு செலவில் 25 விழுக்காடு என வரையறுக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 75 விழுக்காடு தொகை கடனாக வங்கி/நிதியுதவி நிறுவனங்களிடம் பெறப்பட்ட பின்னரே விடுவித்து வழங்கப்படும்.

(2) ரூ.25.00 இலட்சத்திற்கும் குறைவாக விற்பனை செய்யும் பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ரூ.5.00 கோடிக்குக் குறைவாக விற்பனை செய்யும் மாநில கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தலைமை நிறுவனங்கள் போன்றவற்றிற்கு பாவு ஓடுதல். சாயமிடுதல் மற்றும் நெசவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய நிகழ்வுகளுக்கு பொது வசதி மையம் அமைத்துக்கொள்ள 50% வரை நிதியுதவி அதிகபட்சமாக ரூ.3.00 இலட்சம் மானியமாக மத்திய, மாநில அரசுகளால் வழங்கப்படுகிறது. சாயமிடுதல் உபகரணங்களைக் கொள்முதல் செய்து கொள்ளவும் அதிகபட்சமாக ரூ.1.00 இலட்சம் மானியமாக வழங்கப்படும். வங்கி/நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து எஞ்சிய தொகை கடனாக பெறப்பட்ட பின்னரே மத்திய அரசின் நிதியுதவி வழங்கப்படும்.

2001-2002 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கென ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) வடிவமைப்பு உள்ளீடு:**

(1) முந்தைய ஆண்டில் ரூ. 5.00 கோடிக்கும் அதிகமாக விற்பனை செய்துள்ள மாநில அளவிலான கைத்தறி நிறுவனங்கள்/ தலைமைச் சங்கங்கள் மற்றும் ரூ.25.00 இலட்சத்திற்கு அதிகமாக விற்பனை செய்துள்ள பிரதம சங்கங்களுக்கு வடிவமைப்பு மற்றும் கணினி மூலம் வடிவமைப்பு மையம் அமைத்து, வடிவமைப்புத் திறனை கைத்தறி இரகங்களின் தரத்தை உயர்த்துவதற்காக ஒரே தவணை நிதியுதவியாக ரூ. 5.00 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

(2) ரூ.5.00 கோடிக்குக் குறைவாக விற்பனை செய்துள்ள மாநில அளவிலான கைத்தறி நிறுவனங்களுக்கும், ரூ.25.00 இலட்சத்திற்கும் குறைவாக விற்பனை செய்துள்ள பிரதம சங்கங்களுக்கும் தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப மையம் மற்றும் நெசவாளர் சேவை மையத்தின் சேவையினை பயன்படுத்திக்கொள்ளும் வகையில் ஒரே தவணையாக ரூ. 1.00 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் ரூ.25.00 இலட்சம் வரை விற்பனைத் திறன் கொண்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர் சேவை மையத்தின்

ஆலோசனையுடன் வடிவமைப்பு ஆலோசகர்/தன்னிச்சை வடிவமைப்பாளர் ஒருவரை நியமித்து அவர்களது சேவையினை பயன்படுத்திக்கொள்ள தற்போதுள்ள தன்னிச்சை வடிவமைப்பாளர் திட்டத்தில் உள்ளதுபோல் ரூ. 1.00 இலட்சம் வரை ஒரே தவணையாக மானியம் பெற தகுதி பெறுகின்றன.

2001-2002 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கென ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஈ) விளம்பரம்:**

நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு விளம்பரச் சிற்றேடு அச்சிடுதல், அட்டவணைப் படுத்துதல், சந்தை ஆராய்ச்சி மற்றும் சந்தை ஆய்வு போன்றவைகளுக்கு மட்டுமல்லாமல், கைத்தறி விற்பனையினை மேம்படுத்தும் வகையில் படச்சுருள் தயாரித்தல் போன்ற இனங்களுக்கு அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது.

2001-2002 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கென ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(உ) விற்பனை ஊக்கத் தொகை**

கைத்தறி இரகங்களின் விற்பனையினை உயர்த்தும் வகையில் கைத்தறி நிறுவனங்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை ஊக்குவிப்பு இனத்தின்கீழ் நிதியுதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. கைத்தறி நிறுவனங்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் ஒட்டுமொத்த விற்பனையை அதிகரிப்பதுடன் நுகர்வோரை கவர்ந்திழுக்கும் நோக்குடனும், கைத்தறித் துணிகளின் விற்பனைக்கு வழங்கப்படும் தள்ளுபடி/ கழிவு வழங்குவதற்கு இந்த உதவியினைப் பயன்படுத்தலாம்.

2001-2002 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கென ரூ. 440.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





**(ஊ) கைத்தறி நிறுவனங்களை வலுப்படுத்துதல்:**

மாநில கைத்தறி நிறுவனங்கள்/ தலைமை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்/ இணையங்கள் போன்றவற்றின் காசுக் கடன் மற்றும் நடைமுறை மூலதனத்தை அதிகரித்து அவற்றை இலாபகரமாக இயங்க வைக்கும் நோக்குடன் நிதி அடிப்படையிலான மறு சீரமைப்புச் செய்ய நிதியுதவி வழங்கப்படுகிறது.

2001-2002 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கென ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்

7.01. நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கும், கட்டுமர மீனவ ஆண்கள் மற்றும் பெண்களுக்கும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கும், கிராமப்புறக் கைவினைஞர்களுக்கும் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தை 1990 ஆம் ஆண்டு முதல் அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். பொங்கல் 2001 பண்டிகையையொட்டி 80.96 இலட்சம் சேலைகளும், 73.94 இலட்சம் வேட்டிகளும் ரூ.113.68 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்குத் தேவையான சேலைகள் மற்றும் வேட்டிகள் முழுவதும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன. இத்திட்டத்திற்கென உற்பத்தி செய்யப்படும் துணிகளின் நெசவுத் தரம், துணி பதனிடும் தரம் ஆகியவை பல்வேறு நிலைகளில் உறுதி செய்யப்பட்டு வருகின்றன.

7.02. இத்திட்டத்தினை 2002 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கும் தொடர்ந்து செயல்படுத்த அரசு முடிவெடுத்தது. இத்திட்டத்திற்குத் தேவையான சேலை மற்றும் வேட்டிகளை கைத்தறியில் மட்டுமே உற்பத்தி செய்வதெனவும் முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிராமப்புறப் பகுதிகளில் உள்ள பயனாளிகளை கிராம சபைகள் மூலமாகவும், நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள பயனாளிகளை பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் மூலமாகவும், நகராட்சிகளின் ஆணையர்கள் மற்றும் மாநகராட்சிகளின் ஆணையர்கள் மூலமாகவும் கணக்கெடுத்து தெரிவு செய்வதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இலவச வேட்டி சேலைகளை பயனாளிகளுக்கு வருவாய்த் துறை மூலம் வழங்குவதற்குப் பதிலாக, கிராம சபைகள் மற்றும் இதர நகர உள்ளாட்சி அமைப்புகள்

மூலம் வழங்குவது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டுக்குரிய உற்பத்தி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. பொங்கல் 2002-க்குள் உற்பத்தியை முடித்து விநியோகிப்பதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*7.03.* இத்திட்டத்திற்கென *2001-2002*ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.*141.12* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 8. பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம்

*8.01.* சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டத்தை *1985-86* ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. சீருடைகள் தைக்கும் பொறுப்பு சமூக நலத் துறையிடமும், தைத்த சீருடைகளை வழங்கும் பொறுப்பு கல்வித் துறையிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சீருடைகளுக்கான துணிகளை வழங்கும் பொறுப்பு மற்றும் பட்டியல்மீது பணம் பெற்று வழங்கும் பொறுப்பு கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

*8.02.* நடப்புக் கல்வி ஆண்டில் தேவையான *126.24* இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகளும் மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

*8.03.* இது தவிர, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிர்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைகளுக்குத் தேவையான *22.92* இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகளும் *2000-2001* ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

## 9. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை வட்டி விகிதத்தில் நடைமுறை மூலதனம் வழங்குதல்

*9.01* கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி, மறுநிதி உதவி திட்டத்தின்கீழ் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு



மாநில தலைமை கூட்டுறவு வங்கி ஆகியவை மூலமாக சலுகை வட்டி விகிதங்களில் நிதியுதவி அளித்து வந்தன. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நடைமுறை மூலதனத்திற்காக தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகளும் பகிர்ந்து கொள்ளும் வகையில் அரசால் *3%* வட்டி மானியம் அளிக்கப்பட்டு வந்தது. கோ-ஆப்டெக்ஸிற்கு விற்பனை மூலதனக் கடன் அளிப்பதற்கென தலைமை கூட்டுறவு வங்கிக்கு *1%* மானியம் அளிக்கப்பட்டு வந்தது. இந்த நடைமுறை *30-09-1996* வரை அமலில் இருந்தது. நபார்டு நிறுவனம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கைத்தறி வளர்ச்சி ஆணையர், புதுடில்லி அவர்களால் இந்த நடைமுறை *1-10-1996* முதல் மாற்றியமைக்கப்பட்டது.

*9.02.* இந்த திருத்தியமைக்கப்பட்ட நடைமுறையின்படி, நடைமுறை மூலதனம் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழக்கமான வங்கி வட்டி விகிதங்களிலேயே வழங்கப்படுகிறது. ஆனால் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு *3%* வட்டி மானியம் அரசால் நேரடியாக வழங்கப்படுகிறது. தற்போதைய திருத்திய விற்பனை மேம்பாட்டுத் திட்டத்தில் வட்டி மானியம் நிறுத்தப்பட்டுள்ளபோதிலும் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவிபுரியும் நோக்குடன் *2000-2001*-ல் ரூ.*13.58* கோடி அளவிற்கு வட்டி மானியத் தொகை தமிழக அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

*9.03.* *2000-2001* ஆம் நிதியாண்டிற்கு தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் ரூ.*493.78* கோடி அளவிற்கு காசுக் கடன் அனுமதித்துள்ளது.

*9.04.* மேலும், தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (நபார்டு) *2001-2002* ஆம் ஆண்டிற்கு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.*339.93* கோடி மற்றும் கோ-ஆப்டெக்ஸிற்கு ரூ.*162.00* கோடி அளவிற்கு காசுக் கடன் அனுமதித்துள்ளது.

[2001 செப்டம்பர் 11

9.05. தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி, தறி ஒன்றுக்கு 2000-2001 ஆம் ஆண்டுக்கு அனுமதித்துள்ள நடைமுறை மூலதனத்தின் அளவு மற்றும் 2001-2002 ஆம் ஆண்டிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள நடைமுறை மூலதனத்தின் அளவு பின்வருமாறு:

| வ. எண். | தறிகளின் வகை | தறி ஒன்றுக்கு 2000-2001 ஆம் ஆண்டுக்கு நிதி உதவி | 2001-2002 ஆம் ஆண்டுக்கு நபார்டு நிறுவனத்தால் பரிந்துரைக்கப்பட்ட நிதி உதவி |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1. | பருத்தி | 16,500 | 18,000 |
| 2. | தனி ரக பருத்தி | 29,000 | 32,000 |
| 3. | பட்டு | 40,000 | 45,000 |
| 4. | பாலியஸ்டர் | 28,000 | 30,000 |
| 5. | விசைத்தறி பருத்தி | 37,000 | 40,000 |
| 6. | விசைத்தறி பட்டு | 26,000 | 26,000 |
| 7. | விசைத்தறி பாலியஸ்டர் | 24,000 | 24,000 |

## 10. 90 விழுக்காடு இழப்பு பொறுப்புறுதித் திட்டம்

10.01. மத்திய ரிசர்வ் வங்கியின் கைத்தறி நிதியுதவித் திட்டத்தின் கீழ், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகையை வசூலிக்க வாய்ப்பில்லாத நிலையால் ஏற்படும் இழப்பில் 90 விழுக்காடு அரசினால் ஈடுசெய்யவும், மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு பொறுப்புறுதி வழங்கும் நோக்கத்துடனும் 90 விழுக்காடு இழப்பு பொறுப்புறுதி திட்டத்தினை 1956-ல் மத்திய அரசு அறிமுகப்படுத்தியது.

10.02. இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் கோரிக்கைகள் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸிற்கு வழங்கப்படும் காசுக் கடனுக்கு தமிழக அரசு அளிக்கும் பொறுப்புறுதிக்கு ஏற்றவாறு முறையாக இருக்கும். நபார்டு, மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கும் நடைமுறை மூலதனத்திற்கு, மாநில அரசு தனது பொறுப்புறுதியினை நீட்டித்து வருகிறது. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் காலப்போக்கில்



2001 செப்டம்பர் 11]

நலிவடைந்து கலைக்கப்படும் நிலையில், மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு அச்சங்கங்கள் கொடுக்க வேண்டிய கடன் தொகையை வசூலிக்க வாய்ப்பில்லாத நிலையில், மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பில் 90 விழுக்காடு தொகை மாநில அரசால் வங்கிகளுக்கு திரும்ப வழங்கப்படுகிறது.

### கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்கள்

## 11. நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

11.01. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்களின் சேமிப்பினை ஊக்குவிக்கவும், அவர்களது வாழ்க்கைக்குப் பாதுகாப்பு அளிக்கவும் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தினை இந்தியாவிலேயே முதலாவதாக அறிமுகப்படுத்தி 1975 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தில் தற்சமயம் நெசவாளர்கள் தாம் ஈட்டும் கூலியில் ரூபாய்க்கு 8 பைசா வீதம் திட்டத்திற்கு சந்தாவாக செலுத்தினால் அதற்கு ஈடாக மாநில அரசு நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் தனது பங்காக ரூபாய்க்கு 4 பைசா வழங்குகின்றது. மைய சிக்கன நிதித் திட்டத்தின்கீழ் மைய அரசும், நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் ரூபாய்க்கு 4 பைசா வீதம் தனது பங்காக வழங்கி வருகின்றது. நெசவாளர்களின் பங்கு அரசுக் கருவூலத்தில் செலுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் தொகைக்கு மாநில அரசு 12% வட்டி வழங்கி வருகின்றது. இதில் 7% வட்டி நெசவாளர்களுக்கு நேரிடையாக அவரது கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. மீதி 5% வட்டி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம், நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் போன்ற நலத் திட்டங்களை செயல்படுத்த பயன்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தில் தற்சமயம் 31-03-2001 தேதிய நிலவரப்படி, 86,221 நெசவாளர்கள் உள்ளனர்.

11.02. இத்திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டிற்கு அரசு ரூ.609.27 இலட்சம் 7 விழுக்காடு வட்டித் தொகையாக வழங்கியுள்ளது.

11.03. மாநில அரசு வழங்கும் 4 விழுக்காடு பங்கிற்கென, 2001-2002 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.320.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12. கைத்தறி நெசவாளர்கள் குழு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

12.01. மைய அரசு 1992-93 ஆம் ஆண்டு முதல் குழு காப்பீட்டுத் திட்டம் என்ற திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றது. ஆயுள்

[2001 செப்டம்பர் 11

காப்பீட்டுக் கழகத்தின் மூலம் ரூ.120 (மைய அரசு ரூ.40 மாநில அரசு ரூ.40 நெசவாளர் ரூ.40) முனைமத் தொகை செலுத்தி ரூ.10,000-க்கு மாஸ்டர் பாலிசி மூலம் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தை உறுப்பினர்கள் அனைவருக்கும் காப்பீடு செய்துள்ளது. நெசவாளர்களின் சார்பாக ஆயுள் காப்பீடு முனைமத் தொகையை அரசே செலுத்தி வந்தது. இத்திட்ட உறுப்பினர் 60 வயதினை கடக்கும் முன் இறக்க நேரிட்டால் அவர்களது வாரிசுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலம் 1997-98 வரை காப்பீட்டுத் தொகை பெற்று வழங்கப்பட்டது.

12.02. மைய அரசு புதிய குழு காப்பீட்டுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தி யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்த தொடங்கியது. இத்திட்டத்தின் மூலம் நெசவாளர்களின் வீடுகள் மற்றும் நெசவுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் சேதமடைந்தாலும் மற்றும் நெசவாளர்கள் விபத்தினால் மரணமடைந்தால் மட்டுமே காப்பீட்டுத் தொகை வழங்கப்படும். இத்திட்டம் விபத்தில் மரணமடையும் நெசவாளர்களுக்கு மட்டுமே பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளதாலும், இயற்கை மரணம் அடையும் நெசவாளர்களுக்கு பயனளிக்காது என்பதாலும் இத்திட்டத்தில் பங்கு பெறுவது இல்லை என்று மாநில அரசு முடிவு செய்தது. எனவே, மாநில அரசு தனது சொந்த நிதியுதவியுடன் "சுய காப்பீட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தினை ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைக்காமல் மாநில அரசே செயல்படுத்தி வருகின்றது.

12.03. இத்திட்டத்தின் மூலம் நெசவாளர்கள் 60 வயதினை அடையும் முன்னர் இறக்க நேரிட்டால் அவரது வாரிசுதாரருக்கு கோ-ஆப்டெக்ஸ் கருணைத் தொகை ரூ.10,000 மற்றும் காப்பீட்டுத் தொகையாக ரூ.50,000 வழங்கப்படும். இத்திட்டத்தின் முனைமத் தொகைக்கான மைய அரசின் பங்கு ஒரு நெசவாளிக்கு ரூ.40 வீதம் கோரப்பட்டு பெறப்பட்டு வருகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் 335 நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு காப்பீட்டுத் தொகையாக மொத்தம் ரூ.150.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் மைய அரசின் பங்காக ரூ.36,75,040 மைய அரசு விடுவித்துள்ளது.

12.04. இத்திட்டத்திற்கென 2001-2002 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.150.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 11]

## 13. மைய சிக்கன நிதித் திட்டம்

13.01. மைய சிக்கன நிதித் திட்டமானது மாநில அரசினால் செயல்படுத்தப்படும் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கு இணையான ஒரு திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ், நெசவாளர் தாம் பெறும் கூலியில் ரூபாய்க்கு 8 காசு செலுத்துவதைத் தவிர, மைய அரசு தனது பங்காக ரூபாய்க்கு 4 காசு வீதம் அளிக்கின்றது. மைய அரசின் பங்குத் தொகையும் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கென தனியே உள்ளே அரசு கணக்கில் இட்டு வைக்கப்பட்டு, 12 விழுக்காடு வட்டி அரசால் வழங்கப்படுகிறது. அதற்கு இத்திட்டத்தின்கீழ், 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டுகளுக்கான மைய அரசின் பங்கான ரூ.520.32 இலட்சம் மைய அரசிடம் கோரி முன்மொழிவு அனுப்பப்பட்டது. இதில் மைய அரசு 1999-2000 ஆம் ஆண்டுக்கென ரூ.262.16 இலட்சம் மட்டுமே விடுவித்துள்ளது.

13.02. இத்திட்டத்திற்கென 2001-2002 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 210.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

14.01. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கென "தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்" என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்திய முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இத்திட்டம் 1-1-1992 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கான விதிமுறைகள் 1-4-2000 முதல் மாற்றியமைக்கப்பட்டு இத்திட்டத்தின் தகுதிக்கான விதிமுறைகள் தளர்த்தப்பட்டன. திருத்தப்பட்ட விதிமுறைகளின்படி, சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உறுப்பினராக இருந்து தொடர்ந்து 2 ஆண்டுகள் முடிவடைந்த எந்தவொரு உறுப்பினரும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவதற்குத் தகுதியுடையவர்கள். இத்திட்டத்தின் உறுப்பினர் 60 வயதினை கடக்கும் முன் இறக்க நேரிட்டால் அவரது குடும்பத்தினருக்கு அதாவது அவரது மனைவி/கணவன்/வயதுவராத மகன்/திருமணமாகாத மகள்/விதவை மகள்/விதவை மருமகள்/தாயார்/தகப்பனார் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர் யாரேனும் ஒருவருக்கு உறுப்பினர் இறந்த நாளிலிருந்து மாதத்திற்கு ரூ.250 வீதம் 10 வருடங்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் நிதிக் கணக்கில் பெறப்படும் 5 விழுக்காடு வட்டித் தொகையிலிருந்து ஓய்வூதியத் தொகை வமங்கப்படுகிறது.

[2001 செப்டம்பர் 11

*14.02.* இத்திட்டத்தில் தற்போது 86,221 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டு, 407 குடும்பங்கள் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

## 15. கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

*15.01.* தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக இருந்து சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் பங்கேற்றவர்களுக்கென "கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்" என்ற திட்டம் 1-4-1997 முதல் மாநில அரசால் அறிமுகப்படுத்தப் பட்டது. நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களில் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் பங்கு பெற்ற நெசவாளர்கள் 60 வயதினை அடைந்த பின்னர் மாதம் ரூ.200 வீதம் இத்திட்டத்தின் மூலம் முதியோர் ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெறுகின்றனர். சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் 5% கூடுதல் வட்டியிலிருந்து முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

*15.02.* இதற்கான விதிமுறைகளின்படி, இத்திட்டத்திற்காக ஏற்படுத்தப்பட்ட நிதியினை நிர்வகிக்கவும், முதியோர் ஓய்வூதியத் திட்டத்தினை செயல்படுத்தவும், பொறுப்பாட்சிக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் தற்சமயம் 7,711 நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். மாநில அரசு 2000-2001 ஆம் ஆண்டு முடிய இத்திட்டத்திற்கென ரூ.260.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

## 16. நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம்

*16.01.* நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம் 1979-80 ஆம் ஆண்டு முதல் மாநில அரசின் மானிய உதவியுடனும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகத்தின் கடன் தொகையையும் பெற்று செயல்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டத்தில் மைய அரசு 1985-86 முதல் பங்கு பெற்று, நெசவாளர்களுக்கு தறிக்கூடம் அமைக்கும் திட்டத்தின்கீழ் மானியம் வழங்கி வருகின்றது.

*16.02.* தற்போது இத்திட்டத்தின்கீழ் தறிக்கூடத்துடன் கூடிய வீடு ஒன்றுக்கு கீழ்க்கண்ட விவரப்படி நிதியுதவி வழங்கப்படுகிறது:



2001 செப்டம்பர் 11]

| விவரம் | கிராமப்புறம் (ஒரு தறிக்கூடத்துடன் | நகர்ப்புறம் கூடிய வீட்டுக்கு) |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| ஹட்கோ கடன் | 40,000 | 40,000 |
| மாநில அரசு மானியம் | 7,000 | 7,000 |
| மத்திய அரசு மானியம் | 18,000 | 20,000 |
| பயனீட்டாளர் பங்கு | 3,000 | 5,000 |
| **மொத்தம்** | **68,000** | **72,000** |

*16.03.* இத்திட்டத்தின்கீழ் நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன் அதிக வருவாய் கிடைக்க வாய்ப்பும் ஏற்படுகிறது.

*16.04.* 2000-2001 ஆம் ஆண்டிற்கு, 1,190 தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டுவதற்கு ரூ.190.40 இலட்சம் (மைய அரசு பங்கு ரூ.107.10 இலட்சம், மாநில அரசு பங்கு ரூ.83.30 இலட்சம்) அரசால் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.107.10 இலட்சம் மைய அரசால் விடுவிக்கப்பட வேண்டியுள்ளது. இது தவிர, 2000-2001 ஆம் ஆண்டிற்கு 217 தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்ட ரூ.39.80 இலட்சம் விடுவிக்க மாநில அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

*16.05.* இத்திட்டத்திற்கென 2001-2002 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.250.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டிற்கு 1000 தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு அதற்கான முன்மொழிவு மைய அரசுக்கு அனுப்பப்பட உள்ளது.

## 17. தறிக்கூடம் அமைக்கும் திட்டம்

*17.01.* நெசவாளா வீடு கட்டும் திட்டத்தினை தவிர, ஏற்கெனவே உள்ள வீடுகளுக்கு தறிக்கூடம் கட்டுவதற்கு மைய அரசு 1997-98 ஆம் ஆண்டு முதல் நிதியுதவி வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் ஒரு தறிக்கூடம் அமைப்பதற்கு வழங்கப்படும் நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:

கூட்டுறவுச் சங்கங்கள் தமது பொது நிதி மற்றும் பொது நல நிதியிலிருந்து நன்கொடை வழங்கின. மேற்படி நிதியினை இட்டு வைக்கப்பட்டுள்ளதிலிருந்து பெறப்படும் வட்டியில் ஒரு பகுதி உதவித் தொகையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

*19.02.* நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படும் விவரங்கள் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :

| வ. எண் | படிப்பு | தகுதி | ஆண் | பெண் | வருடம் | ஒரு மாணவருக்கான உதவித் தொகை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | | | | ரூ. |
| 1. | மருத்துவம் | +2 | 1 | 1 | 5 | 3000 |
| 2. | பொறியியல் | +2 | 1 | 1 | 4 | 3000 |
| 3. | பி.வி.எஸ்.சி. | +2 | 1 | 1 | 5 | 3000 |
| 4. | வேளாண்மைக் கல்வி/தோட்டக்கலை | +2 | 1 | 1 | 4 | 2500 |
| 5. | பி.பார்மஸி | +2 | 1 | 1 | 4 | 2500 |
| 6. | பி.எஸ்.சி. நர்சிங் | +2 | 1 | 1 | 4 | 2500 |
| 7. | முதுகலை பட்டப்படிப்பு | இளநிலை பட்டப்படிப்பு | | | | |
| | எம்.ஏ. | | 1 | 1 | 2 | 3000 |
| | எம்.எஸ்.சி. | - | 1 | 1 | 2 | 3000 |
| | எம்.காம். | - | 1 | 1 | 2 | 3000 |
| | எம்.பி.ஏ. | - | 1 | 1 | 2 | 3000 |
| | எம்.சி.ஏ. | - | 1 | 1 | 2 | 3000 |
| 8. | இளங்கலை பட்டப்படிப்பு | | | | | |
| | பி.ஏ. | +2 | 1 | 1 | 3 | 2000 |
| | பி.எஸ்.சி. | +2 | 1 | 1 | 3 | 2000 |
| | பி.காம். | +2 | 1 | 1 | 3 | 2000 |





| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| | பி.பி.ஏ. | +2 | 1 | 1 | 3 | 2000 |
| | பி.எஸ்.சி. கம்ப்யூட்டர் அறிவியல் | +2 | 1 | 1 | 3 | 2000 |
| 9. | பாலிடெக்னிக் | 10 ஆம் வகுப்பு | 1 | 1 | 3 | 2000 |
| 10. | இ.ஆ.ப./இ.கா.ப./வங்கி அலுவலர் தேர்வு | பட்டப்படிப்பு | 1 | 1 | 1 | 2000 |
| 11. | விலை மதிப்பீட்டுக் கணக்கர் | பட்டப்படிப்பு | 1 | 1 | 3 | 3000 |
| 12. | +2 அதிக மதிப்பெண் | +2 | 1 | 1 | 3 | 2000 |
| 13. | 10 ஆம் வகுப்பு அதிக மதிப்பெண் | 10 ஆம் வகுப்பு | 1 | 1 | 1 | 1500 |

*19.03.* மேற்படி கல்வி உதவித் தொகை, கல்விக் காலம் முடியும் வரை தொடர்ந்து வழங்கப்படுகிறது.

## 20. இந்திய கைத்தறி தொழில்நுட்பப் பயிலகத்தில் பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை

*20.01* நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு, சேலத்தில் இயங்கி வரும் இந்திய கைத்தறி தொழில்நுட்பப் பயிலகத்தால் நடத்தப்படும் *3* ஆண்டு கைத்தறி தொழில்நுட்பப் பட்டயப்படிப்பிற்கு சேர்க்கையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. தமிழக அரசு மாணவ, மாணவியர்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கி வருகிறது :

| | | |
|---|---|---|
| முதல் ஆண்டு | - | மாதமொன்றுக்கு ரூ.400 |
| இரண்டாம் ஆண்டு | - | மாதமொன்றுக்கு ரூ.450 |
| மூன்றாம் ஆண்டு | - | மாதமொன்றுக்கு ரூ.500 |

[2001 செப்டம்பர் 11

20.02. இதனைத் தவிர அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் புத்தகப்படியாக ரூ.60/- உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும் இரண்டாம் ஆண்டு மாணவ மாணவியர்க்கு மட்டும் சுற்றுலாப் படியாக ரூ.200/- வழங்கப்பட்டு வருகிறது. தற்சமயம் இந்த உதவித் தொகை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து பெறப்படுகிறது.

## 21. தேசிய ஆடை வடிவமைப்புப் பயிற்சி நிறுவனத்தின் மூலம் தொழில்நுட்ப பயிற்சி அளித்தல்

21.01 தேசிய ஆடை வடிவமைப்புப் பயிற்சி நிறுவனம் மாணவர்களுக்கு நவீன தொழில் நுணுக்கங்களுடன் ஆடை இரகங்களை தயாரிப்பதுபற்றி பயிற்சி அளித்து வருகிறது. இதில் பட்டப்படிப்பு பெறும் மாணவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு பெறும் வாய்ப்பு உள்ளது. இந்த வடிவமைப்பு நிறுவனம் நடத்தி வரும் ஆயத்த ஆடை உற்பத்தி தொழில்நுட்பக் கல்வி, அலங்கார வடிவமைப்பு மற்றும் பின்னலாடை ஆகிய பயிற்சி வகுப்பில் சேருவதற்காக அகில இந்திய அளவில் நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது. மேற்படி பயிற்சி வகுப்புதவிர, தையல் இயந்திரம் இயக்குவதற்கான பயிற்சி மற்றும் கணினியில் துணி வடிவமைப்புகள் அமைத்தல் ஆகிய குறுகிய கால பயிற்சி வகுப்புகளையும் நடத்தி வருகிறது.

21.02. பெரும்பாலான நெசவாளர்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் உள்ளதால், அவர்களது குழந்தைகளை மேற்படிப்பு படிக்கவைக்க இயலாத சூழ்நிலையில் உள்ளனர். எனவே, நெசவாளர்களின் குழந்தைகளுக்கு நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய பயிற்சிகள் அளித்து ஊக்குவிக்கும் நோக்குடன், நுழைவுத் தேர்வுக்கான கட்டணத்தையும், குறுகிய கால பயிற்சிக்கான கல்விக் கட்டணத்தையும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திடமிருந்து பெறப்படும் நிதியுதவியிலிருந்து துறை செலுத்தி வருகிறது.

21.03. தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனத்தால் நடத்தப்பட்டு வரும் பட்டயக் கல்வி/சான்றிதழ் கல்விகளுக்கு நெசவாளர் குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்க கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து 1999-2000 ஆம் ஆண்டுக்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ரூ.17.10 இலட்சம் வழங்கியுள்ளது.



2001 செப்டம்பர் 11]

21.04. தற்போது 30 மாணவர்கள் ஆடை உற்பத்தி தொழில்நுட்பக் கல்வியினை 6-11-2000 முதல் பயின்று வருகின்றனர். இதுதவிர, குறுகிய கால கல்வியான கணினியில் துணி வடிவமைப்புக் கல்வியினை 20 மாணவர்கள் 21-5-2001 முதல் பயின்று வருகின்றனர்.

## 22. சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கான பரிசு வழங்கும் திட்டம்

22.01. கைத்தறித் துணி வகைகளில் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும் அயல்நாட்டு சந்தையில் கைத்தறித் துணி விற்பனையை விரிவுபடுத்தவும் தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டிலுள்ள சிறந்த கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தை 1975 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

22.02. 1999 ஆம் ஆண்டு முடிய பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2000 ஆம் ஆண்டுக்கான பரிசுகள் 2001 ஆம் ஆண்டில் வழங்கப்பட உள்ளன. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஏற்றுமதி உற்பத்தியை ஊக்குவிப்பதற்கென சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கும், ஏற்றுமதி உற்பத்தியில் ஈடுபடும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வெற்றிச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்க அரசு இத்திட்டத்திற்கான செலவினத் தொகையை ரூ.22,500/-லிருந்து ரூ.30,000/- ஆக உயர்த்தியுள்ளது.

## 23. சிறந்த நெசவாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்

23.01. புதிய வடிவமைப்பினை ஊக்குவிக்கும் வகையில் நெசவாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறந்த வடிவமைப்புக்கு கீழ்க்கண்டவாறு பரிசுத்தொகை வழங்கப்படுகிறது :

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | - | ரூ.5,000/- |
| இரண்டாம் பரிசு | - | ரூ.3,000/- |
| மூன்றாம் பரிசு | - | ரூ.2,000/- |

23.02. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் சந்தையில் எளிதில் விற்பனையாகக் கூடிய இரகங்களில் புதிய வடிவமைப்புகள்

கிடைப்பதோடு, ஏற்றுமதிக்கு புதிய வடிவமைப்புகள் கிடைக்கின்றன. இத்திட்டத்திற்கான செலவினம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு வளர்ச்சி மற்றும் கல்வி நிதியிலிருந்து ஈடு செய்யப்படுகிறது.

## 24. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் மேற்கொள்ளப்படும் ஏற்றுமதி

24.01. 1-1-2005 முதல் நடைமுறைக்கு வரவுள்ள உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தத்தில், கையொப்பமிட்டுள்ள நாடுகளுள் இந்தியாவும் ஒன்றாகும். உலக வர்த்தக ஒப்பந்தங்களில், துணிநூல் சம்பந்தப்பட்ட ஒப்பந்தமும் ஒன்றாகும். எனவே, உலகச் சந்தையில் போட்டியிடும் நோக்குடனும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை நிலைத்திருக்கக்கூடிய நிலைக்குக் கொண்டு வந்து, அதன்மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் கைத்தறித் துறையானது "ஏற்றுமதி"-க்கு முக்கியத்துவம் அளித்து, நெசவாளர்களை ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்தியுள்ளது. தற்போது, 200-க்கும் மேற்பட்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 12,000 தறிகள் ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபட்டு ஏற்றுமதியாளர்கள் மூலமாக ஏற்றுமதி செய்து வருகின்றனர். இவ்வாறு பெறப்படும் ஏற்றுமதி ஆணைகளுக்கு, ஏற்றுமதியாளர்களே மூலப்பொருட்களை வழங்குகின்றனர். ஏற்றுமதியில் ஈடுபடுவதன் மூலம், நெசவாளர்கள் கூலி உயர்வு பெற்று, தொடர்ந்து வேலைவாய்ப்பும் பெற்று வருகின்றனர். இதுதவிர, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் நேரடி ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ளது. 1999-2000ஆம் ஆண்டில் 25 கோடிக்கும், 2000-2001ஆம் ஆண்டில் 92 கோடி மதிப்பிற்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்றுமதி செய்துள்ளன. வரும் 2001-2002ஆம் நிதியாண்டில், ரூ.125 கோடி மதிப்பிற்கு ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

24.02. கைத்தறி இரகங்களை விருப்பமுள்ள வாங்குவோர் அறியும் வண்ணமும், ஏற்றுமதியாளர்களிடமிருந்து ஆர்டர்கள் பெறவும், ஏற்றுமதி விற்பனையை செயல்படுத்துவதை ஒருங்கிணைக்கவும், இயக்ககத்தில் ஏற்றுமதி தகவல் மற்றும் காட்சிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி தகவல் மற்றும் காட்சிக்கூடம் தமிழ்நாட்டில் கைத்தறியில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் இரகங்களை காட்சிக்கு வைக்க காட்சிக் கூடமாகவும், தகவல் மையமாகவும் செயல்படுகிறது. ஏற்றுமதியாளர்களின்





நலனுக்கென கைத்தறியில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் பல்வேறு இரகங்களின் மாதிரிகள் தகவல் மையத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

24.03. தற்போது, 3000-க்கும் மேற்பட்ட மாதிரிகள் தமிழ்நாட்டின் வெவ்வேறு பகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. மேற்படி மாதிரிகளை கணினியில் சேமித்து 'மாதிரி தகவல் முறை' என்ற பெயரில் போதுமான தொழில்நுட்ப வசதிகளை, துறை உருவாக்கி வருகிறது. இதுபோன்ற 30,000 மாதிரிகளை கணினியில் சேமிக்க துறை திட்டமிட்டுள்ளது.

24.04. கைத்தறித் துணிகளின் விற்பனையினை மேம்படுத்தும் நோக்குடன் 'இணைய தளம்' உருவாக்க துறை அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. மேலும், பிரத்யேகமாக மின்னணு வணிகவியல் இணையதளம் "உலகளாவிய இணையதளம் லூம்வேர்ல்டு. அரசு இன்" ஒன்றினை உருவாக்கி, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பொருட்களை இணைய தளத்தில் விற்பனை செய்ய துறை திட்டமிட்டுள்ளது. மேற்படி இணைய தளத்தில் விற்பனை கூடிய விரைவில் தொடங்கப்படும்.

## 25. கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985

25.01 கைத்தறி நெசவாளர்களையும், கைத்தறி தொழிலையும் பாதுகாக்கும் வகையில், விதிமுறைகள் மைய அரசினால் வகுக்கப்பட்டு நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களும் செயல்படுத்தும் வண்ணம் கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985-ல் இயற்றப்பட்டது.

25.02 22 இரகங்களை கைத்தறியில் மட்டுமே உற்பத்தி செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஒதுக்கீட்டினை எதிர்த்து, நாட்டின் பல்வேறு மாநில உயர் நீதிமன்றங்களிலும் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த ரிட் மனுக்களை ஒருசேர விசாரித்த உச்ச நீதிமன்றம் அனைத்து ரிட் மனுக்களையும் தள்ளுபடி செய்ததுடன், கைத்தறிக்கென 22 இரகங்களை ஒதுக்கீடு செய்தது செல்லும் என உறுதிப்படுத்தியது. கைத்தறி உற்பத்தி இரக ஒதுக்கீடு சட்டம், 1985-ஐ அமல்படுத்துவது குறித்து ஆராய அமைக்கப்பட்ட ஆலோசனைக்

குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மைய அரசு தனது 26-7-1996 தேதியிட்ட ஆணையில் 22 இரகங்களை 11 இரகங்களாகக் குறைத்தது.

25.03. கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985-ஐ முனைப்புடன் செயல்படுத்த தலைமையிடத்தில் ஒரு துணை இயக்குநர் தகுதியில் அமலாக்க அலுவலரும், சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர், மதுரை ஆகிய இடங்களில் உதவி அமலாக்க அலுவலரை அலுவலகத் தலைவராகக் கொண்ட சரக அலுவலகங்கள் கொண்ட பிரத்யேக அமலாக்கப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

25.04. அமலாக்கப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து எய்தப்பட்ட குறியீடு விவரம் பின்வருமாறு:

| வ. எண் | வருடம் | விசைத்தறி ஆய்வு | | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவை | | தீர்ப்பு காணப்பட்ட விவரங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | குறியீடு | எய்தப்பட்ட விவரம் | குறியீடு | எய்தப்பட்ட விவரம். | |
| 1. | 1998-1999 | 6000 | 24809 | 1 | 15 | 15 |
| 2. | 1999-2000 | 12000 | 56448 | 8 | 18 | 18 |
| 3. | 2000-2001 | 15000 | 32290 | 8 | 18 | 14 |

25.05. 2001-2002ஆம் ஆண்டிற்கு ஆய்வு செய்யப்பட வேண்டிய விசைத்தறிகளின் எண்ணிக்கை 17,625 எனவும், பதிவு செய்யப்பட வேண்டிய முதல் தகவல் அறிக்கையின் எண்ணிக்கை 25 எனவும் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2001-2002ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டினை முழுமையாக எய்த துறை அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறது.

25.06 இதுமட்டுமின்றி, விசைத்தறிகள், பெருமளவில் உள்ள பகுதிகளில், கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985 குறித்து விளக்குவதற்காக தீவிர விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.



## 26. விற்பனை வளாகங்கள்

26.01 விற்பனையை அதிகரிக்கும் உத்தியின் ஒரு பகுதியாக, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் துணி இரகங்களை விற்பனை செய்வதை ஊக்குவிக்கும் நோக்குடனும், விற்பனையை அதிகரிக்க ஏதுவாகவும் "லூம் வேர்ல்டு" என்ற பெயரில் விற்பனை நிலையங்கள் சென்னை அண்ணா நகர், கோவை மற்றும் ஈரோட்டில் தொடங்கப்பட்டு நல்ல முறையில் நடைபெற்று வருகிறது.

26.02 "லூம் வேர்ல்டு" விற்பனை நிலையங்களில் வெவ்வேறு பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் இரகங்களான பட்டு மற்றும் பருத்தி சேலைகள், சுடிதார்கள், பட்டு மற்றும் பருத்தி வேட்டிகள், அங்கவஸ்திரங்கள், சட்டைகள், லுங்கிகள் மற்றும் மெத்தை விரிப்புகள், திரைச்சீலைகள், நேப்கின்கள், கைக்குட்டைகள், டவல்கள், மிதியடிகள் போன்ற வீட்டு உபயோகப் பொருட்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

26.03 ''லூம் வேர்ல்டு'' விற்பனை நிலையங்களுக்கு பொதுமக்களிடையே நல்ல வரவேற்புள்ளதால், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில், ஏற்கெனவே செயல்பட்டு வரும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை நிலையங்களை "லூம் வேர்ல்டு" என்ற பெயரில் அனைவரும் அறியத்தக்க வகையில் பிரபலப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், காஞ்சிபுரம், சென்னை அண்ணாசாலை, பாண்டிச்சேரி, தருமபுரி மற்றும் மதுரையில் "லூம் வேர்ல்டு" விற்பனை நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 27. பூகோளக் குறியீடு சட்டம், 1999

27.01 குறிப்பிட்ட பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் சிறப்புத் தன்மையுடைய பொருட்களை அதனைப்போலவே உற்பத்தி செய்வதிலிருந்தும், போலியான அடையாளங்கள் பதித்து வாடிக்கையாளர்கள் ஏமாற்றப்படுவதிலிருந்தும் பூகோளக் குறியீடு சட்டத்தின்கீழ் அவ்வகை இரகங்களைப் பதிவு செய்வதன் மூலம் பாதுகாத்திட முடியும். பூகோளக் குறியீடு பதிவு செய்த பொருட்களை ஏற்றுமதி செய்வது சாத்தியமான ஒன்றாகும். ஏனெனில், ஏனைய நாடுகளும் இவ்வகை பூகோளக் குறியீடு பொருட்களுக்கு உரிய பாதுகாப்பளித்திட உலக வர்த்தக ஒப்பந்தத்தில் (Trips) வழிவகை செய்யப்பட்டுள்ளது

*27.02.* காஞ்சிபுரம் பட்டுச் சேலை, பவானி ஜமுக்காளம், மதுரை சுங்கடி சேலை உள்ளிட்ட பாரம்பரியமிக்க கைத்தறி இரகங்களை இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்து பாதுகாத்திட, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள மூன்று வல்லுநர் குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுவில் அரசு அதிகாரிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள், அனுபவமிக்க கைத்தறி நெசவாளர்கள், முன்னணி ஏற்றுமதியாளர்கள் மற்றும் தனியார் ஜவுளி வர்த்தகர்கள் என பலர் உறுப்பினர்களாக உள்ளனர்.

*27.03* மேற்கண்ட கைத்தறி இரகங்களை இச்சட்டம் அமலுக்கு வந்தவுடன் பதிவு செய்வதற்கு ஆயத்தமாக, வரைவிலக்கணம், அளவீடுகள், சிறப்புத் தன்மைகள், வரலாற்றுப்பூர்வ ஆதாரங்கள் முதலியவற்றை குழு நிர்ணயம் செய்து வைத்துள்ளது. எனவே, இச்சட்டம் அமலாகும் தேதி குறித்தான அறிவிப்பு வெளியான உடனே கைத்தறி இரகங்களை பூகோளக் குறியீடு சட்டத்தின்கீழ் பதிவு செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தொடங்கி, பதிவு செய்யப்படும்.

**விசைத்தறிகள்**

## 28. கூட்டுறவு விசைத்தறிகள்

*28.01* தமிழ்நாட்டில் தற்போது சுமார் *25,000* விசைத்தறிகள், *149* விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் *9,000* நெசவாளர் உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பள்ளிச் சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டத்திற்குத் தேவையான துணிகளை முதன்மையாக உற்பத்தி செய்து வருகின்றன. தமிழ்நாட்டில் தற்போது *3.19* இலட்சம் பதிவு செய்யப்பட்ட விசைத்தறிகள் உள்ளன. இந்த விசைத்தறிகள் கூட்டுறவு மற்றும் கூட்டுறவின்கீழ் அல்லாத நிலையிலும் உள்ளன.

*28.02* துணிநூல் (வளர்ச்சி மற்றும் முறைப்படுத்துதல்) ஆணை, *1993, 2-4-1993* முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்து விசைத்தறி பதிவுச் சான்றிதழ்கள் வழங்கும் முறை மற்றும் சான்றிதழ்களைப் புதுப்பிக்கும் முறை நிறுத்தப்பட்டு அதற்குப் பதிலாக, தகவல் குறிப்பு ஒப்புதல் வழங்கும் முறை கொண்டு வரப்பட்டது. ஒரு



தகவல் குறிப்புக்கு ரூ.*1,000*/- என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தறியின் எண்ணிக்கையை கணக்கில் கொள்ளாமல் ஒரு தகவல் குறிப்புக்கு என தொகை செலுத்தப்பட வேண்டும். இருப்பினும் ஒவ்வொரு முறையும் தகவல் குறிப்புக்கு விண்ணப்பிக்கும்போதும் கட்டணம் ரூ.*1000*/- அரசு கணக்கில் (விசைத்தறி பதிவு நிதி கணக்கு) செலுத்தப்பட வேண்டும்.

*28.03.* விசைத்தறி பதிவு நிதி

*1993*ஆம் ஆண்டின் துணிநூல் (வளர்ச்சி மற்றும் முறைப்படுத்துதல்) ஆணையில் அதிகாரம் அளிக்கப்பட்டவாறு விசைத்தறி பதிவு நிதி ஒன்றையும் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் அரசுச் செயலர் தலைமையில் ஒரு நிர்வாகக் குழுவையும் அரசு அமைத்தது. விசைத்தறி பதிவு மற்றும் புதுப்பித்தலுக்குக் கட்டணமாக வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்ட தொகை முழுவதும் விசைத்தறி பதிவு நிதிக்கு மாற்றம் செய்யப்பட்டது. இதற்குப் பிறகு விசைத்தறி பதிவுக்கென பெறப்படும் நிதி யாவும் இந்த நிதியிலேயே செலுத்தப்பட்டு வருகிறது. இத்தொகை வங்கிகளில் குறுகிய கால முதலீடுகளாக இட்டு வைக்கப்பட்டுள்ளது. விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் உதவி அளித்தல், விசைத்தறிப் பணி மையங்களை அமைத்தல், விசைத்தறிகளுக்கான வடிவமைப்பு மையங்களை அமைத்தல், நெசவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய பதனிடும் அமைப்புகளை நிறுவுதல், கிட்டங்கிகள் கட்டுதல், விசைத்தறி துணி விற்பனைக்கு காட்சியறை நிறுவுதல், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையங்கள் அமைத்தல், விசைத்தறிகளை நவீனமயமாக்கல் போன்ற பணிகளுக்கு இத்தொகை பயன்படுத்தலாம்.

**துணிநூல்**

## 29. தமிழ்நாட்டிலுள்ள துணிநூல் ஆலைகளின் செயல்பாடுகள்

தமிழ்நாட்டில் துணிநூல் ஆலைகள் தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருப்பதோடு, பெருமளவு வேலைவாய்ப்பு அளித்தும் வருகின்றது. இவற்றில் பெரும்பாலானவை நூற்பு ஆலைகளாகும். இவ்வாலைகள் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்து வருகின்றன. இந்தியாவிலுள்ள பெரிய மற்றும் நடுத்தர துணிநூல்

[2001 செப்டம்பர் 11

ஆலைகளின் மொத்த எண்ணிக்கையான 1937இல், 893 ஆலைகள் தமிழ்நாட்டில் உள்ளன. அதேபோன்று இந்தியாவிலுள்ள 921 சிறிய ஆலைகளில் 745 ஆலைகள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. தமிழ்நாட்டிலுள்ள 893 பெரிய மற்றும் நடுத்தர ஆலைகளில் 18 கூட்டுறவு நூற்பாலைகளும் 17 தேசிய துணிநூல் கழக ஆலைகளும், 25 கூட்டு ஆலைகளும் அடங்கும். இவ்வாலைகள் 14.30 மில்லியன் நூற்பு கதிர்களுடனும் 2.32 இலட்சம் தொழிலாளர்களைக் கொண்டும் செயல்பட்டு வருகின்றன. தனியார் துணிநூல் ஆலைகள் தொழில் வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தியில் பெரும்பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டிலுள்ள துணிநூல் ஆலைகள் தேசிய துணிநூல் ஆலைகளின் திறனில் பெரும்பங்கு வகிக்கின்றன. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மொத்த நூலில் 35 விழுக்காடு தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுபவையாகும். இவைகளில் பெரும்பகுதி பருத்தி நூல்களாகும். தேசிய துணிநூல் பிரிவில், தமிழ்நாடு மட்டும் 37 விழுக்காடு பருத்தியை பயன்படுத்துகின்றன. மொத்தத் தேவையான .60 இலட்சம் பேல்களில் தமிழ்நாடு 6 இலட்சம் பேல்கள் பருத்தியை உற்பத்தி செய்கிறது. கிராமப்புறங்களிலுள்ள பருத்தி உற்பத்தியைச் சார்ந்து தமிழ்நாட்டிலுள்ள துணிநூல் ஆலைகள் இயங்குவதால் கச்சாப் பொருள்களின் விலை உயர்ந்து தேசிய மற்றும் பன்னாட்டு வர்த்தகத்தைப் பாதிக்கிறது. இம்மாநிலத்தில் உள்ளூர் சந்தைகள் சரிவர இல்லாததால் வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் நூல்களுக்காக அதிகப்படியான போக்குவரத்துக் கட்டணம் செலவு செய்ய வேண்டியுள்ளது. போட்டியில்லாத விலை, தரம் குறைவு, அதிக இருப்பு ஆகியவை நூற்புத் தொழிலின் சந்தையைப் பாதிக்கிறது. பொருளாதார மந்தநிலை, உலகளாவிய தடையற்ற வர்த்தகம், இத்தொழிலை நவீனமயமாக்குதல், உற்பத்தி மற்றும் தரம் ஆகியவற்றின் தேவையை அதிகப்படுத்துகிறது. ஒருபக்கம் வேறுபட்ட தீமைகள் இருந்தபோதிலும், துணிநூல் ஆலைகள் தன்னுடைய திறனை அதிகப்படுத்தி பல்வகையான இழைகள் அதாவது பருத்தி, பட்டு, பாலியஸ்டர், விஸ்கோஸ், நைலான், அகிரிலிக் மற்றும் இதர இழைகளை அதிகளவு மூலதனத்துடன் நவீனமான இயந்திரங்களைப் பயன்படுத்தினால் பெருமளவில் ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களாக மாற்ற முடியும். இத்தொழிலில் நூற்பு பிரிவுதான் மற்ற பகுதிகளைவிட அதிக அளவில் நவீனமாக உள்ளது. 2005-ல் உலகளாவிய தடையற்ற வர்த்தகம் வரும் நிலையில் உலக மொத்த நூல் தேவையில்



2001 செப்டம்பர் 11]

25 விழுக்காடு இந்தியா பூர்த்தி செய்யக்கூடியதாக விளங்க முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 30. கூட்டுறவு நூற்பாலைகள்

*30.01.* கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்குத் தங்குதடையின்றி நியாயமான விலையில் தரமான நூல் விநியோகம் செய்யும் நோக்குடன் தமிழக அரசு தமிழ்நாட்டில் 4.69 இலட்சம் கதிர் திறன்களுடன் 18 கூட்டுறவு நூற்பாலைகளை ஏற்படுத்தியது. இந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் 1958 மற்றும் 1985 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் நிறுவப்பட்டன.

*30.02.* இந்த 18 கூட்டுறவு நூற்பாலைகள் தமிழ்நாட்டில் பின்வரும் முக்கிய மாவட்டங்களில் நிறுவப்பட்டன :

1. தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை, பேட்டை, திருநெல்வேலி.
2. ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை, ஸ்ரீவில்லிபுத்தூர்.
3. திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை, நாசரேத்.
4. சேலம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, சேலம்.
5. மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, மேலூர்.
6. ஈரோடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, தாராபுரம்.
7. கரூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, கரூர்.
8. கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி.
9. காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை, காஞ்சிபுரம்.
10. விழுப்புரம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, சாரம்.
11. வேலூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, அரியூர்.
12. நாகப்பட்டினம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, மணல்மேடு.
13. தருமபுரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை.
14. அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி.
15. பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டயபுரம்.

[2001 செப்டம்பர் 11

16. இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, அச்சங்குளம்.

17. மிசேரியர் கூட்டுறவு நூற்பாலை, மதுரை.

18. புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி.

30.03. கூட்டுறவு நூற்பாலைகள் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் சிட்டா நூலில் 50 சதவீதமும், விசைத்தறி தொழிலுக்குத் தேவைப்படும் கோன் நூலையும் உற்பத்தி செய்கின்றன. 2000-2001 ஆம் ஆண்டில் கூட்டுறவு நூற்பாலைகள் 195.55 இலட்சம் கி.கி. நூலினை 40 ஆம் எண் நூலாக மாற்றம் செய்தவகையில் உற்பத்தி செய்துள்ளன.

30.04. ஏற்றுமதி வீழ்ச்சி, பருத்தி விலையில் ஏற்பட்ட அதிகமான விலை உயர்வு மற்றும் நூல் விலை குறைந்துள்ளமை போன்ற காரணங்களால் ஜவுளித் தொழில் மிகுந்த நிதி நெருக்கடியான நிலையில் உள்ளது. இதனால் பெரும்பாலான துணிநூல் ஆலைகள் மூடப்பட்டும், மூடும் தருவாயிலும் உள்ளன. இருப்பினும் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள், கைத்தறி நெசவாளர்களுக்கு சிட்டா நூல் விநியோகம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காக தொடர்ந்து இயங்கி வருகின்றன.

30.05. 1998 ஆம் ஆண்டில் கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைப்பு செய்வதற்காக ரூ.185.26 கோடிக்கு உதவிகள் தமிழக அரசால் வழங்கப்பட்டு அது இத்துறையால் செயல்படுத்தப்பட்டது. இது தவிர, கூட்டுறவு நூற்பாலைகளில் தன்விருப்பு ஓய்வுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 4,014 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் இத்திட்டத்தின்கீழ் விடுவிக்கப்பட்டு அவர்களுக்குச் சேர வேண்டிய பணப்பயன் ரூ.37.33 கோடி வழங்கப்பட்டது.

30.06. தற்பொழுது அண்ணா மற்றும் பாரதி கூட்டுறவு நூற்பாலைகள் இலாபகரமாக இயங்கி வருகின்றன. இவை தவிர, புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை வியாபார இலாபத்தில் இயங்கி வருகிறது. அண்ணா மற்றும் பாரதி கூட்டுறவு நூற்பாலைகள் ஐ.எஸ்.ஓ. 9000 சான்றிதழ் பெறத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



2001 செப்டம்பர் 11]

30.07. இருப்பினும் 18 கூட்டுறவு நூற்பாலைகளில், பின்வரும் 4 கூட்டுறவு நூற்பாலைகளில் பருத்தி விலை ஏற்றம் மற்றும் நூல் விலை சரிவு மற்றும் நடைமுறை மூலதனமின்மை, இயந்திரங்கள் பழுதடைந்துள்ளமை மற்றும் சமீபகாலமாக ஜவுளித் துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி போன்ற காரணங்களால் அதிகப்படியான நட்டம் ஏற்பட்டு இயங்காமல் உள்ளன.

| வரிசை எண் | கூட்டுறவு நூற்பாலைகளின் பெயர் | உற்பத்தி நிறுத்தப் பட்ட நாள். |
|---|---|---|
| 1. | வேலூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை | 29-12-1997 |
| 2. | விழுப்புரம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை | 14-1-1999 |
| 3. | மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை | 4-1-1999 |
| 4. | மிசேரியர் கூட்டுறவு நூற்பாலை | 5-3-1999 |

30.08. நட்டத்தில் இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளை தற்போதைய நெருக்கடியிலிருந்து விடுவிக்கவும் மற்றும் அப்பகுதிகளில் பொருளாதார நிலையை தொடர்ந்து நிலை நிறுத்தவும், அரசு அவ்வாலைகளை தனியார்மயமாக்க சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருகிறது.

## துறை சார்ந்த இதர நிறுவனங்கள்

### 31. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் "கோ-ஆப்டெக்ஸ்"

31.01. "கோ-ஆப்டெக்ஸ்" என்று அனைவராலும் அறியப்பட்ட தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 1935 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனம் தமிழ்நாட்டில் கைத்தறித் தொழிலை ஒருங்கிணைக்கவும், கூட்டுறவின்கீழ் உள்ள கைத்தறிகளை வளரச் செய்யும் முக்கிய நோக்கத்துடன் ஒரு தலைமைச் சங்கமாக இயங்கி வருகிறது. உறுப்பினர்களாக உள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் நூல் வகைகளை கொள்முதல் செய்து வழங்குவதும், சங்கங்களால் உற்பத்தி செய்யும் துணி வகைகளை இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் விற்பனை செய்வதற்கு உதவிபுரிவதும்

[2001 செப்டம்பர் 11

31.02. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 318.35 கோடி அளவிற்கு விற்பனை செய்துள்ளது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கைத்தறித் துணிகளை மாநிலத்தில் இயங்கும் உறுப்பினராக உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து மட்டுமே கொள்முதல் செய்கிறது. சாதாரணமாக, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் 40 விழுக்காடு முதல் 50 விழுக்காடு வரை கொள்முதல் செய்து வருகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ரூ.188.07 கோடி அளவிற்கு கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்துள்ளது.

31.03. ஏற்றுமதி

கைத்தறித் துணி ஏற்றுமதியில் கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேசனல் பிரிவு சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது. பல ஐரோப்பிய நாடுகள், தூரக்கிழக்கு நாடுகள் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவற்றில் கோ-ஆப்டெக்ஸ் தனது ஏற்றுமதி வியாபாரத்தைப் பெருக்கியுள்ளது. வீட்டு உபயோக இரகங்கள் உள்ளிட்ட ஏராளமான இரகங்கள் இந்த ஏற்றுமதியில் அடங்கும். கோ-ஆப்டெக்ஸ் 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.249.98 இலட்சம் அளவிற்கு ஏற்றுமதி ஆர்டர்களை பெற்றுள்ளது.

31.04. எதிர்காலத் திட்டங்கள்

* 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.1000.00 இலட்சம் அளவிற்கு ஏற்றுமதி விற்பனையை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
* வேலூர், புதுடில்லி ஆகிய பகுதிகளில் மண்டல சேமிப்புக் கிடங்குகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.
* விற்பனையை அதிகரிக்கும் நோக்குடன் பெரிய அளவிலான 15 விற்பனை நிலையங்களை கணினிமயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் குறிப்பிட்ட சில மண்டல அலுவலகங்களில் உள்ள தனித்து இயங்கும் அமைப்புகள் பலர் இயக்கக்கூடிய வகையில் மேம்படுத்தப்படும். மேலும் தலைமை அலுவலக கணினி அமைப்புகளும் விரிவுபடுத்தப்பட்டு, கையிருப்பில் உள்ள கணினிகள் மண்டல கடன் விற்பனை பிரிவுகளுக்கும், மண்டல நிறுவன விற்பனை நிலையங்களுக்கும் மறுபகிர்மான முறையில் வழங்கப்பட உள்ளது.



2001 செப்டம்பர் 11]

## 32. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், சென்னை

32.01. தமிழ்நாட்டில் கைத்தறி மற்றும் விசைத்தறித் தொழிலின் முன்னேற்றத்திற்காகவும் வளர்ச்சிக்காகவும் குறிப்பாக, கூட்டுறவின்கீழ் சாராத நெசவாளர்களின் முன்னேற்றத்திற்காகவும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் 1964-ல் நிறுவப்பட்டது. தற்சமயம் இக்கழகம் கூட்டுறவின்கீழ் சாராத கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் அங்கத்தினர்களுக்கு நடைமுறை மூலதனம் வழங்கி வருகிறது.

32.02. நெசவாளர்களுக்கு உதவி புரிய இக்கழகத்திற்கு மாநிலம் முழுவதும் 10 கிளைகள் உள்ளன. தற்சமயம் இக்கழகத்தில் 11,723 உறுப்பினர்கள் உள்ளனர். இக்கழகம் 2000-2001 ஆம் ஆண்டில் 1,233 உறுப்பினர்களுக்கு ரூ. 301.47 இலட்சம் அளவிற்குக் கடன் வழங்கியுள்ளது.

32.03. இக்கழகம் இறக்குமதி/ஏற்றுமதி குறியீடு எண் பெற்று, கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்திக் கழகத்தின் மூலமாக ஏற்றுமதி வியாபாரம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

## 33. தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்

33.01 தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சிபுரம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நியாயமான விலையில் தரமான சரிகை வழங்க நிறுவப்பட்ட ஓர் அரசு பொது நிறுவனமாகும்.

33.02. இந்நிறுவனம் 2000-2001 ஆம் ஆண்டில் 64,728 மார்க்குகள் சரிகையினை உற்பத்தி செய்து, 64,750 மார்க்குகள் சரிகையினை விற்பனை செய்துள்ளது. சரிகை ஆலையின் தரப் பரிசோதனைக் கூடத்தில் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து 2000-2001 ஆம் ஆண்டில் 5,445 சரிகை மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. 1999 ஆம் ஆண்டு கும்பகோணத்தில் தமிழ்நாடு சரிகை ஆலையின் 2-வது பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பிரிவில் மாதத்திற்கு 700 மார்க்குகள் சரிகை உற்பத்தி செய்யப்படுவதோடு, 16 தொழிலாளர்களும், 2 பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

[2001 செப்டம்பர் 11

*33.03.* சரிகை விற்பனையில் சந்தையில் நிலவும் போட்டியினை கருத்தில் கொண்டு விற்பனையில் தரத்தன்மையினை ஏற்படுத்தும் வகையில் உற்பத்தி செய்யப்படும் சரிகை தரமானவை என உறுதி செய்யும் வகையில் ISO 9002 தரச் சான்றிதழை தமிழ்நாடு சரிகை ஆலை ஜனவரி 2001-ல் பெற்றுள்ளது.

*33.04.* தமிழ்நாடு சரிகை ஆலை இலாபகரமாக இயங்கி வரும் ஒரு நிறுவனமாக உள்ளதால், தொடர்ந்து அரசு பங்கு மூலதனத்திற்கு ஈவுத்தொகை செலுத்தி வருகிறது. கடந்த 3 ஆண்டுகளின் விவரம் பின்வருமாறு:

| வரிசை எண் | ஆண்டு | அரசின் பங்கு | ஈவுத்தொகை விழுக்காடு | செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | | (ரூ. இலட்சத்தில்) |
| 1. | 1998-1999 | 34.40 | 25% | 8.60 |
| 2. | 1999-2000 | 34.40 | 25% | 8.60 |
| 3. | 2000-2001 | 34.40 | 25% | 8.60 |

## 34. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு

*34.01.* தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை கூட்டுறவு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு, 5-9-1973 அன்று துவக்கப்பட்டது. இவ்வாலை தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பின்கீழ் செயல்படும் ஒரே ஒரு பதனிடும் ஆலையாகும்.

*34.02.* இவ்வாலை நூல், பருத்தி மற்றும் செயற்கை இழை நூல் துணிகளுக்கு வெளுத்தல், சாயமிடல் மற்றும் அச்சிடல் போன்ற பல்வேறு பதனிடும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாலையின் பதனிடும் திறன் மாதம் ஒன்றுக்கு 12.00 இலட்சம் மீட்டர்கள் ஆகும்.

*34.03.* தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலைக்கு கோ-ஆப்டெக்ஸ், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், மத்திய சிறை, கோவை, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கர்நாடக கைத்தறி வளர்ச்சிக் கழகம் ஆகிய நிறுவனங்கள் துணிகளைப் பதனிடவும், அச்சிடவும் வழங்கி வருகின்றன. அரசுத் திட்டங்களான பள்ளிக் குழந்தைகளுக்கான இலவச சீருடைத் திட்டம் மற்றும் இலவச சேலை திட்டத்தின்கீழ் வழங்கப்படும் துணிகளையும் இவ்வாலை பதனிட்டு வழங்குகிறது.



2001 செப்டம்பர் 11]

*34.04.* ஆலையின் செயல்பாட்டினை அதிகரிக்கவும் இலாபத்தினை பெருக்கவும் ரூ. 185.00 இலட்சத்திற்கு விரிவாக்கம் மற்றும் நவீனப்படுத்தும் திட்டம் இவ்வாலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி தொகையில் புதிய இயந்திரங்கள் நிறுவ ரூ. 50.00 இலட்சம் விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தின்கீழ் அரசால் வழங்கப்பட்டது.

*34.05.* இவ்வாலை 2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 735.23 இலட்சம் அளவிற்கு வியாபாரம் மேற்கொண்டுள்ளதோடு, ரூ. 8.73 இலட்சம் (தோராயமாக) நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

## 35. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர்

*35.01.* நலிவடைந்த மற்றும் மூடப்பட்ட ஆலைகளை ஏற்று நடத்தி அவற்றிற்குப் புத்துயிர் அளித்தல், விசைத்தறிக் கூடங்கள் நிறுவுதல், கூட்டுறவு நூற்பாலைகளுக்கு தொழில்நுட்ப சேவை வழங்குதல், விசைத்தறிக் கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட விசைத்தறித் துணிகளை விற்பனை செய்தல் ஆகிய பல்வேறு நோக்கங்களுக்காக தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் 1969ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தற்போது பள்ளிக் குழந்தைகளுக்குச் சீருடை வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்த விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை கொள்முதல் செய்யும் முகவராக தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் செயல்பட்டு வருகிறது. இதுதவிர, அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்குத் தேவைப்படும் சீருடைத் துணிகளை இக்கழகம் வழங்கி வருகிறது. 2000-2001ஆம் ஆண்டில் இக்கழகம் ரூ.1617.70 இலட்சம் அளவிற்கு வியாபாரம் செய்துள்ளது.

35.02. கோயம்புத்தூரிலுள்ள குறிச்சி என்ற இடத்தில் இயங்கிவரும் 12 தானியங்கி விசைத்தறிகள் தவிர அருப்புக்கோட்டை, சிவகிரி மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களில், இக்கழகம் 3 விசைத்தறிக் கூடங்களை நடத்தி வருகிறது. இவற்றின் மூலம் 1999-2000 ஆம் ஆண்டு 20.72 இலட்சம் மீட்டர் துணிகளையும், 2000-2001 ஆம் ஆண்டில் 14.25 இலட்சம் மீட்டர் துணிகளையும் இக்கழகம் உற்பத்தி செய்துள்ளது.

**36. தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட் (டான்ஸ்பின்), சென்னை**

36.01. தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட் (டான்ஸ்பின்) கூட்டுறவு நூற்பாலைகளின் பஞ்சு கொள்முதல் நடைமுறையினை சீரமைக்கும் பொருட்டு 1994ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

36.02. இவ்விணையத்தின் உறுப்பினராக உள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தேவையான தரமான பஞ்சினை நியாயமான விலையில் பல வெளி மாநில கூட்டுறவு இணையங்கள் மூலமாகவும் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவும் வாங்கி விநியோகிப்பதே இணையத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்காக, தமிழக அரசு பங்கு மூலதனமாக ரூ.25.00 கோடியும், பஞ்சு சுழற்சி நிதியாக ரூ.2.07 கோடியும் ரொக்கத்திற்குப் பஞ்சு வாங்கும் பொருட்டு இணையத்திற்கு வழங்கியுள்ளது.

36.03. 2000-2001 ஆம் ஆண்டில், இணையம் 7,258 பஞ்சு பேல்கள் ரூ. 6.57 கோடி மதிப்பிற்கு கொள்முதல் செய்து, உறுப்பினராக உள்ள கூட்டுறவு நூற்பாலைகளுக்கு விநியோகம் செய்துள்ளது. உறுப்பினராக உள்ள கூட்டுறவு நூற்பாலைகளின் மொத்த பஞ்சுத் தேவையில் சுமார் 10 விழுக்காடு தேவையினை இணையம் பூர்த்தி செய்து வருகிறது.

36.04. 1997-98ஆம் ஆண்டில் இவ்விணையம் ஈவுத்தொகையாக ரூ.25.00 இலட்சம் அரசுக்குச் செலுத்தியுள்ளது. 2000-2001ஆம் ஆண்டில், இவ்விணையம் தோராயமாக ரூ.25.00 இலட்சம் அளவிற்கு நிகர இலாபம் ஈட்டியுள்ளது.





# இணைப்பு

## கைத்தறி மற்றும் துணிநூல் துறை முன்னேற்றம் பற்றிய அறிக்கை

**1. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்**

| வரிசை எண் (1) | விவரம் (2) | 1998-1999 (3) | 1999-2000 (4) | 2000-2001 (5) |
|---|---|---|---|---|
| 1. | நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | 1,382 | 1,410 | 1,414 |
| 2. | தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 3.44 | 2.90 | 2.92 |
| 3. | உற்பத்தி— | | | |
| | (அ) மீட்டர் (இலட்சத்தில்) | 948.34 | 923.58 | 941.77 |
| | (ஆ) மதிப்பு (ரூ. கோடியில்) | 401.97 | 389.72 | 462.65 |
| 4. | விற்பனை மதிப்பு (ரூ. கோடியில்) | 510.62 | 461.57 | 550.73 |
| 5. | நடைமுறை மூலதனம் (ரூ. கோடியில்) | 304.13 | 373.57 | 344.78 |

**2. கோ-ஆப்டெக்ஸ்**

| வரிசை எண் (1) | விவரம் (2) | 1998-1999 (3) | 1999-2000 (4) | 2000-2001 (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | | |
| 1. | கைத்தறித் துணி கொள்முதல் | 186.22 | 182.26 | 188.07 |
| 2. | கைத்தறித் துணி விற்பனை | 252.45 | 255.80 | 253.22 |
| 3. | நடைமுறை மூலதனம் | 169.84 | 139.00 | 149.00 |

[2001 செப்டம்பர் 11

**3. கூட்டுறவு நூற்பாலைகள்**

| வரிசை எண் (1) | விவரம் (2) | 1998-1999 (3) | 1999-2000 (4) | 2000-2001 (5) |
|---|---|---|---|---|
| 1. | கதிர்களின் எண்ணிக்கை (ரூ. இலட்சத்தில்) | 4.69 | 4.69 | 4.69 |
| 2. | உற்பத்தி (ரூ. இலட்சத்தில்) | 22008.65 | 18934.73 | 19555.00 |
| 3. | விற்பனை (ரூ. இலட்சத்தில்) | 21824.94 | 18523.80 | 18882.96 |
| 4. | நடைமுறை மூலதனம் (ரூ. இலட்சத்தில்) | 3689.50 | 3550.40 | 3550.40 |

**4. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு**

| வரிசை எண் (1) | விவரம் (2) | 1998-1999 (3) | 1999-2000 (4) | 2000-2001 (5) |
|---|---|---|---|---|
| 1. | வியாபார மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | 903.83 | 909.73 | 735.23 |
| 2. | நிகர லாபம் (ரூ. இலட்சத்தில்) | (+)53.04 | (+)24.14 | (+)8.73 (தோராயமாக) |

**5. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், சென்னை**

| வரிசை எண் (1) | விவரம் (2) | 1998-1999 (3) | 1999-2000 (4) | 2000-2001 (5) |
|---|---|---|---|---|
| 1. | கடன்களின் எண்ணிக்கை | 1,526 | 1,305 | 1,223 |
| 2. | அனுமதிக்கப்பட்ட கடன் தொகை (ரூ. இலட்சத்தில்) | 367.39 | 305.54 | 301.47 |



2001 செப்டம்பர் 11]

**6. தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்**

| வரிசை எண் (1) | விவரம் (2) | 1998-1999 (3) | 1999-2000 (4) | 2000-2001 (5) |
|---|---|---|---|---|
| 1. | சரிகை உற்பத்தி (மார்க்குகளில்) | 61891 | 69479 | 64728 |
| 2. | விற்பனை மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | 1686.92 | 1706.94 | 1790.49 |
| 3. | நிகர இலாபம் (ரூ. இலட்சத்தில்) | 89.45 | 62.21 | 97.42 (தோராயமாக) |

**7. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயம்புத்தூர்**

| வரிசை எண் (1) | விவரம் (2) | 1998-1999 (3) | 1999-2000 (4) | 2000-2001 (5) |
|---|---|---|---|---|
| 1. | விசைத்தறிக் கூடங்களில் துணி உற்பத்தி (மீட்டர் இலட்சத்தில்) | 23.80 | 20.65 | 14.25 |
| 2. | துணி விற்பனை (மீட்டர் லட்சத்தில்) | 75.81 | 74.19 | 66.04 |
| 3. | விற்பனை மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | 2027.37 | 2138.00 | 1617.70 |
| 4. | நிகர இலாபம்/நட்டம் (ரூ. இலட்சத்தில்) | (+)9.39 | (-)3.72 | (+)54.18 (தோராயமாக) |

[2001 செப்டம்பர் 11

**8. தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட், (டான்ஸ்பின்), சென்னை**

| வரிசை எண் (1) | விவரம் (2) | 1998-1999 (3) | 1999-2000 (4) | 2000-2001 (5) |
|---|---|---|---|---|
| | | | (ரூ. இலட்சத்தில்) | |
| 1. | பஞ்சு கொள்முதல் | 1901.00 | 1453.00 | 657.00 |
| 2. | நூல் விற்பனை | - | 456.00 | 5150.00 |
| 3. | பெறப்பட்ட சேவைக் கட்டணம் | 30.27 | 36.28 | 68.00 |
| 4. | நிகர இலாபம் | 8.01 | 3.35 | 25.00 (தோராயமாக) |





## இணைப்பு - II

*(48-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

**மானியக் கோரிக்கை எண் 4—பொதுவிற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்–நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002.**

**1. முன்னுரை**

1.1. வணிக வரித் துறையானது தமிழக அரசின் மிக அதிகமான வருவாய் ஈட்டும் துறையாகத் திகழ்கிறது. வரி விதிப்புக் கொள்கையானது சமூக நலம் மற்றும் வளர்ச்சித் திட்டங்கட்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல், மாநிலத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சியினை நிலைப்படுத்தி முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்வதேயாகும். அடிப்படையில் வணிக வரிகள் பரவலான மற்றும் சிக்கலான தன்மையுடைத்தாயிருப்பினும், இந்த வரிகளை நடைமுறைப்படுத்தும்போது எளிய மற்றும் வெளிப்படையான நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டிய நிலையில் அரசின் முயற்சி உள்ளது.

1.2. வணிக வரித் துறை பின்வரும் சட்டங்களை நிருவகிக்கிறது:

1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959
2. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970
3. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956
4. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939
5. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1955
6. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981
7. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 1990
8. தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983
9. தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டம்.

[2001 செப்டம்பர் 11

**2. துறையின் அமைப்பும், செயல்பாடுகளும்**

வணிக வரி ஆணையர், வணிகவரித் துறையின் செயல்பாட்டிற்கு துறைத்தலைவர் ஆவார். தலைமையகத்தில், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் கொண்ட குழு, அவருக்குப் பல்வேறு வகைகளில் உதவுகிறது. இத்துறை, 10 வணிக வரிக் கோட்டங்களாகவும், 7 செயலாக்கக் கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

**I. வரிவிதிப்புப் பிரிவு**

இப்பிரிவு, இத்துறை நிருவகிக்கும் பல சட்டங்களின் கீழ் வரிவிதிப்பு, கேட்பு மற்றும் வசூல் பணிகளை மேற்கொள்கிறது. மாநிலத்தில் உள்ள 10 வணிக வரிக் கோட்டங்களும் துணை ஆணையர்கள் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. இக்கோட்டங்கள், மேலும் 40 வணிக வரி மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள வணிக வரி மாவட்டங்கள் சரகம் என அழைக்கப்படுகின்றன.

மேலும், 6 விரைவு வழி வரிவிதிப்பு வட்டங்கள் உள்ளிட்ட (உதவி ஆணையரின் தலைமையில், 4 சென்னையிலும் 2 கோயம்புத்தூரிலும்) 323 வரிவிதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றில், 236 வரிவிதிப்பு வட்டங்கள் வணிக வரி அலுவலர் தலைமையிலும், இதர 81 துணை வணிக வரி அலுவலர் தலைமையிலும் செயல்பட்டு வருகின்றன.

**II. தணிக்கைப் பிரிவு**

இப்பிரிவு, துறையின் உள்ளீட்டுத் தணிக்கைப் பணிகளை மேற்கொள்கிறது. இது 40 குழுக்களாக இயங்கி வருகின்றது. வரிவிதிப்புக் கோப்புகள் அனைத்தும் இப்பிரிவால் தணிக்கைச் செய்யப்படுகின்றன. உள்ளீட்டுத் தணிக்கை மற்றும் மாநிலக் கணக்காயர் தணிக்கைக் குழுவின் அறிக்கைகள் மீதான தொடர் நடவடிக்கையினைக் கண்காணிக்க ஒரு தனிக்குழு வணிக வரி ஆணையர் அலுவலகத்திலுள்ள இணை ஆணையர் (தணிக்கை) அவர்களின் கண்காணிப்பின்கீழ் செயல்பட்டு வருகின்றது. கடந்த 2000-2001ஆம் ஆண்டு மற்றும் 2001-2002ஆம் ஆண்டில் ஜூலை, 2001 வரையிலான பணித்திறன் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது:



2001 செப்டம்பர் 11]

| | 2000-2001 | | | 2001-2002 (ஜூலை 2001 முடிய) | | |
|---|---|---|---|---|---|---|
| | பழையன | புதியன | மொத்தம் | பழையன | புதியன | மொத்தம் |
| உள்ளீட்டுத் தணிக்கைக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளின் எண்ணிக்கை | 39,809 | 32,824 | 72,633 | 29,829 | 13,947 | 43,776 |
| நிவர்த்தி செய்யப்பட்ட குறைகளின் எண்ணிக்கை | 27,038 | 15,766 | 42,804 | 7,241 | 3,109 | 10,350 |
| மாநிலக் கணக்காயரின் தணிக்கைக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளின் எண்ணிக்கை | 12,911 | 3,515 | 16,426 | 13,336 | 1,542 | 14,878 |
| நிவர்த்தி செய்யப்பட்ட குறைகளின் எண்ணிக்கை | 2,638 | 452 | 3,090 | 856 | 71 | 927 |

**III. செயலாக்கப் பிரிவு**

செயலாக்கப் பிரிவில், 7 கோட்டங்களில் 7 துணை ஆணையர்களும் 10 உதவி ஆணையர்களும் மற்றும் 15 வணிகவரி அலுவலர்களும் உள்ளனர். செயலாக்கப் பிரிவு அமைப்பில் 29 வணிகவரி தணிக்கைச் சாவடிகளும், 48 சுற்றும் படைகளும் உள்ளன. இப்பிரிவு, கடைகள், திரையரங்குகள் ஆகியவற்றை ஆய்வு செய்தல் மற்றும் வாகனங்களைச் சோதனையிடுதல், வரி ஏய்ப்பினைத் தடுத்தல் ஆகியவற்றிற்குப் பொறுப்பாகும்.

**IV. மேல்முறையீட்டுப் பிரிவு**

மேல்முறையீட்டுப் பிரிவு, வணிக வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத் தலைவரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. 20 மேல்முறையீட்டு துணை ஆணையர்களும், சென்னை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒரு உதவி ஆணையர் (மேல்முறையீடு) வீதம் 2 வணிக வரி துணை ஆணையர்கள் உள்ளனர். 2000-2001-ல் தீர்வு செய்யப்பட்ட மேல்முறையீடுகளின் எண்ணிக்கை 13,304. 2001-2002 (ஜூலை வரை) தீர்வு செய்யப்பட்டவை 3,509 ஆகும்.

[2001 செப்டம்பர் 11

**V. விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்**

விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் மற்றும் துணை ஆணையர்கள் ஆகியோரின் தீர்ப்புகளின்மீது எழும் மேல்முறையீடுகளை விசாரித்து தீர்ப்பு வழங்குகிறது. இத்தீர்ப்பாயத்தில் 4. விற்பனை வரி நடுவர் ஆயங்கள் செயல்பட்டு வருகின்றன. முதன்மை ஆயம் சென்னையிலும் மற்றும் 3 கூடுதல் ஆயங்கள் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரையிலும் உள்ளன.

சென்னையில் உள்ள முதன்மை ஆயத்திற்கு, மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள நீதிபதி, தீர்ப்பாயத் தலைவரா்க உள்ளார். துறை உறுப்பினராக இணை ஆணையர் தரத்தில் ஒருவர் உள்ளார். இரண்டாம் உறுப்பினராக இந்திய தணிக்கை மற்றும் கணக்கியல் துறையைச் சார்ந்த, துறையின் துணை ஆணையர் தரத்தில் ஒருவர் உள்ளார். கூடுதல் ஆயங்கள், சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் உள்ள கூடுதல் நீதிமன்ற உறுப்பினர்கள் தலைமையில் இயங்குகின்றன. ஒவ்வொரு கூடுதல் ஆயத்திலும், துணை ஆணையர் நிலையில் கூடுதல் துறை உறுப்பினர்கள் உள்ளனர். 2000-2001 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 3,355. 2001-2002-ல் (ஜுலை வரை) தீர்வு செய்யப்பட்டவை 1,029 ஆகும்.

**VI. தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்புத் தீர்ப்பாயம்**

தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்புத் தீர்ப்பாயம் சென்னையில் செயல்பட்டு வருகிறது. இத்தீர்ப்பாயத்தில் தலைவர், உபதலைவர், நீதித் துறை உறுப்பினர் மற்றும் நிருவாக உறுப்பினர் ஆகிய நால்வர் உள்ளனர். 2000-2001 மற்றும் 2001-2002 (ஜுலை வரை) இத்தீர்ப்பாயத்தினால் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் விவரம் பின்வருமாறு:

| வருடம் | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | தீர்வு செய்யப்பட்டவை |
|---|---|---|
| 2000-2001 | 2,356 | 1,473 |
| 2001-2002 (ஜுலை வரை) | 331 | 268 |



2001 செப்டம்பர் 11]

**VII. வணிக வரி பணியாளர்கள் பயிற்சி மையம், சென்னை**

வணிக வரி பணியாளர் பயிற்சி மையம் 1982 முதல் வணிக வரித் துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்க சென்னையில் இயங்கி வருகிறது. இப்பயிற்சி மையம், ஒரு துணை ஆணையர் தலைமையில் இரண்டு உதவி ஆணையர்கள் மற்றும் ஒரு வணிக வரி அலுவலருடன் ஆசிரியர் குழுவாக இயங்கி வருகின்றது. இந்த பயிற்சி மையத்தில் நினைவுகூர் பயிற்சியும் சிறப்பு விரிவுரையாளர்களைக் கொண்டு வரி நிர்வாகம் குறித்த பயிற்சியும், கணினி பயிற்சியும் அளிக்கப்படுகிறது. கணினி பயிற்சி, உதவி புள்ளி விவர இயக்குநரின் தலைமையில் அளிக்கப்படுகிறது.

பயிற்சி மையத்தின் செயல்பாடுகள் கீழ்வருமாறு:

| பயிற்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சிகளின் எண்ணிக்கை | பயிற்சி அளிக்கப் பட்ட அலுவலர்கள் | 2000-2001ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை | 2001-2002-ஆம் ஆண்டில் ஜுலை மாதம் முடிய பயிற்சி அளிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| பணியிடை பயிற்சி | 5 | வணிக வரி அலுவலர் | 91 | 25 |
| | | துணை வணிக வரி அலுவலர் | 18 | 17 |
| | | உதவி வணிக வரி அலுவலர் | 61 | - |
| கணினி பயிற்சி | 42 | வணிக வரி அலுவலர் | - | 83 |
| | | துணை வணிக வரி அலுவலர் | - | 82 |
| | | உதவி வணிக வரி அலுவலர் | - | 36 |
| | | உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் | 700 | - |

[2001 செப்டம்பர் 11

### 3. வருவாய் வசூல் நிலவரம்

2000-2001 ஆம் நிதி ஆண்டின் மொத்த வரி வசூல் ரூ. 8663.72 கோடியாக இருந்தது. 2001-2002-ல் ஜூலை 2001 முடிய உள்ள வரி வசூல் ரூ. 2,872 கோடி.

3.1. வணிகவரித் துறை மூலம் வசூலிக்கப்பட்ட வருவாய்

இத்துறை சம்பந்தப்பட்ட அனைத்துச் சட்டங்களின்கீழ் 1990-91 முதல் 2001-2002-ல் ஜூலை முடிய வரப்பெற்ற வருவாயின் விவரங்கள் பின்வருமாறு:

#### (i) தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959

(ரூபாய் கோடியில்)

| | | | |
|---|---|---|---|
| 1990-1991 | 1779 | 1996-1997 | 4717 |
| 1991-1992 | 2130 | 1997-1998 | 4963 |
| 1992-1993 | 2505 | 1998-1999 | 5455 |
| 1993-1994 | 2818 | 1999-2000 | 6185 |
| 1994-1995 | 3453 | 2000-2001 | 7354 |
| 1995-1996 | 4119 | 2001-2002 (ஜூலை முடிய) | 2432 |

#### (ii) மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956

(ரூபாய் கோடியில்)

| | | | |
|---|---|---|---|
| 1990-1991 | 276 | 1996-1997 | 672 |
| 1991-1992 | 330 | 1997-1998 | 707 |
| 1992-1993 | 362 | 1998-1999 | 779 |
| 1993-1994 | 393 | 1999-2000 | 813 |
| 1994-1995 | 477 | 2000-2001 | 862 |
| 1995-1996 | 591 | 2001-2002 (ஜூலை முடிய) | 302 |



2001 செப்டம்பர் 11]

#### (iii) தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939

(ரூபாய் கோடியில்)

| | | | |
|---|---|---|---|
| 1990-1991 | 70 | 1996-1997 | 108 |
| 1991-1992 | 69 | 1997-1998 | 109 |
| 1992-1993 | 76 | 1998-1999 | 91 |
| 1993-1994 | 82 | 1999-2000 | 86 |
| 1994-1995 | 88 | 2000-2001 | 74 |
| 1995-1996 | 98 | 2001-2002 (ஜூலை முடிய) | 24 |

#### (iv) தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935

(ரூபாய் கோடியில்)

| | | | |
|---|---|---|---|
| 1990-1991 | 5 | 1996-1997 | 6 |
| 1991-1992 | 5 | 1997-1998 | 7 |
| 1992-1993 | 5 | 1998-1999 | 5 |
| 1993-1994 | 6 | 1999-2000 | 5 |
| 1994-1995 | 5 | 2000-2001 | 6 |
| 1995-1996 | 7 | 2001-2002 (ஜூலை முடிய) | 1 |

#### (v) தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981

(ரூபாய் கோடியில்)

| | | | |
|---|---|---|---|
| 1990-1991 | 17 | 1996-1997 | 61 |
| 1991-1992 | 17 | 1997-1998 | 65 |
| 1992-1993 | 22 | 1998-1999 | 69 |
| 1993-1994 | 28 | 1999-2000 | 71 |
| 1994-1995 | 36 | 2000-2001 | 92 |
| 1995-1996 | 50 | 2001-2002 (ஜூலை முடிய) | 31 |

[2001 செப்டம்பர் 11

**(vi) தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச் சட்டம், 1990**

(ரூபாய் கோடியில்)

| | | | |
|---|---|---|---|
| 1990-1991 | 20 | 1996-1997 | 186 |
| 1991-1992 | 25 | 1997-1998 | 213 |
| 1992-1993 | 42 | 1998-1999 | 183 |
| 1993-1994 | 70 | 1999-2000 | 221 |
| 1994-1995 | 105 | 2000-2001 | 276 |
| 1995-1996 | 158 | 2001-2002 (ஜூலை முடிய) | 82 |

**3.2. கடந்த 10 ஆண்டுகளில் வணிகவரித் துறையின் வருவாய் மற்றும் செலவினங்கள்**

| வருடம் (ரூபாய் கோடியில்) | வருவாய் | செலவினங்கள் |
|---|---|---|
| 1990-1991 | 2167 | 28.69 |
| 1991-1992 | 2576 | 33.01 |
| 1992-1993 | 3012 | 35.75 |
| 1993-1994 | 3397 | 43.12 |
| 1994-1995 | 4164 | 45.88 |
| 1995-1996 | 5023 | 52.52 |
| 1996-1997 | 5751 | 59.93 |
| 1997-1998 | 6063 | 68.65 |
| 1998-1999 | 6583 | 92.42 |
| 1999-2000 | 7381 | 99.76 |
| 2000-2001 | 8664 | 98.57 |
| 2001-2002 (ஜூலை வரை) | 2872 | 37.43 |



2001 செப்டம்பர் 11]

## 4. சமச்சீர் வரி விகிதம்

வரிச் சீரமைப்பினைக் கருத்தில்கொண்டு, விற்பனை வரியில் சமச்சீர் வரி விகிதத்தினை அமல்படுத்த, நவம்பர் 1999-இல் புது தில்லியில் நடந்த மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் முடிவு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கொள்கை, மாநிலங்களுக்கிடையேயான வரி முரண்பாடுகளைக் களையவும், உற்பத்தி மற்றும் வியாபாரச் செலவுகளுக்கு உகந்த நிலையை ஏற்படுத்துவதை நோக்கமாகவும் கொண்டுள்ளது. ஒத்துக்கொள்ளப்பட்ட சமச்சீர் வரி விகிதத்திற்கிணங்க தமிழ்நாடு அரசு, 2000-2001 முடிய 40 பொருட்களின் மீதான விற்பனை வரியை உயர்த்தியுள்ளது. 2001-2002 நிதி நிலை அறிக்கை, ஒத்துக்கொள்ளப்பட்ட சமச்சீர் வரி விகிதங்களின் வேறுபாடுகளை மேலும் குறைத்திட வழிகோலுகிறது. தமிழ்நாடு, தற்போது சமச்சீர் வரி விதிப்புக் கொள்கைகளை நடைமுறைபடுத்துவதில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளது. அதிகாரம் அளிக்கப்பட்ட மாநில நிதி அமைச்சர்கள் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் சமச்சீர் வரியினை முழுமையாக அமல்படுத்தாத மாநிலங்களுக்கு, மத்திய அரசின் நிதி உதவி அளிப்பது நிறுத்தி வைக்கப்படும் என மத்திய நிதி அமைச்சர் அறிவித்துள்ளார்.

## 5. நிதிநிலை அறிக்கையில் வரிவிகித மாற்றங்கள்

5.1. 27-7-2001 அன்று வணிகம், தொழில் மற்றும் நுகர்வோர் சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய பட்ஜெட்டிற்கு முந்தைய கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு மொத்தம் 60 சங்கப் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டனர். அக்கூட்டத்தில் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள், வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும்போது கருத்தில் கொள்ளப்பட்டன.

5.2. சமச்சீர் வரி முறையை நடைமுறைப்படுத்துவதற்காகவும் மற்றும் ஏனைய வரிகள் சீரமைப்பிற்காகவும் வரி விகிதங்களில் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. கீழேயுள்ள பட்டியலில், தொடர்புடைய அட்டவணைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ள பொருட்கள், சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

[2001 செப்டம்பர் 11

**அ. 0 சதவிகிதத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட பொருட்கள்**

| வ. எண் | பொருள் |
|---|---|
| 1 | கைப்பம்புகள் |
| 2 | மேலும் 12 அடிசரக்கு பொருட்கள் |
| 3 | மண்ணெண்ணெய் அடுப்பு மற்றும் விளக்குகளின் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகள் |

**ஆ. 1 சதவிகிதத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட பொருட்கள்**

| வ. எண் | பொருள் |
|---|---|
| 1 | செயற்கை மணி கற்கள் |

**இ. 4 சதவிகிதத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட பொருட்கள்**

| வ. எண் | பொருள் |
|---|---|
| 1 | மக்காச்சோள தயாரிப்புகள் |
| 2 | கருஞ்சீரகம் உள்ளிட்ட சீரகம் |
| 3 | கொப்பரை |
| 4 | இரு சக்கர மிதிவண்டி இருக்கை உறைகள் |
| 5 | செயற்கை இழை நூல், செயற்கை இழைகள், மெல்லிழை மற்றும் அவற்றின் கழிவுகள் |
| 6 | உலோக இழை, உலோக சரிகை இழை, உலோக பிளாஸ்டிக் இழை முதலியன |
| 7 | பருத்தி |
| 8 | பதனிடப்பட்ட தோல் உரி மற்றும் தோல் |
| 9 | கோழித் தீவன துணைப் பொருட்கள் மற்றும் செறிவூட்டும் பொருட்கள்* |
| 10 | உலர்த்தப்பட்ட அல்லது வறுக்கப்பட்ட பருப்பு* |
| 11 | பருப்பு மற்றும் தானியங்களின் மாவு |
| 12 | இரு சக்கர மிதிவண்டியின் பூட்டுகள் |
| 13 | இலவம்பஞ்சு விதைகள் |
| 14 | மின் ஓட்டத்தை நிலைப்படுத்தும் மின்னணுக் கருவிகளின் பாகங்களும் துணைக் கருவிகளும் |



2001 செப்டம்பர் 11]

*மாண்புமிகு நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் 25-8-2001 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்ததற்கிணங்க 25-8-2001-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மூலம், வரிவிகிதம் 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**ஈ. 8 சதவிகிதத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட பொருட்கள்**

| வ. எண் | பொருள் |
|---|---|
| 1 | வணிகச் சின்னம் இல்லாத வெண்ணெய் |
| 2(i) | அடக்கமான பேரொளிக் குழல் விளக்குகள் |
| (ii) | செல்லுலார் தொலைபேசிகள் |
| 3(i) | டிராக்டர் டயர் மற்றும் டியூபுகள் |
| (ii) | நிழற்படச் சுருட்கள், [illegible]கள் போன்றவைகள் |
| (iii) | அச்சு மற்றும் எழுதுதாள |
| (iv) | தையல் இயந்திரங்களின் பாகங்களும் துணைக் கருவிகளும் |
| (v) | வணிகச் சின்னம் இல்லாத நெய் |
| (vi) | பதிவு செய்யப்படாத ஆனால் வணிகச் சின்னத்துடன் விற்பனை செய்யப்படும் வெண்ணெய் மற்றும் நெய் |
| (vii) | வணிகச் சின்னம் இல்லாத தின்பண்டங்கள் மற்றும் சாக்லேட்டுகள் |
| (viii) | வணிகச் சின்னம் இடப்படாத ரூ. 100-க்கு மேல் மதிப்புடைய காலணிகள் |
| (ix) | வணிகச் சின்னம் இல்லாத பேக்கரி தயாரிப்புகள் |
| (x) | காகிதத் கோப்பைகள் |
| 4(i) | குறிப்பிடப்படாத சாயங்கள் |
| (ii) | பதிவு செய்யப்படாத வணிக சின்னத்தில் விற்பனை செய்யப்படும் வெண்ணெய் மற்றும் நெய் |

[2001 செப்டம்பர் 11

**உ. 12 சதவிகிதத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட பொருட்கள்**

| வ. எண் | பொருள் |
|---|---|
| 1(i) | பதிவு பெறாத, ஆனால் வணிகச் சின்னம் இடப்பட்ட பிஸ்கோத்துகள் |
| (ii) | கையினால் செய்யப்பட்ட சோப்புகள் |
| 2(i) | இரண்டு சக்கரம்/மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் (மண்வாரி இயந்திரங்கள் நீங்கலாக) மற்றும் தளவரிசையிடும் அகழ் பொறிகள் |
| (ii) | எவர்சில்வர் பொருட்கள் (வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் நீங்கலாக) |
| (iii) | மின்சக்திப் பொருட்கள் |
| (iv) | பிளாஸ்டிக் பொருட்கள் |
| 3(i) | எண்ணெய் இயந்திரப் பொறிகளின் பாகங்களும், துணைக் கருவிகளும் |
| (ii) | அனைத்து வகை இரும்பு அலமாரிகள் மற்றும் அறைகலன்கள் |
| (iii) | பயணப் பெட்டிகள், கைப்பெட்டிகள் முதலியன |
| 4(i) | நிலக்கீல் |
| (ii) | முட்கம்பி, கம்பி வலை, கோழிக்குஞ்சு வலை முதலியன |
| (iii) | வணிகச் சின்னத்துடன் விற்கப்படும் மிட்டாய்கள், தின்பண்டங்கள் மற்றும் சாக்லேட்டுகள் |
| (iv) | வணிகச் சின்னத்துடன் விற்கப்படும் பிஸ்கோத்துகள் |
| (v) | போல்ட்டுகள், மரைகள், குடையாணிகள் முதலியன |
| (vi) | வேகத்தடைக் கருவிக்கான நெகிழ்திரவம் |
| (vii) | வணிகச் சின்னமிட்டு பதப்படுத்தி அடைக்கப்பட்ட இறைச்சி முதலியன |
| (viii) | கார்பைடு முனைகளும், கருவிகளும் மற்றும் கைக்கருவிகளும் |
| (ix) | கறுப்பு கார்பன், கறுப்பு அசிட்டிலின் |
| (x) | வேதியப் பொருட்கள் |



2001 செப்டம்பர் 11]

| | |
|---|---|
| (xi) | கடப்பை கற்கள் மற்றும் கற்பாளங்கள் |
| (xii) | எம்பயர் துணி மற்றும் எம்பயர் ஸ்லீவ்கள் |
| (xiii) | எத்தில் ஆல்கஹால், முழுமையான ஆல்கஹால் முதலியன |
| (xiv) | உலைகலன்கள் மற்றும் கொதிகலன்கள் |
| (xv) | கருங்கல் பாறைகள் மற்றும் கற்பாளங்கள் |
| (xvi) | ஐஸ் கிரீம்கள் |
| (xvii) | இருசக்கர மிதிவண்டிப் பூட்டுகள் நீங்கலான இதர பூட்டுகள் |
| (xviii) | இயந்திரங்கள் |
| (xix) | பாதரசம் |
| (xx) | நைட்ரிக், ஹைட்ரோ குளோரிக் மற்றும் கந்தக அமிலங்கள் |
| (xxi) | எண்ணெய் இயந்திரப் பொறிகள் |
| (xxii) | சீட்டுக் கட்டுகள் |
| (xxiii) | மின்னியல் உறைகலன்கள் |
| (xxiv) | முன்பதிவு செய்யப்பட்ட ஒளிநாடாப் பேழைகள் |
| (xxv) | இரயில் பெட்டிகள் |
| (xxvi) | இரப்பர் மரப்பால் கூட்டுப்பொருள் |
| (xxvii) | செயற்கை இரப்பர் முதலியன |
| (xxviii) | கப்பல், நீராவிக் கப்பல் முதலியன |
| (xxix) | பிழிசாறுகள் மற்றும் சாறுகள் |
| (xxx) | கந்தகம் |
| (xxxi) | டயர்கள் மற்றும் ட்யூபுகள் (முதலாம் அட்டவணையில் வேறு இடங்களில் சொல்லப்பட்டவை நீங்கலாக) |
| (xxxii) | நீர் அளவைக் கருவிகள் முதலியன |
| (xxxiii) | பற்றவைப்பு மின்வாய் கம்பிகள் முதலியன |
| (xxxiv) | ஊறவைத்த தானியங்கள் அரைக்கும் இயந்திரங்கள் |
| (xxxv) | உடனடி சிமெண்ட் கலவை |
| (xxxvi) | குறிப்பிடப்படாத வேதிய பொருட்கள் |

## 6. 2001-2002 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட முக்கிய மாற்றங்கள்.

6.1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் தற்போதுள்ள வரி விகிதங்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும், எளிமைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கூடுதல் விற்பனை வரி, 1-4-1970 முதல் வணிகர்கள் செலுத்தும் வரியின்மீது 5 விழுக்காடு விதிக்கப்பட்டது. பின்னர், விற்பனை வரியின்மீது விதிக்கப்பட்ட கூடுதல் வரி, வரிவிதிக்கத்தக்க விற்பனைத் தொகையின்மீது மாற்றி அமைக்கப்பட்டது. கடந்த ஆண்டுகளில் கூடுதல் வரி விதிப்பிற்கான வரிவிதிக்கத்தக்க விற்பனைத் தொகை ரூ. 10 லட்சம், ரூ. 100 கோடி மற்றும் ரூ. 25 கோடி என பல மாறுதல்களுக்கு உட்பட்டிருந்தது. இந்த 2001-2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், கூடுதல் வரி விதிப்பிற்கான வரிவிதிக்கத்தக்க விற்பனைத் தொகை ரூ. 25 கோடியிலிருந்து ரூ. 10 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகை ஆண்டுக்கு ரூ. 10 கோடிக்கு மேலும், ரூ. 25 கோடிக்கு மிகாமலும் இருந்தால், 1 விழுக்காடு கூடுதல் விற்பனை வரி விதிககப்படும். தற்போது வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகை ஆண்டிற்கு ரூ. 25 கோடிக்கு மேல் உள்ள இனங்களில் கூடுதல் வரி விகிதத்தில் எந்த மாற்றமும் இல்லை.

6.2. அரசின் வருவாயைப் பாதுகாக்கவும், அதிகப்படுத்தவும் சில பண்டங்கள் மற்றும் பொருட்களின் மீது நுழைவு வரி விதிக்க அரசு முடிவு செய்துள்ளது.

6.3. மாநில வருவாயைப் பெருக்கும் வகையில் பவுலிங், பில்லியர்ட்ஸ், ஸ்னூக்கர் போன்ற விளையாட்டுகளை நடத்தும் பொழுதுபோக்கு மையங்களின் மீது கேளிக்கை வரி விதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

## 7. மதிப்புக் கூட்டு வரி (Value Added Tax—VAT)

தற்போது தொழில் மற்றும் வர்த்தகப் பிரிவினர் மத்தியில் அதிகமாக விவாதிக்கபபட்டு வருவதும், மக்கள் தொடர்பு சாதனங்களால் அதிகமாக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருவதுமான பொருள் மதிப்புக் கூட்டு வரி பற்றியதாகும். இதுதொடர்பாக அதிகாரம் அளிக்கப்பட்ட மாநில நிதி அமைச்சர்கள் குழு, மதிப்புக் கூட்டு வரியினை அனைத்து மாநிலங்களிலும் (சில சிறப்பு நிலை மாநிலங்களைத் தவிர) 1-4-2002 முதல் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளதை



மத்திய அரசு ஏற்றுள்ளது. இவ்வரசு மதிப்புக் கூட்டு வரி தொடர்பான பல்வேறு அம்சங்களையும் விரிவாகப் பரிசீலித்து வருவதுடன், பொருட்களை அட்டவணைப்படுத்துதல் மற்றும் வரி விகிதங்கள் தொடர்பான சில கருத்துக்களை அதிகாரம் அளிக்கப்பட்ட நிதி அமைச்சர் குழுவின் தலைவருக்குத் தெரிவித்துள்ளது. இதுதொடர்பான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை இவ்வரசு மேற்கொண்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 78, வணிக வரித் துறை, நாள் 6-9-2001-ல் "அதிகாரம் அளிக்கப்பட்ட குழு" (Empowered Committee) ஒன்று, மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் சட்டம்) அவர்களைத் தலைவராகவும், மாண்புமிகு அமைச்சர் (வணிக வரி) அவர்களை இணைத் தலைவராகவும், செயலர் (நிதி), செயலர் (வணிக வரி), வணிக வரி ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் உள்ள இணை ஆணையர் (மக்கள் தொடர்பு) ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. 17-7-2001 அன்று "மதிப்புக் கூட்டு வரிக் குழு" அமைத்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சட்ட நடைமுறைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெறுவது தொடர்பாக நான்கு குழுக்கள் வணிகவரித் துறையில் அமைக்கப்பட்டுள்ளன. கணினிமயமாக்குதலை மேலும் விரிவாக்குவதற்கும், விவரங்கள் சேகரித்து மேலாண்மை செய்வதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளபடி மதிப்பு கூட்டுவரியின் பல்வேறு தன்மைகள் பற்றி வணிகர்கள், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் நுகர்வோர் குழுக்களின் கருத்துக்களைப் பெற, அவர்களுடன் விரிவாகக் கலந்துப் பேச உத்தேசிக்கப்பட்டுள்ளது. மதிப்புக் கூட்டுவரி முறையினை உரிய முன்னேற்பாடுடனும் கவனத்துடனும், அதில் பங்கு பெறுபவர்களின் ஒத்துழைப்போடும் அமல்படுத்த வேண்டும் என்பதே இவ்வரசின் விருப்பமாகும்.

## 8. வணிக வரித் துறையினை கணினிமயமாக்குதல்.

தற்போதுள்ள 323 வரிவிதிப்பு வட்டங்களில், 140 வரி விதிப்பு வட்டங்கள், 18 உதவி ஆணையர் அலுவலகங்கள், 5 துணை ஆணையர் அலுவலகங்கள், 6 மாநில எல்லைத் தணிக்கைச் சாவடிகள், அரசு செயலர் அலுவலகம் மற்றும் வணிக வரித் துறை ஆணையர். அலுவலகம் ஆகியவை ரூ. 3.57 கோடி செலவில் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. வணிக வரித் துறையின் பொது விவரங்களான பதிவு பெறும் நடைமுறை, வரி செலுத்தும் வகை, தற்போதைய வரிவிகிதம் ஆகியவை www. tnsalestax.com என்ற வலை தளத்தில் உள்ளன. இத்துறையின்

[2001 செப்டம்பர் 11

பயன்பாட்டிற்கான மென்பொருளை (software module), தேசிய தகவல் மையத்தில் உள்ள மென்பொருள் குழு உருவாக்கியுள்ளது. கேட்பு, வரவு மற்றும் நிலுவைப் பட்டியலைத் தயாரிக்கும் திட்டத்திற்கான மென்பொருளை உருவாக்கும் பணி தற்போது நிறைவடையும் தருவாயில் உள்ளது. வணிக வரித் துறையின் அனைத்து வரிவிதிப்பு வட்டங்களையும், முழுமையாகக் கணினிமயமாக்குதல் தொடர்பான தொழில்நுட்பப் பணிகள் திட்டமிடப்பட்டு நடைபெற்று வருகின்றன.

## 9. பிற சிறப்பினங்கள்

### 9.1. புதிய திட்டங்கள்

2001-2002 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கையில் கீழ்க்கண்ட புதிய திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| **I.** வணிக வரித் துறை | 2000-2001 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
| வணிக வரித் துறை அலுவலர்களுக்கும் வணிகர்களுக்கும் மதிப்புக் கூட்டுவரி அமல்படுத்துதல் தொடர்பாக பயிற்சி அளித்தல். | 58.50 |
| **II.** தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் | |
| (i) தீர்ப்பாயத்தின் உறுப்பினர்களுக்கு அலுவலக உபயோகத்திற்குக் கார் வழங்குதல். | 3.43 |
| (ii) துணை ஆணையர் (மேல்முறையீடு) சென்னை மற்றும் கோயம்புத்தூர் அலுவலக உபயோகத்திற்கான தளவாடங்கள் வழங்குதல். | 0.50 |
| **III.** தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்புத் தீர்ப்பாயம் | |
| இரண்டு கணிப்பொறிகள் வழங்குதல் | 1.50 |



2001 செப்டம்பர் 11]

### 9.2. மாநில மற்றும் மாவட்ட நிலையிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு

மாநில விற்பனை வரி ஆலோசனைக் குழுவின் பதவிக் காலம் முடிந்துவிட்டதால், புதிய குழு அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதேபோன்று மாவட்ட அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுக்களையும் மாற்றியமைக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

### 9.3. உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவி

உள்ளாட்சி அமைப்புகளின் வருவாய் ஆதாரங்களை மேம்படுத்தும் பொருட்டு கேளிக்கை வரி வருவாய் மூலம் கிடைக்கும் மொத்த வருவாயில் 60 விழுக்காடு முதல் 70 விழுக்காடு வரை மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் போன்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 31-3-1997 வரை பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்த நிதி ஒதுக்கீடு 1-4-1997 முதல் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒரே சீராக 90 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட தொகை ரூ. 67.38 கோடியாகும்.

### 9.4. குறை தீர்க்கும் குழு

வணிகர்கள் தங்களது குறைகளைத் தெரிவிக்க வாய்ப்பளிக்கும் அமைப்பாக, 1999 ஆம் ஆண்டு வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் குறை தீர்க்கும் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவின் தலைவராக இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்களும், குழு உறுப்பினர்களாக இணை ஆணையர் (சுய சீராய்வு மனு) மற்றும் இணை ஆணையர் (மக்கள் தொடர்பு) ஆகியோரும் உள்ளனர்.

### 9.5. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், பிரிவு 28(A)-ன்கீழ் தெளிவுரை வழங்குதல்

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959-ன்கீழ் வியாபாரம் மற்றும் தொழில் சம்பந்தப்பட்ட வரிவிதிப்பிற்காக உள்ள வரிவிகிதம் பற்றி தெளிவுரை அளிக்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் 413 இனங்களுக்கும் 2001-2002 (ஜூலை வரை) 75 இனங்களுக்கும் பிரிவு 28(A)யின்கீழ் தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது 2001-2002 நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அதிக எண்ணிக்கையிலான தெளிவுரைகள் வழங்கப்படவுள்ளன.

[2001 செப்டம்பர் 11

**10. தமிழ்நாடு வணிகர் நல வாரியம்**

வணிகர்களுக்கு உதவும் நோக்கத்துடன் 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிகர் நல வாரியம் அரசால் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் ஆகஸ்டு 2001 வரை 38,971 உறுப்பினர்கள் உள்ளனர். இவ்வாரியத்தின் தற்போதைய உறுப்பினர் கட்டணம் ரூ. 250 (ஒரு முறை மட்டும்). உறுப்பினர் கட்டணமாக இதுவரை மொத்தம் ரூ. 65.81 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. வாரியத்தின் உறுப்பினர்களுக்கு குடும்ப நலம், கல்வி, மருத்துவம் மற்றும் விபத்து நிவாரணம் போன்றவற்றிற்கு உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வணிகர் நல வாரியம் அமைக்கப்பட்டதிலிருந்து தொடக்க வைப்பு நிதியாக ரூ. 2 கோடி அரசின் பங்காக வழங்கப்பட்டுள்ளது. மேலும், இதுவரையில் ரூ. 35.49 இலட்சம் ஈடான மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் உறுப்பினர் சேர்க்கை மற்றும் உறுப்பினர் கட்டமைப்பை விரிவுபடுத்தவும் வாரியத்தின் செயல்பாடு மற்றும் நல உதவித் திட்டங்களை, தேவை அடிப்படையில் மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 11]

# இணைப்பு-III

*(146ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 32 - வீட்டுவசதி
## கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002

**1. முன்னுரை:**

1.1 மக்களின் மிகவும் இன்றியமையாத அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றினுள் உறைவிடம் என்னும் வீட்டுவசதி என்பது ஒரு அடிப்படை தேவை மட்டுமல்லாது சமூக பொருளாதார வளர்ச்சியில் ஒரு முக்கிய அங்கம் வகிப்பதாகும். எனவே, நமது அரசு ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றி முடிப்பதற்குத் தேவையான அனைத்து வகை முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. பெருகிவரும் மக்கள்தொகை மற்றும் வேலைவாய்ப்புத் தேடி நகரங்களுக்குக் குடிபெயரும் மக்களின் வீட்டுவசதித் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இத்துடன் மாறி வரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, தங்களுக்கென்று சொந்தமாக வீடு அமைத்துக் கொள்ளும் தேவையும் ஆவலும் அதிகரித்து வருகின்றபடியால் அனைத்துத் தரப்பினருக்கும் தேவையான வீட்டுவசதியை அளிப்பதற்காக, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் ஆகிய துறைகள் புதிதாக வீடுகள் கட்டுவதற்கும் மனைகள் அபிவிருத்தி செய்வதற்கும், மக்களின் வாங்கும் திறனுக்கேற்ப பல்வேறு வகையான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. மேலும் அரசு ஊழியர்களுக்கு வீட்டுவசதித் தேவையினை பூர்த்தி செய்வதற்காக குறைந்த வட்டியில் கடன் வழங்கும் திட்டமும் இடவசதி கட்டுப்பாடு திட்டத்தின் மூலம் வீடுகள் ஒதுக்கீடு செய்வதும் நடைமுறையில் உள்ளன. அரசு ஊழியர்களுக்கு வாடகை வீட்டுவசதி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் செய்யப்பட்டு வருகிறது.

**2. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்**

2.1 பொருளாதாரத்தில் நலிவுற்றோர், குறைந்த வருவாயினர், நடுத்தர வருவாயினர் மற்றும் உயர் வருவாயினர் என சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவு மக்களுடைய வீட்டுவசதித் தேவைகளையும் நிறைவு செய்வது வீட்டுவசதி வாரியத்தின் தலையாய நோக்கமாகும். மேலும்

[2001 செப்டம்பர் 11

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அனைத்து வருவாய் பிரிவினருக்கும் வேண்டிய மேம்படுத்தப்பட்ட மற்றும் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட மனைகளை வாங்கும் திறனுக்கு ஏற்ப உருவாக்கித் தருகிறது.

2.2. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சாதனைகள்

கடந்த 40 ஆண்டுகளாக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்குவதிலும் வீடுகள் கட்டுவதிலும் ஈடுபட்டுள்ளது. வீட்டுவசதி வாரியம் தனது பல்வேறு திட்டங்களின் மூலம் இதுவரை 3,91,848 குடியிருப்புகளை உருவாக்கியுள்ளது. இவற்றுள் 2,03,745 மனைகளாகும். மற்றவை வீடுகள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஆகும். மேற்குறிப்பிட்ட 2,03,745 மனைகளில் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்காக உருவாக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை 1,25,085 ஆகும்.

1960-1961-ம் ஆண்டிலிருந்து வாரியத்தின் திட்ட முதலீடு படிப்படியாக உயர்ந்து வந்துள்ளது.

2.3. தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை வீட்டுவசதித் திட்டம்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தமிழக அரசு அலுவலர்களுக்கு அவர்களின் தேவைக்கேற்ப வாடகை குடியிருப்புகளை கட்டி வருகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் 382 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை அடுக்குமாடி வீடுகள் ரூ.20.50 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2001-2002 ஆம் ஆண்டு அரசு அலுவலர்களுக்கு மொத்தம் 354 அடுக்கு மாடி வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பழைய குடியிருப்புகளுக்கு ரூ. 13.00 கோடி செலவில் சிறப்பு சீரமைப்புப் பணியினையும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் தொடங்கப்படும்.

2.4. குடிசை மாற்று குடியிருப்புகள்

தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியம் அமைக்கப்படுவதற்கு முன்பு வரை, குடிசை மாற்று குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் மாநிலம் முழுவதும் கட்டப்பட்டன. அவ்வகையில் மாவட்ட தலைநகரங்களான மதுரை, சேலம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள 9,637 குடிசைமாற்று குடியிருப்புகளை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமே தற்சமயம் பராமரித்து வருகிறது.



2001 செப்டம்பர் 11]

2.5. பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம்

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக மேம்படுத்தப்பட்ட மனைகள் சுமார் 8,600 உள்ளன. இவற்றில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 6,860 மனைகளும், வாரிய நிலவங்கித் திட்டத்தின்கீழ் 1,740 மனைகளும் உள்ளன.

மேற்படி மனைகளின் அளவு 350 சதுர அடியிலிருந்து 750 சதுர அடி ஆகும். நலிவுற்ற பிரிவினருக்கான வீட்டுமனைகள் மிகக் குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. அவை அமைந்துள்ள இடத்தைப் பொறுத்து, அவற்றின் விலை தோராயமாக ரூ.4,300/-லிருந்து ரூ. 23,000/- வரை உள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட மனைகள் ஒதுக்கீடு பெற மாதவருமானம் 'ஏ' பிரிவிற்கு ரூ. 920/-க்குள்ளும், 'பி' பிரிவிற்கு ரூ. 1,340/-க்குள்ளும் இருக்க வேண்டும். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் மேம்படுத்தப்பட்ட மனைகளைப்பெற மாத வருமானம் ரூ. 2,100/-க்குள்ளாக இருக்க வேண்டும்.

மேற்கண்ட வருமான வரம்புக்குள் வருபவரை உள்ளாட்சி அமைப்புகள் மூலம் தெரிவு செய்து, மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தவணைத் தொகைகளையும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி மனைகளில் வீடுகள் கட்டுவதற்குத் தேவையான கடன் வசதி பெற பயனீட்டாளர்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையமும் உதவி செய்யும்.

குடியிருப்புக்கான தொகையில் 10 விழுக்காடு முன் பணமாக செலுத்தி மீதமுள்ள தொகையினை 14 முதல் 20 ஆண்டுகள் வரை சம மாதத் தவணைகளில் செலுத்தலாம். 2001-2002 ஆம் ஆண்டில் ரூ. 0.12 கோடி செலவில் 562 மனைகள் நில வங்கித் திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2.6. குறைந்த வருவாய் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம்.

இத்திட்டமானது ஆண்டு வருமானம் ரூ.25,001 லிருந்து ரூ. 54,000 வரை உள்ளவர்களுக்கு பொருந்தும். இக்குடியிருப்பிற்கான தொகையில் 30 விழுக்காடு முன்பணமாக செலுத்தி மீதமுள்ள தொகையை அதிகபட்சமாக 15 ஆண்டுகளில் சம மாத தவணைகளில் செலுத்தலாம்.

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இதுவரை 91,357 குடியிருப்புகளை ரூ. 146.83 கோடி செலவில் உருவாக்கியுள்ளது. மேலும் 2001-2002ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 80 மனைகளை ரூ. 0.40 கோடி செலவில் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.7. நடுத்தர வருவாய் மற்றும் உயர்வருவாய் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம்

நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம், ஆண்டு வருமானம் ரூ. 54,001/-லிருந்து ரூ. 90,000/- வரையில் உள்ளவர்களுக்குப் பொருந்தும். இக்குடியிருப்பிற்கான தொகையில் 35 விழுக்காடு முன் பணமாக செலுத்தி மீதமுள்ள தொகையை அதிகபட்சமாக 15 ஆண்டுகளில் சம மாத தவணைகளில் செலுத்தலாம். இத்திட்டத்தின்கீழ் 2001-2002ஆம் ஆண்டில் புதிதாக 446 மனைகள்/குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும்.

உயர்வருவாய் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம், ஆண்டு வருமானம் ரூ. 90,001/-க்கு மேற்பட்டவர்களுக்கு பொருந்தும். இக்குடியிருப்புக்குரிய தொகையில் 40 விழுக்காடு முன்பணமாக செலுத்தி மீதமுள்ள தொகையை 15 ஆண்டுகளில் சம மாத தவணைகளில் செலுத்தலாம். வீட்டுவசதி வாரியம் இது வரை ரூ. 939.51 கோடி செலவில் 1,19,502 நடுத்தர மற்றும் உயர்வருவாய்ப் பிரிவினர்களுக்கு குடியிருப்புகளை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2001-2002-ல் 820 மனைகள்/குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும்.

ஒதுக்கீடுதாரர்கள் விருப்புரிமை அடிப்படையில் 15 சதவிகிதம் முன்பணம் செலுத்தி மீதமுள்ள தொகையை 15 ஆண்டு காலத்தில் சம மாதத் தவணைகளில் செலுத்தும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. இந்த வசதியைப் பயன்படுத்துபவர்களுக்கு வட்டி 1 சதவிகிதம் கூடுதலாக வசூலிக்கப்படும்.

### 2.8. அபிவிருத்தி செய்யப்பட்ட மனை-விரைவு ஒதுக்கீடு திட்டம்

மேதகு ஆளுநர் அவர்களின் சட்டமன்றப் பேரவை உரையில் அறிவிக்கப்பட்டுள்ள 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு' என்ற திட்டத்தின் நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 24,123 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் ஒதுக்கீடு செய்யத் தயாரான நிலையில் உள்ளது. இதில் 13,972 மனைகள் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழும் 10,151 மனைகள்





வீட்டுவசதி வாரியத்தின் பிற திட்டங்களின் கீழும் இந்த நிதியாண்டில் (2001-2002) விரைவு வீட்டுமனைத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 2.9. சிறிய மற்றும் நடுத்தர நகர் திட்டங்கள்

மாநிலம் முழுவதிலும் உள்ள சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீடுகளை உருவாக்கும் சிறப்புத் திட்டத்தை 1990-1991 ஆம் ஆண்டிலிருந்து தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது. மக்களின் வீட்டுவசதி தேவைகளை கண்டறிந்து அவற்றை பூர்த்தி செய்யும்வகையில் அவர்கள் குடியிருப்பதற்கு சிறிய மற்றும் நடுத்தர நகரங்களை தேர்வு செய்து அவற்றில் சில நகரங்களில் வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. சிறிய மற்றும் நடுத்தர நகர திட்டத்தின்கீழ் 68 நகரங்களில், 12,125 வீடுகளும், 11,176 மேம்படுத்தப்பட்ட மனைகளும் ரூ. 218.85 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

### 2.10. நிதி ஆதாரங்கள்

வாரியத்தால் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கான நிதி ஆதாரங்கள் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்றன:

(1) வீட்டுவசதி மற்றும் நகர அபிவிருத்தி கழகம் (ஹட்கோ)

(2) தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை வீட்டுவசதி திட்டங்களுக்கு நிதி நிறுவனங்கள் மூலம் கடன்.

(3) வீட்டுவசதி அபிவிருத்தி நிதியுதவி கழகம், தேசிய வீட்டுவசதி வங்கி, ஆயுள் காப்பீட்டுக் கழகம்.

(4) வணிக வங்கிகள்

(5) பொதுமக்களிடமிருந்து பெறப்படும் வைப்பு நிதி.

### 2.11. நடப்பு ஆண்டுத் திட்டங்கள்

தற்போதைய சந்தை நிலவரத்தைக் கருத்தில் கொண்டும், கட்டி முடிக்கப்பட்டு விற்பனையாகாமல் வீடுகள் பெருமளவில் இருப்பதைக் கருத்தில் கொண்டும் இனிமேல் வீட்டுவசதி வாரியம் மனைகள் மேம்படுத்துவதில் மட்டும் அதிக கவனம் செலுத்தி, கட்டுமானப் பணிகளை குறைத்துக் கொள்ள வேண்டும் என்று அரசு கருதுகிறது. இதன் அடிப்படையில் நடப்பு ஆண்டில் புதிய கட்டுமானப் பணிகள் எதையும் தொடங்கும் திட்டம் இல்லை. சென்ற ஆண்டுகளில்

தொடங்கப்பட்டு கட்டி முடிக்கப்படாத திட்டங்களுக்காக ரூ. 51.01 கோடி செலவிடப்படும். பின்வரும் இரண்டு மனை மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன:

1. சென்னை பாடிக்குப்பம் பகுதியில் ரூ. 100 இலட்சம் செலவில் மனை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

2. சிறிய மற்றும் நடுத்தர நகர் திட்டத்தின்கீழ் மேட்டுப்பாளையம் காரமடைப் பகுதியில் மனை மேம்பாட்டுத் திட்டம் செய்யப்படவுள்ளது.

2.12. வீட்டுவசதி வாரியத்தின் செயல்பாட்டினை கணினி மயமாக்குதல்

ஒருங்கிணைந்த சிறந்த பயன்பாடு கருதி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைமையகம், சரகங்கள் மற்றும் கோட்டங்களின் செயல்பாடுகளில் கணினிகளை பயன்படுத்தவும் அவற்றை இணைத்துச் செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கென ஒரு இணைய தளத்தினை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென கணினிகள் வாங்குதல், கணினிகளை இணைத்தல் மற்றும் தேவையான மென்பொருள் ஆகியவற்றிற்கென பகுதி-2 திட்டத்தின்கீழ் இந்நிதியாண்டில் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.13. வீட்டுவசதி வாரியத்தின் செயல்பாடுகளை மேம்படுத்துதல்:

2.13.1 வீட்டுவசதி வாரியத்தில் நேரடி பேச்சு வார்த்தை மூலம் தனியாரிடமிருந்து நிலம் வாங்குதல்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தனது திட்டங்களுக்குத் தேவையான இன்றியமையாத மூலப்பொருளான நிலத்தை நிலமெடுப்புச் சட்டத்தின் மூலம் தனியாரிடமிருந்து கையகப்படுத்தி வருகிறது. இந்த முறையின் மூலம்—

(அ) நிலம் கையகப்படுத்த அதிக காலம் பிடிக்கிறது (குறைந்தது 3 ஆண்டுகள் ஆகும்).

(ஆ) வழங்கப்படும் இழப்பீடு குறைவென்று கூடுதல் இழப்பீடு கேட்டு நிலச் சொந்தக்காரர்கள் வழக்கு தொடுக்கின்றனர்.





(இ) இந்த வழக்குகளில் எதிர்பாராத அளவிலான இழப்பீட்டுத் தொகை நீதிமன்றங்களினால் வழங்கப்படுவதால் திட்டங்களின் மதிப்பீடு மிகவும் உயர்ந்து விற்பனையைப் பாதிக்கின்றது.

(ஈ) கூடுதல் இழப்பீடு கேட்டு தொடரப்படும் வழக்குகள் நீண்ட காலம் நிலுவையில் இருப்பதால், மனைகள், வீடுகள், அடுக்குமாடி வீடுகளுக்கு கிரயப் பத்திரம் வழங்குவது தாமதமாகிறது.

(உ) நிலங்களின் விலை இறுதியாக்கம் செய்யப்பட்டு கிரயப் பத்திரங்கள் வழங்கப்பட்ட திட்டங்களில்கூட கூடுதல் இழப்பீட்டுத் தொகை ஆணையிடப்படுவதால் வாரியத்தின் நிதி நிலையில் பாதிப்பு ஏற்படுகிறது.

இவற்றைத் தவிர்க்க இனி இயன்ற அளவு நிலச் சொந்தக்காரர்களிடம் நேரடிப் பேச்சு வார்த்தை மூலம் நிலங்களை வாங்கும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

2.13.2 உயர்மட்டக் குழு

வீடு மற்றும் மனைகள் விற்பனை சந்தையில் நிலவிவரும் மந்தமான
சூழ்நிலையாலும் கட்டப்பட்ட வீடுகளை முனைப்புடன் விற்பதற்கு
நடவடிக்கை எடுக்காத காரணத்தாலும் 1996 ஆம் ஆண்டு 11,331 ஆக
இருந்த விற்கப்படாத மனைகள்/வீடுகளின் எண்ணிக்கை 2001 ஏப்ரல்
திங்களில் 32,387 ஆக உயர்ந்து உள்ளது. 1996-ல் விற்கப்படாமல் இருந்த
வீடு/மனைகளின் மதிப்பு ரூ.120.70 கோடியாகும். இது 2001-ல் ரூ.514
கோடியாக உயர்ந்து உள்ளது. நடப்பு வட்டி விகிதத்தை கணக்கிடும்போது
வட்டியாக மட்டுமே 2000-2001-ல் ரூ.134.33 கோடி வாரியத்தால்
செலுத்தப்பட்டுள்ளது. இந்நிலை நீடித்தால் வாரியம் மிகவும்
பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகிவிடும். எனவே, அவ்வாறு
ஏற்படாவண்ணம் தடுப்பதற்காக விற்கப்படாத மனைகள்/வீடுகளை
விற்பதற்கு வழிமுறைகளைக் கண்டறிந்து, விற்பனை அதிகரிக்கத்
தேவையான நடவடிக்கை எடுக்கவும், புதிய விற்பனை உத்திகளைக்
கையாளவும், வாரியத்தின் விலை நிர்ணய முறையினைத்
திருத்தியமைக்கத் தேவையான மாறுதல்களைச் செயல்படுத்துவதற்கான
பரிந்துரைகளை அளிப்பதற்கு ஓர் உயர்மட்டக் குழு மாண்புமிகு
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின்
தலைமையில் ஏற்படுத்தப்படும்.

[2001 செப்டம்பர் 11

### 2.13.3. வாரியத்தின் வட்டி சுமை - குறைப்பதற்கான நடவடிக்கை

தற்போது வாரியம் பெற்றுள்ள கடன்களின் சராசரி வட்டி விகிதம் 15. இவற்றில் பல கடன்கள் மிக அதிக வட்டித் தொகையாக 16 முதல் 20 சதவிகிதம் வரை பெறப்பட்டு உள்ளன. தற்போது உள்ள சந்தை சூழ்நிலையை கருத்திற்கொண்டு வாரியம் குறைந்த வட்டி விகிதத்திற்கு வங்கிகளிலிருந்து கடன்களை பெற்று ஏற்கெனவே அதிக வட்டி வகிதத்தில் பெறப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்படி முதல்கட்டமாக, 11.25 வட்டி விகிதத்தில் ரூ.60 கோடி இந்தியன் ஓவர்சிஸ் வங்கியிலிருந்து பெறப்பட்டு உள்ளது. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ.2.36 கோடி வட்டிச் செலவினம் குறைக்கப்படும். ஏனைய வங்கிகளிலிருந்து கடன் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.13.4. தனியாருடன் கூட்டுமுயற்சி முன்னோடித் திட்டம்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தனது செயல்திறனை அதிகரிக்கவும், மேம்பாட்டு திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தவும், தனியார் நிறுவனங்களுடன் கூட்டு முயற்சியில் ஈடுபட முடிவு எடுத்துள்ளது. இதன் முன்னோடித் திட்டமாக தற்போது வீட்டுவசதி வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள சோழிங்கநல்லூர் நில மேம்பாட்டுத் திட்டத்தில் சுமார் 50 ஏக்கர் நிலங்களைத் தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் வெற்றி பெறுமானால் இது போன்ற திட்டங்கள் பின்னாளில் செயல்படுத்தப்படும்.

### 2.14. தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய பணியமைப்பு

1981-ல் வாரியத்தில் இருந்த பணியாளர்களின் எண்ணிக்கை 2,451. அவர்களுக்கான சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவினம் ரூ.3.26 கோடி. 1991-ல் பணியாளர்களின் எண்ணிக்கை 3,533 ஆக உயர்ந்து செலவினங்களும் ரூ.14.36 கோடியாக உயர்ந்துள்ளது. 2000-2001 நிதி ஆண்டில் வாரியத்தில் இருந்த பணியாளர்களின் எண்ணிக்கை 3,453 ஆகவும், பணியாளர்களின் செலவினம் ரூ.41.55 கோடியாக உயர்ந்துள்ளது. வாரியத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மதிப்பு படிப்படியாகக் குறைந்து வந்துள்ளது. 1995-96ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் மதிப்பு ரூ.243.73 கோடி. 1996-97-ல் ரூ.248.33 கோடி. 1997-98ல் ரூ.250.04 கோடியாக உயர்ந்து பின்னர் 1998-99-ம் ஆண்டில் ரூ.184.12 கோடியாகக் குறைந்து, 1999-2000-ல் ரூ.167.35 கோடியாகக்



2001 செப்டம்பர் 11]

குறைந்து, இறுதியாக 2000-2001-ல் ரூ.127.42 கோடியாகக் குறைந்து வந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம், வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகளை விற்பனை செய்யாததே ஆகும். எனவே இந்நிலையில் வீடு மற்றும் மனை விற்பனைச் சந்தை, தற்போது உள்ள நிலையில் ஆண்டுக்கு ரூ.100 கோடிக்கு மேல் வாரியத்தால் திட்டங்களை செயல்படுத்துவது இயலாத காரியம். எனவே வாரியத்தில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை முறைப்படுத்துதல் அவசியம் ஆகும். வாரியத்தின் பணிகளுக்கு ஏற்ப, அடுத்த சில ஆண்டுகளுக்கு வாரியத்திற்குத் தேவையான பணியாளர்களின் அளவினை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

3.1. கிராமப்புறங்களில் வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ள மக்கள் வேலை வாய்ப்பு மற்றும் போதிய வருமானம் வேண்டி கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்பகுதிக்கு குடிபெயர்ந்தவண்ணம் உள்ளனர். இவ்வாறு நகரங்களுக்கு குடிபெயரும் மக்களிடம் தங்கள் வாழ்க்கையை நடத்த போதிய திறனோ வருமானமோ இருப்பதில்லை. இம்மக்கள் சேவைப் பிரிவுகளில் பணிபுரிவதன் காரணமாக அதன் மூலம் கிடைக்கப்பெறும் குறைந்த வருவாயினைக் கொண்டு தங்கள் செலுத்தும் திறனுக்கேற்ப வீட்டுவசதியை ஏற்படுத்திக்கொள்ள இயலாத காரணத்தால் அவர்கள் தாங்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகில் உள்ள அரசு மற்றும் தனியார் வெற்று நிலங்களை ஆக்கிரமித்து குடிசைகள் அமைத்து வாழ்ந்து வருகின்றனர். இதுபோன்ற குடியமைப்புகள் கழிவு நீர் வெளியேற்றும் வசதியின்மை காரணமாக சுகாதாரமற்ற சூழ்நிலையில் தற்காலிக குடிசைகளாக அமைந்துள்ளன. இவ்வாறு குடிசை போடுவதற்கும் வசதியில்லாத ஏழை மக்களில் பெரும்பாலோர் நடைபாதை ஓரங்களில் வசித்துவருகின்றனர். இவ்வாறு பெருகி வரும் குடிசைப் பகுதிகளைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தி அவர்களுக்கு தக்க மாற்று குடியிருப்புகள் அடிப்படை வசதிகளுடன் அமைத்துத் தருவதே 1970-ம் வருடம் தொடங்கப்பட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மிகப்பெரிய நோக்கமாகும்.

### 3.2. குறிக்கோள்கள்

(அ) நகர்ப்பகுதிகளில் வெள்ளத்தால் [illegible]க்கப்படும் மற்றும் அபாயகரமான பகுதிகளில் வாழ்ந்துவரும் குடிசை[illegible]ழ் குடும்பங்களைத்

[2001 செப்டம்பர் 11

தூய்மையான சுற்றுப்புறச்சூழலுடன் நகருக்கு அருகில் அடிப்படை வசதிகளுடன் கூடிய இடத்தில் மாற்றுக் குடியமர்த்துதல்.

(ஆ) தனியார் குடிசைப்பகுதிகளில் வாழ்ந்துவரும் வாடகைதாரர்களுக்கு பாதுகாப்பு அளித்தல்.

(இ) அனைத்துக் குடிசைப்பகுதிகளுக்கும் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாலை, மழைநீர்க் கால்வாய், பொதுக்கழிப்பிடங்கள், கழிவு நீர் வெளியேற்ற வசதி மற்றும் தெரு மின்விளக்குகள் அமைத்தல்.

3.3 குடிசைகள் பற்றிய கொள்கைகள்

(அ) நகர்ப்பகுதிகளில் சுகாதாரமற்ற நெரிசலான இடங்களில் அமைந்துள்ள குடிசைப்பகுதிகளை மாற்றி அவ்விடங்களில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்.

(ஆ) கள மேம்பாட்டுப்பணிகளை மேற்கொள்வதற்கேற்றவாறு அமைந்துள்ள குடிசைப்பகுதிகளை தேர்வு செய்து அவற்றில் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் அமைத்தல்.

(இ) மாடிக்குடியிருப்புகள் அல்லது கள மேம்பாட்டுப்பணிகள் அமைக்க இயலாத இடங்களில் மேம்படுத்தப்பட்ட மனைகள்/ குடியிருப்புகள் அருகில் உள்ள இடங்களில் அமைத்து மாற்றுக்குடியமர்த்தும் முறையினை பின்பற்றுதல், இந்த அணுகுமுறையின் கீழ் ஏற்படும் மேம்பாட்டு செலவினம் குடிசைவாழ் மக்கள் செலுத்தும் திறனுக்கேற்ப நிர்ணயிக்கப்படும்.

(ஈ) குடிசைப்பகுதி வாழ் மக்களை குடிசைப்பகுதி மாற்று மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுத்துதல்.

(உ) குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு ஓர் உன்னதமான வீட்டினை அவர்கள் செலுத்தும் திறனுக்கேற்ப அமைத்தல்.

(ஊ) குடிசைப்பகுதிகளில் ஏற்படும் பிரச்சினைகளை சமாளிக்க வேண்டிய அவசரத் தேவையினையும் வரையறுக்கப்பட்டுள்ள நிதி ஆதாரத்தினையும் கருத்தில்கொண்டு குடிசைமாற்று மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுப்பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.



2001 செப்டம்பர் 11]

மேற்கண்ட கொள்கைகளை திட்டங்களாக வடிவமைக்க தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் கீழ்க்காணும் கோட்பாடுகளை கடைபிடித்து வருகிறது:

(அ) நகரங்களில் நெரிசல் மிக்க சுகாதார குறைவான பகுதிகளில் குடிசைகளில் வாழும் குடும்பங்களை அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அமைத்து அவ்விடங்களிலேயே குடியமர்த்துதல்.

(ஆ) குடிசைப்பகுதிகளில் குறிப்பிடத்தக்க அடிப்படை வசதிகளுடன் மேம்படுத்தப்படுவதுடன் நில உரிமம் வழங்கப்பட்டு அப்பகுதிகள் நல்ல உறைவிடமாக அமைக்கப்படும்.

(இ) நகரங்களில் மேம்பாட்டுப்பணிகளுக்குரிய இடங்களான சென்னை துரிதப் போக்குவரத்துத் திட்டத்தடங்கள், சாலையின் மருங்குகள், நடைபாதைகள், நீர்நிலைகள் போன்ற இடங்களில் ஆக்கிரமித்துள்ள குடிசைவாழ் குடும்பங்களை நகருக்கு அருகில் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மாற்றி குடியமர்த்துதல்.

அரசின் நிர்வாக இயந்திரமாகச் செயல்படும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் குடிசைப்பகுதிகளுக்கான கொள்கைகளை நிறைவேற்றி வருகிறது. இவ்வாரியம், ஒரு தலைவர், ஒரு நிர்வாக இயக்குநர் மற்றும் பல்வேறு அரசுக் துறையினைச் சார்ந்த 10 உறுப்பினர்களைக் கொண்டு நிர்வகிக்கப்படுகிறது. குடிசைவாழ் மக்களின் துயர் துடைக்கும் வகையில் அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தும் நோக்குடன் கீழே கூறப்பட்டுள்ள திட்டங்களை இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது :

3.3.1. குடிசைப்பகுதி மாற்றுத் திட்டம்

சென்னை நகரில் மொத்த மக்கள் தொகையில் 35 சதவிகிதத்திற்கு மேலானோர் குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் 50 சதவிகிதத்தினர் நெரிசலான குடிசைப்பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதிகள் தேவையான குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் இன்றி அமைந்திருப்பதுடன் ஒரு குடிசை இரண்டு அல்லது மூன்று குடும்பங்களால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதுபோன்ற குடியமைப்புகள் அடிக்கடி தீ விபத்துக்கள் மற்றும் பருவகால வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்படுகின்றன. இந்நெரிசலான குடிசைப்பகுதிகளில் கள மேம்பாட்டுப்பணிகள் அமைக்க இயலவில்லை. எனவே நெரிசலான பகுதிகளில் வாழும் இக்குடும்பங்களை

[2001 செப்டம்பர் 11

அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து மாற்றிக் குடியமர்த்த தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது.

போதிய அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிவு நீரகற்று வசதி, சாலைகள் மற்றும் தெரு மின்விளக்குகள் ஆகியவற்றுடன் கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல் குடிசைப்பகுதி மாற்றுத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. தகுதி வாய்ந்த குடிசைவாழ் குடும்பங்கள் கணக்கெடுக்கப்பட்டு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்படுவதுடன் கட்டுமான காலத்தில் அவர்கள் அருகில் தற்காலிகமான குடிசைகள் அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். இதன் மூலம் கிடைக்கும் வெற்று நிலத்தில் போதிய அடிப்படை வசதிகளுடன் கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்படுகின்றன. இவ்வாறு கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் முன்பு அப்பகுதியில் உண்மையாக வாழ்ந்து வந்த குடிசைவாழ் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் அனைத்துக் குடும்பங்களுக்கும் தேவையான அளவில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் அடுக்குமாடிக்குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 13 விழுக்காடு வட்டியுடன் 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் கடனாக ஹட்கோ நிதி நிறுவனத்திடம் இருந்து திட்ட மதிப்பீட்டில் 70 விழுக்காடு நிதி உதவி பெறப்படுகிறது. மீதமுள்ள 30 விழுக்காடு தொகை தமிழக அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. தற்போது ஒரு குடியிருப்பிற்கான கட்டுமானச் செலவு ரூபாய் 1.50 இலட்சமாகும். இக்குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு முடிந்தவுடன் தற்காலிகமாக குடிசைவாழ் மக்களால் அமைக்கப்பட்ட குடிசைகள் அகற்றப்படுவது குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் உறுதி செய்யப்படுகிறது. அடுக்குமாடிக் குடியிருப்புகள் உரிய ஆவண ஆதாரங்கள் கொண்டுள்ள குடிசைவாழ் குடும்பங்களுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் இதுவரை 68,310 அடுக்குமாடிக் குடியிருப்புகளை கீழே கூறப்பட்டுள்ள மாநகரங்களிலும் மற்ற நகரப்பகுதிகளிலும் ரூபாய் 251.95 கோடி செலவில் கட்டியுள்ளது.



2001 செப்டம்பர் 11]

| வரிசை எண் | மாநகரம் அல்லது நகரத்தின் பெயர். | கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | சென்னை | 60,580 |
| 2 | ஈரோடு | 1,882 |
| 3 | கும்பகோணம் | 206 |
| 4 | திருச்சிராப்பள்ளி | 927 |
| 5 | மதுரை | 604 |
| 6 | சேலம் | 1,472 |
| 7 | கோயம்புத்தூர் | 820 |
| 8 | கரூர் | 256 |
| 9 | சங்கரன்கோயில் | 48 |
| 10 | தூத்துக்குடி | 160 |
| 11 | திருநெல்வேலி | 704 |
| 12 | நாகப்பட்டினம் | 117 |
| 13 | தஞ்சாவூர் | 294 |
| 14 | திருப்பூர் | 240 |
| | மொத்தம் .. | **68,310** |

3.3.2. நகர குடிசைப்பகுதிகளில் சுற்றுப்புறங்களை மேம்படுத்துதல்

நிதிப் பற்றாக்குறையின் காரணமாக அனைத்து நகர்ப்புற குடிசைப்பகுதிகளிலும் வீட்டுவசதித் திட்டங்களை செயல்படுத்த இயலவில்லை. சுகாதாரமற்ற குடிசைப்பகுதிகளின் பொதுவான சுற்றுப்புற சூழ்நிலையினை மேம்படுத்த தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் உத்வேகத்துடன் செயல்படுகிறது. ஓர் இடத்தினை ஒரு நல்ல உறைவிடமாக மாற்ற உள்ளது-உள்ளபடி நிலையில் ஒரு குடும்பத்திற்கு சராசரி செலவினமாக ரூ.2,000 வீதம் அடிப்படை வசதிகளான குடிநீர்

[2001 செப்டம்பர் 11

**3.3.7. குடிசைவாழ் குடும்பங்களுக்கு தீப்பிடிக்காத கூரை வீடுகள் அமைத்தல்**

நகர குடிசைப்பகுகளில் வாழும் குடும்பங்கள் அடிக்கடி ஏற்படும் தீ விபத்தினால் ஏற்படக்கூடிய உயிர் மற்றும் பொருட்சேதங்களை தடுக்க தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் சுற்றுச்சுவர்களுடன் கூடிய கல்நார் ஓட்டுக்கூரை வீடுகள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில் உள்ள குடிசைப்பகுதிகளில் சுற்றுச்சுவர்களுடன் கூடிய கல்நார் தகடு கூரை வீடுகள் அமைக்கும் பணிகள் இதுவரை 39,017 குடிசைவாழ் குடும்பங்களுக்கு ரூபாய் 47.96 கோடி செலவில் அமைத்து முடிக்கப்பட்டுள்ளது.

**3.3.8. தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

திருச்சி நகரில் 1999-ம் ஆண்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 2,000 குடிசைவாழ் குடும்பங்களுக்கு ரூபாய் 2.711 கோடி செலவில் கல்நார் ஓட்டு வீடுகள் அமைக்க திட்டமிடப்பட்டு இதுவரை 1,240 குடிசைவாழ் குடும்பங்களுக்கு ரூபாய் 1.56 கோடி செலவில் வீடுகள் அமைத்து முடிக்கப்பட்டது. இதற்கான செலவினம் அரசால் தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபாய் 2.711 கோடி நிதியுதவியிலிருந்து திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டது. மீதமுள்ள குடும்பங்களுக்கு நடப்பு நிதியாண்டில் (2001-2002) பணிகள் அமைத்து முடிக்கப்படும்.

**3.4. 2001-2002 ஆண்டிற்கான திட்டங்கள்**

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 2001-2002ஆம் ஆண்டில் கீழே கூறப்பட்டுள்ள திட்டங்களை நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது :—

**3.4.1. குடிசைப்பகுதி மாற்று திட்டம்**

டுபிட்கோ நிறுவன கடன் வசதியுடன் சென்னை சுதந்திரா நகரில் ரூ.713.32 இலட்சம் செலவில் 576 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படும். கடனை வட்டியுடன் திருப்பி செலுத்துவதற்கு அரசு மானிய உதவி வழங்கும்.



2001 செப்டம்பர் 11]

**3.4.2. நகர குடிசைப்பகுதிகளில் சுற்றுப்புற மேம்பாட்டுத்திட்டம்**

குடிசைப்பகுதிகளின் மேம்பாட்டுப் பணிகளான சாலைகள், தெரு விளக்குகள், பொது குடிநீர் குழாய்கள், கழிப்பறைகள் போன்ற பணிகள் குடும்பம் ஒன்றுக்கு ரூபாய் 2,000 செலவில் நகர குடிசைப்பகுதிகளில் வாழும் 30,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.6.00 கோடி செலவில் அமைக்கப்படும்.

**3.4.3. ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைவாழ் குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல்—10-வது நிதிக்குழுவின் சிறப்பு மானியம்**

சென்னை நகரில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசை வாழ் குடும்பங்களை மறு குடியமர்வு செய்யும் திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் மைய அரசின் 10-வது நிதிக்குழுவினரால் வழங்கப்பட்ட சிறப்பு மானியத்தினைக் கொண்டு சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 1,624 குடியிருப்புகள் கட்டப்படும். ரூபாய் 14.00 கோடி செலவிடப்படும் இத்திட்டப்பணிகளுக்காக 2001-2002ஆம் நிதியாண்டில் ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.4.4. வெள்ளக்குறைப்புப் பணிகள்—குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்காக வீடுகள் கட்டுதல்**

சென்னை நகரில் செல்லும் முக்கிய நதிகளில் தூர் வாருதல் மற்றும் மழை நீர் வடிகால் அமைப்புகளை மேம்படுத்தும் திட்டத்தின் ஓர் அங்கமாக இந்நதிக்கரைகளில் வாழும் குடிசைவாழ் குடும்பங்களை நகருக்கருகே குடியிருப்புகள் அமைத்து மறு குடியமர்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் ஒக்கியம் துரைப்பாக்கத்தில் இதுவரை 984 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2001-2002 ஆண்டில் மேலும் 1,312 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டிமுடிக்கப்படும். இத்திட்டப்பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரசு மானியம் ரூ.11.25 கோடி இந்நிதியாண்டில் செலவிடப்படும்.

**3.4.5. 11-வது நிதிக்குழுவின் சிறப்பு மானியம்—பெருநகரங்களில் குடியிருப்புகள் அமைத்தல்**

தமிழகத்திலுள்ள சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய பெருநகரங்களில் குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களை மறு குடியமர்வு

செய்ய மைய அரசின் 11-வது நிதிக்குழு சிறப்பு மானியமாக ரூபாய் 49.00 கோடி வழங்கியுள்ளது. இந்நிதியுதவியினைக் கொண்டு மேற்கூறப்பட்ட பெருநகரங்களில் குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களை று குடியமர்வு செய்ய மூன்றாண்டு குடியிருப்புகள் அமைக்கப்படும். இத்திட்டப்பணிகள் நடப்பு நிதியாண்டில் (2001-2002) தொடங்கப்பட்டு ரூ.4.00 கோடி செலவிடப்படும்.

**3.4.6.** தமிழ்நாடு சிறப்பு நல நிதி—சென்னையில் உள்ள குடிசைவாழ் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டுதல்

சென்னை மாநகராட்சி வட்ட எண் 40-ல் உள்ள வாசுகி நகர் பகுதியில் 64 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும். இத்திட்டப்பணிகளுக்காக நடப்பு நிதியாண்டில் ரூபாய் 45.00 இலட்சங்கள் தமிழ்நாடு சிறப்பு நல நிதியிலிருந்து பெற்று செலவிடப்படும்.

**3.4.7.** குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு கல்நார் தகடுகளாலான கூரைகள் அமைத்தல்

சென்னை, மதுரை, கோவை, சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில் உள்ள குடிசைப்பகுதிகளில் சுற்றுச்சுவருடன் கூடிய கல்நார் தகடுகளாலான கூரைவீடுகள் அமைக்கும் பணிகளின் சென்ற ஆண்டின் (2000-2001) தொடர் திட்டமாக மீதமுள்ள 6,600 குடும்பங்களுக்கு 2001-2002-ல் ரூபாய் 9.90 கோடி செலவில் அமைத்து முடிக்கப்படும். மேலும் இத்திட்டத்தில், ஹட்கோ நிதியுதவியில் உள்ள சேமிப்பை பயன்படுத்தி சென்னையில் 3,200 மங்களூர் ஓட்டுக்கூரை வீடுகளும் மற்ற மாநகராட்சிப் பகுதிகளில் 980 வீடுகளும் கட்டப்படும். விடுமிகு தொகைக்காக அரசு மானியம் ரூபாய் 67.50 இலட்சங்கள் செலவிடப்பட்டு மீதித்தொகை ஹட்கோவிடமிருந்து கடனாகப் பெறப்படும்.

**3.4.8.** தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

திருச்சி மாநகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 2,000 குடும்பங்களில் சென்ற நிதியாண்டில் 1,240 குடும்பங்களுக்கு ரூபாய் 1.56 கோடி செலவில் சுற்றுச்சுவர்களுடன் கூடிய கல்நார் ஓட்டு கூரை வீடுகள் அமைக்கப்பட்டது. மீதமுள்ள 760 குடும்பங்களுக்கு ரூபாய் 1.15 கோடி செலவில் நடப்பு நிதியாண்டில் பணிகள் அமைத்து முடிக்கப்படும்.





**3.4.9.** குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளுக்கு பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள்

இந்நிதியாண்டில் பகுதி 2 திட்டத்தின்கீழ் சென்னை நகரில் கடற்கரைக்கு அருகில் கட்டப்பட்டுள்ள குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் 1,848 குடியிருப்புகளுக்கு சிறப்பு பழுதுபார்ப்புப்பணிகள் மேற்கொள்ளப்படும். அரசு இதற்கென ரூ.25.00 இலட்சம் ஒதுக்கியுள்ளது. மேலும் ஹட்கோ கடனுதவியுடன் மாநிலத்தில் உள்ள குடிசைமாற்று வாரிய குடியிருப்புகளில் சிறப்புப் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**3.4.10.** வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி திட்டம்:

குடிசைப்பகுதி மாற்று வாரிய குடியிருப்புகளில் வசிக்கும் 10,000 இளம் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு பகுதி-2 திட்டத்தின்கீழ் 2001-2002ஆம் நிதி ஆண்டில் தையல், செவிலியர் உதவி தனிப் பயிற்சி, கணினி பயிற்சி, வாகனம் ஓட்டுதல் போன்ற வேலைவாய்ப்பு அதிகம் உள்ள பயிற்சி வழங்க சமுதாய மேம்பாடு-சீரமைப்பு பயிற்சி திட்டத்திற்கு ரூபாய் 50.00 இலட்சத்தினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**3.5.** வருங்காலத் திட்டங்கள்

**3.5.1.** நகராட்சி எல்லைக்குள் வரும் நகர்ப்புற குடிசைப்பகுதிகளில் அடிப்படை வசதிகளுடன் கூடிய மங்களூர் ஓடுகள் பொருத்தப்பட்ட வீடுகள் கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது.

**3.5.2.** மத்திய அரசின் தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறப்பட்டு அனைத்து நகர்ப்புற குடிசைப்பகுதிகளிலும் வீடுகள் கட்டித்தர படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**4. கூட்டுறவு வீட்டுவசதி**

**4.1.** கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்

ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற குறிக்கோளினை நிறைவேற்றுவதில் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவற்றின் மூலம் கிராமப்புற வட்டார மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு அவர்கள் விரும்பத்தக்க வகையில் அவர்களின் திறனுக்கேற்ப வீடுகள் கட்டுவதற்கு தேவையான

[2001 செப்டம்பர் 11

வீட்டுவசதிக் கடன் சுலபத் தவணையில், குறைந்த வட்டியில்
வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி கடன் வசதி வழங்க 837
தொடக்கநிலை கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களும், வட்ட அளவில்
196 கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களும், ஆக மொத்தம் 1,033 கூட்டுறவு
வீட்டுவசதிச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 744
வீட்டுவசதிச் சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி
இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ள சார்புச் சங்கங்களாகும்.
செயல்படாத 38 நகர்ப்புறச் சங்கங்களை கலைப்பதற்கு
உத்தரவிடப்பட்டுள்ளது. 1,033 பிரதம கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில்
289 சங்கங்கள் இணையத்துடன் இணைக்கப்படவில்லை. இவற்றுள் 50
சங்கங்கள் திறம்பட செயல்படுகின்றன. திறம்பட செயல்படாத 239
சங்கங்களில் 22 சங்கங்களை அருகில் உள்ள திறம்பட செயல்பட்டுக்
கொண்டிருக்கும் சங்கங்களுடன் இணைக்கவும், மீதமுள்ள 217
சங்கங்களை கலைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
அடிப்படை வசதிகளுடன் கூடிய வீட்டுமனைகள் உறுப்பினர்களுக்குக்
கிடைக்க மனைப் பிரிவுகளை உருவாக்குதல் மற்றும் புதிய வீடுகள்
கட்டுவதற்கு நிதியுதவி வழங்குதல் போன்றவையே கூட்டுறவு வீட்டுவசதிச்
சங்கங்களின் முக்கிய நோக்கங்களாகும்.

### 4.2. மேலாண்மை

கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில் பாரபட்சமற்ற
மேலாண்மையினை உறுதி செய்யும் பொருட்டு அனைத்து தொடக்க
நிலை கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில் 25-5-2001 முதல் தனி
அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மக்களாட்சி கோட்பாடுகளின்படி
விரைவில் இச்சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டு
தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளிடம் சங்க நிர்வாகம் ஒப்படைக்கப்படும்.

### 4.3. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தமிழ்நாட்டிலுள்ள
அனைத்து கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்கு ஒருங்கிணைப்பு
நிறுவனமாக இருப்பதால் சார்புச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு
வீடுகள் கட்டத் தேவைப்படும் நிதியுதவியை திரட்டித் தருகிறது.
வீட்டுவசதி கடன் வழங்க மாநில வீட்டுவசதி இணையத்திற்கு
தேவைப்படும் நிதியாதாரங்கள், தமிழ்நாடு அரசு, ஆயுள் காப்பீட்டுக்
கழகம், ஹட்கோ நிறுவனம், தேசிய வீட்டுவசதி வங்கி, வீட்டுவசதி
மேம்பாட்டு நிதிக் கழகம், வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகள்



2001 செப்டம்பர் 11]

ஆகியவற்றிடமிருந்து அரசு பொறுப்புறுதியின் பேரில், பெறப்படுகின்றன.
தொடக்க காலத்திலிருந்து, இணைக்கப்பட்ட சார்புச் சங்கங்களுக்கு
இதுவரை 10,11,436 வீடுகள் கட்ட ரூ.3,359.06 கோடி கடனுதவி
அளிக்கப்பட்டுள்ளது. தேசிய அளவில் கடனுதவி அளிப்பதில் தமிழ்நாடு
கூட்டுறவு வீட்டுவசதி இணையம் முதலாவது இடத்தில் தேர்வு
செய்யப்பட்டு பரிசும் பெற்றுள்ளது.

### 4.4. 2000-2001ஆம் ஆண்டில் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

#### 4.4.1 பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான ஊரக வீட்டுவசதித் திட்டம்

திட்ட ஆரம்ப காலத்திலிருந்து இது வரை இத்திட்டத்தின்கீழ்
பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மக்களுக்கு மொத்தம் ரூ.409.99
கோடி நிதியதவி வழங்கப்பட்டு 6,27,108 வீடுகள் கட்டி
முடிக்கப்பட்டுள்ளன.

#### 4.4.2. கிராமப்புறங்களில் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம்

இத்திட்டத் துவக்கத்திலிருந்து இதுவரை 77,678 வீடுகள் கட்டி
முடிக்க ரூ.393.52 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 2000-2001ஆம் நிதி
ஆண்டில் மட்டும் குறைந்த வருவாய பிரிவில் 6,818 வீடுகளும் நடுத்தர
வருவாய்ப் பிரிவில் 3,072 வீடுகளும் கட்ட முறையே ரூ.51.52 கோடி
மற்றும் ரூ.45.21 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

#### 4.4.3. நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம்

2000-2001ஆம் நிதி ஆண்டில் 20,821 நகர்ப்புற பயனீட்டாளர்களுக்கு
புதிய வீடுகள் கட்ட ரூ.361.35 கோடி கடன் வழங்கப்பட்டது. நகர்ப்புற
கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் இதுவரை 2,73,226 வீடுகள்
கட்ட ரூ.2,331.52 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

#### 4.4.4. நகர்ப்புறங்களில் வசிக்கும் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை எளியோருக்கான திட்டம்

இத்திட்டத்தின்படி இதுவரை நகர்ப்புறம் மற்றும் அதைச் சுற்றியுள்ள
பகுதிகளில் வசிக்கும் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை எளியோர்

[2001 செப்டம்பர் 11

25,585 பேர் சொந்தமாக வீடு கட்டிக்கொள்ள ரூ.59.64 கோடி கடன் வழங்கப்பட்டது. இதில் 2000-2001ஆம் ஆண்டில் 5,900 வீடுகள் கட்ட ரூ.14.73 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

### 4.4.5. வீடுகள் புதுப்பித்தல் மற்றும் விரிவாக்கம்

1998-99 முதல் பழைய வீடுகளை புதுப்பிக்கவும் மற்றும் விரிவாக்கம் செய்யவும், ஹட்கோ நிறுவன நிதியுதவியுடன் ஒரு வீட்டிற்கு அதிகபட்சமாக ரூ.1,00,000 வீதம் கடனுதவி வழங்கப்படுகிறது. இந்த முன்னோடி திட்டத்தின் மூலம் 2000-2001ஆம் நிதியாண்டில் 441 வீடுகளை புதுப்பித்து விரிவாக்கம் செய்ய ரூ.2.83 கோடி கடன் வழங்கப்பட்டது. இதுவரை இத்திட்டத்தில் 58,436 வீடுகளை புதுப்பிக்கவும், விரிவாக்கம் செய்யவும் மொத்தம் ரூ.44.07 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 4.5. 2001-2002 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

வீட்டுவசதி தேவையில் ஒரு பெரும் பகுதியினை கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் ஈடு செய்யும் பொருட்டு 2001-2002ஆம் ஆண்டில் திட்டப் பணிகளுக்கான முதலீட்டுத் தொகை ரூ.362.50 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| (அ) பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் | 62.50 |
| (ஆ) நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம் | 300.00 |
| மொத்தம் | **362.50** |

4.5.1. பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களுக்கு 25,000 வீடுகள் கட்ட ரூ.62.50 கோடி செலவிடப்படும். இதில் ரூ.12.50 கோடி அரசு மானியமாகவும், ரூ.37.50 கோடி ஹட்கோ நிதிநிறுவனத்திடமிருந்து அரசு காப்புறுதியின் பேரில் கடனாகவும் மற்றும் ரூ.12.50 கோடி பயனீட்டாளர்களின் பங்காகவும் இருக்கும்.



2001 செப்டம்பர் 11]

4.5.2. நகர்ப்புற வீட்டுவசதி திட்டத்தின்கீழ் 2001-2002ஆம் ஆண்டில் 25,000 வீடுகள் கட்ட ரூ.300 கோடி கடனுதவி வழங்கப்படும்.

### 4.6. மண்டல அலுவலகங்களின் பணியினை கணினிமயமாக்குதல்

வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் துறையின் கட்டுப்பாட்டில் 11 மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர்கள் (வீட்டுவசதி) பணியாற்றி வருகின்றனர். மண்டல அலுவலகப் பணியினை ஒழுங்குபடுத்தும் வகையிலும், அரசு கேட்கும் விவரங்களை உடனுக்குடன் அனுப்பி வைக்க ஏதுவாகவும் கோயம்புத்தூர், தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய மண்டலங்களில் உள்ள துணைப் பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகங்களுக்கு கணினி இயந்திரங்கள் வாங்குவதற்கென பகுதி-2 திட்டத்தின்கீழ் இந்நிதியாண்டில் ரூ.1.50 இலட்சத்தினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## 5. அரசு அலுவலர்களுக்கு வீடுகட்ட முன்பணம்

5.1. அரசு அலுவலர்களுக்கு வீடுகட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கு அதிக பட்சமாக ரூபாய் 7.50 இலட்சமும், மாநில அரசு அலுவலர்களுக்கு அதிகபட்சமாக ரூபாய் 6.00 இலட்சமும் வீடுகட்ட முன்பணமாக வழங்கப்படுகின்றன. இந்த முன்பணம் கீழ்க்கண்ட இனங்களுக்கு வழங்கப்படுகின்றன:

1. வீட்டுமனை வாங்கி வீடு கட்டுதல்.
2. கட்டுமானப்பணி.
3. தயார்நிலை [அடுக்குமாடி குடியிருப்பு/வீடு (தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்)]
4. தயார்நிலை அடுக்குமாடி குடியிருப்பு/வீடு (தனியார்)
5. கட்டிய வீட்டை விரிவாக்குதல்.
6. கட்டிய வீட்டை மேம்படுத்துதல்.

5.2. 2001-2002ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்தில் வீடு கட்ட முன்பணம் ரூபாய் 100.20 கோடி கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:-

| அரசு அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1. இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் | 2.20 |
| 2. தலைமைச் செயலக அலுவலர்கள் | 7.50 |
| 3. பிற அரசு ஊழியர்கள் | 80.50 |
| 4. ஊராட்சி ஒன்றியப்பணி ஆசிரியர்கள் | 10.00 |
| மொத்தம் | 100.20 |

## 6. இடவசதிக் கட்டுப்பாடு

6.1. தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம் 1960, குடியிருப்பு மற்றும் குடியிருப்பில்லாத கட்டிடங்களை வாடகைக்கு விடுவதை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அவற்றிற்கான வாடகைகளை கட்டுப்படுத்தவும் குடியிருப்பவர்களை நியாயமற்ற முறையில் வீட்டின் உரிமையாளர்களால் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாக்கும் நோக்கத்துடனும் இயற்றப்பட்டது.

இச்சட்டத்தின்கீழ் சென்னை மாநகரில் மாவட்ட ஆட்சியரும், தமிழ்நாட்டின் ஏனைய மாவட்டங்களில் கோட்ட ஆட்சியாளர்களும் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளாவர். இச்சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட கட்டிடங்கள் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் மாநில அரசு அலுவலர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

குடியிருப்பவர்களும், வீட்டின் உரிமையாளர்களும் எதிர்நோக்கும் சில நடைமுறை இடர்பாடுகளை கருத்தில்கொண்டு தற்போதுள்ள சட்டத்தில் விரிவான திருத்தங்களைச் செய்வதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.





# இணைப்பு-IV

*(146-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண் 33—நகர்ப்பகுதி வளர்ச்சி**
**கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002**

## 1. முன்னுரை

1.1. நகரங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது என்பது ஒரு உலகளாவிய நிகழ்வாக அமைந்துள்ளது. மேலும் அவ்வாறான நகர்மயமாதல் குறிப்பாக வளரும் நாடுகளில் பல்வேறு வகைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. வேளாண்மை சாரா வேலைவாய்ப்புள்ள பெரிய நகர மையங்களுக்கு கிராமப்புறங்களிலிருந்து மக்கள் குடிபெயர்ந்து வருவதால் இந்தியாவைப் போன்ற பெரும்பாலான வளரும் நாடுகளில் மிக விரைவான நகர்மயமாதல் நிகழ்கிறது. இதன் காரணமாக நகரங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் இக்கட்டிற்குள்ளாவதால் நகரங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரம் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகிறது.

1.2. நமது நாட்டில் நகர்மயமாதலின் முன்னேற்ற வேகம் தடுமாற்றத்துடன் கூடியதாகவே உள்ளது. தமிழ்நாட்டில் 1931-ல் 42.3 இலட்சமாக இருந்த நகர்ப்புற மக்கட்தொகை 1991-ல் 191 இலட்சமாக உயர்ந்துள்ளது. தமிழ்நாடு மாநிலம் மக்கட்தொகை அடர்த்தியைப் பொறுத்தமட்டில் நாட்டின் ஐந்தாவது அதிக மக்கட்தொகை அடர்த்தியுடைய மாநிலமாக அமைந்துள்ளது.

1.3. 1991-ல் எடுக்கப்பட்ட ஒட்டுமொத்த கணக்கின்படி நமது நர்ட்டில் ஒரு மனிதனுக்கு கிடைக்கக்கூடிய நிலப்பரப்பளவு 0.50 ஹெக்டேர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் நமது மாநிலத்தில் இவ்விகிதாச்சாரம் ஒரு மனிதனுக்கு 0,20 ஹெக்டேர் என மிகக் குறைந்த அளவில் உள்ளது. நமது நாட்டில் நகர்ப்புற மக்கட்தொகை நாடு முழுவதிலும் ஒரே சீராக பரவியிராமல் குறிப்பிட்ட பெரு நகரங்களிலும் மாநில தலைநகரங்களிலும் மட்டுமே மக்கட்தொகை மிக அதிகமாக உள்ளது. நமது மாநிலத்தில் நகர்ப்புற ம[illegible]கட்தொகை அதிக அளவிலான 34 விழுக்காடாக அ[illegible]ருந்தபோதிலும், [illegible]ண்ணம் அமைந்த கிராமப்பகுதிகளுக்கு நகர்ப்புற வசதிகள் வழங்கு[illegible] பெரிய அளவிலான நகர்ப்புற மையம் ஒன்று கூட இல்லாத நிலையில்

சில வட்டங்களும் தமிழ்நாட்டில் உள்ளன. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் செய்யப்படவேண்டிய முதலீடுகள் அனைத்தையும் பெரு நகரங்களுக்கே ஒதுக்கீடு செய்து, தவறான முதலீட்டுக் கொள்கை பின்பற்றப்படுவதால்தான் கிராமப்புறங்களிலிருந்தும், சில நகர்ப்புறங்களிலிருந்தும் பெரு நகரங்களுக்கு மிகப் பெரிய அளவிலான குடிபெயர்தல்கள் நடைபெறுகின்றன என்று நகர்மயமாதல் பற்றி அமைக்கப்பட்ட தேசியக் குழுமம் (National Commission on Urbanisation) தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. நகரங்களுக்கான முதலீடுகளை முறைப்படுத்துவதே இதுபோன்ற பிரச்சினைகளுக்கான தீர்வாக அமையும்.

## 2. நகர்ப்புற வளர்ச்சிக்கான நெறிமுறைகள்

*2.1.* மாநிலத்தின் நகர்ப்புற வளர்ச்சிக்கான நெறிமுறைகள் பற்றி தயாரிக்கப்பட்டுள்ள வரைவு அறிக்கையில் 2011-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மக்கட்தொகை 7.14 கோடியாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. அதில் 2.8 கோடி மக்கள் அதாவது 40 விழுக்காடு நகர்ப்புற மக்கட்தொகையாகவே அமைந்திருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இதுபோன்ற சூழ்நிலையில் வீட்டுவசதி, பொழுதுபோக்கு, போக்குவரத்து, தொழிற்சாலைகள் மற்ற பிற வசதிகளுக்கான ஒதுக்கீடு போன்றவற்றில் நகர்ப்புற திட்டமிடுதல் முறையையே முழுவதுமாக மறு ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

*2.1.1.* தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய முறைப்படியான திட்டமிடுதலின் வாயிலாக இப்பெரு நகரங்களின் வளர்ச்சி வேகத்தைக் குறைப்பதற்காக இதர நகர் மையங்களை வளர்ச்சியடையச் செய்ய ஊக்கத்தொகை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது இன்றியமையாதது.

*2.1.2.* மாநிலத்தில் மிகக் குறைந்த அளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ள வட்டங்களில் சில பகுதிகளை சிறு நகரங்களாக மேம்படுத்துவதற்கான சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

*2.1.3.* நகர் மையங்களை வளர்ச்சி அடையச் செய்வதில் மண்டல வாரியான அணுகுமுறையைக் கையாள வேண்டும். சென்னைப் பெருநகர வளர்ச்சிப் பகுதி நீங்கலாக மாநிலத்தின் இதர பகுதிகள் எட்டு



மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதில் அனைத்து மண்டலங்களிலும் ஒரே சீரான நகர்ப்புற மக்கட்தொகை பரவியிருக்குமாறு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

*2.2.* வரைவு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள நகர்ப்புற வளர்ச்சிக்கான வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால் கீழ்க்காணும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படவேண்டும்:

*1.* குறைந்தபட்ச திருப்தி அளிக்கக்கூடிய தரம் வாய்ந்த நகர்ப்புற வசதிகளை சென்னையிலும், வளர்ச்சிக்கான காலி நிலங்களை ஏற்படுத்தித் தருதல் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை இரண்டாம் தர பெருநகரங்களிலும் செயல்படுத்தி இந்தப் பரிந்துரையை நடைமுறைப் படுத்தல்.

*2.* பெரு வளர்ச்சி மையங்கள் மற்றும் புது நகரங்கள் நிலைப்பாட்டுடன் இருக்கவும், வளர்ச்சிக்கு ஊக்கமாக இருப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

*3.* சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கு போதிய அளவு நிதி கிடைப்பது உறுதி செய்யப்படுதல்.

*4.* *20,000* முதல் *50,000* வரை மக்கட்தொகை உடைய நகரங்களின் வளர்ச்சியை ஊக்கப்படுத்துதல்.

*5.* வட்டங்களின் மத்தியில் அமைந்துள்ள நகர்ப்புற வசதியற்ற கிராமப் பகுதியினைத் தேர்ந்தெடுத்து அவற்றை நகர மையங்களாக வளர்ச்சி அடையச் செய்தல்.

*2.3* ஒட்டுமொத்த குறியிலக்கை அடைவதற்கு வெவ்வேறு நகர மையங்களுக்கு நிதி வழங்கப்படுவது இலகுவாக நடைபெற கீழ்க்காணும் வகையில் செயல்படுத்தப்பட வேண்டும்:

*1.* நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகர் மையங்களற்ற வட்டங்களில் மேம்பாடு செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட நகர் மையங்கள் ஆகியவற்றிற்கென தனியே நிதியுதவி செய்வதற்கு மாநில அரசு திட்டமான ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்தல்.

2. முன்னுரிமை வழங்கப்பட்ட நகரங்களுக்கு முதலீடு மற்றும் ஊக்குவிப்புகளில் அவற்றிற்கான பங்கினை எளிதில் வழங்கும் பொருட்டு நிதியுதவி வழங்கும் முறையினை சீர்படுத்துதல்.

3. முழுமைத் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்தல்.

4. நகரமைப்பு பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணும் வகையில் தொலையுணர்வு, புவியமைப்பு (Remote Sensing and GIS) முறை மற்றும் பிற புதிய தொழில்நுட்ப முறைகளை உபயோகப்படுத்துதல்.

5. நகர்ப்புற வளர்ச்சிக்கான திட்டங்களான போக்குவரத்து மேலாண்மைத் திட்டம், சுற்றுலா மேம்பாடு, பாரம்பரியமிக்க பகுதிகளை பாதுகாத்தல், மிகக் குறைந்த அளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்துள்ள வட்டங்களைப் பற்றிய ஆய்வு மற்றும் இதர திட்டங்கள் தயாரித்தல்.

2.4. மேற்கூறிய அனைத்து கொள்கை முடிவுகள் மற்றும் வழி முறைகளை உபயோகமான செயல்படும் திட்டங்களாக்குதல். மேலும் அத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் போன்ற பணிகளைச் செய்யும் பொறுப்பு சென்னைப் பெருநகர் பகுதியைப் பொறுத்தமட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கும், மாநிலத்தின் எஞ்சிய அனைத்துப் பகுதிகளைப் பொறுத்தமட்டில் நகர் ஊரமைப்பு இயக்ககத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

### 3. நகர்-ஊரமைப்பு இயக்ககம்

#### 3.1. முக்கிய கொள்கைக் குறியிலக்குகள்

தமிழ்நாடு நகர்-ஊரமைப்புச் சட்டம் 1971-ஐ செயல்படுத்துதல் நகர்-ஊரமைப்பு இயக்ககத்தின் பொறுப்பாக அமைந்துள்ளது. சட்ட ரீதியான திட்டங்கள் தயாரித்தல், அவற்றைச் செயல்படுத்துதல், மேலும் மக்கள் வாழும் இடங்களில் தூய்மையான, சுற்றுச் சூழலுக்கு வழிவகுக்கும் இதர திட்டங்கள் தயாரித்தல் போன்ற பணிகளில் திட்டக் குழுமங்களுக்கு நகர்-ஊரமைப்பு இயக்ககம் உதவி புரிந்து வருகிறது. நகர்-ஊரமைப்புச் சட்டத்தை அமல்படுத்துவது நகர்-ஊரமைப்பு இயக்ககத்தின் பெரும் பொறுப்பாக இருந்து வருவதுடன், தொழில், குடியிருப்பு மற்றும் இதர நோக்கங்களுக்கான தனியார் நில மற்றும் கட்டட மேம்பாட்டுப் பணிகளையும் நகர்-ஊரமைப்பு இயக்ககம்



ஒழுங்குபடுத்துகிறது. மாநில அரசின் நிதியுதவியின் வாயிலாக நகர் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிதியுதவி வழங்கும் மைய நிறுவனமாகவும் நகர்-ஊரமைப்பு இயக்ககம் செயல்படுகிறது.

3.2. மண்டலத் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இதர சிறப்புத் திட்டங்கள் தயாரித்தல் நகர்-ஊரமைப்புச் சட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகத் திகழ்கின்றன.

### 4. நடைபெற்றுவரும் திட்டங்கள்

#### 4.1. மண்டலத் திட்டங்கள்

மக்களின் குறைந்தபட்சத் தேவைகளை கிடைக்கச் செய்வதில் மண்டலத் திட்டங்கள் முக்கிய கருவிகளாகச் செயல்படுகின்றன.

(1) வளரும் மையங்களைக் கண்டறிதல்.

(2) போக்குவரத்து, தொலைத் தொடர்பு மேம்பாடு.

(3) இயற்கை வளமிக்க மற்றும் எழில் வாய்ந்த பகுதிகளை வரையறை செய்து பேணிப் பாதுகாத்து மேம்பாடு செய்தல்.

(4) புராதன, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை அழகுமிக்க கட்டடங்கள் மற்றும் பொருட்களை வரையறை செய்தல்.

வேகமாக வளர்ந்து வரும் சென்னைப் பெருநகர் பகுதியை ஒட்டி அமைந்துள்ள காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கு மண்டலத் திட்டங்கள் தயாரிக்கப்பட 2000-2001-ஆம் ஆண்டில் பணி மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

#### 4.2. முழுமைத் திட்டங்கள்

ஒரு பகுதியின் எதிர்கால மக்கட்தொகையைக் கணக்கிட்டு முழுமைத் திட்டங்கள் முன்கூட்டியே தயாரிக்கப்படுகின்றன. அதற்கேற்ப பகுதிகளை ஒதுக்குவது, வெவ்வேறு நில உபயோகங்களுக்குத் தக்கவாறு பகுதிகளை ஒதுக்குவது, இடையூறு இல்லாத வாகனப் போக்குவரத்துக்கு வழிவகுக்கும் வகையில்

சாலை அமைப்புகளை ஏற்படுத்துதல், மேலும் அப்பகுதியில் வாழும் மக்களுக்கான வசதிகளின் தேவை அளவைக் கண்டறிதல் போன்றவை முழுமைத் திட்டங்கள் தயாரிக்கும்பொழுது கருத்தில் கொள்ளப்படும். முழுமைத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி வளர்ச்சிப் பணிகள் நடைபெறுவதை ஒழுங்குபடுத்துவதற்கும், முழுமைத் திட்டத்தில் வழிவகை செய்யப்படுகிறது. அரசால் உள்ளூர் திட்டப் பகுதிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ள மொத்தம் 114 பகுதிகளில் (102 முழுமைத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட நிலையிலும் மற்றும் 12 இணக்கம் அளிக்கப்பட்ட நிலையிலும் உள்ளன.) 1980-ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட சில முழுமைத் திட்டங்களை மறு ஆய்வு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, ஐந்தாண்டுகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மாற்றத்தை திட்டத்தில் சேர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2000-2001-ஆம் ஆண்டில் இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, கும்பகோணம், பூம்புகார், எடப்பாடி, ஆத்தூர், சிதம்பரம், குழித்துறை, தேனி மற்றும் இராமேஸ்வரம் ஆகிய 10 நகரங்களுக்கான முழுமைத் திட்டங்கள் மறு ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

## 4.3. விரிவு அபிவிருத்தித் திட்டங்கள்

முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ள நகரங்களில் உள்ள விரைவான வளர்ச்சியடையக்கூடிய வளமுள்ள பகுதிகளுக்கு முழுமைத் திட்டத்துடன் விரிவு அபிவிருத்தித் திட்டங்களும் தயாரிக்கப்படுகின்றன. சாலை மேம்பாடு, வெவ்வேறு பயன்களுக்கான நில ஒதுக்கீடு, கட்டடங்கள் கட்டுதல் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவது விரிவு அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங்களாகும். இதுகாறும் 1625 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவை அங்கீகரிக்கப்பட்ட நிலை, வரைவு நிலை என வெவ்வேறு நிலைகளில் உள்ளன. 2000-2001-ஆம் ஆண்டில் 50 புதிய விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் 10 வருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித் திட்டங்களில் அப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள தற்போதைய வளர்ச்சியினை திட்டங்களில் சேர்க்கும் பொருட்டு 50 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் மறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

## 4.4. புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள்

ஒசூர் போன்ற வேகமாக வளர்ந்து வரும் தொழிற்சாலை நகரங்கள் அல்லது மாமல்லபுரம் போன்ற பாரம்பரியம் மிக்க நகரங்களுக்குச் சட்ட ரீதியாக புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.



14 பகுதிகள் அரசால் புதுநகரங்களாக அறிவிப்பு செய்யப்பட்டுள்ளன. இதுவரை 6 புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

***4.5.*** மேற்காண் சட்ட ரீதியான திட்டங்களைத் தயாரிப்பது தவிர கீழே விவரிக்கப்பட்டுள்ள சிறப்பு மிக்க பல திட்டங்களையும் இத்துறை தயாரிக்கிறது.

## (அ) பாரம்பரியம் மிக்க நகர மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரித்தல்

தமிழ்நாட்டின் கலாச்சார பாரம்பரியம் மிகவும் தொன்மை வாய்ந்ததாகவும், செறிவுடையதாகவும், பன்முகங்களைக் கொண்டதாகவும், தனித் தன்மையுடன் விளங்குகிறது. அதன் அழகு மிளிரும் கடற்கரைகள், எழில்மிகு மலைப் பிரதேசங்கள், பிரம்மாண்டமான கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் ஆகியவை மாநிலத்தின் விலை மதிப்பற்ற சொத்துக்களாக அமைந்துள்ளன. இந்த நினைவுச் சின்னங்கள் மற்றும் முக்கிய இடங்கள் ஆகியவை விரைவான நகர்ப்புற வளர்ச்சியின் தாக்கத்துக்கு உள்ளாகின்றன. நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கும் நோக்கில் தமிழக அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளின் தொடர்ச்சியாக 38 நகரங்களைப் பாரம்பரியமிக்க நகரங்களாக மாநில அரசு அறிவித்துள்ளது. அந்நகரங்களை அழகுபடுத்தவும், வசதிகளை ஏற்படுத்தவும் அப்பகுதியில் கட்டிட அபிவிருத்தியைக் கட்டுப்படுத்தவும், பேணிப் பாதுகாக்கவும் திட்டங்கள் தயாரிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. 2000-2001-ஆம் ஆண்டில் கலந்தாய்வர்கள் உதவியுடன் பாரம்பரியம் மிக்க 5 நகரங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## (ஆ) மிகக் குறைந்தளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்துள்ள வட்டங்களுக்கான அபிவிருத்தித் திட்டம்

நாட்டின் மொத்த நகர்ப்புற மக்கட்தொகையில் 9 விழுக்காடு மக்கள் தமிழ்நாட்டில் வசிக்கின்றனர். தமிழ்நாட்டில் 1981-ல் நகர்மயமாதலின் வளர்ச்சி 33 விழுக்காடாக இருந்தது. 1991-ல் 35.8 விழுக்காடாக உயரும் என எதிர்நோக்கப்பட்டது. ஆனால் சராசரியைவிடக் குறைவாக 34 விழுக்காடாக மட்டுமே உயர்ந்துள்ளது. நகர்ப்புற மக்கட்தொகை வளர்ச்சியின் விகிதம் 1971-81-ல் 2.47 விழுக்காடாக இருந்தது. 1981-91-ல் 1.76 விழுக்காடாக குறைந்து விட்டது. இதனைக் கருத்தில் கொண்டு மிகக் குறைந்த அளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்துள்ள வட்டங்களை நடுத்தர நகரங்களாக மேம்பாடு

செய்வதற்கு தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது. அதன் முன்னோடியாக, நடுத்தர நகரங்களாக மேம்பாடு செய்வதற்காக மிகவும் குறைந்த அளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்துள்ள வட்டங்களில் நகர் ஊரமைப்பு இயக்ககம் கலந்தாய்வர்களின் உதவியுடன் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. நகர்-ஊரமைப்பு அபிவிருத்தி நிதி உதவியின்கீழ் *2000-2001* ஆம் ஆண்டில் *12* வட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### (இ) போக்குவரத்து செயல்பாடு மேலாண்மைத் திட்டம்

தமிழ்நாட்டில் பெரிய நகரங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் மக்கள் மற்றும் பொருட்களின் பயணச் செலவு அதிகரிக்கின்றது. போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. நகரின் திறன் குறைந்து போகிறது. மேலும் நகரின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும் இக்கட்டிற்குள்ளாகின்றன. போக்குவரத்து இடையூறு அதிகம் உள்ள நகர்ப்புறப் பகுதிகளைக் கண்டறிந்து அவற்றிற்கான சரியான தீர்வு ஏற்படுத்துவதற்காக பல நகரங்களுக்கு போக்குவரத்து செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டங்களை இயக்ககம் தயாரித்து வருகிறது. நகர்-ஊரமைப்பு அபிவிருத்தி நிதி உதவியின்கீழ் *2000-2001* ஆம் ஆண்டில் *10* நகரங்களுக்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### *4.6.* ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம்

பேருந்து நிலையம் கட்டுதல், வணிக வளாகங்கள் கட்டுதல் மற்றும், வாரச் சந்தை, தினசரிச் சந்தை ஆகியவற்றை மேம்படுத்துதல போன்ற வருவாய் ஈட்டும் திட்டங்களைச் செயல்படுத்தி உள்ளாட்சி நிறுவனங்களின் வருவாயைப் பெருக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதுதான் ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அதிகபட்சமாக ரூ. *30.00* இலட்சம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது.

*2000-2001* ஆம் ஆண்டில் வருவாய் ஈட்டும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக *24* உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ரூ. *191.9* இலட்சம் கடனுதவி வழங்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்திட்டங்கள் வெவ்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### *4.7.* புவியமைப்புத் தகவல் முறையின் வாயிலாக நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்தல்



வெகு வேகமாகப் பெருகிவரும் மக்கட்தொகை மற்றும் விரைவான நகர்ப்புற வளர்ச்சியுடைய இக்காலகட்டத்தில். திட்டமிடுதல், வரைபடங்கள் தயாரித்தல் போன்ற பணிகளில் சாதாரணமாக பயன்படுத்தும் முறைகளைக் கையாளுவதால் அதிகமான மனித ஆற்றல் தேவைப்படுவதோடு அதிக காலமும், நிதியும் தேவைப்படுகிறது. ஆதலால் புதிய தொழில்நுட்ப உத்தியான புவியமைப்புத் தகவல் முறையினை நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும் பணியில் இத்துறை பயன்படுத்தி வருகிறது.

*2000-2001* ஆம் ஆண்டில் நகர்-ஊரமைப்பு நிதி உதவியின்கீழ் அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வு நிறுவன உதவியுடன் புவியமைப்புத் தகவல் முறையின் வாயிலாக நாகப்பட்டினம், திண்டிவனம் மற்றும் இராஜபாளையம் ஆகிய நகரங்களுக்கான முழுமைத் திட்ட அடிப்படை வரைபடம் மற்றும் விவரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### *4.8.* புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றை செயல்படுத்துதல்

முழுமைத் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் ஆகிய சட்ட ரீதியான திட்டங்களைத் தயாரிப்பதற்கு நகர்-ஊரமைப்புச் சட்டம் வகை செய்கிறது. இத்திட்ட உத்தேசங்கள் செயல்படுத்தப்பட்டால் அவை நிச்சயமாக அப்பகுதியின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமையும்.

முழுமைத் திட்டம், விரிவு அபிவிருத்தித் திட்டம், புதுநகர் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் உத்தேசங்களைச் செயல்படுத்துவதற்காக, அரசு தனது வரவு-செலவு அறிக்கையில் இத்திட்டச் செயல்பாட்டினைச் சேர்த்துக்கொண்டு அதற்கான தக்க நிதியுதவி வழங்கி வருகிறது.

விரிவு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் *2000-2001* ஆம் ஆண்டில் ஆற்காடு நகராட்சிக்கு திட்டச் சாலைகள் அமைக்க நில எடுப்பு செய்ய ரூ. *21.00* இலட்சம் நிதியுதவி ஏற்படுத்தப்பட்டது.

### *4.9.* முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களின் பூங்காக்கள் அபிவிருத்தி

மக்கள் நெருக்கம் அதிகமுள்ள நகர மையங்களில் பூங்காக்களும் விளையாடுமிடங்களும் அப்பகுதியில் காற்றை சுத்திகரித்து தரும்

மையங்களாகவும், புத்துணர்ச்சி பெறும் இடங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. அவ்வாறான பூங்காக்கள் மற்றும் விளையாடுமிடங்கள் ஆகியவை உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி நெருக்கடியால் தக்க பராமரிப்பின்றி உள்ளன. கைவிடப்பட்ட இந்தக் கட்டமைப்பு வசதியை மேம்படுத்தி பராமரிப்பதற்காக ஒருமுறை வழங்கப்படும் மானியமாக முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு அரசு திட்டம் தீட்டியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ.2.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுவதில் 50:50 என்ற விகிதத்தில் அரசும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனம் அல்லது தனியார் நிறுவனம் பங்களிக்க வேண்டும்.

*2000-2001* ஆம் ஆண்டில் கம்பம் நகராட்சியில் அமைந்துள்ள பூங்கா இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டுள்ளது.

*4.10.* விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் முழுமைத் திட்டங்களின் வரைபடங்களைக் கணினியின் வாயிலாகத் தயாரித்தல்

இத்துறையின் செயல்பாடுகளை நவீனப்படுத்தும் பொருட்டு விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் முழுமைத் திட்டங்கள் சம்பந்தமான விவரங்கள் கணினிமயமாக்கப்படுகிறது. இதற்குத் தேவையான கணினி வன் பொருட்களும், மென் பொருட்களும் அரசின் நிதியுதவியால் இத்துறைக்கு வாங்கப்பட்டுள்ளன. இத்துறையால் தயாரிக்கப்பட்டுள்ள அனைத்து விரிவு அபிவிருத்தித் திட்டங்களையும், முழுமைத் திட்டங்களையும் பகுதி பகுதியாகக் கணினிமயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும். திட்டங்கள் கணினிமயமாக்கப்பட்ட பின்னர், பொதுமக்கள் திட்டங்களின் நகல்கள் வேண்டி இத்துறையை அணுகும் சமயங்களில் எளிதாக நகல்கள் எடுத்துக் கொடுக்க இயலும்.

## 5. 2001-2002 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் திட்டங்கள்

*5.1.* நகரப் பகுதிகளில் விரும்பத்தக்க, கட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சி ஏற்படுவதை உறுதி செய்வதற்காகவே அனைத்து உள்ளூர் திட்டப் பகுதிகளுக்கும் முழுமைத் திட்டங்களையும் மற்றும் உடனடியாக வளர்ச்சி அடையக்கூடிய வளமிக்க பகுதிகளுக்கென விரிவு அபிவிருத்தித் திட்டங்களையும் தயாரிப்பதில் இயக்ககம் மிகவும் கவனம் செலுத்தி வருகிறது. பொதுமக்களிடமிருந்தும் தொழில் முனைவோர்களிடமிருந்தும் எழும் பல்வேறு கோரிக்கைகளால் .முழுமைத் திட்டங்களையும், விரிவு அபிவிருத்தித் திட்டங்களையும் செயல்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்





உள்ளது என்பது அனுபவத்தில் உணரப்பட்டுள்ளது. ஆதலால் *5* வருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட முழுமைத் திட்டங்கள் மற்றும் *10* வருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித் திட்டங்களை மறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள இயக்ககம் முடிவு செய்துள்ளது. நகர்-ஊரமைப்புச் சட்டம், *1971*-ல் இம்மாதிரியான மறு ஆய்வுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் மொத்தம் *60* முழுமைத் திட்டங்களும், *500* விரிவு அபிவிருத்தித் திட்டங்களும் மறு ஆய்வு செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன. மறு ஆய்வு செய்யப்படும் சமயத்தில் தொழில் சார்ந்த நபர்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் கலந்து ஆலோசித்து செயல்பட முடிவு செய்யப்பட்டுள்ளது. *2001-2002* ஆம் ஆண்டில் *10* முழுமைத் திட்டங்களையும் *40* விரிவு அபிவிருத்தித் திட்டங்களையும் மறு ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதர *40* பகுதிகளுக்குப் புதிதாக விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும் பணியும் தொடர்ந்து நடைபெறும்.

*5.2.* புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துதல்

முழுமைத் திட்டம், விரிவு அபிவிருத்தித் திட்டம், புதுநகர் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் உத்தேசங்களைச் செயல்படுத்துவதற்காக அரசு தனது வரவு-செலவு அறிக்கையில் இத்திட்ட செயல்பாட்டினைச் சேர்த்துக்கொண்டு அதற்கான தக்க நிதியுதவி வழங்கி வருகிறது. இத்திட்ட உத்தேசங்கள் செயல்படுத்தப்பட்டால் அவை நிச்சயமாக அப்பகுதியின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமையும். இந்தத் திட்டங்களை செயல்படுத்த இந்த நிதியாண்டில் ரூ. *15* இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*5.3.* பாரம்பரியமிக்க நகரங்களுக்கான திட்டங்கள்

எந்தவிதமான திட்டமிடுதலும் இல்லாமல் நகரங்கள் விரிவடைந்து வருவதால் நமது விலைமதிப்பற்ற, பாரம்பரியமிக்க நகரங்கள் சிதைவுக்குள்ளாகின்றன என்பதை உணர்ந்து, அப்பகுதிகளைக் கண்டறிந்து, அவற்றை பாரம்பரியமிக்க நகரங்களாக மாநில அரசு அறிவித்துள்ளது. நகரத்தை அழகுபடுத்துதல், கட்டிட மேம்பாட்டைத் திட்டமிட்டு கட்டுப்படுத்துதல், வசதிகள் ஏற்படுத்துதல், வரலாற்றுச் சிறப்பு மிக்கப் பகுதிகளைப் பேணிப் பாதுகாத்தல் மற்றும் இதர வளர்ச்சித் திட்டம் தயாரித்தல் அரசின் பணிகள் மேற்கொள்ளப்பட

[2001 செப்டம்பர் 11

செயல் திட்டமாக அமைந்துள்ளது. 1997-98 முதல் 2000-2001 வரை 33 நகரங்களுக்கு இத்திட்டங்கள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் எஞ்சியுள்ள கீழ்காண் 5 நகரங்களுக்கும் திட்டங்கள் தயாரிக்கும் பணி 2001-2002-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து முடிக்கப்படவுள்ளது:

| | |
|---|---|
| 1. செட்டிநாடு | சிவகங்கை மாவட்டம் |
| 2. வாலிநோக்கம் | இராமநாதபுரம் மாவட்டம் |
| 3. மருதூர் | கடலூர் மாவட்டம் |
| 4. பிச்சாவரம் | கடலூர் மாவட்டம் |
| 5. மரக்காணம் | விழுப்புரம் மாவட்டம் |

இந்தப் பாரம்பரியமிக்க இடங்களையும் அவற்றின் சுற்றுப்புறங்களையும் பாதுகாப்பதுடன் எவ்விதமான மாசடைவதிலிருந்தும் காப்பது இன்றியமையாததாகும். இக்குறிக்கோளை எய்துவதற்கு பாரம்பரியமிக்க இடங்களுக்கு அருகே ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குள் வாகனங்கள் நிறுத்தத் தகுந்த இடங்களைத் தெரிவு செய்தல் விரும்பத்தக்கதாகும். அதனால் இப்பாரம்பரியமிக்க இடங்களுக்கு வருகை தரும் ஆர்வமிக்கவர்களும் சுற்றுலாப் பயணிகளும் அந்த இடங்களில் வாகனங்களை நிறுத்திவிட்டு பாரம்பரியமிக்க இடங்களுக்கு நடந்துவர ஏதுவாக இருக்கும். இவ்வாகன நிறுத்த வளாகங்களிலேயே கட்டணக் கழிப்பிடங்கள், உணவகங்கள் போன்ற வசதிகளையும் செய்தல் நலம் பயக்கும். பின்வரும் 11 பாரம்பரியமிக்க இடங்களில் இத்திட்டத்தை முதல் கட்டமாக செயல்படுத்தும் கருத்துரு அரசின் தீவிர பரிசீனையில் உள்ளது:

| | |
|---|---|
| 1. சிதம்பரம் | 2. பூம்புகார் |
| 3. பழனி | 4. காரைக்குடி |
| 5. செஞ்சி | 6. இராமேஸ்வரம் |
| 7. பேரூர் | 8. குளச்சல் |
| 9. நாகூர் | 10. வேளாங்கண்ணி |
| 11. கங்கைகொண்ட சோழபுரம் | |



2001 செப்டம்பர் 11]

**5.4. மிகவும் குறைந்த அளவே நகர்ப்புற அபிவிருத்தி அடைந்துள்ள வட்டங்களில் நடுத்தர நகரங்களை மேம்படுத்தல்**

2000-2001-ஆம் ஆண்டில் நகர்—ஊரமைப்புத் துறையால் தயாரிக்கப்பட்ட நகர்ப்புற வளர்ச்சி நெறிமுறை பற்றிய வரைவு ஆய்வறிக்கையில் நகர மையங்கள் ஏதுமற்ற குறைந்த அளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்துள்ள பல வட்டங்களைக் கண்டறிந்து குறிப்பிடப்பட்டுள்ளது. அதுபோன்ற 33 வட்டங்களில் தக்க மையங்களைக் கண்டறிந்து அவற்றை நடுத்தர நகரங்களாக மேம்பாடு செய்வதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. 2001-2002-ஆம் ஆண்டிலும் கீழ்காண் 12 வட்டங்களுக்கு ஆய்வு அறிக்கை தயாரிக்கும் பணி தொடர்ந்து முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:

| | | | |
|---|---|---|---|
| 1. | கிருஷ்ணராயபுரம் | - | கரூர் மாவட்டம் |
| 2. | வானூர் | - | விழுப்புரம் மாவட்டம் |
| 3. | செய்யாறு | - | திருவண்ணாமலை மாவட்டம் |
| 4. | பாப்பிரெட்டிப்பட்டி | - | தருமபுரி மாவட்டம் |
| 5. | ஆரணி | - | திருவண்ணாமலை மாவட்டம் |
| 6. | உடையார்பாளையம் | - | பெரம்பலூர் மாவட்டம் |
| 7. | திட்டக்குடி | - | கடலூர் மாவட்டம் |
| 8. | கங்கவள்ளி | - | சேலம் மாவட்டம் |
| 9. | ஒட்டன்சத்திரம் | - | திண்டுக்கல் மாவட்டம் |
| 10. | கீழ்வேளூர் | - | நாகப்பட்டினம் மாவடடம் |
| 11. | குடவாசல் | - | திருவாரூர் மாவட்டம் |
| 12. | கந்தர்வகோட்டை | - | புதுக்கோட்டை மாவட்டம் |

**5.5. ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம்**

வருவாய் ஈட்டும் திட்டங்களை உள்ளாட்சி நிறுவனங்கள் நிறைவேற்றுவதற்காக ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம்

[2001 செப்டம்பர் 11

செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வருடம் முதற்கொண்டு முழுமைத் திட்டம், விரிவு அபிவிருத்தித் திட்டம், புதுநகர் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றில் உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய சாலைகள் அமைத்தல், குறுகிய நிலையிலுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் போன்ற திட்டங்களையும் செயல்படுத்துவதற்கு நகர்-ஊரமைப்பு நிதியிலிருந்து செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒரு திட்டத்திற்கு ஆகும் செலவில் அதிகபட்சமாக ரூ.30.00 இலட்சம் வரையிலும் உள்ளாட்சி நிறுவனத்திற்குக் கடன் மற்றும் மானியமாக வழங்கப்படும்.

### *5.6.* போக்குவரத்து செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டம்

நகரின் போக்குவரத்து நெரிசலை சமாளிக்கும் விதத்தில் கீழ்க்கண்ட *10* நகரங்களுக்குப் போக்குவரத்து செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கும் பணி தொடர்ந்து முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| *1.* திருப்பத்தூர் | - | வேலூர் மாவட்டம் |
| *2.* ஆரணி | - | திருவண்ணாமலை மாவட்டம் |
| *3.* பண்ருட்டி | - | கடலூர் மாவட்டம் |
| *4.* விருத்தாச்சலம் | - | கடலூர் மாவட்டம் |
| *5.* ஆத்தூர் | - | சேலம் மாவட்டம் |
| *6.* கோபிசெட்டிபாளையம் | - | ஈரோடு மாவட்டம் |
| *7.* தாராபுரம் | - | ஈரோடு மாவட்டம் |
| *8.* பட்டுக்கோட்டை | - | தஞ்சாவூர் மாவட்டம் |
| *9.* அறந்தாங்கி | - | புதுக்கோட்டை மாவட்டம் |
| *10.* இராசிபுரம் | - | நாமக்கல் மாவட்டம் |

### *5.7.* புவியமைப்புத் தகவல் முறை வாயிலாக நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்தல் (Geographical Information System)

புதிய தொழில்நுட்ப உத்தியான புவியமைப்புத் தகவல் முறையினை நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும் பணியில் பயன்படுத்துவதற்காக தேவையான கணினி மற்றும் அதனைச் சார்ந்த



2001 செப்டம்பர் 11]

உபகரணங்கள் வாங்கப்பட்டு இப்பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனைப் பயன்படுத்தி இந்த ஆண்டில் சாத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகிய நகரங்களுக்கு புவியமைப்புத் தகவல் முறையினை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### *5.8.* நகர்–ஊரமைப்பு இயக்குநரகத்தில் கணினி அமைப்பினை மேம்படுத்துதல்

நகர்–ஊரமைப்புத் துறை தலைமை அலுவலகம் மற்றும் *8* மண்டல அலுவலகங்களுக்கு, முழுமைத் திட்டம், விரிவு அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான வளர்ச்சித் திட்டம் பற்றிய முழுமையான தகவல்கள் பராமரிக்க *1988-89*-ஆம் ஆண்டில் கணிப்பொறிகள் மற்றும் அதன் சார்பு உபகரணங்கள் வாங்கப்பட்டன. தற்சமயம் உதிரி பாகங்கள் கிடைக்காததால் இக்கணிப்பொறிகள் பழுதுபார்த்தும் பயனளிக்கக்கூடிய நிலையில் இல்லை. எனவே, நகர்–ஊரமைப்புத் துறையில் கணிப்பொறியின் செயல்பாட்டுத் திறனை உயர்த்தும்பொருட்டு இரண்டு கட்டமாக செயல்படுத்த உத்தேசங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

கட்டம்-*1*-ல் தலைமை அலுவலகத்தில் கணிப்பொறி பெண்டியம் III மற்றும் ஸ்கேனர், பிளாட்டர், டிஜிடைசர் மற்றும் அதன் தொடர்பான உதிரி பாகங்களுடன் கூடிய GIS மென்பொருள் வாங்குதல்.

கட்டம்-*2*-ல் *8* மண்டல அலுவலகங்களுக்கு பெண்டியம் III கணிப்பொறி மற்றும் தேவையான உபகரணங்கள் வாங்குதல்.

*1999-2000*-ல் பகுதி II திட்டத்தில் கட்டம் I கருத்துரு ஏற்கப்பட்டு ரூ.*20.00* இலட்சம் மதிப்பீட்டில் தலைமையகத்தில் புவியியல் தகவல் மையத்திற்குக் கணிப்பொறிகள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்தக் கணிப்பொறிகளில் வாசிப்பதற்கு மட்டும்தான் வசதி உள்ளது. குறுந்தகட்டில் எழுதும் உபகரணம் இல்லை.

எனவே தலைமையகத்திற்கு ஒரு கணிப்பொறி, A.O. கலர் ஸ்கேனர், ஒரு குறுந்தகட்டில் எழுதும் கருவி ஆகியவை புவியியல் தகவல் மைய வேலைக்கும், அறிக்கைகள், அன்றாட நடைமுறை செயல்பாடுகள், அலுவலகப் பதிவுருக்கள், கணக்கு பராமரித்தல் மற்றும் சம்பளப்

[2001 செப்டம்பர் 11

பட்டியல் போன்ற செயல்பாடுகள் புரிய நிர்வாகப் பிரிவு மற்றும்
கணக்குப் பிரிவிற்கும் ஆக இரண்டு கணிப்பொறிகளும் நகர் ஊரமைப்புத்
துறையின் செங்கல்பட்டு, வேலூர், சேலம், திருச்சி, சிவகங்கை, மதுரை,
கோவை மற்றும் திருநெல்வேலி ஆகிய எட்டு மண்டல
அலுவலகங்களுக்கு மேம்படுத்தப்பட்ட நிலையில் உள்ள 8 கணிப்பொறி
மற்றும் அதன் சார்பு உபகரணங்களுக்கான பிரிண்டர், மின் சேமிப்பு
உபகரணம், இண்டர்நெட் மற்றும் இ-மெயில் வசதிகளுடன் உள்ள
கணினிகள் வாங்க வேண்டிய தேவையுள்ளது.

ஆதலால் நகர் ஊரமைப்புத் துறை, தலைமை அலுவலகத்திற்கு 3
பெண்டியம் III கணிப்பொறிகளும், ஒரு மின் தகட்டில் எழுதும் கருவி,
A.O. கலர் ஸ்கேனர் ஆகியவையும் மேலே சொன்ன எட்டு மண்டல
அலுவலகங்களுக்கும் ஒரு மண்டலத்திற்கு ஒரு கணிப்பொறி அதனைச்
சார்ந்த உபகரணங்கள் வீதம் எட்டு மண்டல அலுவலகங்களுக்கும்
அமைத்துத் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2001-2002 ஆம்
ஆண்டில் பகுதி II திட்டத்தின்கீழ் ரூ. 14 இலட்சம் செலவில்
செயல்படுத்தப்படவுள்ளது.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**

*6*. இந்தியாவிலுள்ள நகர்மயமான மாநிலங்களில், தமிழ்நாடு
மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. இம்மாநிலத்தில் 34.2 சதவிகித
மக்கள் நகர்ப்புறங்களில் வாழ்ந்து வருகிறார்கள். நகர்ப்புற மக்கள்
தொகையில் 25 சதவிகித பகுதிக்கும் அதிகமானவர்கள் சென்னைப்
பெருநகர்ப் பகுதியில் வசிக்கின்றனர். இம்மாநிலத்தின் மொத்த மக்கள்
தொகையில் 10 சதவிகித பகுதியினர், இப்பெருநகர் பகுதியில் வாழ்ந்து
வருகிறார்கள்.

சென்னை நகரத்தில் 1991ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள்
தொகை 37.9 இலட்சமாக இருந்தது. மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி
2001ஆம் ஆண்டில் மக்கள் தொகை 42.16 இலட்சமாகும். அதே
சமயத்தில், சென்னைப் பெருநகரப் பகுதியின் மக்கள் தொகை
2001ஆம் ஆண்டில் 75 இலட்சமாக இருக்கும் என்றும், இது 2011-ல் 95
இலட்சமாக மேலும் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நகர்மயமாக்கத்தின் தேசிய ஆணைக்குழு, நாட்டிலுள்ள
முன்னுரிமை நகரங்களில் ஒன்றாக சென்னையை அங்கீகரித்துள்ளது.
சென்னை நகரின் முக்கியத்துவத்தினால், அது பெரியதாகவும்,



2001 செப்டம்பர் 11]

விரைவாகவும் வளரும் வாய்ப்புள்ளது. பொருளாதாரம்
தாராளமயமாக்கப்பட்ட சூழ்நிலை மற்றும் தொழில் துறை வளர்ச்சியின்
தனித்துவம், தொழில் துறையில் பன்னாட்டு நிறுவனங்களின்
நுழைவினால் ஏற்பட்ட தற்போதைய நிலை ஆகியவற்றின்
அடிப்படையில், சென்னைப் பெருநகர பகுதியின் வளர்ச்சியின் வேகம்
மிக அதிகமாக இருக்கும். இந்த நிலையில் சென்னைப் பெருநகரப்
பகுதியின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுகின்ற வகையில்
திட்டமிடவும், திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், வளர்ச்சிக்கு
வழிகாட்டவும், துரித நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகின்றது.

இத்தருவாயில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
இரண்டாவது முதன்மைத் திட்டத்தை தயார் செய்து அரசுக்கு
சமர்ப்பித்துள்ளது. தவிர, நகர அபிவிருத்தியைச் சீரமைக்கும்
நோக்கமாகவும், இப்பெருநகரப் பகுதியின் வாழ்க்கைத் தரத்தை
முன்னேற்றமடையச் செய்யவும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்
குழுமம் பல அபிவிருத்தித் திட்டங்களை வடிவமைத்துள்ளது.

இந்தப் பெருநகர் பகுதியில், அடிப்படை வசதிகளும்,
பயன்பாடுகளும், அனைத்து குடிமக்களுக்கும் கிடைப்பதற்கும்
உள்ளமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்குக் கட்டாயமாக முக்கியத்துவம்
கொடுத்தாக வேண்டும். எனவே, நகர்மயமாதலில், அரசின் கொள்கை
தனியார் துறையினர் வளர்ச்சியை பெரிய அளவில் ஊக்குவிக்கும்படி
இருக்கின்ற வகையில், பெருநகர் வளர்ச்சித் திட்டங்களின் கொள்கை
மாற்றியமைக்கப்பட வேண்டியிருக்கிறது. மேற்படி கருத்துக்களை
முன்னிறுத்தி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பலவிதமான
மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. சென்னைப்
பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மேற்கொண்டுள்ள பல்வகையான
திட்டங்களின் சிறப்பு அம்சங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

**7. (அ) துரித இரயில் போக்குவரத்துத் திட்டம்—இரண்டாம் கட்டம்**

சென்னை கடற்கரையிலிருந்து லஸ் வரையிலான துரித இரயில்
போக்குவரத்துத் திட்டம் (முதல்கட்டம்) ஏற்கெனவே மக்கள்
பயன்பாட்டில் உள்ளது. துரித இரயில் போக்குவரத்துத் திட்டம்
இரண்டாம் கட்டமாக லஸ் முதல் வேளச்சேரி வரையில் உள்ள 11.17
கி.மீ தூரத்திற்கு தோராய மதிப்பீடு ரூ. 605 கோடி செலவில் அமைத்திட
மாநில அரசு ஆணை எண் 297, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்
துறை, நாள் 27-7-1998-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இது

தற்போதைய மதிப்பீட்டின்படி ரூ.689 கோடியாகும். இத்திட்டச் செலவில் மாநில அரசு மூன்றில் இரண்டு பங்கும் மத்திய அரசு மூன்றில் ஒரு பங்கும் ஏற்க உள்ளது. இத்திட்டத்திற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம் மேலாண்மை மற்றும் ஒருங்கிணைத்தும், வழிநடத்தியும், ஒத்துழைத்தும் வருகிறது. இத்திட்டம் முழு வீச்சில் நடைபெறுவதால் வரும் ஜுன் 2002-ல் நிறைவேற்றப்படும். இரயில் நிலையங்களில் எஞ்சியுள்ள கட்டுமானப் பணிகள் மட்டும் மேலும் தொடரும். இத்திட்டத்திற்காக 31-07-2001 முடிய ரூ.368 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்காக ரூ.274 கோடி அளித்துள்ளது. இந்த இரண்டாம் கட்டப் பணி பரங்கிமலை வரை 4.5 கி.மீ தூரத்திற்கு நீட்டித்து சென்னை கடற்கரை—தாம்பரம் புறநகர் இரயில் பாதையை அடையுமாறு ஏற்படுத்த மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கலந்தாலோசகர் மூலம் இத்திட்டத்திற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்துள்ளது.

### (ஆ) துரித இரயில் போக்குவரத்து திட்டம் நிலை-II-ல் உள்ள இரயில் நிலையங்களின் மேல் பகுதியில் வணிகப்பகுதி அமைத்தல்

சென்னை கடற்கரை முதல் திருமயிலை இரயில் வரையிலான திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலையம் II 8.96 கி.மீ. தூரத்திற்கு 1995 மற்றும் 1997ஆம் ஆண்டுகளில் இரண்டு நிலை-கட்டங்களாக செயல்படுத்தப்பட்டது. இரயில்வே அமைச்சகத்தின் மூலம் மத்திய அரசிடமிருந்து இத்திட்டத்திற்கான நிதி பெறப்பட்டது.

திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை-II-ல், திருமயிலை நிலையத்திலிருந்து வேளச்சேரி நிலையம் வரையிலான 11.17 கி.மீ. தூரத்திற்கு திட்டச் செலவை தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசின் நிதி உதவியுடன் முறையே 67:33 என்கின்ற விகிதத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் அட்டவணைப்படி முன்னேற்றம் அடைந்து வருகிறது. மேலும் 2002ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல் இரயில் போக்குவரத்து தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு/சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், ஒன்பது இரயில் நிலையங்களின் கூரைப் பகுதியின் மேலே உள்ள ஆகாயப் பகுதிகளை (Air Space) வணிகப் பகுதியாக அபிவிருத்தி செய்ய முழு உரிமை பெற்றுள்ளது. இதன் மூலம் நகர கட்டிடப் பகுதிகளின்



அமைப்பை அதிகரிக்கவும், திரளான துரித இரயில் போக்குவரத்தை அதிகரிக்கவும் இயலும். இதன் காரணமாக, நான்கு கலந்தறிதற்குரிய நிறுவனங்கள், ஒன்பது நிலையங்களுக்கான கூரைப் பகுதியின் மேலே வணிகப் பகுதி அபிவிருத்தி செய்வதற்கான வடிவமைப்புகள் தயாரிப்பதற்காக அமர்த்தப்பட்டுள்ளன. இந்தக் கலந்தறிதற்குரிய நிறுவனங்கள் ஒன்பது நிலையங்களின் அபிவிருத்திக்கான விரிவான வரைபடங்கள் சமர்ப்பித்தனர். இவற்றிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இரயில் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. நிலையங்களின் கூரைப் பகுதிக்கு மேலே உள்ள வணிகத்தள கட்டமைப்புக்கான விரிவான வடிவுகள் மற்றும் செயல்முறை வரைபடங்கள் தயாரிக்கும் பணிகள் முடிவடைந்தன. 9 நிலையங்களின் கூரைப்பகுதிக்கு மேலேயுள்ள தளங்களைப் பயன்படுத்த பல்வேறு வகைப்பட்ட தேவைகளின் ஆய்வுகள் முடிக்கப்பட்டபின் விருப்பம் கோரப்படும்.

### (இ) துரித இரயில் போக்குவரத்துத் திட்டப்பாதை அருகில் அபிவிருத்தி செய்வது குறித்து ஆய்வு

திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரையிலான துரித இரயில் போக்குவரத்தின் இரண்டாம் நிலை 2002ஆம் ஆண்டு ஜுன் திங்களிலிருந்து செயல்படுத்தப்படவுள்ளது. இந்தத் துரித இரயில் போக்குவரத்தினால் சுமார் 60,000 பயணிகள் ஒரு மணி நேரத்தில் ஒவ்வொரு மார்க்கத்திலும் பயணம் செய்யலாம். இத்திட்டத்தை முழுமையாகப் பயன்படுத்த ஏதுவாக ரூ.10 இலட்சம் செலவில் கலந்தறிதற்குரியவர் மூலமாக திட்டப்பாதை அருகில் இருபுறமும் 1 கி.மீ. பரப்பளவில் மக்கள் நெருக்க வளர்ச்சி, பணி செய்யும் இடங்கள், வியாபார மையங்கள், பொழுதுபோக்கும் மையம் மற்றும் பலவிதமான அபிவிருத்திகளை அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கலந்தறிதற்குரியவர்கள் மேற்படி நோக்கங்களை செயல்படுத்த பரிந்துரைகளை அளிக்க உள்ளார்கள். இந்த ஆய்வுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 8. சென்னை புறநகர் பேருந்து நிலையம்—கோயம்பேடு

மிக வேகமாக வளர்ந்துவரும் சென்னை மாநகரத்தின் போக்குவரத்தினை சீராகவும் முறையாகவும் ஒழுங்குபடுத்துவது கடினமானது என ஆராய்ந்தபின், மாநகர போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக நகரில் அமைந்துள்ள முக்கிய வெளியூர் பேருந்து

நிலையங்களை சென்னையின் புறநகர் பகுதிகளுக்கு மாற்றிட அரசு முடிவு செய்தது. இதன் முதற்கட்டமாக, உயர்நீதிமன்ற வளாகத்திற்கு எதிரே தற்போது செயல்படும் வெளியூர் பேருந்து நிலையத்தை சென்னையின் புறநகர் பகுதிக்கு மாற்றிட அரசு முடிவு செய்தது. இப்பணியினை செயல்படுத்தும் திட்டத்தை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு வழங்கியது.

மேற்கண்ட பேருந்து நிலையத்தை அமைத்திட சென்னை கோயம்பேடு பகுதியின் தெற்காசிய கட்டமைப்பு விளையாட்டு கிராமத்தை ஒட்டிய உள்வட்ட வழிச்சாலையில் அமைந்துள்ள சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்குச் சொந்தமான நிலத்தை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தேர்வு செய்தது. இப்பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிக்கான பேருந்து நிலையத்தின் மதிப்பீடு, வரைபடம் தயாரித்தல் போன்ற பணிக்கான தொழில்நுட்ப ஆலோசகராக இந்திய அரசின் சார்பு நிறுவனமான ரைட்ஸ் எனும் அமைப்பு தேர்வு செய்யப்பட்டது. அவர்கள் வழங்கிய தோராய மதிப்பீட்டின் அடிப்படையில் கட்டுமானப் பணிக்கு மட்டும் ரூ.50 கோடிக்கான நிர்வாக ஒப்புதலை அரசு வழங்கியது. எனினும் இந்த ஒப்புதல் பின்னர் நில மதிப்பீடு போன்ற இனங்களைச் சேர்த்து ரூ.89.21 கோடியாக மாற்றப்பட்டது. தற்சமயம் இப்பணி ஹட்கோ (ரூ.84.25 கோடி) மற்றும் டுபிட்கோவின் (ரூ.10.00 கோடி) கடனுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இப்பணிக்காக பெறப்பட்ட கடன் மற்றும் வட்டித்தொகையினைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பினை ஆண்டு திட்ட ஒதுக்கீட்டின் மூலமாக அரசே ஏற்றுக்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்காக 31-7-2001 முடிய ரூ.78.34 கோடி செலவிடப்பட்டுள்ளது. கடன் மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்த அரசு ரூ.16.49 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இப்பேருந்து நிலையக் கட்டுமானப் பணி திறந்த ஒப்புந்தப்புள்ளி முறை மூலமாக திருவாளர்கள் ஜெ.எம்.சி. லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பணி 5-5-1999 அன்று தொடங்கப்பட்டது. ஒப்பந்த காலம் இரண்டாண்டாகும். குஜராத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் ஒரு சிறிய குடைவடிவ தூண் ஒன்று சரிந்துவிட்டதை கருத்திற்கொண்டும் மத்திய அரசின் கட்டிட வடிவமைப்பு ஆராய்ச்சி மையம் கூரையின் பகுதிகளின் அதிகப்படியான எடையைத் தாங்கும் வகையில் கட்டுமானப் பணிகளை மேலும் பலப்படுத்த ஆ[illegible]சனைகளை அளித்துள்ளது இதன்படி கட்டிடத்தின் வடிவமைப்புகள் சிறிதளவு மாற்றப்பட்டு கூடு வடிவ கூரை அமைப்பின் கட்டுமானப் பணி சமீபத்தில் கட்டி





முடிக்கப்பட்டது. இப்பேருந்து நிலையம் ஜனவரி திங்கள் 2002-லிருந்து செயல்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**9. (ஆ) ஹட்கோ உதவியுடன் சென்னைக்குச் செல்லும் ஆரச்சாலைகளின் மேம்பாட்டுப் பணி**

சென்னைப் பெருநகர் பகுதிக்குள் ஆரச்சாலைகளை ரூ.212.54 கோடி செலவில் மேம்படுத்த அரசாங்கம் அரசு ஆணை எண் 485, நெடுஞ்சாலைத் துறை, நாள் 29-12-1997 அன்று நிர்வாக ஒப்புதல் அளித்து வெளியிட்டது.

அவை:

(1) செங்குன்றம் - திருவள்ளூர் சாலை.

(2) செங்குன்றம் - ஆவடி - பூந்தமல்லி சாலை - குன்றத்தூர் பல்லாவரம் புதிய மகாபலிபுரம் சாலையில் சேர்த்தல்.

(3) கோடம்பாக்கம் - ஸ்ரீபெரும்புதூர் சாலை

(4) கேளம்பாக்கம் - கோவளம் சாலை.

(5) சென்னை - மகாபலிபுரம் சாலை.

(6) வாலாஜா - முடிச்சூர் - தாம்பரம் - மேடவாக்கம் - சோழிங்கநல்லூர் - குடிமியாண்டி தோப்பு சாலை.

(7) வண்டலூர் - கேளம்பாக்கம் சாலை.

(8) புதுவயல் - பெரியபாளையம் - தாமரைப்பாக்கம் - தின்னனூர் - கொரட்டூர் சாலை.

(9) பெருங்குடி - தரமணி இணைப்புச் சாலை.

இத்திட்டத்திற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வழிகாட்டும் நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டு, இதற்கான நிதியினை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனம் மூலமாக ரூ.147.00 கோடி ஹட்கோவிடம் கடனாகப் பெறப்படும். இதுவரை ரூ.117.28 கோடி ஹட்கோவிடமிருந்து கடனாகப் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 3-07-2001 வரை ரூ.99.29 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதுவரை முதல் 4 (நான்கு) சாலைகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள சாலைகளின் பணி இந்த நிதியாண்டில் முடிவுறும் என

[2001 செப்டம்பர் 11

உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக பெறப்பட்ட கடன் தொகையினை வட்டியுடன் திருப்பிச் செலுத்தும் பொறுப்பினை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்காக ரூ.39.62 கோடி 2001-2002 வருடத்திய வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிலம் ஆர்ஜிதம் செய்வதில் சில பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தாலும் சாலைகள் அமைக்கும் பணி ஒரு சில சிறிய பணிகள் தவிர்த்து கணிசமான பணிகள் 2002ஆம் ஆண்டு இறுதிக்குள் அனைத்துப் பணிகளும் முடிவு பெறும்.

**(ஆ) பரங்கிமலை - பூவிருந்தவல்லி சாலை மேம்பாட்டுப் பணி**

10.8 கி.மீ. நீளத்தில் பரங்கிமலை - பூவிருந்தவல்லி சாலையை ரூ.14.42 கோடி திருத்திய மதிப்பீட்டில் இரண்டு ஆண்டுகளில் மேம்பாடு செய்ய தமிழக அரசு நெடுஞ்சாலைத் துறைக்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வழிகாட்டும் நிறுவனமாகத் தெரிவு செய்யப்பட்டதால் தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனம் ஆகியவைகளிடமிருந்து இத்திட்டத்திற்கான நிதியைக் கடனாகப் பெற்று அளித்துள்ளது. அனைத்துத் திட்டப் பணிகளும் 2000-2001 நிதியாண்டிலேயே முடிவடைந்துள்ளது. அசலும் வட்டியும் சேர்த்து மேற்கண்ட நிதி நிறுவனங்களுக்குத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பினை தமிழக அரசு ஏற்றுக் கொண்டதன் பேரில் ரூ.2.47 கோடியை ஹட்கோ, டுபிட்கோ ஆகியவற்றின் வட்டி மற்றும் அசலைத் திருப்பித்தர 2001-2002 நிதியாண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. சென்னைப் பெருநகர பகுதியில் வெள்ளத் தடுப்பு மற்றும் மழைநீர் வடிகால் மேம்பாட்டுத் திட்டம்

அரசு, சென்னைப் பெருநகர் பகுதியில் வெள்ளத் தடுப்பு மற்றும் ழைநீர் வடிகால் மேம்பாட்டுத் திட்டம் முழுமைத் திட்டத்தில் ரிந்துரைக்கப்பட்ட கட்டமைப்பு வேலைகளைச் செயல்படுத்துவதற்கு அரசாணை (நிலை) எண் 321, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 12-8-1998 மூலமாக ரூ.300 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள் தொடர்ந்து றபடும் வெள்ளப் பெருக்கினை மட்டுப்படுத்தி சுற்றுச்சூழலை மேம்படுத்துவதேயாகும். இத்திட்டம் நதிகள் மற்றும் கால்வாய்களில் சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் கலக்கப்படுவதை தவிர்ப்பதற்காக



2001 செப்டம்பர் 11]

நதிகளைப் பராமரிக்கும் திட்டத்துடன் இணைத்து மூன்றிலிருந்து ஐந்தாண்டுகளுக்குள் செயலாக்கப்படவுள்ளது.

(2) இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், சென்னைப் பெருநகரின் பெரிய வடிகால் அமைப்பு நீர்வழிகள் மற்றும் கால்வாய்களில் பெருவடிகால் அமைப்பு முறையினை மேம்படுத்துவதும், சென்னை நகரில் மழைநீர் வடிகால் மேம்பாட்டுத் திட்டத்திற்கான சிறு வடிகால் அமைப்பு முறையினை மேம்படுத்துவதேயாகும். மேம்பாட்டு நடவடிக்கைகளில் உள்ளடங்கியுள்ள பணிகளான, நீர்வழிகளில் படிந்துள்ள மாசுகளை/சகதிகளை அகற்றி, அவற்றின் கரைகளை வலுப்படுத்துவது மற்றும் நீர்வழிகளைப் புனரமைத்தல், வெள்ளத் தடுப்பு ஏற்பாடுகளுக்கு வகை செய்தல், பழைய பாலங்களை மாற்றுதல், நீர்வழிகளை அகலம் மற்றும் மறுமுறைப்படுத்துவதின் மூலம் அதிக அளவு நீர் வெளியேற்றுதல் மேலும் நீர்வழிகளில் வசிக்கும் ஆக்கிரமிப்பாளர்களை அகற்றி அவர்களுக்கு மறு குடியேற்றம் மற்றும் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் உறைவிடங்களை ஏற்படுத்தித் தருவது. பொதுப் பணித் துறை இத்திட்டத்தின் கட்டமைப்புப் பணிகளைச் செயல்படுத்துகிறது. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் இத் திட்டத்தின் ஒரு பகுதியான மறுகுடியேற்றம் மற்றும் மறுவாழ்வுத் திட்டத்தினைச் செயல்படுத்துகிறது. இத்திட்டத்தினைச் சிப்பங்களாக்கி செயல்படுத்துவதும், மேலாண்மை மற்றும் ஒருங்கிணைத்து வழிநடத்துதலும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பொறுப்பாகும்.

(3) இத்திட்டத்திற்குத் தேவையான முதற்கட்ட நிதியில் 70 சதவிகிதம் ஹட்கோ நிறுவனத்திடமிருந்து கடனாகவும், மீதி 30 சதவிகிதம் நிதி மாநில அரசின் வரவு-செலவுத் திட்டத்தின் மூலமும் பெறப்படுகின்றது. மாநில அரசின் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் கடனை ஆண்டுதோறும் திரும்பச் செலுத்துவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி சிறிய வடிகால் மேம்பாட்டு அமைப்பு முறைக்கு பொறுப்பு வகிக்கிறது.

(4) சென்னை பெருநகர் பகுதியிலுள்ள பெரு வடிகால் பணிகள், பல்வேறு வடிகால் திட்ட அமைப்பின் மூலம் கடன்பெறவும், மேலாண்மை மற்றும் செயல்முறைப்படுத்தவும் நான்கு சிப்பங்களாக வகுக்கப்பட்டுள்ளன.

(அ) சிப்பம் -I - கூவம் ஆறு, விருகம்பாக்கம் மற்
ாக்கம் வடிகால், ஓட

[2001 செப்டம்பர் 11

முதலானவற்றை மேம்படுத்துதல் மற்றும் மறுகுடியேற்றம் மற்றும் மறுவாழ்வுத் திட்டம்.

(ஆ) சிப்பம்-2 - பக்கிங்காம் கால்வாயை மேம்படுத்துதல்.

(இ) சிப்பம்-3 - அடையாறு மேம்படுத்துதல், புனரமைப்பு செய்தல் மற்றும் கொசஸ்தலையாற்றின் வெள்ளத் தடுப்பு கரைகளை மேம்படுத்துதல்.

(ஈ) சிப்பம்-4 - சென்னைப் பெருநகரிலுள்ள நீர்நிலைகளின் வெள்ளக் கால்வாய்களை மேம்படுத்துவது, கூவம் மற்றும் அடையாறு ஆறுகளின் முகத்துவாரங்களில் படிந்துள்ள மணல் தடுப்புகளை அகற்றுவதாகும்.

(5) முதல் மூன்று சிப்பங்களின் அபிவிருத்திப் பணிகள் செலவீனம் ரூ.142.51 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் உள்ளது. ஏற்கெனவே ஹட்கோ நிறுவனத்திடமிருந்து ரூ.57.42 கோடி கடனாகப் பெற்றதில் ரூ.51.87 கோடி இத்திட்டப் பணிகளுக்காக 31-7-2001 வரை செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நான்காவது சிப்பத்திற்கான கருத்துரு/செயற்குறிப்பு ரூ.68.36 கோடிக்கு மறுநிர்வாக ஒப்புதலுக்காக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2001-2002 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.20.87 கோடியை ஹட்கோ நிறுவனத்திற்குக் கடன் மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 11. வெளிவட்டச் சாலை

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (செ.பெ.வ.கு.) வெளிவட்டச் சாலையைச் சென்னைப் பெருநகரப் பரப்பின் எல்லையில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. பெருநகர எல்லைக்குள் செயல் முறைகளில் பரவலான வளர்ச்சியை உண்டாக்கவும், வளர்ச்சி மற்றும் பலதரப்பட்ட துணை முறைகளை உருவாக்கத் தூண்டவும் நகர எல்லைக்கு வெளியே வெளிவட்டச் சாலை அமைக்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. வெளிவட்டச் சாலையானது, பெருநகரத்தின் எல்லையை ஒட்டினாற்போல செல்கின்றது. முன்மொழியப்பட்ட இச்சாலையானது திரளான துரித இரயில் போக்குவரத்துடன் கூடிய விரைவு போக்குவரத்து சாலையாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தெற்கில் வண்டலூரையும், வடக்கில் மீஞ்சூரையும் இணைக்கும்



2001 செப்டம்பர் 11]

வகையில் 62 கி.மீ. நீளத்தில் குறுக்கிடும் கீழே கொடுக்கப்பட்டுள்ள ஐந்து முக்கிய சாலை சந்திப்புகளில் பரிமாற்ற வசதியுடன் அமைக்கப்படும்:

சென்னை - திருச்சி சாலை (தெற்கு நீள பெருஞ்சாலை)

சென்னை - பெங்களூர் சாலை (மேற்கு நீள நெடுஞ்சாலை)

சென்னை - திருவள்ளூர் நெடுஞ்சாலை (செ.தி.நெ. சாலை)

சென்னை - கொல்கத்தா சாலை (வடக்கு நீள பெருஞ்சாலை) மற்றும் திருவொற்றியூர், பொன்னேரி - பஞ்செட்டி சாலை (தி.பொ.ப.சாலை)

இத்திட்டத்தின் மதிப்பீடு 1995 நிலவரப்படி ரூ.317 கோடியாகும். முதல் கட்டமான, சென்னை - திருச்சி சாலை மற்றும் சென்னை - திருவள்ளூர் சாலை இடையே நில எடுப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

11. திட்டமிடப்பட்டுள்ள வெளிவட்டச் சாலை அமைத்து இயக்கி ஒப்படைத்தல் (Build Operate Transfer) கோட்பாட்டின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இக்கோட்பாட்டின்கீழ் நடைமுறைப்படுத்துவதற்காக, தொழில்நுட்பப் பொருளாதாரம் மற்றும் மூலதனத் திரட்டு ஆய்வு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. பகுதி-1-ல் பாதையின் போக்கில் முளைக் குறியீடு செய்யும் பணி முடிக்கப்பட்டுள்ளது மற்றும் சாலை அமைக்கும் பணிக்கான நில எடுப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இரண்டாம் கட்டப் பரப்பில், வெளிவட்டச் சாலையின் போக்கை நிலத்தில் முளைக் குறியீடு செய்யும் பணி பல்லவன் போக்குவரத்து ஆலோசக நிறுவனத்தால் செய்யப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இதுவரையில் அரசு 27 கிராமங்களுக்கு 4(1) அறிக்கைகளுக்கான ஒப்புதல் வழங்கியுள்ளது. 26 கிராமங்களின் 5(அ) விசாரணை நடத்தப்பட்டுள்ளது. 26 கிராமங்களுக்கு விளம்பல் அறிவிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நெறிக்கட்டளை 7-ன்கீழ் 20 கிராமங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 12 கிராமங்களுக்கு ஆரம்ப மதிப்பீடு கருத்துரு, நில நிர்வாக ஆணையரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 8 கிராமங்களுக்குத் தீர்வான விசாரணை நடத்தப்பட்டுள்ளது. மற்றும் 7 கிராமங்களுக்குத் தீர்ப்பாணை செய்யப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 11

## 12. கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம்

சென்னைப் பெருநகரின் மத்திய வியாபார பகுதியின் இட நெரிசலைத் தவிர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். சென்னை நகரத்தின் எல்லையை ஒட்டியுள்ள கோயம்பேட்டில் 295 ஏக்கர் நிலப்பரப்பில் அழுகும் பொருட்கள், தானியங்கள் மற்றும் துணிவகைகள் ஆகிய மூன்று வகை அங்காடிகள் இடம்பெறும் வகையில் இந்த மொத்த விற்பனை அங்காடி வளாகம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாகக் காய்கறி, கனி, மலர் ஆகிய அழுகும் பொருட்களுக்கான மொத்த விற்பனை அங்காடி 60 ஏக்கர் நிலப்பரப்பில் கிடங்குகள், மொத்த வியாபாரக் கடைகள், சேவைக் கடைகள் மற்றும் இதர வசதிகளுடன் அமைக்கப்பட்டது. 150 சதுர அடி முதல் 2400 சதுர அடி வரை அளவிலான மொத்தம் 2,385 கடைகள் கட்டப்பட்டு வியாபாரிகளிடம் ஒப்புவிக்கப்பட்டது. இது திருப்திகரமாகச் செயல்பட்டு வருகிறது. இந்த அங்காடி வளாகத்தைப் பராமரிக்க அங்காடி மேலாண்மைக் குழு ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்டமாக 2,150 ஏக்கர் நிலப்பரப்பில் துணிவகைகள் அங்காடி அமைக்க பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

## 13. மறைமலை நகர்

இத்திட்டம் இருபதாண்டு காலத்தில் சுமார் ஒரு இலட்சம் மக்கள் தொகையினைக் குடியமர்த்த 2,100 ஏக்கர் நிலப்பரப்பில் பகுதிகளாக அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் இதுவரை 1,400 ஏக்கர் நிலத்தினை அபிவிருத்தி செய்துள்ளது. இந்தத் திட்டம் முக்கியமாக அபிவிருத்தி செய்யப்பட்ட குடியிருப்பு மற்றும் தொழிற்சாலை அபிவிருத்தியை உள்ளடக்கியுள்ளது. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் இதுவரை குடியிருப்புக்கான 2,377 மனைகள், 40 வணிகக் கடைகள் மற்றும் 75 வணிக மனைகள், தொழிற்சாலை பகுதிகளுடன் சுமார் 850 ஏக்கர் நிலப்பரப்பில் அபிவிருத்தி செய்துள்ளது. மேலும் அனைத்து வருவாய் பிரிவினருக்கான 2,032 கட்டப்பட்ட வீடுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக ரூ.49.68 கோடி 31-7-2001 வரை செலவழிக்கப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 11]

மறைமலை நகரில் சுமார் 74 ஏக்கர் நிலபரப்பில் நகர மையம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. குடியிருப்புப் பகுதியுடன் கல்லூரி, பள்ளி, அலுவலகங்களுக்கான அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இப் புது நகரின் அவசியத்தை உணர்ந்த அரசு, ஃபோர்டு கார் தொழிற்சாலை அமைக்க மறைமலை நகரைத் தேர்வு செய்துள்ளது. பல கோடி ரூபாயில் உருவாக்கியுள்ள ஃபோர்டு கார் தொழிற்சாலை திட்டத்திற்கான 260 ஏக்கர் நிலத்தினை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஒப்படைத்துள்ளது. அரசு தமிழ்நாடு தொலைதொடர்பு நிறுவனத்தின் கண்ணாடி நுண்ணிழைத் தொழிற்சாலை அமைவதற்கும் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14. சென்னைப் பெருநகருக்கான பூகோள தகவல் அமைப்பு

பூகோள அமைப்பின்படி நகர்ப்புற வளர்ச்சி குறித்த முடிவுகள் எடுப்பதற்காக் பூகோள தகவல் அமைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது. இதில் நகர்வளர்ச்சித் துறைகளுக்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் தகவல்களைத் தயார் செய்யவும், பெறவும், பாதுகாக்கவும், மாற்றுதல் செய்யவும் வகைசெய்யப்படும். அண்ணா பல்கலைக் கழகம், மயிலைப் பகுதியில் சிறிய அளவிலான மாதிரி ஆய்வை நிலம் மேலாண்மை சம்பந்தமான தகவல் அமைப்பு பற்றி ஏனைய நிறுவனங்களான சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை மாநகராட்சி, சென்னைக் குடிநீர் வழங்குதல் மற்றும் வடிகால் வாரியம், சென்னை தொலைபேசித் துறை போன்றவற்றுடன் கலந்தாலோசித்து போதுமான ஆவண அமைப்பை உருவாக்கிச் செயல்படுத்தியுள்ளது. நில உபயோகம், மனைப் பிரிவுகளின் விவரம், மின் இணைப்பு விவரம், தொலைபேசி கம்பி அமைப்பு விவரம், தொலைபேசி எண்களின் இணைப்புப்புள்ளி, பெயர் மற்றும் முகவரி, குடிநீர் மற்றும் வடிகால் விவரம், தெருவிளக்குகள், தெருவின் பெயர் போன்ற விவரங்கள் சேகரித்து கணிப்பொறி மூலம் பெற இந்த ஆய்வறிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் முக்கிய நோக்கமானது, பூகோள தகவல் மையம் அனைத்து நிறுவனங்களுக்கும் தேவையான விவரங்களை சேகரித்து மாற்றி அமைக்கும்பொருட்டும், தேவையான நிறுவனங்களுக்கும் மேற்படி விவரங்களைப் பகிர்ந்தளிக்கும்

[2001 செப்டம்பர் 11

சென்னை பெருநகருக்குண்டான பொதுவான பூகோள தகவல் மையத்தை உருவாக்க வேண்டும் என்பதாகும். இந்த மாதிரி ஆய்விற்கான தொழில்நுட்ப உதவி ஜெர்மனியிடமிருந்து பெறப்பட்டது.

இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தை முக்கிய வழிகாட்டி அமைப்பாக ஏற்றுக்கொண்டு மற்ற நிறுவனங்களும் அண்ணா பல்கலைக்கழக தொலைதூர தகவல் மையத்துடன் இணைந்து சென்னைப் பெருநகர் பகுதிக்குப் பூகோள ரீதியிலான தகவல் அமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கான பயிற்சிபெற்ற அலுவலர்களும், கணிப்பொறிகளும் அவசியமாகிறது. தமிழக அரசு இப்புதிய திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து 1998-1999ஆம் ஆண்டில் தொடங்குவதற்காகத் தொடராச் செலவினங்களுக்கான மானியமாக ரூ.16.50 இலட்சங்களை ஒதுக்கியுள்ளது. இதற்கு வேண்டிய கடின மற்றும் மென்பொருள் வாங்குவதற்குத் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத் திட்டத்திற்கான நிதியுதவியினை உலக வங்கியின் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் நிலை-2-ன்கீழ் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**15. குறுகிய வழிப்பாதைகளை அகலப்படுத்துதல் மற்றும் சரக்கு ஊர்தி இயக்கப்பாதை ஆய்வு**

சென்னைப் பெருநகர் பகுதியில் குறுகிய வழிப்பாதைகளை அகலப்படுத்தி போக்குவரத்தை எளிதாக்குவதற்கு மேற்கொள்ளவேண்டிய வழிமுறைகளைக் கண்டறிவதற்கான இரண்டு ஆய்வுத் திட்டப் பணிகளுக்கு தமிழக அரசு ரூ.10 இலட்சத்திற்கான அனுமதி வழங்கியுள்ளது.

இத்திட்டம் இரண்டு கருத்துகளை உள்ளடக்கியது. அவையாவன:

(1) வளர்ச்சி உரிமை மாற்றம்

(2) சென்னை நகருக்குள் சரக்கு ஊர்தி இயக்கத்தினை எளிதாக்கி பயனுள்ளதாக்குவது

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மேற்கண்ட இரு ஆய்வுத் திட்டப் பணிகளை மேற்கொண்டுள்ளது. சென்னை மாநகராட்சிக்குட்பட்ட ஃபிளவர்ஸ் சாலை முதன்மைத் திட்டமாக



2001 செப்டம்பர் 11]

குறுகிய வழிப்பாதை அகலப்படுத்துதல் ஆய்வின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளது. குழுமத்தின் ஆலோசனையின்படி குறுகிய வழிப்பாதை அகலப்படுத்துதல் ஆய்வின்கீழ், மேலும் இரண்டு பகுதிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அவற்றின் சாத்தியக்கூறுகள் ஆராயப்படுகின்றன. அவையாவன:

(1) ஆலந்தூர் நகராட்சிக்கு உட்பட்ட முத்துகுமாரசாமி நாயக்கன் சாலை

(2) குன்றத்தூர் அருகே ஒரு சாலைப்பகுதி

இத்திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இத் திட்ட ஆய்வு, வரும் 2001-2002ஆம் ஆண்டிற்குள் நிறைவடையும். குழுமத்தின்முன் வைக்கப்பட்ட சரக்கு ஊர்தி இயக்க ஆய்வுத் திட்ட அறிக்கையிலுள்ள கருத்துக்கள் துறைமுகம், போக்குவரத்துக் காவல் துறை மற்றும் சரக்கு ஊர்தி உரிமையாளர்கள் சங்கம் ஆகியோரிடம் ஆலோசித்து பரிசீலிக்கப்படுகிறது. ஆலோசனை முடிவில் திட்ட அறிக்கையின் பரிந்துரைகள் எவ்வாறு செயலாக்கத் திட்டங்களாக உருவாக்குவது என்று அறிந்து, ஆய்வு அறிக்கை அரசிடம் சமர்ப்பிக்கப்படும்.

இத்திட்ட அறிக்கை பணி நடைபெறும் 2001-2002ஆம் ஆண்டிற்குள் நிறைவுபெறும்.

**16. சோழிங்கநல்லூர் தொழில்நுட்பத் தகவல் அமைப்பிற்கான செயல்முறைத் திட்டம்**

பழைய மகாபலிபுரம் சாலையை ஒட்டி பெருங்குடியிலிருந்து திருப்போரூர் வரை தொழில்நுட்ப செயல்முறைத் திட்டத்தினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தயாரித்துள்ளது. இந்தச் செயல்முறைத் திட்டத்தின் நோக்கமானது தகவல் தொழில்நுட்ப நெடுஞ்சாலையில் அமைந்துள்ள மென்பொருள் தொழிற்சாலைகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்துக் கொடுப்பதாகும்.

இந்த உட்கட்டமைப்புத் திட்டமானது கீழ்க்கண்டவற்றை முன்நோக்கியுள்ளது:

(அ) தகவல் தொழில்நுட்பத் தொழிற்சாலைகளின் வளர்ச்சியை நிர்ணயித்தல் மற்றும் இந்தத் தகவல் தொழில்நுட்பத் தொழிற்சாலைகளின் அடிப்படைத் தேவைகளைக் கண்டறிதல்.

(ஆ) இந்த வளர்ச்சியின் மூலம் பெருகும் ஜனத்தொகையின் சமூக மற்றும் அடிப்படைத் தேவைகளை நிர்ணயித்தல்.

(இ) தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகள் மற்றும் இதர சமூகத் தேவைகளுக்கான திட்டங்களை உருவாக்குதல்.

வெளிநாடுகளிலிருந்து வருகின்ற மக்கள் மற்றும் இந்தத் தொழிற்சாலைகளின் மூலம் பெருகும் மக்கள் தொகைக்குத் தேவையான குடியிருப்பு அபிவிருத்தி, போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக தற்போதுள்ள சாலைகளை அகலப்படுத்துதல், நகர்ப்புற ஆகாயப் பேருந்துகளை அறிமுகப்படுத்துதல், நீர் ஆதாரங்களை அறிமுகப்படுத்துதல், கழிவுநீரை அகற்றத் திட்டங்கள், உயர் அழுத்தத் தொலைதொடர்பு மற்றும் மின்சார வசதிகளை அமைத்தல், மேம்படுத்தப்பட்ட சுகாதாரம், கல்வி, வணிகம் மற்றும் சமூக வசதிகளை அமைத்தல் ஆகியவை இத்திட்டத்தில் அமையும்.

சோழிங்கநல்லூர் தொழில்நுட்பத் தகவல் அமைப்பிற்கான உட்கட்டமைப்புத் திட்டமானது தகவல் தொழில்நுட்பத் தொழிற்சாலைகள் மற்றும் அதன் தொடர்புடைய அடிப்படை வசதிகளை அளிக்கக் கூடிய அமைப்புகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டது.

## 17. விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள்

சென்னை நகரின் வளர்ச்சி, சென்னைப் பெருநகரப் பகுதி முதலாவது பெருந்திட்டத்தின்கீழ் அபிவிருத்தியில் அடங்கும். விரிவு மேம்பாட்டுத் திட்டங்களின் நீட்டிக்கப்பட்ட பகுதிகளுக்கும் தொடர் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. 1996ஆம் ஆண்டு ரூ.10 இலட்சம் விரிவு மேம்பாட்டுத் திட்டம் தயாரிப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 57 கோட்டங்களுக்கு விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்படும். மொத்தமுள்ள 57 கோட்டங்களில் விரிவு மேம்பாட்டுத் திட்டம் 20 கோட்டங்களுக்கு அறிவிக்கை வெளியிடப்பட்டு உள்ளது. இந்த 20 கோட்டங்களில் 2 மேம்பாட்டுத் திட்டங்களான சைதாப்பேட்டை பகுதி-1 மற்றும் பகுதி-2 முழுமை பெற்றுள்ளது. இந்த இரண்டு விரிவு மேம்பாட்டுத் திட்டத்தின் வரைபடம் எண் 2 அரசால் அங்கீகரிக்கப்பட்டும், வரைபடம் எண் 4 அங்கீகரிக்கும் தருவாயிலும் உள்ளது. மேலும் 12 விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் அபிவிருத்தியின் நிறைவுப் பகுதியில் உள்ளன. மீதமுள்ள 43 கோட்டங்கள் வருவாய் விவரங்கள் சேகரிக்கும் பணியில் உள்ளன.



மேற்கூறிய அனைத்துக் கோட்டங்களும் இந்த நடப்பு ஆண்டில் முடிவுற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 18. பரப்பு திட்டப் பிரிவு

கட்டிட வரைபட விண்ணப்பங்களுக்கு அளிக்கப்படும் ஒப்புதல்களை விரைவுபடுத்தும் வகையில் துரித அனுமதி அளிக்கும் திட்டப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்துரித அனுமதி அளிக்கும் திட்டத்தின்கீழ் பல அடுக்குமாடி கட்டடங்கள் மற்றும் தொகுதி அபிவிருத்திகள் நீங்கலாக மற்ற அனைத்துப் பிரிவு விண்ணப்பங்களுக்கும் அனுமதி அளிக்கப்படும்.

துரிதத் திட்ட அனுமதி முறையின் முக்கிய அம்சங்கள் யாதெனில், மேற்கூறிய துரிதத் திட்ட அனுமதி வழிமுறையானது, மனுதாரர் மூலம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள்/விண்ணப்பதாரர் கட்டிடக்கலை வல்லுநர் மூலம் பெறப்படும் சான்றிதழ் பொறுப்பேற்பு போன்ற உறுதி மொழி மூலம் ஆய்வு செய்து வரையறுக்கப்பட்ட மனுக்களின் மீது 15 அலுவலக வேலை நாட்களுக்குள் மனைகளைப் பார்வையிடாமலேயே முடிவு எடுக்கப்படும்.

## 19. அமலாக்கப் பிரிவு

சென்னைப் பெருநகர எல்லைப் பகுதியில் திட்ட வரைபட அனுமதி பெறாத மற்றும் திட்ட வரைபட அனுமதிக்குப் புறம்பான கட்டிடங்களைக் கண்காணித்து அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி 1985-86ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் அமலாக்கப் பிரிவு உருவாக்கப்பட்டது. அதன் செயலாக்கங்கள் நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971-க்கு உட்பட்டு வரையறுக்கப்பட்டது.

அமலாக்கப் பிரிவின் செயற்பாடுகள் பின்வருமாறு:

(அ) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் கட்டிட வரைபட அனுமதி அளிக்கப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்ட கட்டிடங்களைக் கண்காணித்தல்.

(ஆ) வரைபட அனுமதியில்லாமல் கட்டப்படும் கட்டிடங்களை நேரிடை ஆய்வு செய்து கண்டுபிடித்தல்.

(இ) பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார் மனுக்களின் அடிப்படையில் வரைபட அனுமதி பெறாத மற்றும் அனுமதிக்குப் புறம்பான கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுத்தல். வரைபட

(ஈ) நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 ஆகியவற்றைச் செயல்படுத்தி நடவடிக்கை எடுக்குமாறு உள்ளாட்சி நிறுவனங்களை வழிநடத்துதல்.

இக்குழுமம் 31-7-2001 வரையில் 24,364 கட்டிடங்களுக்கு வேலை நிறுத்த தாக்கீதுகள் வழங்கியுள்ளது. அதே காலகட்டத்தில் 10,160 கட்டிடங்களுக்கு கட்டிட இடிமானத் தாக்கீதுகள் அனுப்பப்பட்டுள்ளன. மே, ஜூன் மற்றும் ஜூலை 2001ஆம் மாதங்களில் மட்டும் 1,320 கட்டிடங்களுக்கு வேலைநிறுத்தத் தாக்கீதுகளும், 957 கட்டிடங்களுக்கு இடிமானத் தாக்கீதுகளும் அனுப்பப்பட்டுள்ளன. கட்டிட வரைபட அனுமதியில்லாமலும் அனுமதிக்குப் புறம்பாகவும் கட்டப்பட்ட குடியிருப்புகளைப் பொதுமக்கள் வாங்காமல் தவிர்க்கும் பொருட்டும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டும், 1-4-2000 முதல் 31-7-2001 வரை 120 கட்டிடங்கள் குறித்து முக்கிய நாளிதழ்களில் எச்சரிக்கை அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

1-8-2001-க்குப் பிறகு, வரைபட அனுமதி பெறாத மற்றும் அனுமதிக்குப் புறம்பாகக் கட்டப்பட்டு வரும் கட்டிடங்களைக் கண்காணிக்கும் பொருட்டு இக் குழுமம், 6 சிறப்பு அமலாக்கக் குழுக்களை அண்மையில் நியமித்துள்ளது.

## 20. வரன்முறைத் திட்டம்

அங்கீகாரமற்ற மற்றும் விதிகளை மீறிய கட்டிடங்கள் மற்றும் அங்கீகாரம் பெறாத மனைப் பிரிவில் அமைந்துள்ள தனி மனைகளை வரன்முறைப்படுத்த வரன்முறைத் திட்டம் 1999-ல் சென்னைப் பெருநகரப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது. வரன்முறைக் கட்டணத் தொகை மிக அதிகமாக இருந்ததால் 5,496 விண்ணப்பங்கள் மட்டுமே தொகைப் பெறப்புடன் இதன்மூலம் ரூ.7.84 கோடி மட்டும் வசூல் செய்யப்பட்டது. இத் திட்டம் 1999ஆம் ஆண்டில் வெற்றிபெறவில்லை. வரன்முறைக் கட்டணத்தைக் குறைக்க வேண்டி சமர்ப்பிக்கப்பட்ட பொதுமக்களின் மனுக்களைத் தொடர்ந்து, 2000 ஆண்டில் இத் திட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. அதன்படி கட்டணத் தொகை 50 விழுக்காட்டிற்குக் குறைக்கப்பட்டது. மற்றும் நடைமுறை விதிகளும்



ஏற்புடைய வகையில் ஓரளவு மாற்றம் செய்யப்பட்டது. இத் திட்டத்தில் 10,832 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. விண்ணப்பதாரரால் சுய மதிப்பீடு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் வரன்முறைக் கட்டண முன்தொகையுடன் விண்ணப்பங்கள் 2000 ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் ரூ.96.98 கோடி 31-7-2001 வரை வசூல் செய்யப்பட்டது. இத்திட்டம் அரசால் மறு ஆய்வு செய்யப்பட்டது. சென்னைப் பெருநகர் பகுதிக்குள் 31-7-2001 வரை விதி மீறி/அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் மற்றும் அனுமதியற்ற தனிப்பட்ட மனைகளை முறைப்படுத்த ஏதுவாக முறைப்படுத்தும் திட்டத்தின்கீழ் விண்ணப்பங்கள் பெறும் காலத்தை 30-11-2001 வரை நீட்டித்து தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின் பிரிவு 113-ஏ-ஐத் திருத்தி தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் ஒரு அவசரச் சட்டம் 9-8-2001 அன்று பிறப்பிக்கப்பட்டது. 31-7-2001 வரை விதி மீறி அல்லது அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் மற்றும் அனுமதியற்ற தனி மனைகள் மற்றும் விதி மீறி, அனுமதியின்றி கட்டப்பட்ட தனிப்பட்ட அடுக்குக் குடியிருப்புகள் இத் திட்டத்தின்கீழ் முறைப்படுத்த தகுதி உள்ளவை. இதற்காக 2001ஆம் ஆண்டு மாற்றப்பட்ட திட்ட விதிகளுக்கு, கட்டடம் சம்பந்தப்பட்ட கட்டண விகிதங்களில் 10 விழுக்காடு குறைப்புடன் உரிய திருத்தங்கள் அரசால் தனியே வெளியிடப்படுள்ளது. இத்திட்டத்தில் பெறப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளவிருக்கும் நேராய்வு இக் குழுமத்தின் அனைத்துப் பணியாளர்களைக் கொண்டு பெரிய அளவில் செய்யப்பட உள்ளது. இந் நேராய்வுப் பணி மற்றும் விண்ணப்பங்களின் பரிசீலனையை 31-3-2002-க்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

223952

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.